திருச்செங்கோட்டுத்
திருப்பணி மாலை

திருச்செங்கோட்டுத் திருப்பணி மாலை

ஆசிரியர்

சதாசிவ பண்டிதர், திருச்செங்கோடு

பதிப்பாசிரியர்

புலவர் **செ. இராசு** எம்.ஏ., பிஎச்.டி.,

முன்னாள் தலைவர்

கல்வெட்டு - தொல்லியல் துறை

தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

பதிப்பாளர்

தி.அ. சேது. மாதவகிருஷ்ணன்

இந்நூல் வெளியீட்டுக்கு முயற்சி செய்தவர்கள்:

முன்னாள் கிராம முன்சீப் மற்றும்

அர்த்தநாரீசுவரர் திருக்கோயில் நிர்வாக அறங்காவலர்

திருச்செங்கோடு **திரு.டி.ஏ. அப்புசாமி நாயுடு**

அவர்கள் குடும்ப மரபினர்

நூற்குறிப்பு

நூலின் பெயர்	: திருச்செங்கோட்டுத் திருப்பணி மாலை
நூல் பொருள்	: சமய வரலாறு
ஆசிரியர்	: சதாசிவ பண்டிதர்
முதல் பதிப்பாசிரியர்	: தி.அ.முத்துசாமிக்கோனார், 12.12.1912 சுந்தரவதனி அச்சுக்கூடம், சேலம்
இரண்டாம் பதிப்பாசிரியர்	: புலவர் செ.இராசு, ஈரோடு
பதிப்பு ஆண்டு	: 2012
நூலின் அளவு	: 14 செ.மீ x 21 செ.மீ
பக்கங்கள்	: 368
அச்சு எழுத்து	: 11 புள்ளி, ஸ்ரீலிபி 7.1 வெர்சன்
பதிப்புரிமை	: கொங்கு ஆய்வு மையம், ஈரோடு
விலை	: ரூபாய். 200/-
நூல் கிடைக்குமிடம்	: கொங்கு ஆய்வு மையம், 58/2 பாலக்காட்டுத் தோட்டம், புதிய ஆசிரியர் குடியிருப்புப் பாதை, ஈரோடு - 638011. 0424-2262664, 9965550212
கணினி தட்டச்சு	: முருகன் கணினி பணியகம், 11, அகில்மேடு 2வது தெரு, கோட்டை, ஈரோடு-638001. கைபேசி எண்: 9486641299
அச்சாக்கம்	: வாழ்க வளமுடன் ஆப்செட் பிரிண்டர்ஸ் பிரைவேட் லிமிடெட், 29, நாச்சியப்பா வீதி, ஈரோடு-638001. 0424-2258511, 2258522

கயிலைக்குருமணி, சீர்வளர்சீர்
சாந்தலிங்க இராமசாமியடிகள்
பேரூராதீனம், பேரூர்

கோயமுத்தூர்-641010,
தொலைபேசி:0422-2607995,
2608678, நகலி:2607994

சாந்தலிங்கர் தாண்மலர் வாழ்க

வாழ்த்துப்பா

திருச்செங் கோட்டுத் திருப்பணி மாலைநூல்
திருவார் மன்னர் செல்வர்கள் பற்பலர்
உருவாக் கியபணி உயர்வினை அனைவர்க்கும்
தரும்பணி சிவநெறி தழைத்திட வாழ்த்துவோம்

புலவர்இராசு பொருந்தும் நல்லுரை தந்தார்
பலரும் எளிதினில் படித்துப் பயன்பெற
நலம்தரும் மாதவ கிருட்டிணன் நன்னூலதாய்
உலவத் தருவதை உவப்புடன் வாழ்த்துவோம்!

வேண்டுந் தங்களன்பு,

01-08-2012
பேரூர்

அன்புள்ள,
சாந்தலிங்க ராமசாமியடிகள்

T.M.காளியண்ணன், M.A.,B.Com.,
முன்னாள் M.P., M.L.A, M.L.C.,
ஸ்தாபகர்/தலைவர் - கண்ணகி விழா
முன்னாள் அறங்காவலர் குழுத்தலைவர்,
அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயில்

''சாமுண்டி இல்லம்''
C.H.B. காலனி,
வேலூர் ரோடு,
திருச்செங்கோடு
637211.

வாழ்த்துரை

பிற்கால வரலாற்று ஆய்வுக்குப் பெருந்துணை

இந்தியத் திருநாட்டில், தென்னகத்திலே சிறப்புற விளங்கும் தமிழகத்தில், தனிப்பெரும் பெருமையைத் தலைநிமிர்த்து நிற்கச் செய்யும் வகையில் கொங்கு நாட்டில் உள்ள நம் ஊர் திருச்செங்கோடு, ஆன்மீகம், கலை, இலக்கியம், பண்பாடு, வரலாறு என பல்வகையான சிறப்புகளைக் கொண்டு திகழ்கிறது.

திருச்செங்கோடு மலைக்குத் ''தெய்வத்திருமலை'' என்றும் ''நாகாசலம்'' என்றும் பல சிறப்புப் பெயர்கள் உண்டு. பல ஆயிரம் ஆண்டுகள் ஆகியும், கம்பீரமாகத் தோற்றம் அளிக்கும் கற்களால் ஆன கட்டிடக் கலை, சிற்பக்கலை ஆகிய திருப்பணிகள் நம்மை வியக்க வைக்கும் சிந்தனைக்கு உரியவை. வேறு எங்கும் இல்லாத இறைவன் ஸ்ரீஅர்த்தநாரீஸ்வரர் திருக்கோவிலுக்குப் பல்வேறு காலங்களில், பல நூற்றாண்டுகளுக்கு முன் செய்த திருப்பணிகள் பற்றி தமிழ்ச் செய்யுள் வடிவில் சதாசிவ பண்டிதரால் பாடப்பட்டு ஓலைச்சுவடியில் ஆரம்ப காலத்தில் இருந்ததை ''அட்டாவதானம்'' தி.அ.முத்துசாமிக் கோனார் அவர்கள் 1912ஆம் ஆண்டு புத்தகமாக அச்சிட்டுள்ளார். இவர் பல புத்தகங்களை வெளியிட்டு உள்ளார். கோனார் பதிப்பில் உள்ள பாடல்களுக்கு ஏற்ப, பொருத்தமான தலைப்பும், பாடல் கருத்தும், வரலாற்றுக் குறிப்பும் சேர அனைத்தும் அடங்கிய விரிவான பதிப்பாக நூற்றாண்டுக்குப் பின் வரலாற்று ஆவணமாகத் திகழும் ''திருச்செங்கோட்டுத் திருப்பணி மாலை'' என்னும் இந்நூல் 2012இல் அச்சாகி வெளிவர உள்ளது.

இது எதிர்வரும் பல நூற்றாண்டுகளுக்குப் பிறகும், முற்காலத் திருப்பணிகளை எடுத்துச் செல்லும் இந்த நூலினை இத்தருணத்திற்கு ஏற்ப எளியமுறையில் உருவாக்கி இருக்கும் கொங்கு நாட்டின் கல்வெட்டு மற்றும் வரலாற்று ஆராய்ச்சியாளர் திரு.புலவர் செ.இராசு அவர்களுக்கும், இதனை வெளியீடு செய்யப் பெரும் முயற்சி எடுத்து இருக்கும் இளவல் தி.அ.சேது மாதவகிருஷ்ணன் அவர்களுக்கும் எனது மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். நம் தலத்தைப் பற்றிய இதுபோன்ற இன்னும் பல நூல்களை வெளிக்கொண்டு வருவது இன்றைய சூழலில் மிகவும் அவசியத் தேவை. இது பிற்கால வரலாற்று ஆய்வுக்குப் பெரும் துணையாக இருக்கும் என்று கருதுகிறேன்.

வரலாற்று ஆய்வுப் பணி தொடர வாழ்த்துக்கள்.

வணக்கம்.

09.07.2012

திருச்செங்கோடு

அன்புடன்,

டி.எம்.காளியண்ணன்

நீதியரசர் சிவ.நடராசன்,
முன்னாள் நீதிபதி,
உச்சநீதிமன்றம்,
புதுடெல்லி.

26,இரண்டாம் தெரு,
கிழக்கு அபிராமபுரம்,
மயிலாப்பூர், சென்னை
044-24995056/ 24994360

வாழ்த்துச் செய்தி

வரலாற்றுப் பணியில் பல சாதனைகள் புரிந்த தமிழ் அறிஞர் திரு செ.இராசு அவர்கள் உலகம் சார்ந்த தமிழ் மக்களுக்கு முக்கியமாக சைவ நெறியைக் கடைப்பிடித்து வரும் சிவனடியார்களுக்கு ஒரு பெரிய வரப்பிரசாதமாக இந்நூலைப் பதிப்பிக்க முன்வந்துள்ளார் என்ற செய்தி கேட்டு மிக்க மகிழ்ச்சி அடைந்தேன்.

வரலாற்று ஆவணமாகத் திகழும் ''திருச்செங்கோட்டுத் திருப்பணி மாலை'' நூலை நூறு ஆண்டுகளுக்குப் பிறகு பல புதிய கருத்துக்களுடனும், செய்திகளுடனும் மறுபதிப்பு வெளியிடும் திருப்பணியைத் திருச்செங்கோடு திரு தி.அ.சேது. மாதவகிருஷ்ணன் மேற்கொண்டுள்ளார்.

இந்தியத் துணைக் கண்டத்தில் தனிப்பெருமையுடன் விளங்கும் திருத்தலங்களில் ''திருச்செங்கோடு'' தலமும் ஒன்றாக மிளிர்கிறது. இத்திருத்தலத்தில்தான் சிவனும் சக்தியும் இணைந்து உமையொருபாகனாக ''அர்த்தநாரீஸ்வரர்'' உருவத்தில் பக்தகோடி களுக்குக் காட்சியளிக்கிறார்.

திருச்செங்கோட்டுத் திருப்பணி மாலை என்ற நூலை 1680ஆம் ஆண்டு 'சதாசிவ பண்டிதர்' என்ற சைவப் பெரியார் இயற்றியுள்ளார். 1912ஆம் ஆண்டு திரு தி.அ.முத்துசாமிக் கோனார் அவர்களால் முதல் பதிப்பு செய்யப்பட்டுள்ளது. இப்பொழுது 100 ஆண்டுகள் கடந்த நிலையில் நூலின் பாடல்களில் செறிந்து கிடக்கும் பொருள் விளக்கத்தோடு நூலின் இரண்டாம் பதிப்பினை நூல் ஆசிரியர்

ஈரோடு புலவர் செ.இராசு அவர்கள் திரு தி.அ.சேது.மாதவகிருஷ்ணன் துணையுடன் பதிப்பிக்க முனைந்துள்ளார்கள்.

இந்த அரிய நூல் சைவ இலக்கியக் களஞ்சியத்தில் ஒரு சிறந்த பொக்கிஷமாகப் பெருமை பெறும். நூல் ஆசிரியருக்கும் அவருக்கு உதவி புரிந்தவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த வாழ்த்துக்கள்!

28.07.2012
சென்னை-4

அன்புள்ள,
சிவ.நடராசன்

முனைவர் நா.கணேசன்,
நாசா விண்வெளி விஞ்ஞானி

ஹ்யூஸ்டன்,
அமெரிக்கா.

வாழ்த்துரை

சீர்கெழு செந்திலும் செங்கோடும் வெண்குன்றும்
ஏரகமும் நீங்கா இறைவன்கை வேலன்றே
பாரிரும் பௌவத்தி னுள்புக்குப் பண்டொருநாள்
சூர்மா தடிந்த சுடரிலைய வெள்வேலே!

-சிலப்பதிகாரம் (இளங்கோவடிகள்)

முத்தமிழக் காப்பியமாகிய சிலம்பிலும், பின்னர் எல்லாத் தமிழ் இறையடியார்களாலும் பாடிப் பரவிய தலமாகக் கொங்கு நாட்டிலே புகழ் பெற்று விளங்குவது அர்த்தநாரீசுவரப் பெருமானின் திருச்செங்கோடு திருத்தலமாகும். செங்கோட்டு வேலனை விசேடமாய்த் துதித்தோரில் அருணகிரிநாதர் முதலிடம் வகிக்கிறார். 'நாகாசல வேலவா' எனக் கந்தரனுபூதியிலும், பிரமனும் நாலாயிரம் கண் படைத்துக் காண வேண்டிய அழகுடையவர் என்று கந்தரலங்காரத்திலும் போற்றுகிறார். தேவாரப் பாடலும் பெற்றது. கொங்கேழு சிவத்தலங்களில் மிக முக்கியமானது திருச்செங்கோடு. சீகாழிப் பிள்ளையாராகிய திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் திருச்செங்கோடு என வழங்குந் திருக்கொடி மாடச் செங்குன்றூர்க்குத் திருக்கூட்டத்தாருடன் எழுந்தருளியபோது நளிர்சுரம் அடியார்களையும் தீண்டவே ''அவ்வினைக் கிவ்வினையாம்'' என்ற தொடக்கத்ததான தேவாரப் பதிகத்தைப் பாடி அவ்வூரே அன்றி அந்நாடு முற்றிலும் அவ்விஷ நோய் தீரும்படி ஓதப்பெற்ற பெருமை யுடைய பெரும்பதி இதுவே ஆகும்.

தமிழ்நாட்டில் பல கோவில்களுக்குத் திருப்பணி மாலைகள் பிறந்தன. ஆனால் அவற்றில் பலவும் அழிந்துவிட்டன. பாண்டித்துரைத் தேவர் மதுரைத் திருப்பணி மாலையை அச்சேற்றினார். அண்மையில் அடியேன் தூண்டுதலால் பேராசிரியர் கு.ஞானசம்பந்தன் அவர்களின் மாணவரான முனைவர் திரு.பாலசுப்பிரமணியன் ஆராய்ந்து

நல்லமுறையில் மதுரைத் திருப்பணி மாலையை மறுபதிப்புச் செய்துள்ளார். நூறாண்டுகளுக்கு முன்னர்க் கொங்கு நாட்டின் மிகச் சிறந்த திருப்பணிமாலையாம் திருச்செங்கோட்டுத் திருப்பணி மாலையை அட்டாவதானம் முத்துசாமிக் கோனாரவர்கள் பதிப்பித்தார். இரண்டு திருப்பணி மாலைகளும் 1000 ஆண்டுத் தமிழர் வரலாறு கூறுபவை. முக்கியமாய் மதுரை நாயக்கர் வரலாற்றை முரசறையும் ஆவணங்கள்.

பல்லாண்டுகளாய்க் கொங்குநாட்டின் வரலாற்று ஆவணங் களில் முக்கியமான திருச்செங்கோட்டுத் திருப்பணி மாலையை ஆராய்ந்து, பனையோலைகளில் புதிதாய்க் கிடைத்த பாடல்களையும் சேர்த்து அச்சியற்ற புலவர் செ.இராசு அண்ணன் அவர்களை வேண்டி வருவது என் வழக்கம். காலம் இப்போது கனிந்துள்ளது. திரு தி.அ.சேது. மாதவகிருஷ்ணன் முன்னின்று புலவர் செ.இராசு அவர்களைப் பதிப்பாசிரியராய்க் கொண்டு அச்சிடுகிறார். பண்டை இலக்கியங்களில் ஏரகம் என்னும் முருகன் படைவீடு என வழங்கப்படும் திருச்செங்கோட்டின் வரலாற்றை முறையாய் அறிவிக்கும் திருப்பணி மாலையைப் புலவர் செ.இராசு அவர்களுடன் துணைநின்று பெரும் பொருள் செலவில் தமிழ் கூறும் நல்லுலகம் பயன்பெறப் பதிப்பிக்கும் திருப்பணியில் ஈடுபடும் தி.அ.சேது.மாதவகிருஷ்ணன் அவர்களுக்கும் அவர் குடும்பத்தினருக்கும் என் வாழ்த்து உரியதாகுக.

ஆகஸ்ட் 1, 2012, டாக்டர் நா.கணேசன்

ஹ்யூஸ்டன், அமெரிக்கா.

தி.அ.சேது.மாதவகிருஷ்ணன்

''சமஸ்தான இல்லம்''
22/67, தேரடித் தெரு,
திருச்செங்கோடு-637211.

பதிப்புரை

உலக மக்களின் நிரந்தரத் தாய், தந்தை ஆக விளங்கி அருள் பாலிக்கும் அம்மையும், அப்பனும் ஆகிய ஸ்ரீஅர்த்தநாரீஸ்வரர் பெருமானின் திருக்கோவில் திருப்பணிகள் பற்றிய பல நூறு ஆண்டு காலச் செய்திகளை எதிர்காலத் தலைமுறையினரும் அறிந்துகொள்ள வேண்டும் என்ற தொலைநோக்குச் சிந்தனையுடன் ''திருச்செங் கோட்டுத் திருப்பணி மாலை'' என்னும் இந்நூலை மீண்டும் பதிப்புச் செய்து வெளிக்கொண்டு வருவதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். இதைப் பெரும் பாக்கியமாகக் கருதுகிறேன்.

நூறு ஆண்டுகளுக்கு முன் கொங்கு நாட்டைப் பற்றியும், திருச்செங்கோட்டைப் பற்றியும் ஸ்ரீமான் தி.அ.முத்துசாமிக் கோனார் அவர்கள் அச்சிட்ட நூல்கள் ஏராளம். அதுபோலவே இக்காலத்தில் உயர்திரு புலவர் செ.இராசு ஐயா அவர்கள் பதிப்புச் செய்த நூல்களும் ஏராளமானவை.

இவர்கள் இருவரையும் நூற்றாண்டுக்கு ஒருவராக, கொங்கு நாட்டின் மக்கள், கல்வெட்டு, செப்பேடு, சுவடிகள், பதிப்பு, ஆய்வு போன்ற முற்கால வரலாற்றை, பிற்காலம் எடுத்துச்செல்ல இறைவனே தமிழ்மொழி மீது கொண்டுள்ள பற்றால் இவர்கள் மூலமாக அவதரித்துத் தமிழ்ப்பணியை ஆற்றி வருகிறாரோ என எண்ணத் தோன்றுகிறது.

அர்த்தநாரீஸ்வரர் திருக்கோவிலுக்கு எனது குடும்பத்தின் முன்னோர்களான திரு தி.கி.அர்த்தநாரிநாயுடு, திரு தி.அ.அப்புசாமி நாயுடு, திரு.தி அ.சேதுபதி ராமலிங்கம் ஆகியோர் அறங்காவலராகவும் கிராம முன்சீபாகவும் இருந்து பல அரும்பணிகள் செய்துள்ளனர்.

திருச்செங்கோட்டுத் தலத்தைப் பற்றிய இன்னும் ஏராளமான நூல்கள் முற்காலத்தில் பதிப்புச் செய்யப்பட்டவைகளை இக் காலத்திற்கு ஏற்ப பதிப்புச் செய்து வெளிக்கொண்டு வருவது அவசியத் தேவையாகிறது.

இந்நூலினை அரும்பாடுபட்டு உருவாக்கியிருக்கும் என் தமிழ்ப் பணிக் குருவான உயர்திரு புலவர்.செ.இராசு ஐயா அவர்களுக்கு அளவில்லாத நன்றியினைக் காணிக்கை ஆக்குகிறேன்.

இந்நூலை வெளியிட மிகுந்த ஈடுபாட்டுடன் பல ஆண்டுகளாக வலியுறுத்தியும் ஊக்கமும் ஆதரவும் தந்த நாசா விண்வெளி விஞ்ஞானி உயர்திரு. முனைவர் நா.கணேசன் அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்றும் வரலாறு மற்றும் இறை பணியில்

04.08.2012 அன்புடன்,

திருச்செங்கோடு தி.அ.சேது. மாதவ கிருஷ்ணன்

திருச்செங்கோட்டுத் திருப்பணி மாலை

பொருளடக்கம்

வ.எண்	விபரம்	பாடல் எண்
	தெய்வ வணக்கமும், பாயிரமும்	
1)	விநாயகர் வணக்கம்	... 1
2)	வாழ்த்து	... 2
3)	சிறப்பு வாழ்த்து	... 3, 16, 17
4)	அவையடக்கம்	... 4-6
5)	நூலை அறிவோர் - அறியாதார்	... 7
6)	கவிஞர் சொல்	... 8
7)	நூல் பயன்	... 9, 10
8)	நூலாசிரியர்	... 11
9)	சிவனை நினைத்தல்	... 12
10)	அரவாசலக் குகன்	... 13
11)	இணையடி இறைஞ்சல்	... 14
12)	தலச் சிறப்பு	... 15
13)	பூந்துறை நாடு	18, 20, 21
14)	எழுகரை நாடு	... 19
15)	திருச்செங்கோடு	... 22-24
16)	கோதையூர்	... 25-34
17)	திருப்பணிமாலை கூறுவன	... 35
	மலைச்சிறப்பு	
18)	காமதேனு மலை கொணர்ந்தது	... 36
19)	நான்கு யுகப் பூசைகள்	... 37
20)	வடிவேலர் வணங்குதல்	... 38
21)	பார்வதி இடப்பாகம் பெறல்	... 39
22)	தேவேந்திரன், முனிவர், பாண்டவர் வணங்கல்	... 40

வ.எண்	விபரம்	பாடல் எண்
	திருப்பணிகள்	
23)	சிங்கவன்மன்	41
24)	பாண்டியன் - சேரன்	... 42
25)	சோழன் சைவமறையோரைக் கொணர்தல்	... 43
26)	எழுபெரும் குரவர், வழிபாடு	... 44-46
27)	தேவாரப் பதிகங்கள்	... 47
28)	பணிமலைக் காவலர்	... 48
29)	ஆண்ட அரசர்கள்	... 49
30)	விசய நகர அரசர்கள்	... 50-53
31)	கொடையளித்த ஊர்கள்	... 54
32)	கிருஷ்ணதேவராயர் (தருமராயர்)	... 55
33)	வாலராசன்	... 56
34)	திரியம்பகதேவன்	... 57
35)	கம்ப நயினார்	... 58
36)	அனந்தபூபன்	... 59
37)	நரசிங்க ராமாஞ்சி	... 60
38)	களஞ்சியம் கிருஷ்ணய்யன்	... 61
39)	காலிங்கராயன்	... 62
40)	நாயக்க மன்னர்கள்	... 63-65
41)	குருவ மகிபன்	... 66, 69
42)	பள்ளியப்பன் (முதலியார்)	... 68-77, 94, 95
43)	செம்பியன் நாகாச்செட்டி	... 78, 79
44)	காளத்தியப்ப முதலியார்	... 80-82, 87-91
45)	ஆபத்துக்காத்தா பிள்ளை	... 83, 84
46)	ஆண்டியப்பன்	... 85-86
47)	வீரராகவ முதலியார்	... 92, 93
48)	காஞ்சிபுரம் எறமசெட்டி நாயக்கர்	... 96
49)	அவர் மனைவி வங்காரம்மாள்	... 97, 98

வ.எண்	விபரம்	பாடல் எண்
50)	ஏத்துவளி வெங்கடாத்திரி	... 99
51)	அடைக்கலம் காத்தான்	... 100
52)	சின்ன நாகாச் செட்டியார்	... 101
53)	காஞ்சிபுரம் முத்தியாலு நாயக்கர்	... 102
54)	பாப்பன் மகன் நாரணப்பன்	... 103-106
55)	நாயகத்தா முதலியார்	... 107
56)	வில்லவராயன்	... 108, 110-113
57)	காஞ்சி சின்ன எறமசெட்டி நாயக்கர்	... 109
58)	தளவாய் இராமப்பய்யன்	... 114
59)	மருமகன் கொண்டப்பய்யன்	... 115-122
60)	குருவப்பையன்	... 123, 124
61)	குருவன் சிதம்பரய்யன்	... 125
62)	தம்பா முதலியார்	... 126
63)	வெங்கடராயன்	... 127
64)	இராமப்பய்யன் மைத்துணர் வெங்கடாத்திரி	... 128
65)	வெங்கட கிருஷ்ணய்யன்	... 129
66)	புலியூர் இராக்கியப்ப முதலியார்	130, 131
67)	இராமப்பய்யன் மைத்துணர் கிருஷ்ணய்யன்	... 132
68)	கெம்பராக்கன்	... 138
69)	மணியம் கிருஷ்ணபூபன்	134
70)	அழகாத்திரி நாயக்கர்	135
71)	கோபாலகிருஷ்ணன்	... 136
72)	ஆரணி சேஷாத்திரி பிள்ளை	... 137-139,142,145, 149, 151-154, 160-162
73)	நரசய்யன் கோனப்பையன்	... 140
74)	கஸ்தூரி அய்யன்	... 141
75)	நாரணய்யன்	... 143, 146

வ.எண்	விபரம்	பாடல் எண்
76)	திம்மரசய்யன்	... 144
77)	நல்லபாட்டய்யன்	... 147, 148
78)	நல்லய்யன் (அர்த்தநாரிபண்டிதர் மகன்)	... 150
79)	சரவணப் பெருமாள்	... 155-159
80)	வென்றுமாலையிட்டான்	... 163
81)	சங்காலு நாயக்கர்	... 164, 165
82)	வெங்கிடகிருஷ்ணய்யன்	... 166
83)	கச்சி முத்தளகாத்திரி நாயக்கர்	... 167
84)	வீரராகவ முதலியார்	... 168
85)	செவ்வந்தியப்பன்	... 169
86)	சேற்றூர் சொக்கநாதப் புலவர்	... 170, 171
87)	அபிடேக சொக்கப்பன்	172
88)	நயினான் இரத்தினகிரி	... 173
89)	சேனாபதி அர்த்தனாரி பண்டிதர்	... 174
90)	முத்தியாலு நாயக்கர்	... 175
91)	கேதார உடையார்	... 176
92)	கிள்ளிச்சோழன்	... 177
93)	மைசூர் சிக்கதேவராச உடையார்	... 178, 179, 180
94)	மைசூர் தளபதி குமார தளவாய்	... 181
95)	மணியம் முத்துவசவய்யன்	... 182,186,192
96)	மைசூர் இலிங்கய்யன்	... 183,187,188,190, 191,402
97)	சரவணன்	... 184,185,417
98)	அழகம்மையை வணங்குதல்	... 189
99)	கெம்பராசன்	... 193
100)	தேசராசய்யன்	... 194-196
101)	காஞ்சிபுரம் வீரசெட்டியார்	... 197-207,209,419
102)	தேசய்யன்	... 208,210
103)	மராட்டிய கெங்கோசி	... 211

வ.எண்	விபரம்	பாடல் எண்
104)	வீமோசி கோவிந்த பண்டிதர்	... 212,213,215,216, 220-222,233
105)	அலுவலர்கள் பலர்	... 214
106)	சாமராசு கண்டோசி	... 218,219
107)	பெரியய்யன் (அர்த்தனாரி பண்டிதர் மகன்)	... 223,230
108)	சவுடையன் மகன் மரிராசன்	... 224-226,422
109)	அருணாத்திரி மகன் அப்பய்யன்	... 227
110)	நல்லூர்த் தண்டி மகன் கனகசபை	... 228
111)	உல்லள்ளி சென்னராய சிக்கரசன்	... 229
112)	சீனிவாசய்யன் (தெய்வசிகாமணி பண்டிதர் மகன்)	... 231
113)	மதுரை நாயக முதலியார்	... 232
114)	சேந்தமங்கலம் இராமச்சந்திர நாயக்கர்	... 234
115)	கோனூர் இராமச்சந்திர நாயக்கர்	... 235
116)	தினசை சின்னம நாயக்கர்	... 236
117)	செவிடு பெத்தய்ய நாயக்கர்	... 237,239
118)	கொண்டமராசன்	... 238
119)	மாவை குமாரசுவாமி முதலியார்	... 240-247
120)	தாரமங்கலம் கட்டி முதலிகள்	... 248-261
121)	பரமத்தி இளையா நாயக்கர் மரபு	... 262-268
122)	சிறுமுளசி செங்கோடன்	... 269
123)	மோரூர்க் காங்கேயர் மரபு	... 270-284,287-289
124)	மதுரை நல்லான்	... 285
125)	முளசி நாட்டார் (ஏமப்பள்ளி)	... 290-295,298-302 400
126)	கோக்கிளாய் வேலகவுண்டர்	... 296,297
127)	இராசிபுர நாட்டார்	... 303-306
128)	பருத்திப்பள்ளி நாட்டார்	... 307-309
129)	சர்க்கரை மன்றாடியார்	... 310

வ.எண்	விபரம்	பாடல் எண்
130)	கவசை மசக்காளி மன்றாடியார்	... 311
131)	காடையூர் காங்கேய மன்றாடியார்	... 312
132)	காங்கயம் பல்லவராயர்	... 313
133)	கொங்கு 24 நாட்டார்	... 314
134)	நகரத்தார் அர்த்தநாரி செட்டியார்	... 315
135)	அமரகுந்தி ஆயிர வைசியர்	... 316
136)	குன்றத்தூர் வேலாயுதன்	... 317
137)	திருவேங்கடநாதன் செட்டியார்	... 318
138)	நல்லகட்டி, செங்கோடன்	... 319
139)	சங்ககிரி நோட்டம் சுக்குட்டி செட்டியார்	... 320
140)	சிவந்த பாதம்	... 321
141)	சங்ககிரி நோட்டம் குமரவேலப்ப செட்டியார்	... 322
142)	சங்ககிரி நோட்டம் அர்த்தநாரி செட்டியார்	... 323,324
143)	செங்கோட்டு நல்லதம்பி	... 325
144)	துரைநயினான் முத்தியப்ப முதலியார்	... 326
145)	இருப்புலி இளையாக் கவுண்டர்	... 327-330
146)	குமரமங்கலம் பொன்னய்யன்	... 331
147)	அர்த்தநாரி அய்யன் முத்தய்யன்	... 332
148)	பழசை திருவேங்கடன், தொழுவூர் அர்த்தநாரி	... 333
149)	தானத்துக் கணக்கு இராமபத்திரன்	... 334,335
150)	இருகாலூர் அத்தப்ப கவுண்டர்	... 336,337
151)	குமரமங்கலம் செட்டியாக் கவுண்டர்	... 338,339
152)	இடையன் கொல்ல எல்லன்	... 340
153)	இரணாபுரம் வேதியன் நல்லய்யன்	... 341
154)	திருமுடித்தாசி சேனாபதி வேலாள்	... 342
155)	தயிலி	... 343
156)	மாந்தை அணை அர்த்தநாரிக் கவுண்டர்	... 344

வ.எண்	விபரம்	பாடல் எண்
157)	இராசிபுரம் செங்குந்தச் சின்னான்	... 345
158)	குருவம்ம மாணிக்கி	... 346
159)	செவ்வந்தி செட்டியார்	... 347
160)	அகரத்துக் குசச் செட்டியார் வேலப்பன்	... 348
161)	குசச் செட்டியார் ஆண்டி செட்டியார்	... 349
162)	அகரம் நல்லான் செட்டியார்	... 350
163)	செங்குந்தர் குலப் பெரியாள்	... 351
164)	ஆசாரியார் விருமக் கொல்லன்	... 352
165)	மதுரை சீயாலகட்டி மடம் சிதம்பரநாதன்	... 353
166)	இடையர் குலச் செல்லன்	... 354
167)	இடையர் குலக் கோபாலன்	... 355
168)	மல்லசமுத்திரம் கணக்கர் சுப்பிரமணியம்	... 356-358,412,413
169)	திருச்செங்கோடு தண்டாயுதபிள்ளை	... 359
170)	தாரமங்கலம் காகமூப்பன் முனியப்பன்	... 360
171)	நாகசுர நல்லதம்பி	... 361
172)	திருமுடியார் மரபினர்	... 362
173)	செங்குந்தர் மரபினர்	... 363
174)	பலர் திருப்பணி	... 364,365
175)	மைசூர் கிருஷ்ணராச உடையார்	... 366
176)	சேலம் கலெக்டர் டேவிஸ்	... 367
177)	சேனாபதி குருக்கள்	... 368
178)	கொக்கராயன்பேட்டை பெரியரங்கய்ய கவுண்டர்	... 369-375
179)	சின்னக்கவுண்டம்பாளையம் கறுப்பண முதலியார்	... 376
180)	திருச்செங்கோடு தம்பா செட்டியார்	... 377
181)	தெலுங்கு வீரசைவ சங்கமர்	... 378
182)	தி.அ.முத்துசாமிக் கோனார்	... 379,380

வ.எண்	விபரம்	பாடல் எண்
183)	கொக்கராயன்பேட்டை தண்டிகைவேல கவுண்டர்	... 381-383
184)	துறவி குமாரசாமிப் பரதேசி	... 384
185)	சப்மாஜிஸ்ட்ரேட் ஆறுமுக முதலியார்	... 385
186)	சித்தளந்தூர் சுப்பராய கவுண்டர்	... 386
187)	மோழைக் கவுண்டம்பாளையம் வேட்டுவர்கள்	... 387
188)	தெலுங்கு செட்டியார்	... 388
189)	நாககிரி பண்டிதர்	... 389
190)	மனைவி வள்ளியம்மை	... 390
191)	குமரமங்கலம் கைலாச கவுண்டர்	... 391, 398
192)	செல்லய்யன் அர்த்தநாரி அய்யன்	... 392
193)	அல்லாளிபாளையம் வெங்கடேசன் செட்டியார்	... 393
194)	வடகோபுரப் பணிகள்	... 394
195)	குமரமங்கலம் சின்னய்ய கவுண்டர்	... 395-397
196)	மோரூர் தாண்டவன்	... 399
197)	ஏமப்பள்ளி (துர்க்கை கோயில்) பெரியய்யன்	... 401,403-407
198)	திருச்செங்கோடு பெரியதம்பி அர்த்தநாரி	... 408
199)	சோமசுந்தரன் தனயன்	... 409
200)	இராசிபுரம் சின்னவேலன்	... 410
201)	வேதியர் செயல்கள்	... 414
202)	சண்முகம்பிள்ளை	... 415,416
203)	சண்முகன்	... 418
204)	நாகாச் செட்டியார்	... 420
205)	சர்க்கார் நல்லாஞ்செட்டியார்	... 421
206)	பாண்டியன் சேனாபதி மணவாளன்	... 423
207)	திருச்செங்கோடு தண்டாயுதன்	... 424,425

ஸ்ரீசெங்கோட்டுவேலவர்

அருள்மிகு கைலாசநாதர்



அருள்மிகு நாகேசுவரர்

ஸ்ரீ அழகுநாச்சியம்மன்

தி.அ.முத்துசாமிக்கோனார் 1858-1944

ஏட்டுச் சுவடியும் அச்சு நூல்களும்

திருச்செங்கோட்டுத் திருப்பணி மாலை

முன்னுரை

திருச்செங்கோடு மூவர் தேவாரப் பதிகங்கள் பெற்ற கொங்கேழு சிவத்தலங்களில் ஒன்று. கல்வெட்டுகளும், செப்பேடு களும், பல்வேறு இலக்கியங்களும் 'கொடிமாடச் செங்குன்றூர்' என்று இத்திருச்செங்கோட்டின் பெருமையைப் பேசுகின்றன.

கொங்கு நாட்டு இலக்கியப் பதிப்புக்களின் முதல்வரும், முன்னோடியுமான திருச்செங்கோடு தி.அ.முத்துசாமிக் கோனார் (1858-1944) இந்நூலின் முதல் பதிப்புப் பணியை 12.12.1912 (பரிதாபி மார்கழி 17) அன்று முடித்து சேலம் சுந்தரவதனி அச்சுக்கூடத்தில் அச்சிட்டு 1913 சனவரி மாதம் வெளியிட்டார். 98 பக்கங்கள் கொண்ட நூலின் விலை 8 அணா (இன்றைய மதிப்பில் ½ ரூபாய் அல்லது 50 நயாபைசா).

கோனார் தன் முன்னுரையில் இந்நூலைப் பற்றிப் பின்வருமாறு எழுதியுள்ளார்.

> ''திருச்செங்கோட்டுத் திருப்பணிமாலை என்பது சைவ சித்தாந்தப் பொருளுண்மை தோன்ற, அம்மையும் அப்பாரும் ஒரு திருமேனி கொண்டு எழுந்தருளியிராநின்ற தலமும், திருக்கொடிமாடச் செங்குன்றூர் என ஆளுடைய பிள்ளையார் முதலிய சமய ஆச்சாரியர்களால் புகழ்ந்தோதப்பெற்ற க்ஷேத்திரமுமாகிய திருச்செங்கோட்டிலுள்ள திருக்கோயில், திருக்கோபுரம், மண்டபம், வாகனம், நந்தவனம், வாவி, கூபம், மடம், சத்திரம், ஈசுரருக்கும், குருமார் ஆதியர்க்கும் புரிந்த பணிவிடை முதலிய புண்ணியங்கள் இன்னகாலத்து, இன்ன இன்னாரால் இவ்வண்ணம் செய்யப் பெற்றன என்பதைத் தமிழ்ச் செய்யுளில் அமைத்துப் பாடப்பெற்ற தொரு நூலாகும்''

என்பது கோனார் அவர்கள் எழுதிய பகுதியாகும்.

தமிழக, கொங்கு மண்டல வரலாற்றுக்குப் பெரும் கொடை யாகப் பற்பல சான்றுகளைக் கொடுக்கும் இந்நூல் இன்று கிடைப்பதற்கு மிகவும் அரிதாக உள்ளது. நாட்டு வரலாறு, உள்ளூர் வரலாறு, சமுதாய வரலாற்று ஆய்வு மிகுதிப்பட்டுள்ள இக்காலத்தில் இந்நூலில் கூறப்பெற்ற பல செய்திகள் அவ்வாய்வுகளுக்குப் பெரிதும் துணை புரிவதாக உள்ளன.

கோனார் பதிப்பில் பாடலுக்கு ஏற்ற விரிவான தலைப்பும், பாடல் கருத்தும், வரலாற்றுக் குறிப்பும் இடம்பெறவில்லை. நீண்ட பல பாடல்கள் ஓலைச்சுவடி போல் பதிப்பிக்கப்பட்டுள்ளன. பவானிக் கவிஞர் மழைமகன் மூலம் பெற்ற ஓலைச்சுவடியில் 30 புதுப் பாடல்களும் கிடைத்தன. (காவிரியில் விடக் கொண்டு வந்தவரிடமிருந்து மீட்டு அளித்த சுவடி)

எனவே மேற்கூறப்பட்ட அனைத்தும் அடங்கிய விரிவான பதிப்பாக இப்போது இந்நூல் நூற்றாண்டுக்குப் பின் பதிப்பிக்கப் பெறுகிறது. கோனார் பதிப்புக்குப் பொருள் உதவியவர் ''ஆனரி மாஜிஸ்திரேட்டும் கொக்கராயன்பேட்டை மிட்டா ஜமீன்தாருமான ஸ்ரீமான் என்.தண்டிகைவேல் கவுண்டரவர்கள்'' என்று கோனார் எழுதியுள்ளார்.

நூலாசிரியர்

இந்நூலின் ஆசிரியர் திருச்செங்கோட்டு ஆதிசைவ மரபினரில் ஒருவராகிய ஆலம்பாயர் கோத்திர சதாசிவ பண்டிதர் என்பவர். இவருக்கு ''எழுகரை நாட்டு நம்பி'' என்ற பட்டப் பெயர் உண்டு(11). திருப்பணி மாலை இயற்றியமைக்காக மராட்டிய மன்னன் சாம்போஜி காலத்தில் (1680-89) அவருடைய அலுவலர் வீமோசி பண்டிதர் மாதம் 6 பொன் சம்பளம் அளிக்கச் செய்ததுடன் கோயில் பூசையில் 'இரண்டு சாதம்' வழங்கவும் ஆணையிட்டார் (220). இவர் திருச்செங்கோட்டுச் சதகமும் பாடியுள்ளார்.

1684ஆம் ஆண்டு திருப்பணிமாலையை அர்த்தனாரீச பண்டிதரின் அன்பு பெற்ற காசிப கோத்திர தெய்வநாயக பண்டிதர் மகன் பெரியய்யன் அரங்கேற்றம் செய்தார் (230). காஞ்சிபுரம் இராசண்ணன் மகன் வீரசெட்டி சதாசிவ பண்டிதருக்குக் குரு அபிடேகம் செய்தார் (209). இருப்புலி இளையாக் கவுண்டர் தேசிகப் பிரதிட்டை செய்தார் (329). வீரராகவ முதலியார் மருமகன் பள்ளியப்பன் 50 பொன் கொடையளித்தார் (76). பேட்டையில் சதாசிவ பண்டிதர் குடும்பத்திற்கு அரசர் காலத்தில் அளிக்கப்பட்ட கொடை அன்னியர் வசமாய் இருந்ததை சரவணன், சண்முகன் ஆகியோர் மீட்டுத் தந்தனர் (417, 418).

சதாசிவ பண்டிதர் காலத்துக்குப் பின் செய்த திருப்பணிகளைப் பற்றிப் பிறர் பாடல் எழுதி மூலச்சுவடியோடு சேர்த்திருக்கலாம்.

திருப்பணி தொடக்கம்

புராண காலச் சிறப்புச் செய்திகள் தொடக்கத்தில் பல கூறப்பட்டாலும், சிங்கவன்மன் என்ற அரசர் செய்த திருப்பணிகள் முதலில் சுட்டிக் கூறப்படுகின்றன(41). அவர் கங்க அரசராக இருக்கக்கூடும். சவுந்தரபாண்டியன் இத்தலத்திற்கு வந்து வணங்கித் தெற்கு வாசல் உண்டாக்கியதாகவும், சேர மன்னன் மேற்கு வாசல் உண்டாக்கியதாகவும் கூறப்படுகிறது. சோழர் காலத்தில் சோழ நாட்டுச் சீர்காழிச் சைவ மறையோர்களில் ஆலம்பாயர், காசிபர் கோத்திரத் தார்களை அழைத்து வந்து பூசை புரிய நியமித்ததாகவும் கூறப்படுகிறது(43).

விசயநகர அரசர் மரபு

விசயநகர அரசு 1336ஆம் ஆண்டு தொடங்கியது. ஆயினும் கிருஷ்ணதேவராயன் (1509-1529), சதாசிவராயர் (1542-1570) கால அலுவலர்கள் காலத்தில் மட்டும் கோயில் பணிகள் இங்கு நடைபெற்றன. கிருஷ்ணதேவராயர் காலத்தில் முதல் அதிகாரி

பாலயதேவனும், திரியம்பகதேவனும் கொங்குப் பகுதியை நிர்வாகம் செய்துள்ளனர். திரியம்பகதேவன் தன் பெயரில் குளம் வெட்டி தெப்போத்சவம் நடத்தியுள்ளார். செவ்வாய்க்கிழமைச் சந்தையைத் தொடங்கினார். இவர் தம்பி கம்பநயினார் ''கம்பபுரம்'' என்ற ஊரை ஏற்படுத்தினார்.

சதாசிவராயர் காலத்தில் செகதேவராசன் நிர்வாகம் செய்யும்போது நரசிங்கராமாஞ்சி கொங்கு நிர்வாகி ஆனார். அவர் காலத்தில் அனந்தபூபன் கயிலாயநாதர் கோயிலில் தீபத்தம்பம் நிறுத்தினார் (1561). களஞ்சியம் கிருஷ்ணய்யன் சில கொடைகள் அளித்தார்.

மதுரை நாயக்கர் வரலாற்றுக் களஞ்சியம்

திருப்பணி மாலையில் கால் பாகம் 108 பாடல்கள் மதுரை நாயக்கர் காலத்தைச் சேர்ந்தவை, மதுரை நாயக்கர் மரபு ஆட்சியை விசுவநாத நாயக்கர் (1529-1564) தொடங்கினாலும் மூன்றாவது மன்னர் வீரப்ப நாயக்கர் (1572-1595) காலத்தில் 1580ஆம் ஆண்டுதான் மதுரை நாயக்கர் கால ஆலயப் பணிகள் தொடங்கின.

ஏறக்குறைய ஒரு நூற்றாண்டுக் காலம் (1580-1672) மதுரை நாயக்கரின் ஆட்சியாளர்கள், அவர்களின்கீழ் நிர்வாகத்தில் பங்கு கொண்ட அலுவலர்கள் (மணியம்), அவர்கள் காலத்தில் திருப்பணி செய்துள்ள அதிகாரிகள், வள்ளல் பெருமக்கள் பற்றிய முழு விபரத்தைச் சதாசிவ பண்டிதர் முழுமையாகப் பதிவு செய்து பாடலாகப் பாடியுள்ளார். இதனை மதுரை நாயக்கர் வரலாற்றுக் களஞ்சியம் எனலாம்.

குன்றத்தூர்த் துர்க்கம் என்ற சங்ககிரியே கொங்குப் பகுதியின் நிர்வாகத் தலைநகராக இருந்துள்ளது. சங்ககிரி ஆட்சியாளர்கள் பெயரும் அவர்கள் பதவி வகித்த காலமும் மிகத் தெளிவாகக் குறிக்கப் பட்டுள்ளது வரலாற்றுச் சிறப்புமிக்க செய்தியாகும். அவர்களில் சிலர்

சங்ககிரி துர்க்கத்தையும், சிலர் எழுகரை நாட்டையும், சிலர் காவிரியின் மேற்குக் கரையிலும், சிலர் தாராபுரத்திலிருந்தும், வேறு சிலர் கொங்கு நாடு முழுவதையும் நிர்வாகம் செய்துள்ளனர்.

சங்ககிரியில் நிர்வாகம் செய்த நாயக்கர் கால அதிகாரிகள்

1) வீரப்ப நாயக்கர் காலம் (1572-1595)

அ) ஆனை வசவன் மகன் குருவப்ப நாயக்கர் 1580-1585

ஆ) வீரராகவ முதலியார் மருமகன் பள்ளியப்பன் 1586-1589

நாகாத்தா செட்டியார் பரிந்துரையில் மீண்டும் நியமனம் 1590-1593

2) இரண்டாம் கிருஷ்ணப்ப நாயக்கர் காலம் (1595 - 1601)

அ) அமைச்சர் நயினா முதலியார் மகன் காளத்தியப்ப முதலியார் 1594-1599

ஆ) வீரராகவ முதலியார் 1600

3) முத்துக் கிருஷ்ணப்ப நாயக்கர் காலம் (1601-1609)

அ) ஆபத்துக் காத்தா பிள்ளை 1601-1607

ஆ) செவ்வந்தி 1607-1609

4) முத்துவீரப்ப நாயக்கர் காலம் (1609-1623)

அ) செவ்வந்தி 1609-1612

ஆ) காளத்தியப்ப முதலியார் 1612-1618

இ) கச்சி எறம செட்டியார் 1618-1628

5) திருமலை நாயக்கர் காலம் (1623-1659)

அ) நாயகத்தா முதலியார் 1629

ஆ) திருவேங்கட அய்யர் 1629-1636

இ) தளபதி இராமப்பய்யன் மருமகன் கொண்டப்பய்யன் 1636-1639

ஈ) குருவப்பய்யர் மகன், இராமப்பய்யன் மைத்துணர் மாகாணம் வெங்கடாத்திரி 1640-1641

உ) மீண்டும் வெங்கடாத்திரி நியமனம் 1642-1643

ஊ) இராமப்பய்யனின் மற்றொரு மைத்துணர்
கிருஷ்ணய்யர் 1644-1646

எ) கோபால கிருஷ்ணன் 1647-1648

ஏ) ஆரணி சேஷாத்திரி பிள்ளை 1649-1651

ஐ) நரசய்யன் கோனப்பையன் 1652-1653

ஒ) நாரணப்பன் 1656-1657

6) இரண்டாம் முத்துவீரப்ப நாயக்கர் காலம் (1659)

திம்மரசய்யன் (1659)

7) சொக்கலிங்க நாயக்கர் காலம் (1659-1682)

ஆரணி சேஷாத்திரி பிள்ளை 1660-1662

மீண்டும் சேஷாத்திரி பிள்ளை 1663-1665

சங்காலு நாயக்கர் 1669-1670

சொக்கலிங்கய்யன் 1671-1672

மேற்கண்ட அதிகாரிகளின் உறவினர்கள் பலர் திருப்பணிகள் பலவற்றைச் செய்துள்ளனர். மைசூர் சிக்கதேவராச உடையார் (1673-1704) தளபதி குமார தளவாய் மதுரை மன்னர் சொக்கலிங்க நாயக்கரைத் தோற்கடித்து மணலி, முட்டாஞ்செட்டி, பரமத்தி, அனந்தகிரி, கொல்லிமலையைக் கைப்பற்றி திருச்செங்கோட்டு இறைவரை வந்து வணங்கி மகிழ்ந்தான் (181). 1672 வரை நிர்வாகத்தில் இருந்த சொக்கலிங்கய்யனே கடைசி நாயக்கர் மரபின் அதிகாரி ஆவார். பின்னர்த் தொடர்ந்து மைசூர் உடையார் மரபினரின் அதிகாரிகள் இப்பகுதியை நிர்வாகம் செய்தனர்.

மைசூர் உடையார்கள் காலம்

திருச்செங்கோட்டில் மைசூர் உடையார்களின் ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற திருப்பணிகள் 70 பாடல்களில் குறிக்கப் பெறுகின்றன. அவை,

சிக்கதேவராச உடையார் 1673-1704

கண்டீரவ நரசராச உடையார் 1704-1714

முதல் கிருஷ்ணராச உடையார் 1714-1732

காலத்தவை.

சிக்கதேவராசனின் படைத்தலைவர் குமார தளவாய் மதுரைச் சொக்கலிங்க நாயக்கரை வென்று திருச்செங்கோட்டு இறைவரை வணங்கித் தலத்தைச் சிறப்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார் (181).

முத்துவசவய்யன் நிர்வாகம் செய்ய அனுப்பப்பட்டார். அவர் கீழ் மணியம் பணியில் இருந்த லிங்கய்யன் காலத்தில் பலர் திருப்பணி செய்தனர். குமார தளவாய்க்குப் பின் வந்த தேசய்யன், கெம்பராசன் போன்றோர் காலத்திலும் பல திருப்பணிகள் நிகழ்ந்தன. கண்டீரவ நரசராசா காலத்தில் சவுடராஜன் மகன் மரிராஜன் போன்றோர் திருப்பணி செய்தனர். கிருஷ்ணராச உடையார் காலத்தில் அருணாத்திரி, அப்பய்யன், கனகசபை, உல்லள்ளி சென்னராச சிக்கேந்திரன் ஆகிய நிர்வாகிகளின் கீழ் பலர் திருப்பணி செய்தனர்.

மராட்டியர் காலம்

சிக்கதேவராச உடையார் காலத்தில் சிவாஜியின் பேரனும், ஷாஜியின் மகனுமான சாம்போஜி மைசூர்ப் படையை வென்று மதுரை வரை சென்றார். சில ஆண்டுகள் கொங்குப் பகுதி அவர்கள் நிர்வாகத்தில் இருந்தது.

பொறுப்புக்களில் மராட்டிய இனத்தவரே நியமிக்கப்பட்டனர். அரிதி, விட்டலபலோபராயர், வீமோசி, கோவிந்த பண்டிதர், சந்தோஜி, சாமராசு, கண்டோஜி போன்றோர் நிர்வாகக் காலத்தில் பல திருப்பணிகள் நடைபெற்றன.

பாளையக்காரர்களும் மிட்டா ஜமீன்தார்களும்

கொங்கு நாட்டுப் பாளையக்காரர்களும், மிட்டா ஜமீன்தார் களும் பல திருப்பணிகள் செய்துள்ளனர். வெள்ளோடு காலிங்கராயர்,

பழையகோட்டை சர்க்கரை மன்றாடியார், காடையூர் காங்கேய மன்றாடியார், காங்கயம் பல்லவராயர் மரபினர் போன்ற பலர் பல திருப்பணிகளை மேற்கொண்டுள்ளனர்.

மோரூர்க் காங்கேயர் மரபில் திருமலை அத்தப்ப நல்லதம்பிக் காங்கேயன், அத்தப்ப இம்முடி நல்லதம்பிக் காங்கேயன், குமாரசாமிக் காங்கேயன், வேலப்ப காங்கேயன், வெற்றிக் குமாரசாமிக் காங்கேயன், குமார நல்லதம்பிக் காங்கேயன், ஐயகவுண்டன் போன்றோர் செய்த பல திருப்பணிகள் குறிக்கப் பெறுகின்றன.

தாரமங்கலம் கட்டி முதலி மரபில் சீயாலகட்டி, கட்டி முதலி போன்றோர் பலர் திருப்பணி செய்துள்ளனர். தேன்கனிக்கோட்டைப் பாளையக்காரரில் சின்னம நாயக்கர், பெத்தய்ய நாயக்கர், செவிடு பெத்த கிருஷ்ணய்ய நாயக்கர் ஆகியோர் திருப்பணி செய்துள்ளனர். கோயில்பாளையம் (கவசை) மசக்காளி மன்றாடியார், சேந்தமங்கலம் இராமச்சந்திர நாயக்கர் ஆகியோரும் திருப்பணி செய்துள்ளனர்.

குமரமங்கலம் ஜமீனில் கைலாசக் கவுண்டர், சின்னய கவுண்டர், கொக்கராயன்பேட்டை மிட்டா ஜமீனில் தண்டிகை வேல கவுண்டர், பெரியரங்கைய கவுண்டர், சித்தளந்தூர் மிட்டா ஜமீனில் முத்துசாமிக் கவுண்டர் மகன் சுப்பராயக் கவுண்டர் செய்த திருப்பணிகள் சிறப்புடன் குறிக்கப் பெறுகின்றன.

திருச்செங்கோட்டுக் குருக்கள்

திருச்செங்கோட்டின் சமயப் பெருமைக்கும், சிறப்புக்கும், வளர்ச்சிக்கும் மிக முக்கியக் காரணமாக இருப்பவர்கள் ஆதிசைவ சிவாச்சாரியர்களான குருக்கள்மாரே ஆவர். சோழர் ஆட்சிக் காலத்தில் அவர்கள் சோழ நாட்டிலிருந்து அழைத்து வரப்பட்டனர்.

சோழர்கள் கொங்கு நாட்டைக் கைப்பற்றியவுடன் நியமிக்கப் பட்ட முதல் அலுவலர் 'கோயில் ஸ்ரீகாரியம் செய்யும் காரிநக்கன்' என்று திருவிடைமருதூர்க் கல்வெட்டுக் கூறுகிறது. கொங்கு மண்டல சதகம்,

'குலசே கரன்குலோத் துங்கசீர்ச் சோழர்கள் கொங்கிடைமெய்த்
தலபூசை நன்குறத் தன்னாட் டுளாரில் சமர்த்தர்கண்டு
நிலையான காணியும் மேன்மையும் ஈய நிதானமுறு
வலஆதி சைவர்கள் வாழ்வதன் றோகொங்கு மண்டலமே'

என்று கூறுகிறது.

இத்திருப்பணிமாலையும்,

'சைவமறை யோர்பூச னைக்கினிய ராகவே
தனதுமண் டலம்மேவியே
சீரணிசீ காழியர் ஆலம்பாயர் காசிபர்
திறத்தோடர்ச் சனைசெய்யவே
திறமுற அமைத்தனன்'

என்று கூறுகிறது (43).

திருச்செங்கோடு குலசேகரபட்டர் வழிவந்த எம்.எஸ்.எஸ். விஜய சுப்பிரமணியக் குருக்களிடம் உள்ள செப்பேட்டில் 'சீர்காழி சோமசம்பு சிவாச்சாரியார் குமாரன் குலசேகர பட்டர்' அவர்களைத் திருச்செங்கோட்டுக்கு மூவேந்தரும் அழைத்து வந்ததாகக் கூறப்பட்டுள்ளது.

'ஏழு குரவர்கள்' நியமிக்கப்பட்டதாகத் திருப்பணிமாலை கூறுகிறது. அவர்கள்,

1) சுப்பிரமணிய பண்டிதர்
2) சதாசிவ பண்டிதர்
3) தெய்வசிகாமணி பண்டிதர்
4) நாககிரி பண்டிதர்
5) வேதநாயக பண்டிதர்
6) அர்த்தநாரீச பண்டிதர்
7) சேனாபதி பண்டிதர்

என்ற வரிசையில் கூறுப்பட்டுள்ளனர் (45).

முதல் நால்வரும் குலசேகரப் பட்டர் வழியினர். இறுதி மூவரும் குலோத்துங்கப் பட்டர் வழியினர். இன்று ஆறு குருக்கள்மார்களே உள்ளனர்.

உமைபாகர், வேலவர் பூசை சிறக்க இவர்கள் நியமிக்கப் பட்டாலும் இவர்கள் 'தாம் மேவி அர்ச்சனை' செய்யத் தனிச் சந்நதிகளும் குறிக்கப்பட்டுள்ளன. ஏழு குரவர்களும் முறையே பிரம்மா, விஷ்ணு, துர்க்கை, நாகீசர், கந்தன், உமை, கணபதி சந்நதிகளில் சிறப்பு அர்ச்சனை செய்வர்.

கொடையளித்த பெருமக்கள் ஏழு குரவர்களையும் தாய், தந்தை, சகோதரர்கள் போலப் பாவித்து அன்பு செலுத்தி உதவிகள் புரிந்ததாகப் பல பாடல்களில் கூறப்பட்டுள்ளன. இருப்பினும் சிலர் தனியாகவும் சிறப்பிக்கப்பட்டுள்ளனர்.

குருக்கள் பெற்ற சிறப்புக்கள்

விசயநகர மன்னர் கிருஷ்ணதேவராயர் காலத்தில் (1509-1529) 'பச்சை நம்பி' என்ற குருக்களைப் பல்லக்கில் ஏற்றிப் பாராட்டி 'எழுகரை நாட்டுப் பட்டன்' என்ற பட்டம் அளிக்கப்பட்டது (55).

மதுரை நாயக்க மன்னர் முத்துவீரப்ப நாயக்கர் காலத்தில் (1609-1629) 'தமிழ் இசை ஓதுகின்ற' அர்த்தநாரி பண்டிதருக்குக் குதிரை, குடை இவைகள் அளித்ததுடன் நிலமும் கொடையாக நாகாச்செட்டி என்பவரால் அளிக்கப்பட்டது (79).

சொக்கலிங்க நாயக்கர் காலத்தில் (1659-1682) 06.05.1664 அன்று சேஷாத்திரி பிள்ளை என்பவரால் அர்த்தநாரீசுர பண்டிதருக்குப் 'பண்டிதராய குருராயர்' பட்டம் அளித்துக் குரு அபிஷேகம் செய்யப்பட்டது (152).

மராட்டிய சாம்போசி காலத்தில் வீரசெட்டி என்பவர் 'எழுகரை நாடன்' சதாசிவ பண்டிதருக்கும், வேதநாயக பண்டிதருக்கும் குரு அபிஷேகம் செய்வித்துப் பொருளும் வழங்கினார் (209).

தாரமங்கலம் சீயாலகட்டி முதலி 1664 ஆம் ஆண்டு தெய்வசிகாமணி பண்டிதருக்குக் குரு அபிஷேகம் செய்வித்தார். சேனாபதி பண்டிதருக்கும் அவரது தங்கைக்கும் திருமணம் செய்து கொள்ளப் பொருள், சம்பளம் கொடுத்தார் (260).

திருச்செங்கோட்டு நல்லதம்பி தெய்வசிகாமணி பண்டிதருக்குக் குரு அபிஷேகம் செய்வித்தார் (325).

இருப்புலி இளையாக் கவுண்டர் அர்த்தசாரீச பண்டிதருக்கு வீடு அளித்தார். சதாசிவ பண்டிதருக்கு 'தேசிகப் பிரதிஷ்டை' செய்தார். குலோத்துங்கப் பட்டர் தம்பிக்கு உபநயனம் செய்வித்துத் திருமணமும் நடத்தி வைத்தார் (330).

கொக்கராயன்பேட்டை மிட்டா ஜமீன்தார் பெரியரங்கைய கவுண்டர் வேதநாயக பண்டிதருக்கு வீடு அளித்தார். தனக்குச் சிவதீட்சை செய்வித்த நாககிரி பண்டிதருக்கும் வீடு அளித்தார் (374).

வீரப்பநாயக்கர் காலத்தில் (1572-1595) வீரராகவ முதலியார் மருமகன் பள்ளியப்பன் திருச்செங்கோட்டுத் தானிகர்களுக்குப் பூமி தானம் செய்தார். தொடர் சம்பளத்திற்காகச் ''சம்பளக் கொல்லை'' நிலம் அளித்தார். அந்நிலங்கட்கு நீர் பாயக் குளமும் அமைத்துக் கொடுத்தார் (68).

சொக்கலிங்க நாயக்கர் காலத்தில்(1659-1682) மாவை ஆட்கொண்டான் மகன் மாவைக் குமாரசுவாமி முதலியார் 1669ஆம் ஆண்டு நித்தீசன் என்பவருக்குத் திருமணம் செய்துவைத்து ஆச்சார்ய அபிஷேகம் செய்து 'பரதேசி முத்திரை' அளித்து மடம், மண்டபம், மட அடிமை, நந்தவனம், பசு இவை அளித்துப் பூசைக்குத் தேவையான அனைத்துப் பரிகலங்களையும் அளித்தார்.

தாரமங்கலம் கட்டி முதலி மலையில் அந்தணர்கட்கு அன்ன சத்திரம் ஏற்படுத்தினார். அதிதிகள், சந்நியாசி இவர்கட்குத் தானிகர்கள் உணவளிக்க ஏற்பாடு செய்தார் (249). அர்ச்சகர்கட்குத் செவிக்கு

5 கழஞ்சு பொன்னால் ''ஆறுகட்டி'' என்னும் அணியும், மூன்று கழஞ்சு பொன்னால் பவுத்திரமும் செய்தளித்தார். அனைவர்க்கும் ஆடைகள் அளித்தார். வீடுகட்குத் தேவையான பொருட்கள் வழங்கினார். அர்ச்சகர்களின் மக்களுக்குப் பூசாவிதிகள் கற்றுக் கொடுத்துத் தேர்வு நடத்தி அவர்களைச் சிதம்பரம், விருத்தாசலம் அர்ச்சகர்கள் போல உருவாக்கினார் (253). பொருள், நிலம், பணியாட்கள், குதிரை, பல்லாக்கு, மடம், மட அடிமை முதலிய பல உதவிகளும் செய்தார் (254, 257).

காஞ்சிபுரம் இராசண்ணன் மகன் வீரசெட்டி என்பவர் மைசூர் மன்னன் சிக்கதேவ ராச உடையார் காலத்தில் (1673-1704) அதிகாரிகள் தேசய்யன், இலிங்கராசய்யன் ஆகியோர் அறிவுரைப்படி அர்ச்சகர் மக்களுக்கு உபநயனம் செய்வித்தார். அவர்கட்குத் திருமணமும் நடத்தித் தக்க காலத்தில் ஆச்சார்ய அபிஷேகமும் செய்தார் (419).

அக்கிரகாரம் அளித்தல்

விசய நகர மன்னர் கிருஷ்ணதேவராயர் காலத்தில் (1509-1529) அதிகாரியாக இருந்த திரியம்பக உடையார் தம்பி கம்ப நயினார் என்பவர் தன் பெயரால் 1512ஆம் ஆண்டு திருச்செங்கோட்டில் 'கம்பபுரம்' என்ற ஊர் ஏற்படுத்திக் கொடுத்தார் (58).

திருமலை நாயக்கர் (1629-1659) தளபதி இராமப்பையனின் மருமகன் கொண்டப்பையன் திருச்செங்கோட்டுக் குருக்களுக்காக மாம்பூண்டியில் அக்கிரகாரம் ஏற்படுதிக் கொடுத்தார் (117).

மோரூர் நல்லதம்பிக் காங்கேயன் ''அர்த்தநாரீசர்புரம்'' என்ற பெயரில் அக்கிரகாரம் ஏற்படுத்திக் குருக்களுக்குக் கொடுத்தார் (276).

குருக்கள் குறை நீக்கம்

மைசூர் சிக்கதேவராசன் ஆட்சிக் காலத்தில் (1673-1704) நிர்வாகி கெம்பராசன் என்பவர் திருச்செங்கோட்டு குருக்கள்மாரை வற்புறுத்திப் பணம் வசூல் செய்ய முற்பட்டார். குருக்கள் பருத்திப்

பள்ளிநாடு செல்ல முற்பட்டனர். காஞ்சிபுரம் இராசண்ணன் மகன் வீரசெட்டி கெம்பராசன் கேட்ட பணத்தைக் கொடுத்து குருக்களைத் திருச்செங்கோட்டில் தங்கவைத்தார் (206).

திருச்செங்கோட்டு அர்ச்சகர்களான ஆலம்பாயர், காசிபர் கோத்திரக் குருக்கள்மார்கள் தங்கள் பூசை முறையில் நான்கு நாட்களை நூறு பொன்னுக்குக் கொடுமுடித் தானிகர்க்கு விலைக்கு விற்று முறி எழுதிக் கையொப்பம் இட்ட பின் ஏமப்பள்ளிக்கு வந்தனர். முளசி கண்ண குலக் கோக்கிளாய் வேலன் நூறு பொன் தந்து முறியைக் கிழித்தெறிந்து கொடுமுடித் தானிகர்க்கு விடை கொடுத்தார். குருக்கள் பாராட்டினர் (302).

1676 ஆம் வருடம் துர்க்கை கோயில் பூசை செய்யும் வேலய்யர் மகன் பெரியய்யன் அதிகாரம் செய்கையில் அரசர் பெயரைச் சொல்லி குருக்களுக்கு அபராதம் விதித்துக் கொடுமை செய்தார். தெய்வ சிகாமணிக் குருக்கள் பங்கை வற்புறுத்தி எழுதி வாங்கி 12 வருடம் அனுபவித்தார். 1688 ஆம் வருடம் பெரியய்யனுக்குப் பொருள் தந்து பூசைப் பங்கைத் தெய்வசிகாமணிக் குருக்களுக்கு மீட்டுக் கொடுத்தவர் முளசி கண்ணகுல அன்னத்தியாகி வேலகவுண்டர் என்பவர் (400).

சதாசிவ பண்டிதர் குடும்பத்தினருக்குச் சோழர் நாளிலேயே பேட்டை என்னும் இடத்தில் உரிமையாகக் காணி நிலம் கொடுக்கப் பட்டிருந்தது. ஆனால் நூறு வருடம் அந்தக் காணி நிலத்தைப் பிறர் அனுபவித்துக் கொண்டு வந்தனர். சரவணன், சண்முகன் இருவரும் அக்காணி நிலத்தின் உரிமையை மீட்டுச் சதாசிவ பண்டிதர் குடும்பத்திற்கு அளித்தனர் (417, 418).

1866 ஆம் வருடம் தொடங்கி நாட்டில் பெரும் பஞ்சம் ஏற்பட்டது. மக்கள் பெரிதும் வருந்தினர். கொக்கராயன்பேட்டை மிட்டா ஜமீன்தார் பெரிய ரங்கைய கவுண்டர் குருக்கள்மார், கோயில் பணியாளர் குடும்பத்திற்கு வேண்டிய தானியங்களை அளித்தார் (369).

குருக்கள் கொடைகள்

குருக்கள், குருக்களின் மக்கள், மனைவியர் ஆகியோர் திருச்செங்கோட்டுக்குப் பல கொடைகள் அளித்துள்ளனர்.

1) அர்த்தநாரீச பண்டிதர் மகன் நல்லய்யன் (150, 157)
2) நந்தவனப் பணியாளர்க்குக் கொடை கொடுத்த சேஷாத்திரி அக்கொடையை அர்த்தநாரீச பண்டிதரிடம் அளித்தார் (162)
3) தேவார நம்பி சேனாபதி அர்த்தநாரி பண்டிதர் (174)
4) காசிப கோத்திர அர்த்தநாரீச பண்டிதர் பரிவு பெற்ற தெய்வநாயகம் மகன் பெரியய்யன் (222, 223, 230)
5) ஆலம்பாயர் கோத்திர தெய்வசிகாமணி பண்டிதர் மகன் குருக்கள் சீனிவாசன் (231, 232)
6) குமரமங்கலம் கவுண்டின்ய கோத்திரம் குழந்தையப்பன் மகன் பொன்னய்யன் (331)
7) சுப்பிரமணிய பண்டிதர் வழிவந்த ஆலம்பாயர் கோத்திர அர்த்தநாரி அய்யன் முத்தையன் (332)
8) காசிப கோத்திரம் சேனாபதி குருக்கள் (368)
9) நாககிரி பண்டிதர் வழிவந்த செல்லய்யன் அர்த்தநாரி (392)
10) நாககிரி பண்டிதர் (389, 394)
11) நாககிரி பண்டிதர் மனைவி வள்ளியம்மாள் (390)
12) துர்க்கை கோயில் வேலய்யன் மகன் பெரியய்யன் (401, 403-407)

இவர்கள் செய்த திருப்பணிகளை மேற்கண்ட எண்களில் காண்க.

திருப்பணியில் பங்குபெற்ற பிற சமூகத்தார்

திருச்செங்கோட்டுத் திருப்பணியில் பல சமூகத்தாரும் ஆர்வமுடன் பங்கேற்றுள்ளனர். கொங்கு வேளாளர், நாட்டு வேளாளர், பால வேளாளர், திருமுடி வேளாளர், வேட்டுவர், செங்குந்தர்,

பிள்ளைகள் (கணக்குப் பிள்ளைகள்), நாயக்கர் (நாயுடுகள்), செட்டியார், தெலுங்குச் செட்டியார், நகரத்துச் செட்டியார், வெள்ளாஞ் செட்டியார், குசச் செட்டிகள், தெலுங்கு சங்கமர் (வீரசைவர்), கோனார் (இடையர்), நாடார், ஆசாரியர், மராட்டியர், தொண்டை மண்டலம் துளுவ வேளாளர், வன்னியர், உடையார் முதலிய சமூகத்தாரின் திருப்பணிகள் கூறப்படுகின்றன.

பெண்கள் திருப்பணி

திருச்செங்கோட்டுத் திருப்பணிகளில் ஆண்களேயன்றிப் பெண்கள் பலரும் பங்கு கொண்டுள்ளனர்.

கச்சி ஏறமசெட்டி என்பவர் மனைவி பங்காரம்மாள் சரப்பணி, மூக்குத்தி, மின்னணி இவைகளைக் கொடையாக ஈசுவரனுக்குக் கொடுத்தார். கைலாசநாதர் கோயிலில் நிருத்தமண்டபக் குறட்டில் உத்திரம், போதி, பாக்கல் இவைகளைத் தன் உபயமாகத் திருப்பணி செய்தார் (97, 98).

திருச்செங்கோட்டில் சிவதீர்த்தத்தின் அருகில் கிழக்கில் ஒரு மண்டபத்தை 'மாதர்க்கு அரசி மசவேலன் (தேவி) வள்ளி, கட்டத் தொடங்கிப் பாதிப் பணியைச் செய்து முடித்தார். குறைப் பணியைக் குமரமங்கலம் செட்டியாக் கவுண்டர் கட்டி முடித்தார். இம்மண்டபம் செட்டியாக் கவுண்டர் மண்டபம் என்று வழங்கப் பெறுகிறது (339).

திருமுடித்தாசி சேனாபதி வேலாள் மலைப்படி வாசல் மீது ஒரு மண்டபம் கட்டினார். இம்மண்டபம் தாசி மண்டபம் என்று வழங்கப் படுகிறது (342). வீரபத்திரன் சந்நதி முன் தயிலி என்பவர் கட்டிய மண்டபம் இன்றும் தயிலிமண்டபம் என்றே பெயர் வழங்குகிறது (343). ஆதிசிவதீர்த்தத்தின் தென்புறம் குருவம்ம மாணிக்கி என்னும் தேவரடியார் ஒரு மண்டபம் கட்டினார் (346).

சீர்பாத மண்டபம், சிகரம் இவைகளை மட அடிமையாக இறைபணி புரிந்த 'விருமி' என்பவர் கட்டினார் (364). நாககிரி பண்டிதர்

மனைவி வள்ளியம்மாள் கிரிவலப் பாதையின் இடையில் ஒரு செங்கல் மண்டபம் கட்டினார் (390). வடகோபுரச் சுதைப் பணியைப் பலர் மேற் கொள்ளும்போது மீனாட்சி என்ற பெண்மணியும் அத்திருப்பணியில் பங்கு கொண்டார் (394).

திருச்செங்கோடே ஏரகம்

முருகப் பெருமானின் படைவீடுகளில் நான்காவதாகக் குறிக்கப்பெறும் 'ஏரகம்' இன்று சோழநாட்டுச் 'சுவாமி மலை' என்று கூறப்படுகிறது. திருமுருகாற்றுப்படைக்கு உரையெழுதிய நச்சினார்க் கினியர் 'ஏரகம் மலைநாட்டில் உள்ளதோர் பதி' என்று கூறியுள்ளார். ஆய்வாளர்கள் தென் கன்னட நாட்டில் குமார பருவதத்தை அடுத்துள்ள குமார சேத்திரமாகிய சுப்பிரமணியர் ஸ்தலத்தை ஏரகம் என்று குறிப்பர். சிலப்பதிகார அரும்பத உரையாசிரியர் இளங்கோவடிகள் கூறும் வெண்குன்றே ஏரகம் என்பார்.

கொங்கு நாட்டுக்கு 'மலைநாடு', 'மலை மண்டலம்' என்ற பெயரைப் பல ஆவணங்கள் கூறுகின்றன. திருச்செங்கோட்டைப் பல இலக்கியங்களும் கல்வெட்டும் திருச்செங்கோடே 'ஏரகம்' என்று கூறுகிறது. திருச்செங்கோட்டுப் பிள்ளைத்தமிழ்,

> ''ஏரக நாயக ஆடுக செங்கீரை'',
> ''ஆடும் பதம்பரவும்மேல் ஏரகத்துவளர்
> ஆறுமுகத்தர் அருளே''
> ''குங்குமம் நாறும் தடஞ்சுனை ஏரக
> கொட்டுக சப்பாணி''

என்பன போன்று பல தொடர்கள் வருகின்றன. திருச்செங்கோட்டில் கைக்கோளர் தெருவில் பாவடி அருகில் உள்ள கிருஷ்ணதேவராயர் (1522) காலக் கல்வெட்டு,

> ''குன்றத்தூர் சீமை எழுகரை நாட்டுக்குள்ளான கீழ்க்கரைப் பூந்துறை நாட்டு அர்த்தநாரீஸ்வர தம்பிரானார் குமாரர் தம் படைவீடான திருச்செங்கோடு''

என்று கூறுகிறது.

இத்திருப்பணிமாலையில் பல இடங்களில் ஆசிரியர் சதாசிவ பண்டிதர் திருச்செங்கோட்டை ஏரகம் என்று குறிக்கின்றார்.

''ஏரகத்தார் படித்தரத்துக்கு ஈந்த தாமே'' (54)

''ஏரகம் தன்னில் வருணன் திசையினில்'' (80)

''இறையென வாழும் நாளில் ஏரகம் சிறப்பித்தானே'' (128)

''ஏரகம்சேர் வாசியான வடிவேலர்'' (158)

''ஏரகத்தில் மருவும் பருத்தி நன்னாடு'' (413)

என்பன அவற்றுள் சில.

''சூரகம் தோயச் சுடர்வேல் எடுத்த சுவாமி நின்ற
ஏரகம் காண்இது'' (திருச்செங்கோட்டுக் கோவை -367)

எனத் திருச்செங்கோட்டுக் கோவையும் ஏரகம் திருச்செங்கோடு என்று சுட்டுகிறது.

சுவாமிமலையில் ஒரு விநாயகர் பெயர் 'கண் கொடுத்த விநாயகர்' என்பது. கண் பெற்ற அடியவர் கொங்கு நாட்டவர் என்பது சுவாமி மலைத் தலச் செய்தியாகும்.

கோயிலுக்கு ஊர்கள், நிலம் கொடை

ஆபத்துக் காத்தா பிள்ளை என்பவரால் கைலாச நாதர் கோயில் காலைச்சந்திப் பூசைக்காகத் துத்திநத்தம் என்ற ஊரில் நிலம் கொடையாக அளிக்கப்பட்டது (84).

சின்னநாகாச் செட்டி என்பவரால் மாந்தை என்னும் ஊரில் பாண்டீசர் கோயில் பூசைக்காகத் தோப்பும், நான்கு மா நன்செய் நிலமும் கொடையாக வழங்கப்பட்டது (101).

கொண்டப்பையன் அர்த்தநாரீசுவரர், வடிவேலர் பூசைக்காக அகரம், துத்திநத்தம், கூனவேலம்பள்ளி, சிறுமுளசை, பால்மடை ஆகிய ஊர்களின் வருவாயைக் கொடையாக அளித்தார் (117).

சேஷாத்திரிபிள்ளை நந்தவனப் பணியாளர்கட்கு நாட்டா மங்கலத்தில் 24 பொன் மதிப்பில் நிலம் கொடை அளித்து அர்த்த நாரீசுவர பண்டிதர் வசம் அளித்தார்(162).

சங்காலு நாயக்கர் என்பவர் கோயில் பூசைகட்காகப் புலியூர் என்னும் ஊரில் நான்குமா நிலம் கொடையாக அளித்தார் (164).

முத்தியாலு நாயக்கர் என்பவர் மலையில் தென்வாசல் அருகில் உள்ள விசாலாட்சி-விசுவநாதர் கோயில் பூசைக்காக கொழுங் கொண்டை என்னும் ஊர் வரிகளைக் கொடையாக அளித்தார் (175).

குருக்கள் சீனிவாசன் என்பவர் சொக்கலிங்கம் என்பவர் நலனுக்காக மாந்தை என்னும் ஊரில் பத்துமா நிலம் அர்த்தநாரீசுவரர் பூசைக்குக் கொடையாகக் கொடுத்தார்(232).

சேந்தமங்கலம் இராமச்சந்திர நாயக்கர் அர்த்தநாரீசுவரர் பூசைக்காகச் சோழசிந்தாமணி, பாலைமேடு, மல்லசமுத்திரம், கொன்னையாறு, துத்திநத்தம், கொழுங்கொண்டை ஆகிய ஊர்களில் ஐந்தைந்து மா நிலம் கொடையாக அளித்தார் (234).

குமாரசுவாமி முதலியார் அர்த்தநாரீசுவரர், வடிவேலர், விசுவநாதர் ஆகியோர் பூசைக்காக வெண்கலக் கிணறு என்ற ஊரையும், பொத்தனூர், குண்டுக்கல் வருவாயையும், வாங்கலில் ஆறு மா நிலமும் கொடையாக அளித்தார். மேல்கரைப் பூந்துறை நாட்டு வரியையும் அளிக்கச் செய்தார் (242).

பருத்திப்பள்ளி நாட்டார் அர்த்தநாரீசுவரருடைய பூசைக்காகப் பருத்திப்பள்ளி, பாலைமேடு, மல்லசமுத்திரம், கொன்னையாறு ஆகிய ஊர்களில் நிலமும், துத்திக்குளம் என்ற ஊரின் வரியையும், கொழுங் கொண்டை என்ற ஊரின் தாழி வெல்லத்தையும் கொடையாக அளித்தனர் (307).

காவிரித் தீர்த்தம்

'கங்கையிற் புனிதமாய' காவிரியின் அருகேயிருக்கும் ஊர்க் கோயில்கட்குக் காவிரியின் நீரைப் புனிதத் தீர்த்தமாகக் கொண்டு சென்று வழிபடுவது இன்றும் வழக்கத்தில் உள்ள நிகழ்ச்சியாகும்.

திருச்செங்கோட்டில் பல புனிதத் தீர்த்தம் இருந்தாலும் காவிரியாற்றுத் தீர்த்தம் கொண்டு வரப் பலர் கொடை கொடுத்துள்ளனர். காவிரி நீர் காவடியில் ஆட்கள் மூலமும், எருத்துக் களின் முதுகின் இருபக்கமும் வைக்கப்படும் குடங்கள் மூலமும் புனிதக் காவிரி நீர் கொண்டு வரப்படும். இக்குடத்திற்கு 'மங்கிணிக் குடம்' என்று பெயர். இக்கொடையாக ஆட்கள், எருதுகள் அளிக்கப் பெறுவர். காவேரி மஞ்சனம், காவேரி உதகம் என்று இக்கொடை பெயர் பெற்றது.

கொண்டப்பையன் (119), சேந்தமங்கலம் இராமச்சந்திர நாயக்கர் (234), குமாரசாமி முதலியார் (243), தாரமங்கலம் கட்டி முதலி(248), ஆறை இளையா நாயக்கர் (262), நல்லதம்பிக் காங்கேயன் (காவிரித் தீர்த்தத்தோடு கங்கைத் தீர்த்தமும் கொண்டு வர இவர் கொடை யளித்தார்) (277), குமரமங்கலம் சின்னய்ய கவுண்டர் (395), இலிங்கய்யன் (402) ஆகியோர் காவிரித் தீர்த்தம் கொண்டுவரக் கொடையளித்துள்ளனர்.

தைப்பூசத்தன்று அர்த்தநாரீசுவரர், வடிவேலர் காவிரிக்கே சென்று புனித நீராட்டு நடைபெறும். 'காவேரியாடு தைப்பூசத் தீர்த்தம்'' என்று பாடல் குறிக்கிறது.

காவிரியாற்றில் நடைபெறும் இத்தைப்பூச நீராட்டு விழாவிற்குத் தாரமங்கலம் கட்டி முதலியும் (251), முளசி அன்னத்தியாகி வேல கவுண்டரும் (291) கொடையளித்துள்ளனர்.

நீர் நிலைகள்

மூர்த்தி, தீர்த்தம், தலம் என்பதற்கு ஏற்ப திருச்செங்கோட்டில் பல புனிதத் தீர்த்தங்கள் உள்ளன. நாற்பது தீர்த்தங்கள் உள்ளதாகக்

கோனார் கூறியுள்ளார். காவிரிப் புனிதநீர் கொண்டுவரப் பலர் கொடை கொடுத்துள்ளனர். பலர் ஏரி, குளம், கிணறு அமைத்துத் தந்துள்ளனர்.

முதலில் 1512ஆம் ஆண்டு திரியம்பக உடையார் தெப்பக் குளம் வெட்டி மண்டபமும் அமைத்துள்ளார். காளத்தியப்ப முதலியார் 1613ஆம் ஆண்டு ஒரு குளம் அமைத்தார். எறமசெட்டி மைத்துணர் நாரணப்பன் 1622ஆம் ஆண்டு நாரண சமுத்திரம், எறம சமுத்திரம், நாகதடம் என்ற மூன்று நீர்நிலைகளை உருவாக்கினார்.

சேந்தமங்கலம் இராமச்சந்திர நாயக்கர் இலுப்பைக் குளம், பூதன் ஏரி இவைகளை அமைத்தார். அழகியம்மை பெயரில் ஒரு குளத்தை அந்தியூர் நகரத்தாரில் பாகம்பிரியா செட்டியார் மகன் குமாரவேல் உருவாக்கினார். முத்தியாலு நாயக்கர் வெட்டிய கிணறு அவர் பெயரிலேயே அழைக்கப்பட்டது. இராமபத்திரன் சூரப்பள்ளி என்னும் இடத்தில் அரிய முயற்சியால் ஒரு குளம் அமைத்தார். அவர் கங்கையைக் கொண்டு வந்த பகீரதனுக்கு ஒப்பாகக் கூறப்படுகிறார்.

கட்டி முதலி 'உதகம் ஊறும் உதும்பரக் கிணறு' அமைத்த தாகக் கூறப்படுகிறது. இன்று அது அத்திக்குட்டைக் கிணறு என்று அழைக்கப் படுகிறது. அடிவாரத்தில் ஆறுமுகப் பெருமான் கோயிலில் கிணறு வெட்டி நீர் இறைக்க எட்டு உருளைகள் அமைக்கப்பட்டன. இப்பணியைச் செய்தவர் துறவி குமாரசாமிப் பரதேசி என்பவர்.

விழாக்கள்

இன்று வைகாசி விசாகத் தேர்த்திருவிழா மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. கிருஷ்ணதேவராயர் ஆட்சிக் காலத்தில் 1512ஆம் ஆண்டு தெப்பக்குளம் வெட்டி தைப்பூசத்தில் தெப்பத் திருவிழா நடத்தப்பட்டது. தொடர்ந்து காளத்தி முதலியார் காலத்திலும், கொண்டப்பையன் காலத்திலும் தெப்பத்திருவிழா நடைபெற்றது.

எறமசெட்டி மைத்துணர் நாரணப்பன் காலத்தில் மாசி மகத் திருவிழாக் கொண்டாடப்பட்டது. மாகாணம் வெங்கடாத்திரி வைகாசி விழா நடத்தினார். 'மாசித் திருநாளின் வைபோகம் இந்நாட்டில் இல்லை' என்று கூறவே அதையும் சிறப்பாக நடத்தினார். மாசித் திருவிழா நாரணப்பன், வீமோசி, தேன்கனிக்கோட்டை சின்னம நாயக்கர் காலத்திலும் கொண்டாடப்பட்டது.

மாவைக் குமாரசாமி முதலியார் காலத்தில் சித்திரைப் பரணி, சித்திரா பவுர்ணமி, ஆனி மூலம், ஆவணி மூலம், ஆடிப் பூரம், கேதார விரதம்,மகாநவமி, கிருத்திகை, மார்கழித் திருவாதிரை, மாசி மகம் போன்ற பல விழாக்களுடன் வைகாசி விசாகத் திருநாள் விழாவும் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

கொள்ளை - படையெடுப்பு - கலகம்

25.10.1644அன்று 'கன்னடிய நஞ்சையன்' திருச்செங் கோட்டுக் கோயிலைக் கொள்ளையிட்டு ஆபரணங்களையும், பொன்னையும், பொருளையும் கொண்டு சென்றான். பாதுகாப்பின் பொருட்டு இறை படிமங்களைக் காவிரிக்கு மேற்கே மேல்கரைப் பூந்துறை நாட்டில் வைத்தனர். கொப்பூரி ராமய்யன் மைத்துணர் கிருஷ்ணய்யன் 100 பொன்னும், 200 சலகை நெல்லும் கொடுத்துக் குடமுழுக்கு விழாவும் செய்தார். இப்பணியில் பரமத்தி முளை வேட்டுவர் தலைவர் திருமலை அல்லாள இளையா நாயக்கரும் கலந்துகொண்டார்.

1644ஆம் ஆண்டு ஆனி மாதம் துலுக்கர் படையெடுப்பும் நடைபெற்றது. ஆண்டியப்பன் என்பவரும் கலகம் செய்தார். அதனால் இறை படிமங்கள் சங்ககிரி கொண்டு செல்லப்பட்டன. சேஷாத்திரி பிள்ளை என்பவர் 1649ஆம் ஆண்டு இறை படிமங்களை மீண்டும் திருச்செங்கோட்டுக்குக் கொண்டு வந்தார் (132, 133, 135, 139, 263, 264).

கால்நடைகள் கொடை

கொங்கு நாட்டில் பெரும்பாலும் கால்நடைகளைக் கோயில்கட்குக் கொடை கொடுக்கும் வழக்கம் இல்லை. திருச்செங்கோடு கோயிலுக்கு இருவர் கால்நடைகள் கொடை கொடுத்துள்ளனர்.

தாரமங்கலம் கட்டி முதலி திருச்செங்கோட்டுக் கோயிலுக்கு நூறு பசுக்கள், நூறு எருமைகள் கொடையாகக் கொடுத்துள்ளார் (252). மோரூர்க் கண்ணகுல அத்தப்ப நல்லதம்பிக் காங்கேயன் நூறு பசுக்கள் கொடையாக அளித்தார் (276).

இலக்கியங்கள்

'சேறை' என்னும் ஊரைச் சேர்ந்த பிறைசூடி மகன் சொக்கநாதன் ''செங்கோட்டு வருக்கக் கோவை'', ''செங்கோட்டு வெண்பா'' ஆகிய நூல்களை இயற்றினார். அவர் பிரதோஷ பூசையின் போது விநாயகருக்கு 120 தேங்காய்கள் உடைத்தார் (170, 171).

மைசூரார் ஆட்சியின்போது நிருவாகியாக இருந்த தேசராசய்யன் என்பவர் கவி மொழிபவர் என்று கூறப்பட்டுள்ளார் (194). கட்டி முதலி கோயிலில் தல புராணம் படிக்கக் கொடை கொடுத்துள்ளார் (257). குருக்கள்மார் மக்களுக்குப் பூசை விதிகள் கற்றுக் கொடுக்கப்பட்டுத் தேர்வும் வைக்கப்பட்டுள்ளது (253). திருப்பணிமாலை அரங்கேற்றம் அலுவலர்கள் மக்கள் முன்னிலையில் நடைபெற்றது (230). அர்த்தனாரீசுவர பண்டிதர் திருமுறைப் பாடல் பாடுவதில் வல்லவர். அவர் 'தேவார நம்பி' என அழைக்கப்பட்டார். நாடகம் நடிக்கப்பட்டது குறிக்கப்பட்டுள்ளது (118, 173, 205).

சில சிறப்புச் செய்திகள்

1) தாரமங்கலம் கட்டி முதலிகளின் மடம் சிதம்பரத்தில் உள்ளது. மதுரையிலும் மடம் இருந்த செய்தி இந்நூல் மூலம் தெரிகிறது (353). பெயர் ''சீயால கட்டி மடம்''

2) அர்த்தநாரீச பண்டிதர் மகன் குருக்கள் நல்லய்யன். அவர் ''கல்வி முகில், நம்பினவர் தம்பம், அன்புபுரி கும்பமுனி'' என்று பாராட்டப்படுகிறார். அவருடைய ஆலோசனைப்படி கோயில் பரிசனங்களும், மக்களும் சேந்தமங்கலம் சென்று பாளையக்காரர் இராமச்சந்திர நாயக்கர் அனுமதி பெற்று மலையில் மரங்கள் வெட்டிக் கொண்டு வந்து அர்த்தநாரீசர், வடிவேலருக்குக் கொடிக்கம்பமும், கைலாசநாதர் கோவில் கதவும் தேர்ச்சக்கரங்களும் செய்தனர் (157).

ஆரணி தெய்வராயன் மகன் அருணாத்திரி சகோதரன் சேஷாத்திரி பிள்ளை நிர்வாக காலத்தில் வழியடிமை கொண்டான் மகன் சரவணப் பெருமாள் பிள்ளை மேற்படி திருப்பணியை முன்னின்று நடத்தினார் (156).

3) கிருஷ்ணதேவராயர் ஆட்சிக் காலத்தில் (1509-1529) 1522ஆம் வருடம் அதிகாரி திரியம்பக உடையார் காலத்தில் திருச்செங்கோட்டில் செவ்வாய்க்கிழமை சந்தை தொடங்கப் பட்டது (57).

4) வீரராகவ முதலியார் மருமகன் பள்ளியப்பன் நிர்வாக காலத்தில் (1586-1589) திருச்செங்கோட்டில் குராமர நிழலில் வழிபாடு தொடங்கியது (71).

5) எறம செட்டி நிர்வாக காலத்தில் (1679-1686) அவர் மைத்துணர் நாரணப்பன் திருச்செங்கோட்டில் ''தத்தியோதன'' உபயக் கட்டளையைத் தொடங்கினார் (105). இது தயிர்சாதப் படையல் வழிபாடாகும்.

6) முன்பு திங்கட்கிழமை, வெள்ளிக்கிழமைகளில் மட்டும் சிறப்பு வழிபாடுகள் நடத்தப்பட்டன. ''சோம சுக்கிர வாரம்'' எனப்பட்டது (214).

7) சங்ககிரி டிப்டி கலெக்டர் டி.என்.சிவஞானம் பிள்ளை வேண்டுகோள்படி ஸ்டேஷனரி சப்மாஜிஸ்ட்ரேட் ஆறுமுக முதலியார் கிரிவலப் பாதையை அமைத்தார். சேலம் மாவட்டக் கலெக்டர் ஜே.பி.பெட்ஃபோர்டு (1911-1914) நினைவாகப் ''பெட்ஃபோர்டு ரோடு' என்று பெயர் வைக்கப்பட்டது (385).

8) 1646, 1866 ஆம் ஆண்டுகளில் கடும் பஞ்சம் ஏற்பட்டது. பஞ்ச காலத்தில் கோயில் பூசை, அர்ச்சகர் நலம் ஆகியவற்றைக் காத்தவர்கள் அழகாத்திரி நாயக்கர், கொக்கராயன்பேட்டை மிட்டா ஜமீன்தார் பெரிய ரங்கைய கவுண்டர் ஆகியோர் (135, 369).

9) திருமலை நாயக்கரின் தளபதி இராமப்பையன் மருமகன் கொண்டப்பையன் இரண்டு தேர் செய்தளித்தார் (116). மைசூர் சிக்கதேவராச உடையார் காலத்தில் அவர் ஆணைப்படி முளசி நாகமலைக் கவுண்டர் ஏழூரில் செய்துவைத்துள்ள புதுத்தேரைப் பிரித்துத் திருச்செங்கோடு கொண்டு வந்து 1674 ஆம் ஆண்டு சித்திரைத் தேர் ஓட்டினார் (293). பெரியரங்கைய கவுண்டர் சிவன், விஷ்ணு, விநாயகர்க்கு மூன்று தேர் செய்தளித்தார் (369).

10) அம்மன் வளையல்களில் ஒன்று ''பலாக்காய் வளையல்'' என்றும், தலையணி ஒன்று ''சிகைதாடு'' என்றும் குறிக்கப் பட்டுள்ளது(110, 118).

11) ஆடவர் பெயர்கள் அடைக்கலம் காத்தான், அன்னத்தியாகி, புகழேந்தியாப் பிள்ளை, ஆபத்துக்காத்தான், துலுக்கண கவுண்டர், வழியடிமை கொண்டான், வென்று மாலையிட்டான் என்பன போல் வருவது சிறப்புக்குரியது.

12) திருச்செங்கோட்டில் பல அற்புதங்கள் நடைபெற்றுள்ளன. மலை உச்சியில் உள்ள வரடி கல்லைச் சுற்றினால் மகப்பேறு கிடைக்கும் என்பது. ஐதீகம். ''பாலகரை வந்தியர்க்கு உதவு சிலை'' என்று இந்நூல் கூறுகிறது (15). சிவப்பிரகாசர் கல் இடபம் கடலை தின்னச் செய்தார் (176). முளசை வேல

கவுண்டர் கனவில் இறைவன் தோன்றி நாககிரி பண்டிதரிடம் தீட்சை பெற்றுக் கொள்ளுமாறு கூற அவர் அவ்வாறே தீட்சை பெற்றார் (291). வாலராசன், முத்தியாலு நாயக்கர் ஆகியோர் வணங்கி மகப்பேறு பெற்றனர் (56, 102). திருவேங்கடய்யன் குட்ட நோய் நீங்கப் பெற்றார் (108).

13) அழகு நாச்சியம்மன் கோயில் அழகியம்மை என்றே குறிக்கப் பெறுகிறது. (95, 160, 184, 189, 353, 424).

இந்நூலின் வரலாற்று முக்கியத்துவம் கருதிப் பதிப்பிக்கப் பெற வேண்டும் என்று பல்லாண்டுகளாக இடைவிடாது நினைவூட்டி வந்தவர், பொள்ளாச்சியைச் சேர்ந்தவரும், அமெரிக்க நாட்டின் நாசா விண்வெளி மையக் கணிப்பொறிப் பொறியாளருமான முனைவர் நா.கணேசன் அவர்கள். அவர்கட்கு மனமார்ந்த நன்றி உரியதாகுக.

இந்நூல் பதிப்பின் இன்றியமையாமையை உணர்ந்து விரைவில் வெளிவரவேண்டும் என்ற தன் விருப்பத்தைத் தெரிவித்ததுடன், பதிப்புக்கு வேண்டிய இன்றியமையாத பல உதவிகளைச் செய்தவர் முன்னாள் கிராம முனிசீப் மற்றும் கிராம நிர்வாக அலுவலர், அர்த்தநாரீசுவரர் திருக்கோயில் அறங்காவலர் டி.ஏ.சேதுபதி இராமலிங்கம் அவர்கள் திருமகனார் திருச்செங்கோட்டு வரலாறு, இலக்கியம் ஆகியவற்றின் கலைக்களஞ்சியமாகத் திகழும் நண்பர் தி.அ.சேது.மாதவகிருஷ்ணன் அவர்கள். அவர்கட்கு என் மனமார்ந்த நன்றி உரியதாகுக.

வரலாற்று ஆவணமாகத் திகழும் இந்நூல் நூறாண்டுகளுக்குப் பின் அச்சாகிறது. திருச்செங்கோடுவாழ் பெருமக்கள் மட்டுமல்ல வரலாறு, சமூக, சமய ஆர்வமுடைய பெருமக்கள் அனைவரும் இம்முயற்சியை ஆதரித்துப் போற்றுவர் என நம்புகிறேன்.

ஈரோடு
12.07.2012

வரலாற்றுப் பணியில்
செ.இராசு

திருச்செங்கோட்டுத் திருப்பணி மாலை

விநாயகர் வணக்கம்

பூமேவும் ஒருகோடு செவியிரண்டு திருக்கருணை
பொழிகண் மூன்று
மாமேவு நாலுமறை முகபடஐங் கரக்களிற்றை
வணக்கம் செய்வாம்
தேமேவும் அரவகிரி அரன்அடியார் புரிதவமும்
சிறப்பும் காணக்
கோமேவு திருப்பணிமா லையைத்தமிழால் பாடவரம்
கொடுக்க என்றே. (1)

பாடற்பொருள்:

திருச்செங்கோட்டுத் திருப்பணிமாலை என்னும் இந்நூலைத் தமிழில் பாடுவதற்கு நல்வரம் அருளவேண்டும் என்று ஒரு தந்தத்தையும், இரண்டு செவிகளையும், கருணை பொழியும் மூன்று கண்களையும், நான்கு வேதங்களை ஒத்த முகபடாத்தினையும், ஐந்து கரங்களையும் உடைய கணபதியை வணக்கம் செய்வோம்.

அனைத்தும் வாழி

ஆழி வெற்பும் அகிலமும் நீடுக
வாழி வேத மழைமநு நீதியும்
மேழி மன்னர் விபூதிமெய்ஞ் ஞானநீடு
ஊழி ஊழி உலகெங்கும் ஓங்கவே. (2)

பாடற்பொருள்:

கடல், மலை, உலகம் நீடித்து இருக்க; வேதங்கள் வாழ்க; மழையும், மனுநீதியும், உழவர்களும், விபூதியும், மெய்ஞ்ஞானமும் என்றென்றும் உலகில் ஓங்கி நிலைத்திருக்கட்டும்.

★

சிறப்பு வாழ்த்து

மெய்வி யாப சமயம் விளங்குக
பொய்வி யாப சமயம் புறம்புக
சைய்வ ஞானமும் தானமும் நீடுக
தெய்வ மாமறை யோரும் சிறக்கவே. (3)

பாடற்பொருள்:

உண்மை நிறைந்துள்ள சமயம் விளங்கவேண்டும்; பொய் நிறைந்துள்ள சமயம் நீங்கவேண்டும்; சைவஞானமும் தானமும் வளர வேண்டும்; தெய்வ மாமறையோர்களாகிய அந்தணர்கள் சிறந்தோங்க வேண்டும்.

★

அவையடக்கம்

புண்டரிகன் திருமாலும் கொற்றவையும் தடஅரவும்
பூசை ஏத்தும்
மண்டலமெண் பணிமலையார்க்கு அன்பர்செயும்
திருப்பணிப்பா மாலைபாடக்
கொண்டலெனக் கவிவாணி தானாரி கணபதியார்
குற்றம் தீர்க்கத்
தண்டமிழோர் பிழைபொறுக்கச் சண்முகனார் எனைக்காக்கத்
தக்க தாமால். (4)

பாடற்பொருள்:

பிரம்மாவும் திருமாலும் வெற்றிக்குரிய கொற்றவையும் பெரிய நாகமும் பூசித்து வணங்கும் உலகு மதிக்கும் திருச்செங்கோட்டு இறைவர்க்கு அடியார்கள் செய்த திருப்பணிகளைப் பாமாலையாகப் பாடும்போது அவைகளில் ஏற்படும் குற்றங்களைக் கலைமகளும் நாரி கணபதியும் தீர்ப்பார்களாக. புலவர்கள் பிழைகளைப் பொறுப்பார்களாக. முருகப்பெருமான் என்னைக் காப்பாற்றுவாராக.

★

சீர்பயிலும் அரவகிரி உமைபாகர் தமக்குஅடியார்
செய்து போற்றும்
ஏர்பயிலும் திருப்பணிமா லையைப்பாடும் படிதமியேன்
இசைந்த நேர்மை
கார்பயிலும் கடல்ஏழும் உலகேழும் தலம்ஏழும்
கரத்தில் வாங்கிப்
பார்பயிலும் ஓர்எறும்பு நுகர்வன்என உரைக்கும்அந்தப்
படிய தாமால். (5)

பாடற்பொருள்:

சிறப்புமிக்க திருச்செங்கோட்டில் எழுந்தருளியுள்ள அர்த்தநாரீசருக்கு அடியார்கள் செய்த திருப்பணிகளைப் புகழ்ந்து கூறும் நூலைப் பாடுவதற்கு அடியேன் முற்பட்டது எப்படியெனில் ஏழு கடல்களையும் ஏழு உலகங்களையும் ஏழு தலங்களையும் கையில் எடுத்து ஓர் எறும்பு சாப்பிடுவேன் என்று கூறுவது போலாகும்.

★

பெற்றதாய் தந்தை உற்றார் பிள்ளையின் மழலை வாக்கைக்
குற்றமென்று இகழார் இன்பம் கொடுத்துளம் மகிழ்ந்தே கேட்பர்
சொற்றவன் ஆக வேநான் சொன்னபா மாலை தன்னை
நற்றவர் மகிழ்ச்சி ஆகி நன்றென நவிலு வாரே. (6)

பாடற்பொருள்:

சிறு குழந்தையின் பொருளற்ற மழலைச் சொற்களைப் பெற்ற தாயாரும், தந்தையாரும், உறவினர்களும் குற்றமுடையது என்று இகழாமல் அதனால் இன்பம் உடையவர்களாகி உள்ளம் மகிழ்ந்து கேட்பர். அதுபோல நான் பாடும் இப்பாமாலை குறையுடையதாயினும் நல்ல தவம் உடையவர்கள் மகிழ்வுடன் நன்று என்று கூறுவர்.

★

நூலை அறிவோர் - அறியாதார்

அருட்பணி ஆன கோதை அர்த்தநா ரீசர் பூசைத்
திருப்பணி செய்து ஞானச் சிந்தைபெற் றவர்க்குத் தோன்றும்
பொருப்பணி கனகம் மீது பூமிசை மாதர் மீது
விருப்பணி வோரும் இந்நூல் மெய்ப்பொருள் அறிந்தி டாரே. (7)

பாடற்பொருள்:

இந்நூலின் பொருளைத் திருச்செங்கோடு அர்த்தநாரீசரை அன்புடன் பூசை செய்கின்றவர்களும், திருப்பணி செய்கின்றவர்களும், ஞானமாகிய நல்லறிவைப் பெற்றவர்களும் அறிவர். பொன், பொருள், மாதர்மீது பற்றுக்கொண்டு விரும்பி வாழுவோர் இந்நூலின் உண்மையான பொருளை அறியமாட்டார்கள்.

★

என் சொல்லும் ஏறுகிறது

வாசமும் நீறும் ஏறும் மதுமலர்த் தும்பை அம்பொன்
தூசொடு சருமம் ஏறும் தொல்நடம் இருடி ஆட்டம்
போசனம் கடுவும் ஏறும் புகழ்பெறு கோதை வாழும்
ஈசருக்கு உரைத்த நூலோடு என்சொலும் ஏற லாமே. (8)

பாடற்பொருள்:

சிவபெருமான் சூடும் தும்பைப் பூவில் மணமும், நீரும் ஏறுகிறது. அழகிய பொன்னாடை சிவபெருமான் சருமத்தில் ஏறுகிறது. சிவபெருமான் உணவாக கடுமையான விடமும் ஏறுகிறது. அதுபோல் புகழ்பெற்ற திருச்செங்கோட்டில் வாழும் இறைவனுக்காக எழுதப் பெறும் இந்நூலில் என் சொற்களும் ஏறுகின்றன.

★

நூலை ஏற்பவர் என்ன ஆவர்?

திருப்பணி மாலை தன்னைத் திறம்பெற நடத்தி னோர்கள்
விருப்பணி முனிவர் ஆவர் விண்ணவர்க்கு இறைவர் ஆவர்
பொருப்பணி மாலும் ஆவர் புண்டரீ கத்தன் ஆவர்
கருப்பணி மதனும் ஆவர் கந்தனும் ஆவர் அன்றே. (9)

பாடற்பொருள்:

திருச்செங்கோட்டுத் திருப்பணிமாலை என்னும் இந்நூலைச் சிறப்புடன் ஏற்றுக் கொள்பவர்கள் முனிவர், தேவேந்திரன், திருமால், பிரமன், மன்மதன், முருகன் ஆகியவர்களாக ஆவர்.

★

நூலை உரைப்பவர், கேட்பவர் பெறும் பயன்

தீதறு தமிழ்சேர் கோதைத் திருப்பணி மாலை தன்னை
ஓதினர் தாமும் இன்னம் உரைஎன உணர்ந்த பேரும்
மாதொரு பாகர் தம்மை வழுத்தினோர் பதமும் பெற்று
பூதலம் புரப்பர் பின்னும் புரந்தரர் ஆவர் அன்றே. (10)

பாடற்பொருள்:

குற்றம் நீங்கிய செந்தமிழ் சேர்ந்த திருச்செங்கோட்டின் இத் திருப்பணி மாலையைப் படித்தவர்களும், படித்ததை உணர்ந்தவர்களும் அர்த்தநாரீசுவரரை வணங்கியோர் பெறும் பேறு பெறுவர். அவர்கள் உலகைக் காக்கும் வல்லமை பெறுவர். இந்திரன் ஆகும் பெருமையும் பெறுவர்.

★

நூலாசிரியர் - சதாசிவ பண்டிதர்

அண்டர்தொழும் பணிமலையான் ஆதிசைவ மறையவர்கோன்
ஆலம் பாயன்
மண்டலமெண் ணேழுகரை நாட்டுநம்பி எனுநாம
வரிசை யாளன்
தண்டமிழைத் தெரிந்துணர்ந்த சதாசிவபண் டிதக்கருணை
தழைத்த மேகம்
தெண்டிரையின் அமுதெனவே திருப்பணிமா லைப்பனுவல்
செப்பி னானே. (11)

பாடற்பொருள்:

தேவர்கள் வணங்கும் திருச்செங்கோட்டுக்கு உரியவர்; ஆதிசைவ மறையவரில் சிறந்தவர்; ஆலம்பாயர் கோத்திரத்தைச் சேர்ந்தவர்; உலகு மதிக்கும் 'எழுகரை நாட்டு நம்பி' என்று சிறப்புப் பட்டம் பெற்றவர்; செந்தமிழை நன்கு ஆராய்ந்துணர்ந்த சதாசிவ பண்டிதர் என்பவர் இத்திருப்பணி மாலையைப் பாடினார். நீர் கொண்டு முற்றிய மேகம் பெய்யும் அமுதமழை போல அவர் இத்திருப்பணி மாலையைச் செய்தார்.

★

சிவனைச் சிந்தையில் நினைப்பேன்

பொங்கரவ கிரிமீது தேவதீர்த் தத்தில்
பொருந்துபங் கயமலர்மிசை
பொற்பாட கப்பாத நூபுரம் கிண்கிணி
புலம்புகுஞ் சிதபாதமும்

வெங்கயம் உரித்தஉடை யும்கனக ஆடையும்
மேவுபணி ஒட்டியாணமும்
மேலான தனபாரம் உத்தரிகம் உபவீதம்
மின்மணியும் அக்கவடமும்

அங்கைஉர கம்கதையும் ஆரகே யூரமும்
அணிகடய சரிபவளமும்
அழகான தெரிசனமும் மங்கிலிய நாகபடம்
அருணகுண் டலகுழைகளும்

திங்கள்அணி வேணியும் கொங்களக பாரமும்
தீயிரவி இந்துவிழியும்
செவ்வாயி முறுவலொடு நாசிகா பரணமென்
சிந்தையில் இருத்தல்புரிவாம். (12)

பாடற்பொருள்:

திருச்செங்கோட்டு மலைமேல் உள்ள தேவதீர்த்தத்தில் தோன்றும் தாமரை மலர் மீது பொன்னால் செய்யப்பட்ட பாடகம், நூபுரம், கிண்கிணி முதலிய அணிகலன்கள் ஒலி செய்ய எழுந்தருளும் சிவபெருமானின் திருப்பாதங்களையும், யானை உரி போர்த்த உடையையும், பொன் மயமான ஆடைகளையும், ஒட்டியாணம், மேலாடை, பூணூல், மணிகள், உருத்திராக்க மாலையையும், அழகிய கைகளில் உள்ள பாம்பு அணி, கதாயுதம், தோள்அணி, பவள வளைகள் ஆகியவற்றோடு செய்யும் தரிசனத்தையும், மங்கிலியம், நாகபடம், காதணிகள், பிறைசூடிய சடாமுடி, நீண்ட கூந்தல், நெருப்பும் சூரியனும் சந்திரர்களாகிய முக்கண்கள், புன்முறுவல் பூத்த திருவாய் இவை அனைத்தும் என் சிந்தையினுள்ளே வீற்றிருக்கச் செய்கின்றேன்.

சிவபெருமானைப் பாதாதி கேச அமைப்பில் கவிஞர் பாடியுள்ளார்.

(பாதத்தில் தொடங்கி தலைவரை உள்ள உறுப்புக்களைப் பற்றிப் பாடுவது 'பாதாதிகேசம்', தலையில் தொடங்கி பாதம் வரை உள்ள உறுப்புக்களைப் பற்றிப் பாடுவது 'கேசாதிபாதம்').

★

குன்றில் உறையும் குகன்

குஞ்சிமுடிச் சிகைமகர குண்டலமும் நகைமுகமும்
குளிர்ந்த நோக்கும்
தஞ்சமென வேல்எடுத்த திருக்கரமும் குக்குடங்கை
தரித்த சீரும்
மஞ்சுநிறத் துகிலுடையும் மணியணிபொற் பதக்கமுத்து
மாலை மார்பும்
செஞ்சரணத் திருஅழகும் திகழ்அரவா சலக்குகனைச்
சிந்தை செய்வாம். (13)

பாடற்பொருள்:

சிறுமுடியுடைய கூந்தலும், காதுகளில் மகர குண்டலங்களும், புன்முறுவல் பூத்த முகமும், கருணைப் பார்வையும், வேல் தாங்கும் கையும், அழகுற மிளிரும் ஆடையும், மணிகள் பதித்த அணிகலன்களும், பொன்னாலாகிய பதக்கமும், முத்துமாலையணிந்த மார்பும், செம்மையான திருவடிகளாம் அழகும் விளங்கும்படியான அரவகிரி என்னும் திருச்செங்கோட்டு முருகப்பெருமானை வணங்குவோம்.

முருகப் பெருமானின் சிறப்புக்களைக் கேசாதிபாதமாகப் புலவர் புனைந்துள்ள நலம் பாராட்டிற்குரியது.

★

இணையடி இறைஞ்சுவோம்

சீரணியும் நாரிகண பதியையழ காணனையத்
திருவேட்டை ஐங்கரவனைச்
செங்கைவடி வேலனைக் கயிலாச நாதனைத்
தேவிபரி மளவல்லியைக்
காரணிக் கொற்றவையை வயிரவனை ஐய்யனைக்
கருணைபொழி அழகம்மனைக்

கடினவீ ரேசுரனை நல்லயனை மலையடிக்
கந்தனை விநாயர்களைத்

தாரணி தொழும்திருச் செங்கோடை முருகனைச்
சங்கரி இடப்பாகனைத்

தவமிகும் பஞ்சலிங் கேசரை மகேசரைச்
சைவரைக் கவிவாணரை

ஏரணியும் ஆதிகே சவனைமலை காவலரை
எந்தைபரி வாரமாரை

எழிலான குரவோரை உரவோரை அனைவோரை
இணையடி இறைஞ்சல்புரிவாம். (14)

பாடற்பொருள்:

திருச்செங்கோட்டில் எழுந்தருளியிருக்கின்ற நாரி கணபதி, அழகு கணபதி, வேட்டை கணபதி, வடிவேலன், கயிலாசநாதர், பரிமளவல்லியம்மன், கொற்றவை, பைரவர், சாத்தனார், அழகம்மன், வீரேசுரன், நல்லய்யன், அடிவாரக் கந்தன், விநாயகர்கள், செங்கோட்டு வேலர், அர்த்தநாரீசுவரர், பஞ்சலிங்கர், மகேசுவரர்கள், சைவர்கள், புலவர்கள், ஆதிகேசவப்பெருமாள், மலைகாவலர், பரிவார தெய்வங்கள், ஆசிரியர்கள், அறிவுடையவர்கள் ஆகியோரின் திருவடிகளை வணங்குவோம்.

★

திருத்தலச் சிறப்பு

பன்னகம் இரண்டும்இரு மேருவென வேகண
படங்களை விரித்தமுடிமேல்

பாலகரை வந்தியர்க்கு உதவுசிலை யும்பஞ்ச
பாண்டவர் இருந்தகுகையும், ★

தன்னிக ரிலாதமோ கினிக்கயமும், மாலயச்
சயிலோத கம்தருநிழல்

தலமருவு காளிவரை யும்,குகை அனேகமும்,
சஞ்சீவி மூலிகையும்,

நன்னெறி புரிந்தசிவ யோகிகள் இடங்களும்,
ஞானமுனி வோர்சாரலும்,

நற்றேன் உடைந்தவரை யும்,சிகர கோபுரமும்,
நாகீசர் வேலர்பதியும்,

தென்னுலவு நாககிரி நாமமும், அதன்பூசை
செய்தபெரி யோர்அடிகளும்,

திக்கா யிரம்சுனை விசேடதீர்த் தங்கள்இவை
சிந்தையில் இருத்தல்புரிவாம். (15)

பாடற்பொருள்:

பாம்புகள் இரண்டு படம் எடுத்தமை போல விளங்கும் முடி மேல் மக்கட்பேறு இல்லாதோர்க்கு மக்களை அடையச் செய்யும் மலையும், பஞ்சபாண்டவர்கள் தவம் இயற்றிய குகையும்★, தனக்கு உவமையில்லாத மோகினிக் குளமும், திருமால் பிரமன் வடிவான மலையில் மர நிழலில் காளி தவம்செய் மலையும், பல குகைகளும், சஞ்சீவி மூலிகை வகைகளும், சிவயோகிகள் வாழும் இடங்களும், முனிவர்கள் உள்ள மலைச்சாரல்களும், தேன்கூடுகள் உடைந்த மலையும், உயர்ந்த கோபுரமும், நாகீசுரர், வேலாயுதர் சந்நதிகளும், நாககிரி என்னும் பெயரும், அவற்றைப் பூசை செய்வோர் திருவடிகளும், திக்குகள் தோறும் உள்ள ஆயிரம் சுனைகளும் விசேட தீர்த்தங்களும் ஆகிய இவற்றை மனத்துள் இருத்தி வணங்குவோம்.

(★சமண முனிவர்கள் தங்கிய குகையை இவ்வாறு கூறுகிறார். அங்குக் கல்படுக்கைகள் உள்ளன.)

★

சிறப்பு வாழ்த்து

திருவாழ்க கலைவாழ்க கௌரி வாழ்க
தினம்தினமும் மண்மடந்தை சிறந்து வாழ்க
குருவாழ்க பணிமலையும் குகனும் வாழ்க
கோதைஉமை பாகர்திருக் கோயில் வாழ்க
தருவாழ்க அரசர்கர ணிக்கர் வாழ்க
தானமுடன் குரவோரும் தழைத்து வாழ்க
மருவாரும் அகம்படிமைத் தளியிலாரும்
வாய்த்தசெங் குந்தருமே வாழ்க வாழ்க. (16)

பாடற்பொருள்:

இலக்குமி, கலைமகள், பார்வதி, பூமாதேவி, குரு, திருச்செங்கோடு, முருகன், அர்த்தநாரீசர், கற்பக மரம், அரசர், கணக்கர், குருக்கள், கோயில் பணியாளர்கள், செங்குந்தர் அனைவரும் வாழ்க.

★

எல்லோரும் இனிது வாழ்க

சீர்வாழ்க முனிவாழ்க தேவர் வாழ்க
திருமாலும் மலர்அயனும் சிறந்து வாழ்க
பார்வாழ்க மலைவாழ்க பரவை வாழ்க
பதினாலு புவனஅண்டம் பலவும் வாழ்க
ஊர்வாழ்க எழுகரைநன் னாடும் வாழ்க
உயர்ந்திடுபூந் துறைநாட்டுக்கு உரியோர் வாழ்க
ஏர்வாழ்க திருப்பணிசெய் திடுவோர் வாழ்க
எல்லவரும் தழைத்தேறி இனிது வாழ்க.

பாடற்பொருள்:

திருமகள், முனிவர்கள், தேவர்கள், திருமால், பிரமன், உலகு, மலை, கடல், பதினான்கு உலகங்கள், அண்டங்கள், ஊர், எழுகரை

நாடு, உயர்ந்த பூந்துறை நாட்டுக்குரியவர்கள், ஏர், திருப்பணி செய்தவர்கள் -செய்பவர்கள் ஆகியோர் அனைவரும் வளமுடன் வாழ்வார்களாக.

★

பூந்துறை நாட்டுச் சிறப்பு

பொன்னாடு புகழ்நாடு பொன்னியும்முத் தாநதியும்
பொருந்துநாடு
மின்னாட உடன்ஆடும் சங்கரனார் உமையுடனே
மேவும்நாடு
தென்னாடு வடநாடு குடநாடு குணநாடெண்
திசையும்போற்றும்
தொன்னாடு வடிவேலர் மலடிகட்கு மகவுஅருள்பூந்
துறைநன்னாடே. (18)

பாடற்பொருள்:

பூந்துறை நாடு பொன்னும், புகழும், காவிரியும், திருமணி முத்தாறும் உடையது. சிவபெருமான் உமாதேவியோடு அர்த்தநாரீசுவர வடிவில் உள்ள நாடு. தெற்கு, வடக்கு, மேற்கு, கிழக்கு ஆகிய திசைகளில் உள்ள எல்லா நாடுகளும் புகழும்படியான தொன்மை நாடு. மலடிகட்கு மக்கட்பேறு அளிக்கும் நாடு.

★

எழுகரை நாடு

ஏரணியுஞ் சேரகிரி தனைமகவான் ஆணையைவிட்டு
எடுத்தநாடு
சீரணியும் அறப்பளியில் அம்மையுடன் அரன்நடனம்
செய்தநாடு
நீரணியும் நண்ணாவில் அங்கமது மலராகி
நிறைந்தநாடு
காரணிகர் கோதையுமை யொருபாகர் காக்கும்எழு
கரைநன்னாடே. (19)

பாடற்பொருள்:

இந்திரன் தன் யானையை விட்டுச் சேரகிரியை எடுத்த நாடு; அறப்பள்ளியில் சிவனும் பார்வதியும் இணைந்து நடனம் புரிந்த நாடு; நீர் சூழ்ந்த பவானித் தலத்தில் எலும்புகள் மலராக மாறும் நாடு; உமைபங்கனாகச் சிவபெருமான் வீற்றிருந்து காக்கும் நாடு எழுகரை நாடு.

★

பூந்துறை நாட்டுச் சிறப்பு

செந்திருவும் கலைமாதும் பூரணியும் தினம்நடனம்
செய்தநாடு
மந்தரமொப் பனையான பணிமலைஈ சரைத்தொழுது
வாழும்நாடு
இந்திரனும் மாலயனும் தேவர்களும் கோதையில்வந்து
ஏத்தும்நாடு
சுந்தரமா கியவேலர் உமைபாகர் மேவியபூந்
துறைநன்னாடே. (20)

பாடற்பொருள்:

திருமகளும், கலைமகளும், சிவசக்தியும் நாள்தோறும் நடனம் செய்யும் நாடு. மகாமேருவுக்கு நிகரான திருச்செங்கோட்டு இறைவனைத் தொழுது வாழ்கின்ற நாடு. இந்திரன், திருமால், பிரம்மா, தேவர்கள் ஆகியோர் திருச்செங்கோட்டுக்கு வந்து வணங்கும் நாடு. அழகிய வேலவரும், அர்த்தநாரீசுவரரும் பொருந்திய நாடு பூந்துறை நாடாகும்.

★

தென்மழையே பொழிநாடு பணிமலையார்க்கு உபசாரம்
செய்யும்நாடு
பொன்மழையும் மன்மழையும் கவிமழைக்கே அனவரதம்
பொழிந்தநாடு
மின்மழையாம் எனமதவேள் கணைமழைக்கே பயந்துமிக
வெட்குநாடு
தொன்மழைபோல் கருணைசெயும் உமைபாகர் வரந்தருபூந்
துறைநன்னாடே. (21)

பாடற்பொருள்:

தேன்மழை பொழியும் நாடு, அர்த்தநாரீசுவரருக்கு உபசாரம் செய்யும் நாடு. பொன்மழை, மன்மழை, கவிமழை நாள்தோறும் பெய்யும் நாடு. மன்மதன் அம்புகளுக்குப் பயந்து வெட்கம் அடையும் நாடு. மழைபோல் கருணை பொழியும் அர்த்தநாரீசுவரர் வரம் தரும் நாடு பூந்துறை நாடு.

★

திருச்செங்கோட்டுச் சிறப்பு

குருக்கோடு நவமணியும் நவநிதியும் நவரசமும்
கொழிக்கும்கோடு
தருக்கோடு சுரபியும்சிந் தாமணியும் தழைத்ததெய்வத்
தானம்ஆமால்
இருக்கோடு பலகலைகள் ஆகமங்கள் குரவோர்கள்
இரைக்கும்கோடு
செருக்கோடும் உமையரனைப் பிரியாமல் இனிதிருக்கும்
திருச்செங்கோடே. (22)

பாடற்பொருள்:

நவமணிகளும், நவநிதிகளும், நவரசங்களும் பொழியும் மலை, காமதேனும், கற்பக விருட்சமும் தழைக்கும் இடங்களையுடைய

மலை, இருக்கு வேதம் முதலிய பல கலைகளாலும், ஆகமங்களாலும், ஆசிரியர்மார்களாலும் ஒலி மிகுந்தது திருச்செங்கோடு. உமாதேவி மகிழ்வோடு சிவபெருமானைப் பிரியாமல் அர்த்தநாரீசுவரர் வடிவாக எழுந்தருளியுள்ள மலை திருச்செங்கோட்டு மலையாகும்.

★

பொன்கோடு மணிக்கோடு புகற்கோடு பணிக்கோடு
புகலும்கோடு
மன்கோடு தரச்சுரபி தன்கோடு தனில்கொணர்ந்த
வாரையாமால்
பன்கோடு குலகோடு பலகோடும் உலகோடு
பரவும்கோடு
தென்கோடு வடகோடு குடகோடு குணகோடுஎன்
திருச்செங்கோடே. (23)

பாடற்பொருள்:

பொன்மயமான மலை; மணிமயமான மலை; அடைக்கலம் தரும் மலை; நாக வடிவான மலை; நிலைபெற்ற மலை; நினைத்ததைக் கொடுக்கும் மலை; உலகினர் வணங்கிப் போற்றும் மலை; தெற்கு வடக்கு மேற்கு கிழக்கு ஆகிய திசைகளில் புகழ்பெற்ற மலை திருச்செங்கோட்டு மலையாகும்.

★

பூகமலைத் திடுசோலை சூழ்மேரு கிரியினுக்கும்
போட்டியான
மேகமலை அண்டருல கம்புகுதற்கு ஏணியெனப்
பெற்றதாமால்
மாகமலை வாணிஅலை மாதுதினம் நடனமிடு
மகிமையான
நாகமலை நாகமலை நாகமலை தனில்இனிய
நாகமாமே. (24)

பாடற்பொருள்:

கமுகு மரங்கள் மிகுந்த சோலைகள் சூழ்ந்த திருச்செங்கோட்டு மலை மேரு மலைக்கும் போட்டியாக உள்ளது. மேகங்கள் தங்கும் திருச்செங்கோட்டு மலை அடியார்கள் வானுலகு செல்ல ஏணிப்படி போலப் பயன்படுகிறது. விண்ணைத் தொடும் இம்மலை சரசுவதியும், திருமகளும் தினம் நடனமாடும் மகிமை பெற்றது. ஆகாயம் அளவுள்ள இம்மலை தேவலோகம் போன்றது; யானை வடிவானது; உலகில் உள்ள மலைகளில் இனிமையானது நாகமலை என்னும் திருச்செங்கோட்டு மலையாகும்.

மேல்கரைப் பூந்துறை நாட்டில் உள்ள அறச்சலூர் மலைக்கும் 'நாகமலை' என்ற பெயர் உண்டு.

★

நகரச் சிறப்பு - கோதையூர்

பூரகமும் கும்பகமும் ரேசகமும் பெறுதவமே
பொருந்திஓதும்
தாரகமந் திரத்திலர னாரகம்பெற்று உமைவாழும்
தானமாமால்
பாரகமும் சூரகமும் ஊரகமும் ஏரகமும்
பழையஞானப்
பேரகமாம் ஓரகமும் ஏரகமாம் எனவிளக்கம்
பெற்றஊரே. (25)

பாடற்பொருள்:

மூச்சுக் காற்றை உள்வாங்கி, உள்ளே மடக்கி வெளியேவிடும் தவயோகிகள் சிறந்த இம்மலையில் உமாதேவி தன் தாரக மந்திரத்தால் சிவபெருமானின் இடப்பாகம் பெற்று நிலைத்து வாழுகின்றாள். உலகில் சிறந்ததும், தெய்வமகளிர் தங்கி இருப்பதும், ஊர்களில் சிறந்ததும், அழகு மிக்கதும் திருச்செங்கோடு ஆகும். பழமையான ஞானம் தரும் ஊர், ஒப்பற்ற ஊர் எனப் பல்வேறு வகையால் புகழ்பெற்றது திருச்செங்கோடு என்னும் ஊராகும்.

★

வானளக்கும் கோபுரம்பொன் மணியளக்கும் மகழிரத
மாடமேடை
தேனளக்கும் சோலைநெடுந் தெருவளக்கும் பலகலைகள்
செல்வமேவும்
மீனளக்கும் வயல்வரம்பு முத்தளக்கும் கதலியிலை
வெய்யில்மூடும்
கோனளக்கும் நீதிமின்னார் குணமளக்க மணமளக்கும்
கோதையூரே. (26)

பாடற்பொருள்:

விண்ணைத் தொடும் கோபுரங்கள்; மதிள் தேர் மாடம் மேடை இவற்றில் நவமணிகள்; தேன் மிகுந்த சோலைகள்; தெருக்களில் கலைகளும் செல்வச் செழிப்பும்; வயல்களில் மீன்கள்; கரும்பின் கணுக்களில் முத்துக்கள்; சோலை இலைகள் வெயிலை மறைக்கும்; நீதி செலுத்துவதில் அரசு போன்றது; மணமும் குணமும் உள்ள பெண்கள் இருப்பது கோதையூர் என்னும் திருச்செங்கோடு.

★

வண்டாடும் காவின்மலை மிசையாடும் புயலுடனே
மயிலுமாடும்
தண்டாடும் சோலைபழச் சேறாடும் தெருக்களில்ஐந்
தருக்கள்ஆடும்
கண்டாடும் இரப்போர்கள் கரமாடு முன்வாவிக்
கயல்கள்ஆடும்
கொண்டாடும் உமைபாகர் கொடியாடும் படியாடும்
கோதையூரே. (27)

பாடற்பொருள்:

சோலையில் வண்டுகள் ஆடும்; மலைமீது தங்கும் மேகத்துடன் மயிலும் ஆடும்; தாள் ஆடும்படியான சோலைகளின்

பழங்கள் தரும் சேறு தெருக்களில் மிகுந்துள்ளது. சாலைகளில் இந்திர உலகத்தில் உள்ள அரிச்சந்தனம், கற்பகம், சந்தானம், பாரிசாதம், மந்தாரம் என்ற ஐந்தருக்கள் உள்ளன. இரப்பவர்கள் ஈகை பெற்று மகிழ்வர்; அர்த்தநாரீசுவரரின் கொடிகளும் அங்கு ஆடுகின்றன.

★

செங்கமலத் தடங்கள்அனக் கொடியாடும் ஊர்கொடிஓ
திமங்கள்ஆடும்
சங்கமலி வாணருக்குக் கலைமடந்தை பணிவிடைகள்
தானேசெய்யும்
துங்கமலி மன்னவர்முன் நூல்வழியே நீதிசெய்யத்
தொடங்குவார்கள்
கொங்கைஇணை மடவார்க்கு மன்மதனே ஏவல்செய்யும்
கோதையூரே. (28)

பாடற்பொருள்:

தாமரை மிகுந்த குளங்களில் அன்னப் பறவைகளும், ஊருக்குள் தெருக்கள் தோறும் அன்னக்கொடிகளும் ஆடும்; சங்கத் தமிழ் பாடும் கவிவாணருக்குக் கலைமகள் தானே வந்து ஏவல் செய்வார்; அரசர்கள் பண்டைய நீதி நூல் வழியே சிறந்த நீதி செலுத்துவர். கோதையூர்ப் பெண்களுக்கு மன்மதனே ஏவல் செய்வான்.

★

முத்திருக்கும் நகைநகையே மொழியிருக்கும் செபஞ்செபமே
மோனஞானச்
சத்திருக்கும் குகைகுகையே தவம்இருக்கும் மகமகமே
தானசீலம்
ஒத்திருக்கும் மனைமனையே ஒளியிருக்கும் மனமனமே
ஓதியேறு

கொத்திருக்கும் புயம்புயமே குடியிருக்கும் படியிருக்கும்
கோதையூரே. (29)

பாடற்பொருள்:

நகைகளில் முத்துக்கள் இருக்கும்; மொழிகளில் மந்திரங்கள் இருக்கும்; குகைகளில் ஞானிகள் மௌனத் தவம் இருப்பர்; இல்லங்களில் கொடைகள் மிகுந்திருக்கும். மக்கள் மனங்களில் அறிவு வெளிப்படும்; மலை போன்ற தோள்களில் வலிமை குடிகொண்டிருக்கும். இப்படிப்பட்ட பெருமைகளை உடையது கோதையூர் என்னும் திருச்செங்கோடு.

★

ஏடளக்கும் தொடைமடவார் இடையளக்கும் துடியெவரும்
இன்பம்காணும்
நாடளக்கும் நெறிபனுவல் நவிலளக்கும் கிளிகுயில்கள்
நாதம்ஓதும்
வீடளக்கும் தருமமொழி மெய்யளக்கும் கரங்கள்கொடை
மேவுமானைக்
கோடளக்கும் முலைமடவார் கொம்பளக்க நம்பளக்கும்
கோதையூரே. (30)

பாடற்பொருள்:

ஏடுகளிலே (எதுகை, மோனை போன்ற) தொடைகள் இருக்கும்; பெண்களின் இடை துடியாகிய உடுக்கை போல இருக்கும்; நாட்டில் இன்பத்திற்குக் காரணமான நன்னெறிகள் இருக்கும்; கிளிகள் அழகிய மொழிகளைப் பேசிக் கொண்டிருக்கும்; வீடுகளிலே கொடை அளிக்கும் மொழிகள் இருக்கும்; கைகள் கொடை கொடுத்துக் கொண்டே இருக்கும்; யானைகளின் தந்தங்கள் போல் பெண்களின் கொங்கைகள் இருக்கும்; அதனால் கோதையூர் என்னும் திருச்செங்கோடு எல்லோராலும் விரும்பப்படும் ஊராக உள்ளது.

★

வடம்பயிலு முரமுரமே மதன்பயிலும் மனமனமே
வாணிபாகன்
படம்பயிலும் மனைமனையே பயம்பயிலும் குணங்குணமே
பரதகீத
நடம்பயிலும் சபைசபையே நயம்பயிலும் இசைஇசையே
நாதன்தேரில்
குடம்பயிலும் கனம்கனமே குலம்பயிலும் நலம்பயிலும்
கோதையூரே. (31)

பாடற்பொருள்:

பெண்களின் மார்பில் கச்சுக்கள் பயின்றிருக்கும். அவர்கள் மனதில் மன்மதன் செயலால் காதல் பயின்றிருக்கும். புலவர்களின் இல்லங்களில் எழுத்துக்கள் உள்ள சுவடிகள் பயின்றிருக்கும். குணங்களில் இன்பம் பயின்றிருக்கும். சபைகளில் இசை, நடனம் பயின்றிருக்கும். இசையில் நயம் பயின்றிருக்கும். இறைவன் தேரில் அபிடேகக் குடங்கள் நிறைந்திருக்கும். குலமும் நலமும் மிக்க கோதையூரில் இவை அனைத்தும் பயின்றிருக்கும்.

★

ஆன்பொருந்தம் நங்காஞ்சி அலகுமுறி யாறுதொப்பை
ஆறுவானி
மீன்பொருந்தும் காவேரி திருமணிமுத் தாநதிசூழ்
மேருவாமால்
கான்பொருந்தும் கொல்லிபன்றி குருடிமலை பாலைமலை
கஞ்சன்நாகம்
கோன்பொருந்தும் எழுகரைநன் நாட்டினுக்கு நாயகமாம்
கோதையூரே. (32)

பாடற்பொருள்:

ஆன்பொருனை, நன்காஞ்சி, அலகு முறிச்சான், தொப்பை, பவானி, காவேரி, திருமணிமுத்தாறு ஆகிய ஏழு நதிகள் சூழ்ந்து மேருமலை போல் விளங்குவது திருச்செங்கோடு.

கொல்லிமலை, பன்றிமலை, குருடிமலை, பாலமலை, கஞ்சமலை, நாகமலை முதலிய பல மலைகள் சூழ்ந்து எழுகரை நாட்டின் நடுநாயகமாக விளங்குவது கோதையூர் என்னும் திருச்செங்கோடு.

★

சிலைவாழும் கரத்துஅரனார் உமைபாதி எனமகிழ்ந்து
தேவதீர்த்தத்
தலைவாழும் பஞ்சவர்ணப் பிரகாசர் உளமேவும்
தானம்ஆமால்
மலைவாழும் கவிஉடைத்த மதுஆறு பனசுகழை
மாவம்பேர்த்துக்
குலைவாழை செழுந்தரளக் குடில்எடுத்து வீதிவரும்
கோதையூரே. (33)

பாடற்பொருள்:

சிவபெருமானாகிய அரனார் உடலில் பாதி பெற்று உமை மகிழும் திருச்செங்கோட்டில் தேவதீர்த்தம் உள்ளது. அதன் தொடக்க இடம் பஞ்சவர்ணப் பிரகாசர் மகிழ்ந்து வாழும் இடமாகும்.

மலையில் வாழும் குரங்குக் கூட்டங்கள் உடைத்த தேன் கூடுகளின் தேன் பலா, வாழை, மா ஆகிய மரங்களையும், குலைகள் உள்ள வாழை மரங்களையும் பெயர்த்துக் கொண்டு வரும்போது முத்துக்கள் உள்ள குடிசைகளையும் பெயர்த்தெடுத்து திருச்செங் கோட்டு வீதிகளில் வரும்.

★

ஒத்துவரு கண்டகரை உரம்பிளந்து கடல்உதரம்
உண்டுமீண்ட
சத்திதர னார்இனிய பஞ்சலிங்கம் பூசைசெய்யும்
தானம்ஆமால்
முத்திதரு நாககிரி மாயூரம் கோள்அரவை
முறித்துமீளக்
கொத்தியெடுத் தேநடித்துக் கொக்கரித்து விளையாடும்
கோதையூரே. (34)

பாடற்பொருள்:

ஒன்றாக வந்த அரக்கர்களை மார்பைப் பிளந்து கடலின் ஆழத்தைக் கண்டு மீண்ட சத்தியின் மகனாகிய முருகப்பெருமான் பஞ்சலிங்கத்தை வணங்கிய தலம் இதுவாகும்.

முத்தியை அடியார்க்கு வழங்கும் முருகப்பெருமானின் மயில் வாகனம் கொடிய பாம்பினைத் தடுத்துக் கொத்தி எடுத்துக் கொக்கரித்து விளையாடும் தலம் திருச்செங்கோடு என்னும் கோதையூர் ஆகும்.

★

திருப்பணிமாலை கூறுவன

பூமேவு கோதைஉமை பாகர்தமை வேலரைப்
பூசித்த பேர்பெருமையும்
புண்ணியத் திருப்பணிகள் ஆடைஆ பரணங்கள்
பூமாலை நந்தவனமும்
காமேவு சோலைபல வாவிகூ பங்களும்
கமலம்மரு வியஓடையும்
கன்னியர்கள் நடனமும் பதினெட்டு மேளமும்
கானப்பிர பந்தகவியும்

மாமேவு மாசிவைய் யாசியின் தீர்த்தமும்
மாசபூ சையின்உபயமும்
மடம்அன்ன சத்திரமும் மறையவர்கள் தானமும்
வண்ணமயர்ச் சகர்வரிசையும்

கோமேவும் அரவகிரி வந்தஅந் நாள்முதல்
கும்பிட்ட பேர்பெருமையும்
குறைவற இவர்க்குஅரன் அளித்தருள் பதத்தையும்
குற்றம்அற வேபுகலுவாம். (35)

பாடற்பொருள்:

திருச்செங்கோட்டு அர்த்தநாரீசுவரரையும், செங்கோட்டு வேலரையும் பூசை செய்து வணங்கியவர்கள், புண்ணியத் திருப் பணிகள் செய்தவர்கள், ஆடை ஆபரணம், பூமாலை, நந்தவனம், சோலை, குளம், கிணறு, தாமரை பூத்த ஓடை, பெண்கள் நடனம், பதினெட்டு மேளம், இனிய இலக்கியக் கவி, மாசி மகம், வைகாசி விசாகத் தீர்த்தப் பயன், மாச பூசை உபயம், மடம், அன்னசத்திரம், மறையவர்க்குத் தானம், அர்ச்சகர்க்கு உதவிகள் இவற்றோடு இதுவரை திருச்செங்கோடு வந்து கும்பிட்டவர் பெருமைகளும் பெற்று இவர்கட்கு அரன் அளித்த பெருமைகளையும் இனிக் கூறுகின்றோம்.

தெய்வ வணக்கமும் பாயிரமும் முற்றும்

★

மலைச்சிறப்பு

காமதேனு கொணர்ந்த மலை

பூமருவு வடகயிலை உறைஈச னைக்கபிலை
போற்றிஒரு வரம்ஈகஎனப்
புனிதனும் மகாமேரு முடியில்ஐம் முடியவை
பொருந்துமது கொண்டேகிநீ

மாமருவு கொங்கினிடைப் பூசிஎன அவ்வுரை
மகிழ்ந்துகா விரியருகினில்
வண்மையொடு தாபித்து வேதாக மப்படி
வழுத்திஅர்ச் சனைசெய்தனள்

தேமருவு கஞ்சகிரி பதுமகிரி வேதகிரி
திரமான சங்ககிரியும்
திருநாக கிரிஆதி ஐந்துமுடி லிங்கங்கள்
செய்தனள் வரம்பெற்றனள்

கோமருவு பஞ்சகவி யம்கொடு மலங்களைக்
கொல்லவலி மையுமெய்தினள்
குறையாமல் முப்பத்து முக்கோடி சுரர்உருக்
கொண்டுபசு பதியானதே. (36)

பாடற்பொருள்:

ஒரு முறை வடகயிலாயம் உறையும் சிவபெருமானை வணங்கிய கபிலைப்பசு 'எனக்கு ஒரு வரம் அருள்க' என்று கேட்டனள்.

சிவபெருமான் ''மகாமேரு மலையின் சிகரங்களில் ஐந்தை எடுத்துக் கொண்டு சென்று கொங்கு நாட்டில் பூசை செய்'' என்று கூறினார். கபிலை காவிரியருகில் வேதாகம முறைப்படி அவ்வாறே செய்தனள். தான் கொண்டுவந்த மகாமேரு சிகரங்களை கஞ்சகிரி, பதுமகிரி, வேதகிரி, சங்ககிரி, நாககிரி என்ற ஐந்து முடி லிங்கங்களைச் செய்தாள். தன்னுடைய பஞ்சகவ்யம் கொண்டு மும்மலங்களைக் கொல்லும் வலிமை பெற்றாள். பசுபதி எனப் பெயர் உண்டாயிற்று.

கஞ்சகிரி - கஞ்சமலை; பதுமகிரி - பவானி கூடுதுறை அருகில் உள்ளது. வேதகிரி - ஊராட்சிக்கோட்டை மலை, நாககிரி - திருச்செங்கோடு. இந்த ஐந்து மலைகளுக்கும் இடையில் இருப்பதால் பவானி - பஞ்சகிரி மத்தியப் பிரதேசம் எனப் பெயர் பெற்றது.

★

பிரமன், விட்டுணு, துர்க்கை, நாகம் பூசை செய்த தலம்

பேறுபெறு முதல்யுகம் பிரமன் பணிந்தனன்
பிரமகிரி பிரமீசுரம்
பிரமதீர்த் தமும்ஆன பேரினை விரித்தனன்
பெற்றனன் முதல்தொழிலையே

வீறுபெறும் இணையுகம் விட்டுணு வழுத்தினன்
விட்ணுகிரி விட்ணுதீர்த்தம்
விட்ணீசு வரருமாக மேவினன் இரட்சிக்க
வேண்டிய வரம்பெற்றனன்

தூறுபெறு கொற்றவை துவாபர யுகம்தொழுது
துர்க்கைகிரி துர்க்கீசுரம்
துர்க்கைதீர்த் தமுமாக வேநாமமிட் டனள்மயிடா
சுரவதைப் பழிகழுவினள்

சீறும்அர வம்கலி யுகம்தொழுது முப்பேர்
சிறந்துபல கலைஞதியே
செம்மணி பயந்துநம் சிவன்அவ வயங்களின்
சேடபூ டணமானதே. (37)

பாடற்பொருள்:

முதல் யுகமாகிய கிரேதா யுகத்தில் பிரமன் பூசை செய்ததால் பிரமகிரி, பிரமீசுவரம், பிரமதீர்த்தம் எனப் பெயர் பெற்றது. பிரமன் படைப்புத் தொழிலைப் பெற்றார்.

இரண்டாவது திரேதாயுகத்தில் விட்டுணு பூசை செய்ததால் விட்டுணுகிரி, விட்டுணீசுரம், விட்டுணு தீர்த்தம் எனப் பெயர் பெற்றது. விட்டுணுவும் காத்தல் தொழிலைப் பெற்றார்.

மூன்றாவது துவாபர யுகத்தில் துர்க்கை பூசை செய்ததால் துர்க்கைகிரி, துர்க்கீசுவரம், துர்க்கை தீர்த்தம் எனப் பெயர் பெற்றது. துர்க்கைக்கு மயிடாசுரனைக் கொன்ற பாவம் நீங்கப் பெற்றது.

நான்காவது கலியுகத்தில் நாகம் பூசை செய்ததால் நாககிரி, நாகீசுரம், நாகதீர்த்தம் எனப் பெயர் பெற்றது. நாகம் பல கலை கற்று நாகமணியைப் பெற்றது. சிவபெருமானின் உறுப்புக்களுக்கு ஆபரணம் ஆகும் பெருமையும் பெற்றது.

★

வடிவேலர் வணங்கிய தலம்

இந்தயுகம் நாலுமறை வந்தனை புரிந்திட
இருந்தநா கீசுரரையே
எழிலாய் அரக்கரை வதைத்தபழி தீரவே
எய்திஅர்ச் சனைசெய்தனன்

ஐந்துலிங் கங்கள்தா பித்தனன் குமாரபுனல்
அறுமுக தடங்கண்டனன்
அனதான மிட்டனன் குராநிழலி லேயிருந்து
அதிகநிய மம்செய்தனன்

கந்தர்தமை வந்தணுகும் இந்திரனை வான்நாட்டுக்
காலமகு டம்கட்டினன்
களிற்றினொடு கானகியை யும்கொண்டு வேலர்இது
கயிலைஎன நின்றருளினார்

சிந்தைதனில் அன்புகொடு வந்தனைசெய் வோர்கள்வினை
தீர்த்தருள் குமாரர்என்னத்

தேவர்முதல் அனைவர்களும் மேவவரம் நீடிச்
சிறந்துளர்வை வேலர்எனவே. (38)

பாடற்பொருள்:

இந்த யுகத்தில் நான்கு வேதங்கள் வணங்கும் நாகீசரை அரக்கர்களை வதைத்த பாவம் நீங்கும்பொருட்டுக் கந்தர் அர்ச்சனை செய்தார்; ஐந்து லிங்கங்களைத் தாபித்தார். ஆறுமுகத் தீர்த்தம் உண்டாக்கினார். அன்னதானம் செய்தார். குராமர நிழலில் இருந்து பல முறைமைகளை உண்டாக்கினார். தன்னை வந்து அணுகிய இந்திரனுக்கு வான்நாட்டு மகுடம் சூட்டினார். தெய்வயானை, வள்ளியோடு வந்து திருச்செங்கோடே கயிலை என்று தங்கினார். உள்ளத்தில் அன்புடன் வழிபடுவோருக்கு அவர்கள் வினைகள் தீர அருள் புரிந்தார். தேவர் முதல் அனைவருக்கும் வரம் தந்து வடிவேலர் என வீற்றிருந்தார்.

★

பார்வதி இடப்பாகம் பெற்ற தலம்

மலையினில் பிலவழியில் வந்துகண பதிதனை
மகிழ்ந்தவன் சுனைமூழ்கியே
வாகைவடி வேலரைக் கண்டுதயவு எய்திஇரு
வனமுலையின் அமுதூட்டினள்

பலமிகுதி யானகற் பகநீழல் உறையரன்
பாகமது பெறஎண்ணியே
பங்கய மலர்ந்ததே வோதகப் பொகுட்டினில்
பன்னுதவ நிட்டைஅதனால்

நிலமைபெறு நாகீசர் ஒருபாகம் அருள்செய்ய
நேரிழை இடத்தள்ஆகி
நின்றவடி வாம்அர்த்த நாரீசர் எனஉரை
நிகழ்த்துமகி மைஎய்தினள்

தலைமைபெறு நாரிகண பதியும்நா கீசர்இரு
தாளிணை அர்ச்சித்தனள்
சகலதே வர்க்குமுதல் ஆனவரம் எய்தினான்
தந்திமுக ஐங்கரவனே. (39)

பாடற்பொருள்:

பார்வதி தேவி திருச்செங்கோட்டிற்குப் பாதாள வழியாக வந்து கணபதியைக் கண்டு மகிழ்ந்து அவர் சுனையில் மூழ்கி வேலவரைக் கண்டு தயவு கொண்டு முலையமுது அளித்தார். கற்பக மர நிழல் உறையும் சிவபெருமானிடம் இடப்பாகம் பெற விரும்பி மலையில் தவம் செய்தாள். நாகீசர் அருள் செய்து இடப்பாகம் அருளினார். அர்த்தநாரீசர் எனப் பெயர் பெறக் காரணமாக விளங்கினார். நாரி கணபதியையும் நாகீசரையும் வணங்கினார். பாதங்களை அர்ச்சனை செய்தார். விநாயகர் சகல தேவர்க்கும் முதல்வர் (கண+பதி) என்று பெயர் பெற்றார்.

★

தேவேந்திரன், முனிவர், பாண்டவர் வணங்கிய தலம்

மாகபதி இந்திரனும் நாகவரை எய்திஒரு
வாவியது கண்டுதினமும்
மங்கையொரு பங்கனையும் குகனையும் தொழுதுமணி
மகுடமது வேபெற்றனன்

நாகபரி தேனுதரு சசிதேவி யொடுகனக
நாடாள வரமெய்தினன்
ஞானமுனி வோர்அமரர் ஆனபோர் அர்ச்சித்து
நாடின வரம்பெற்றனர்

போகமுறு மேதினியு ளோர்பலர் வழுத்தியே
புத்தியுமுத் தியும்எய்தினர்
புண்ணிய மிகும்தரும புத்திரர்கள் அர்ச்சனை
புரிந்தனர் இருந்துபலநாள்

தாகமும் அகன்றுபதி நாடரசு பெற்றனர்
சயித்தனர் பகைத்திரளினைத்
தங்குகுகை தீர்த்தம்ஒரு லிங்கம்அவர் நாமம்
தழைத்தனர் மலைச்சிகரமே. (40)

பாடற்பொருள்:

தேவர் தலைவன் இந்திரன் திருச்செங்கோட்டை அடைந்து ஒரு புண்ணிய தீர்த்தத்தைக் கண்டு நீராடி நாள்தோறும் அர்த்தநாரீசுவரரையும், செங்கோட்டுவேலவரையும் தொழுது தனக்கு உரிய மணிமகுடத்தைப் பெற்றான். தன் துணைவியார் இந்திராணியுடன் பொன்னுலகமாகிய தேவலோகத்தை ஆளும் வரத்தைப் பெற்றார். முனிவர்களும் தேவர்களும் இங்கு மேற்கண்ட இருவரையும் அர்ச்சனை செய்து வேண்டிய வரம் பெற்றனர். உலகினர் பலர் தொழுது புத்தியும் முத்தியும் பெற்றனர். பாண்டவர்கள் ஐவரும் இங்கு பல நாட்கள் தங்கி அர்ச்சனை செய்து தங்கள் குறை நீங்கி அரசாளும் உரிமை பெற்றனர். பகைவர்களை வென்றனர். அவர்கள் தங்கிய குகையில் ஒரு தீர்த்தமும் லிங்கமும் உண்டாக்கினர். பெயர் விளக்கம் பெற்றனர்.

★

திருப்பணிகள்

சிங்கவன்மன் திருப்பணி

சீருலவு கலியுகம் உதித்துவரும் ஆதியில்
சேடகிரி உமைபாகரைச்
செங்கைவடி வேலரை நாகீச ரைத்தொழுது
சிங்கவன் மன்பரிவுடன்

ஏருலவு கோபுர விமானமண் டபமதில்
இலங்குதிரு நடைமாளிகை
இயலான திருவீதி திகழ்அரிய நகரமும்
இனியபல பலதருமமும்

பேருலவு வைகாசி தைத்திரு விழாஅழகு
பெரியரத ஆரோகணம்
பின்னையும் அனேகபரி வாரதா பனையோடு
பிரமப்பிர திட்டைபலவும்

காருலவு சோலைபல வாவிகூ பங்களும்
கண்டுமன ரதமெய்தினன்
கவின்அரசு பெற்றனன் இவன்பெருமை நீடூழி
காலமது நிலைநிற்கவே. (41)

பாடற்பொருள்:

கலியுகத் தொடக்கத்தில் திருச்செங்கோடு அர்த்தநாரீசு வரையும், வேலவரையும், நாகீசுவரரையும் சிங்கவன்மன் அன்புடன் தொழுதான். கோபுர விமான மண்டபத்தில் திருநடை மாளிகை, திருவீதி, நகரம் ஆகிய பல தருமங்களைச் செய்தான். வைகாசி விசாகம், தைப்பூசம் ஆகிய விழாக்களில் தேரோட்டம் நடத்தினான். பல பரிவார தெய்வங்களைப் பிரதிட்டை செய்தான். பிரமப் பிரதிட்டையும் செய்தான். சோலை, குளம், கிணறுகள் உண்டாக்கினான். தன் அரசுரிமையைப் பெற்றான்.

★

பாண்டியன், சேரன் திருப்பணி

தென்னவன் எனும்சவுந் தரபாண்டி யன்வந்து
சேடகிரி உமைபாகரைச்
சேயவனை யும்தொழுது பூசித்த னன்பெரிய
தெற்குவா சல்கண்டனன்

மன்னன்உயர் பாண்டீச ரைத்தொழுத னன்கனக
மணிமகுட முடிபெற்றனன்
வையம் புரந்தனன் பாண்டியன் எனத்தினம்
மகிழ்ந்தனன் வரம்எய்தினன்

இன்னவை உணர்ந்ததிக சேரகுல மன்னவனும்
எய்திஅர்ச் சனைசெய்தனன்
எழிலான உமைநேசர் முருகீசர் குமரீசன்
இயலான குன்றீசனார்

அன்னவர் களுக்குஅதிக பூசனை புரிந்தனன்
அழகான மேல்வாசலுண்
டாக்கினன் அனேகவர மதுபெற்ற னன்கையிலை
அரனைஎய் தினன்அரசனே. (42)

பாடற்பொருள்:

சவுந்தர பாண்டியன் என்னும் மன்னன் திருச்செங்கோடு அர்த்தநாரீசுவரரையும், வேலவரையும் வணங்கிப் பூசை செய்தான். தெற்கு வாயிலை அமைத்தான். பாண்டீசரைத் தொழுது தன் முடியாகிய அரசுரிமை பெற்றான். நாட்டில் அரசு புரிந்து புகழ் பெற்றான்.

இதனை அறிந்த சேர மன்னனும் இங்கு வந்து அர்ச்சனை செய்தான். அர்த்தநாரீசுவரர், வேலவர், குமரீசர், குன்றீசர் இவர்கட் கெல்லாம் பூசையை நிறைவேற்றி அழகிய மேற்கு வாயிலை உண்டாக்கினான். பல வரங்களைப்பெற்றான்.

★

சோழன் செய்த திருப்பணி

காரணிக மானவள வன்கலியு காதியில்
கட்செவிக் கிரிப்பரமனைக்
கந்தனை வணங்கிமக பூசைஉண் டாக்கினன்
கயிலாய நாதசிவனைத்

தாரணி புகழ்ந்திடத் தாபித்த னன்பெரிய
தண்கூப மதுகண்டனன்
சைவமறை யோர்பூச னைக்கினிய ராகவே
தனதுமண் டலமேவியே

சீரணிசீர் காழிஆ லம்பாயர் காசிபர்கள்
திறத்தோடர்ச் சணைசெய்யவே
திறமுற அமைத்தனன் மனுநீதி முறைகண்ட
செம்பியன் பெற்றபெருமை

ஏரணியும் ஆத்திமா லிகைவரிசை பெற்றனன்
எழிலான முடிபெற்றனன்
எண்டிசை புரந்தனன் இன்பமோ டிருந்தனன்
இனியபதம் எய்தினானே. (43)

பாடற்பொருள்:

சோழ மன்னன் கலியுகத் தொடக்கத்தில் திருச்செங்கோட்டுச் சிவபெருமானை, முருகப் பெருமானை வணங்கிப் பூசை செய்தான். கைலாயநாதரைப் பிரதிட்டை செய்தான். பெரிய கிணற்றை அமைத்தான். தனது சோழ மண்டலத்தில் சீர்காழியில் இருந்த ஆலம்பாயர், காசிபர் ஆகிய கோத்திரத்துக்காரர்களாகிய சைவ மறையோர்களைப் பூசை செய்யத் திருச்செங்கோட்டில் நியமித்தான். பல சிறப்புக்கள் பெற்றான்.

★

குருக்கள்மார் சிறப்பு

செஞ்சொல்புனை செம்பியன் தாபித்த நாள்முதல்
திகழும்உப சாரமுடனே
திவ்வியா கமவிதியி லேஅரவ கிரிமேவு
சேயைஅம் பிகைபாகனைக்

கஞ்சன்என மால்எனத் துர்க்கைபணி வேள்எனக்
கவுரிகண பதியென்னவே
காதலுடன் பூசித்த பிரபலஆ லம்பாயர்
காசிபர்கள் பெற்றபெருமை

பஞ்சலட் சணகவிதை பாடமறை ஓதிடப்
படியில்அடி யவர்தம்மையே
பகர்அரிய ஐந்தெழுத்து ஓதிஇனிது ஆனசிவ
பதவியில் இருத்தவரமும்

தஞ்சமென வந்தவரை ரட்சிக்க வும்சைவ
சமயத்தை வளர்விக்கவும்
சற்குரவர் ஆகிஅபி டேகமும் பெற்றுத்
தழைத்தனர்கள் சந்ததமுமே. (44)

பாடற்பொருள்:

சோழ மன்னன் தங்களைப் பூசை செய்ய நியமித்த நாள் முதல் ஆலம்பாயர், காசிபர் ஆகிய குருக்கள்மார் ஆகம விதிப்படி வேலவரையும், அர்த்தநாரீசுவரரையும் பலவிதமான உபசாரங்களுடன் வழிபாடு செய்தனர். பிரமனும், திருமாலும், துர்க்கையும் வணங்கிய வேலவர், நாரிகணபதி ஆகியோரை அன்புடன் பூசை செய்தனர். ஐந்து வகைக் கவிதைகளையும், வேதங்களையும் ஓதினர். அடியவர்கட்கு ஐந்தெழுத்து மந்திரத்தை உபதேசித்து அவர்கட்குச் சிவபதவி அளித்தனர். தஞ்சம் என்று வந்தவர்களை ஆதரித்தனர். சைவ சமயத்தை வளர்த்தனர். அடியவர்கட்குக் குருபீடமாக அபிஷேகம் செய்து கொண்டு சிறப்புடன் வாழ்ந்தனர்.

★

எழுபெரும் குரவர்கள்

மன்னுபுகழ் சேர்சுப்ர மண்யபண் டிதர்எவரும்
மகிழ்சதா சிவபண்டிதர்
மனமேவு தெய்வ சிகாமணி பண்டிதர்
வளர்நாக கிரிபண்டிதர்

தென்னுலவு வேதநா யகபண்டி தர்தமிழ்
தெரிந்ததே வாரநம்பி
செல்வன்என வரும்அர்த்த நாரீச பண்டிதர்
சேனா பதிப்பண்டிதர்

இன்னவர்கள் ஏழுகுர வோர்உகந்து அர்ச்சனை
இயற்றினர் வரம்பெற்றனர்
இயல்அழகு சேர்கருணை ஏற்றம்உற அறிவுண்மை
இன்பமிகு வித்தைபொறுமை
தன்னிலு மிகுந்தவர்கள் சற்குணமும் ஆகியே
தன்மத்தை வளர்வித்தனர்
சந்ததமும் உமைபாகர் வேலர்அரு ளால்அதிக
தானம் தழைத்தேறவே. (45)

பாடற்பொருள்:

சுப்பிரமணிய பண்டிதர், சதாசிவ பண்டிதர், தெய்வசிகமாமணி பண்டிதர், நாககிரி பண்டிதர், வேதநாயக பண்டிதர், தமிழை ஆய்ந்து அறிந்த தேவார நம்பிச்செல்வன் எனப் பெயர் உடைய அர்த்தநாரீச பண்டிதர், சேனாபதிப் பண்டிதர் ஆகிய ஏழு குரவர்கள் திருச்செங் கோட்டில் விரும்பி அர்ச்சனை செய்து வரங்கள் பெற்றனர். பல்வேறு சிறப்புக்களையும் அடைந்தனர். கொடைகளைக் காத்து வளர்த்தனர்.

சுப்பிரமணிய பண்டிதர், சதாசிவ பண்டிதர், தெய்வசிகாமணி பணிடிதர், நாககிரி பண்டிதர் நால்வரும் குலசேகர பட்டர் வழியினர் (ஆலம்பாயர்).

வேதநாயக பண்டிதர், அர்த்தநாரி பண்டிதர், சேனாபதி பண்டிதர் மூவரும் குலோத்துங்க பட்டர் வழியினர் (காசிபர்).

இப்போது ஆறு குருக்களே உள்ளனர்.

★

ஏழு குரவர்களின் சிறப்பு வழிபாடு

பூமேவு வேதியன் சக்கிராயு தன்துர்க்கை பொங்கரவம்
மாமேவு கந்தன் உமையாள் கணபதி வாறெனவே
கோமேவு நாக மலையாரை ஏழு குரவர்களும்
தாமேவி அர்ச்சனை செய்தார் பெருமை தழைத்திடவே. (46)

பாடற்பொருள்:

மேற்கண்ட ஏழு குரவர்களும் திருச்செங்கோட்டு இறைவர்க்குப் பொதுவாகப் பணிபுரிந்ததுடன் முறையே பிரம்மா, விட்டுணு, துர்க்கை, நாகம், முருகன், உமை, கணபதி ஆகிய தெய்வங்களுக்குச் சிறப்பு அர்ச்சனை செய்பவர்களாகிப் பெருமை பெற்றனர்.

★

மூவர் முதலிகள் பதிகம்

சோதிபுனை சேடகிரி சூழயோ சனைசிவ
சொரூபம்என் பனஎண்ணியே
சுந்தரன் பொன்னிநதி மேல்கரையி லேதமிழ்
தொடுத்தனன் கிரிநாடியே

நீதிபுனை சம்பந்த னும்பதிகம் ஓதியே
நீங்கிநண் ணாஅடையவே
நீள்சுரம் உறப்பொறா மல்பின்னும் அணுகியே
நீலகண் டப்பதிகமும்

ஓதினர் தமிழ்க்கினிய வாக்கரச னும்முற்று
உரைத்தனன் ஆதலாலே
உறுபிணி அகற்றினன் மூவர்முத லிகள்கைலை
உற்றனர் வரம்பெற்றனர்

வேதமிகு சூதரும் இதன்புரா ணம்தனை
விரித்தனர் அனேகரிஷிகள்
வேள்விபல செய்தனர் அருச்சனை புரிந்தனர்கள்
வேண்டியது அடைந்தனர்களே. (47)

பாடற்பொருள்:

திருச்செங்கோட்டு மலை சிவ சொரூபம் என எண்ணிச் சுந்தரர் காவிரியின் மேற்குக் கரையில் இருந்தே திருச்செங்கோட்டுக்குத் தேவாரப் பதிகம் பாடினார்.

சம்பந்தர் திருச்செங்கோட்டுக்குப் பதிகம் பாடிப் பவானியை அடைந்தார். திருச்செங்கோட்டு அடியவர்கள் சுரநோய் உற்றதால் மீண்டும் திருச்செங்கோடு வந்து நீலகண்டப் பதிகம் பாடினார். சுரநோய் எல்லோர்க்கும் நீங்கியது. திருநாவுக்கரசரும் தேவாரப் பதிகம் பாடி நோய் நீக்கினார்.

சூதர் இம்மலையின் பெருமைகளை விரித்துரைத்தார். அநேக முனிவர்கள் வேள்வியும், அருச்சனையும் செய்து பயன் பெற்றனர்.

இன்று திருச்செங்கோட்டுக்குத் திருஞானசம்பர் பதிகம் மட்டும் கிடைத்துள்ளது. திருநாவுக்கரசர், சுந்தரர் பதிகங்கள் அழிந்தன போலும்.

★

பணிமலை காவலர்

சினமிகு துலுக்கர்வந்து அரவகிரி யைக்கண்டு
சிதைக்கும்வகை செயும்அளவிலே
திறல்வீர ரானவீ மணன்ஓ வணன்கருணை
சேரிரங் கணன்மூவரும்

கனநீதி யானகிரி யைக்குகனை ஈசனைக்
கண்டுமிக தயவுஎய்தியே
காக்கவகை எண்ணியுமை பாகரை வணங்கியே
கந்தனையு மனம்உன்னியே

மனம்உறுதி யாகித் துலுக்கருடன் அமர்செய்து
வலியகண் டகர்ஆவினை
வானுற விடுத்தனர்கள் சேடகிரி அழியாத
வகைபுரிந் தனர்ஆதலால்

அனம்இடமது ஆனபணி மலைஈசர் இவர்களுக்கு
அரிதான வீரசொர்க்கம்
அன்புடன் அளித்தருள அவர்அரவ கிரிகாவல்
அதிகாரம் உற்றனர்களே. (48)

பாடற்பொருள்:

இசுலாமியர்கள் படையெடுப்பின்போது திருச்செங்கோட்டிற்கு அழிவு ஏற்படாதவண்ணம் வீமணன், ஓவணன், ரங்கணன் மூவரும் அர்த்தநாரீசரை வணங்கி முருகன் அருளால் காத்து அம்முயற்சியில் உயிரிழந்தனர்.

இறைவன் இவர்கள் மூவருக்கும் வீரசொர்க்கம் அருளி மலை காவல் அதிகாரம் கொடுத்தார். அதனால் இவர்கள் மூவரும் 'மலை காவலர்' என வணங்கப்பட்டனர்.

மலை காவலர் கோயில் வேலூர் சாலையில் உள்ளது. 'பங்கடு சுல்தான்' என்ற பெயரில் இங்குள்ள இசுலாமியர் சமாதியை இஸ்லாமியர்கள் வணங்குகின்றனர். அவர் கொள்ளையிட வந்த இஸ்லாமியர் போலும். கண்ணன் குலத்தார் பணிமலைக் காவலர் பூசாரியார் நல்லதம்பிப் பண்டாரம் ஏறருள் முத்துத் துலுக்கப் பூசாரிக்கு அளித்த கொடை பற்றி ஒரு ஓலைப் பட்டயம் உள்ளது. தகடப்பாடி என்னும் தட்டான்குட்டையிலும் மலை காவலர் கோயில் உள்ளது. 'பணிமலைக் காவலர் அபிஷேக மாலை' என்ற இலக்கியம் உள்ளது.

★

ஆண்ட அரசர்கள் பலர்

பூவுலகில் மன்னவர் அனேகர்அரி பீடம்
பொறுத்துமுடி பெற்றுநதிசூழ்
புவியாளும் நரபதி எனப்பெருமை பெற்றபேர்
புகலில்எண் ணிலர்ஆகுமால்
மேவுமநு மாந்தாதி சக்ரவர்த் திகளோடு
விக்கிரமா தித்தனுடனே
விசயஇர ணியவன்ம ராயன்முத லாயினோர்
வெற்றிபுனை பிரபுடராயன்

தாவுபுகழ் ஆண்மைஅழ கார்நீதி முறைவீறு
தவம்அதிக சௌரியபெலம்
சத்தியவா சகம்உறவு பொறைஈதல் தயவேயக
தாரவிர தம்செயகரம்
நாவிரத மானமொழி பலகலை தெரிந்தசிவ
ஞானவிய லானகுணராய்
நாவலந் தீவுவாழ் வந்தரசு இருந்தசில
நல்லவர் தமைப்புகலுவாம். (49)

பாடற்பொருள்:

உலகில் சிம்மாசனத்தில் வீற்றிருந்து முடி தரித்து ஆட்சி புரியும் பொறுப்பில் இருந்த அரசர்கள் பலர் ஆவர். மநு, மாந்தாதா போன்ற அரசர்களும் விக்கிரமாதித்தன் விசயஇரணியவன்மன், பிரபுடராயன் முதலியோர் புகழ், வீரம், நிதி-நீதி, தவம், அதிக சௌகரியம், வலிமை, சத்தியவாசகம், உறவு, பொறுமை, ஈகை, அன்பு, சொல் தவறாமை, மொழி, பலகலை முதலிய பல கற்றறிந்த அரசர்கள் இருந்தனர். அவர்களுள் சிலரை இங்கே கூறுகின்றோம்.

★

விசய நகர இராயர்கள்

செந்திரு வீர ராயன் திருநர சிங்க ராயன்
சுந்தரா னந்த ராயன் சோமசூ ரியனாம் ராயன்
ஐந்தரு அன்ன தானன் அருள்தரு சொன்ன தானன்
இந்திரன் தன்ம ராயன் எழில்புனை சொக்க ராயன். (50)

பாடற்பொருள்:

வீரராயன், நரசிங்கராயன், சுந்தரானந்தராயன், சோமராயன், சூரியராயன், அன்னதானராயன், சொன்னதானராயன், தன்மராயன், சொக்கராயன்.

★

மன்னிய மானம் காத்தான் மருவிய விஷ்ணு ராயன்
தென்னுயர் கிருஷ்ண ராயன் திகழ்விருப் பாட்சி ராயன்
கன்னிஅன் பான மல்லி கார்ச்சுனன் புசப லேசன்
மின்நர சிங்கன் மல்லி கார்ச்சுனன் வேந்த னாமே. (51)

பாடற்பொருள்:

விஷ்ணுராயன், கிருஷ்ணராயன், விருப்பாட்சிராயன், மல்லிகார்ச்சுனராயன், புசபலராயன், நரசிங்க மல்லிகார்ச்சுனராயன் முதலிய விசய நகர அரசர்கள் பலர் ஆட்சி புரிந்தனர்.

★

சாளுவ ராயன் கீர்த்தி சதாசிவ ராயன் பூமி
ஆளும்அச் சுதன்நம் கோமான் அன்னசீ ரங்க ராயன்
வேள்எனும் ராம ராயன் வீரிய வசந்த ராயன்
வாளுடை அரசு நீதி மருவுவேங் கடப தீசன். (52)

பாடற்பொருள்:

சாளுவராயன், சதாசிவராயன், அச்சுதராயன், சீரங்கராயன், ராமராயன், வசந்தராயன், வேங்கடபதிராயன்.

★

வடிவுறும் ஆனை கொந்தி மருவுசீ ரங்க ராயன்
படிபெறு மன்னர் மன்னன் பரவைசூழ் உலகெண் திக்கும்
முடிபெறு முதல்வர் ஆகி முறைசெயும் அரசர் கோதை
கடிபெறு குழலி பாகர் கைங்கரி யங்கள் சொல்வாம். (53)

பாடற்பொருள்:

ஆனைகுந்திராயர், சீரங்கராயர் போன்ற நில உலகினை ஆளும் விசயநகர மன்னர்கள் எட்டுத்திக்கிலும் புகழுடன் ஆட்சி புரிந்தனர். நல்ல நீதிமுறையுடன் ஆட்சி புரிந்த இந்த அரசர்கள் காலத்தில் திருச்செங்கோட்டுக்குச் செய்த கைங்கரியங்களை இனி எடுத்துக் கூறுவோம்.

★

கொடை அளித்த ஊர்கள்

செந்தமிழ்சேர் குமரமங்கை ஆனங் கூரும்
சித்தளந்தூர் தோகைநத்தம் தோகைப் பாடி
நந்துலவு மோடமங்கை அணிமூர் தேவ
ணாங்குறிச்சி கோழிக்கால் நத்தம் தானும்
முந்துதிரு மங்கையுடன் செக்கு நத்தம்
முளசிமகா சாத்தபுரம் சூரப் பள்ளி
இந்தநகர் பதினாலும் சைலம் சூழ
ஏரகத்தார் படித்தரத்திற்கு ஈந்த தாமே. (54)

பாடற்பொருள்:

திருச்செங்கோட்டு இறைவர்க்கு விசயநகர அரசர்கள் குமரமங்கலம், ஆனங்கூர், சித்தளந்தூர், தோகைநத்தம், தோகைப்பாடி, மோடமங்கலம், அணிமூர், தேவணாங்குறிச்சி, கோழிக்கால்நத்தம், திருமங்கலம், செக்குநத்தம், முளசி, சாத்தபுரம், சூரப்பள்ளி ஆகிய மலை சூழ்ந்த பதினான்கு ஊர்களைப் படித்தரத்திற்குக் கொடையாகக் கொடுத்தனர்.

★

தருமராயன் - கிருஷ்ணதேவராயர்

பன்னிரண்டு ஊரும் கோதைப் பதியுமை பாகர்க்கு ஈந்து
நன்னிலம் புகழும் பச்சை நம்பியைச் சிவிகை ஏத்தி
இன்னிலம் மதிக்க வேதான் எழுகரை நாட்டுப் பட்டன்
தன்னையும் விதித்தான் எங்கள் தயவுள தரும ராயன். (55)

பாடற்பொருள்:

தருமராயன் என்னும் அரசர் பன்னிரண்டு ஊர்களைத் திருச்செங்கோட்டுக்குத் தானமாகக் கொடுத்து பச்சை நம்பி என்னும் அந்தணரைப் பல்லக்கில் ஏற்றி உலகெலாம் மதிக்க அவருக்கு 'எழுகரை நாட்டுப் பட்டன்' என்னும் உரிமையையும் கொடுத்தார்.

தருமராயன் - கிருஷ்ணதேவராயன் (1509-1529)

★

வாலராசன் வணங்கிப் பெற்ற பலன்

இயலாக வேரத்ந சிங்கா தனத்துமிசை
ஏறிமணி முடிசூட்டியே
ஏகசக் கிரமாக அம்புவி புரக்கவரும்
இறையான தருமராயன்

தயவாக வாலரா சன்தனக்கு அருளவே
தாரா புரம்துருகமும்
தானாளு நாள்அரவ கிரியீச ருக்குஅதிக
தானங்கள் விடுவித்தனன்

பயனாம் அனேகதரு மங்களை நடத்தினன்
பணிமலை உமேசர்அருளால்
பாக்கியம் அடைந்தனன் பாலகரை ஈன்றனன்
படிமீது புகழ்பெற்றனன்

வியனான நரசிங்க ராயநக ரம்தன்னை
விட்டனன் தவமுற்றனன்
மெய்ப்பொருள் உணர்ந்தனன் கோதைஅரன்
அன்புகொடு
மேதினி விளங்கினானே. (58)

பாடற்பொருள்:

தருமராயன் என்று புகழ்பெற்ற கிருஷ்ணதேவராயர் (1509-1529) முடி சூடி சிங்காசனத்தில் வீற்றிருந்து ஏக சக்கரவர்த்தியாய் ஆட்சி புரியும்போது கொங்குத் தாராபுரத்திலிருந்து நிருவாகம் செய்ய வாலராசன் என்பவரை நியமித்தார். தாராபுரம் கோட்டையிலிருந்து நிர்வாகம் செய்த வாலராசன் திருச்செங்கோட்டிற்கு அதிகமான தானங்களைச் செய்தார். பயனுடைய பல தருமங்களைச் செய்தார். அர்த்தநாரீசர் அருளால் பல பாக்கியங்களைப் பெற்றார். மக்கட் பேற்றை அடைந்தார். புகழ்பெற்ற வாலராசன் அரச நகரத்தைத் துறந்து தவம் மேற்கொண்டார். மெய்ப்பொருளை உணர்ந்தார். இறையருளால் உலகில் புகழ்பெற்று விளங்கினார்.

இவர் பாலயதேவ மகாராசா என்று புகழப்பட்டவர். இவர் கொங்கு நாட்டில் செய்த அறப்பணிகள் பல. இவர் பெயர் பொறித்த கல்வெட்டுகள் பல உள்ளன. 'பாலயன் பணம்' என்று நாணயம் வெளியிடவும் உரிமை பெற்றார். இவர் அச்சுததேவர் (1529-1542) காலத்திலும் பதவியில் இருந்தார்.

★

திரியம்பகதேவன் திருப்பணி

வண்ணமெறு கலியுக சகாப்தமா யிரமிசை
வழங்குநா ளூற்றினுடனே
மருவுநாற் பத்துநா லானசித் திரபானு
வருடமது கிருஷ்ணராயன்

உண்மைபெறு திரியம்ப கர்க்குதவ அம்மன்னன்
உயர்கொங்கு நாடாளுநாள்
உரககிரி மீதுவட கோபுரக் கல்வேலை
யோடுமதி லும்கண்டனன்

தண்மருவு தெப்பக் குளம்தனது மண்டபம்
தங்குநா யகமண்டபம்
சந்தைசெவ் வாய்க்கிழமை தளிகைரசி தக்கிண்ணி
தாவுசிங் காரவனமும்

கண்மருவு காட்சிதரு தையுடுப உற்சவம்
கனமாக வேசெய்தனன்
கம்பனுயர் சாமனிவர் தம்பிதா னன்பெரிய
காராளர் மிகவாழ்கவே. (57)

பாடற்பொருள்:

சாலிவாகன சகம் 1434இல் (கி.பி.1522) கிருஷ்ணதேவராயர் (1509-1529)திரியம்பகதேவன் என்பவரைக் கொங்குப் பகுதி ஆட்சிக்கு நியமித்தார். அவர் திருச்செங்கோடு வடகோபுரக் கல்வேலையோடு மதிலும் அமைத்தார். தெப்பக்குளம், தன் பெயரில் மண்டபம், நாயக மண்டபம்,செவ்வாய்க்கிழமைச் சந்தை, படையலுக்கு வெள்ளிக் கிண்ணம், நந்தவனம், தைமாதம் தெப்போற்சவம் இவைகளைச் சிறப்பாகச் செய்தார். இவருடைய தம்பியர் கம்பன், சாமன் என்பவர்கள். இவர்கள் வேளாளர்கள்.

★

கம்பநயினார் பெயரில் கம்பபுரம்

கம்பபுரம் என்றொருஊர் கம்பநயி னார்தனது
தம்பிபெய ரால்ஒருஊர் தானபுரம் - அம்புவியெண்
பாட்டிமையான் சித்ர பானுவரு டம்திருச்செங்
கோட்டில்அமைத் தானன்பு கொண்டு. (58)

பாடற்பொருள்:

சித்திரபானு வருடம் (1522-23) திரியம்பக உடையாரின் தம்பி கம்பநயினார் என்பவர் பெயரால் 'கம்பபுரம்' என்ற ஊர் திருச்செங்கோட்டின் ஒரு பகுதியில் அமைத்துக் கோயிலுக்குக் கொடையாகக் கொடுக்கப்பட்டது.

★

அனந்தபூபன்

சீரார் சகாப்தத்தில் ஆயிரமும் நானூறு
செல்கஎண் பத்துமூன்றின்
திரமான துன்மதிச் சித்திரைத் திங்களைச்
சேர்ந்தஇரு பத்தைந்தினில்
பூராய பூர்வபட் சம்திங்க ளும்தசமி
பூசமாம் மேனாளிலே
புவியாள் சதாசிவ மகாராயர் செகதேவு
பூபால னுக்குஉதவவே

வீராக மப்பிரபுட நரசிங்க ராமாஞ்சி
மிகுகொங்கு நாடாளுநாள்
விப்ரகுல சர்வயன் தேவகா யாதிபன்
வீறாம் அனந்தபூபன்
ஏரான செங்கோட்டில் வாழுகயி லாயர்முன்
எழிலான கல்கம்பமே
இன்பமொடு நிறுத்தினன் கீர்த்திப்ர தாபமது
இமசே தளவுநிற்கவே. (59)

பாடற்பொருள்:

விசயநகர மன்னர் சதாசிவராயர் (1542-1570) அரசப் பிரதிநிதியாக செகதேவபூபாலன் இருக்கும்போது கொங்குப் பகுதியை ஆட்சி

புரிந்தவர் நரசிங்க ராமாஞ்சி என்பவர். அப்போது அந்தணர் மரபைச் சேர்ந்த அனந்தபூபன் என்பவர் சாலிவாகன சகம் 1483ஆம் ஆண்டு (கி.பி.1561) துன்மதி வருடம் சித்திரை மாதம் 25ஆம் தேதி பூர்வ பட்சம் திங்கட்கிழமை தசமி திதி பூச நட்சத்திரத்தில் திருச்செங்கோடு கயிலாசநாதர் கோயில் முன் தீபத்தம்பம் ஆகிய கற்கம்பத்தைச் செய்வித்து நிறுத்தினார்.

★

நரசிங்க ராமாஞ்சி

துங்கமிகு சேடகிரி வடகோபு ரம்தனைத்
துன்மதித் தைத்திங்களில்
சுந்தரம தாகவே செங்கல்நிறை வேலையும்
சூளிகையும் நிறைவேற்றினன்

கங்கைமதி அணிசடையர் கயிலாய நாதர்கல்
கம்பம்அழ குறநாட்டினன்
காசினி மதிக்கவெகு பூசனை புரிந்தனன்
கனகசவு ரியம்பெற்றனன்

இங்கிதம் அடைந்துருகும் ஏழுகரை நாடதனை
இயல்நீதி முறைசெய்தனன்
எதிரிட்ட மன்னர்மணி மகுடம் பறித்தனன்
இறைஞ்சினரை ரட்சித்தனன்

திங்கள்நிறை முகசதா சிவராயன் அருள்மேவு
தீரசெக தேவுமகிழும்
செஞ்சொல்புனை நரசிங்க ராமாஞ்சி சந்ததம்
திறமையுடன் மிகவாழ்கவே. (60)

பாடற்பொருள்:.

விசயநகர மன்னர் சதாசிவராயர் (1542-1570), காரிய கர்த்தரான செகதேவர்க்கு மகிழ்வூட்டும் அலுவலர் நரசிங்க ராமாஞ்சி.

திருச்செங்கோட்டு மலை வடகோபுரத்தைத் துன்மதி வருடம் (கி.பி.1561) தை மாதம் அழகிய முறையால் செங்கல்லில் வேலைகளை நிறைவேற்றி முற்றமும் கட்டி முடித்தார். கயிலாயநாதர் கோயில் கற்கம்பத்தை நாட்டினார். உலகு மதிக்கும் சிறந்த பூசைகளைச் செய்தார். நல்வாழ்வு பெற்றார். எழுகரை நாடு முழுவதையும் சிறப்பாக நிர்வாகம் செய்தார். எதிரிகளை அழித்தார். வணங்கியவர்களைப் பாதுகாத்தார்.

★

களஞ்சியம் கிருஷ்ணய்யன்

மின்னு பொன்மணி வேலர்தாள் நூபுரம்
வெள்ளியின் தடவேலும்
தென்னு லாவிய திருவிழா மண்டபச்
சிறப்பும்அன் பொடும்ஏத்தி
பொன்னின் ஆடையும் மோகன மாலையும்
புகட்பணி கிரியார்க்கு
மன்னு சுங்கமும் களஞ்சியம் கிருஷ்ணயன்
மகிழ்ந்தினிது அளித்தானே. (61)

பாடற்பொருள்:

களஞ்சியம் கிருஷ்ணய்யன் என்பவர் திருச்செங்கோட்டு வேலவர்க்குப் பொன்னாலும் மணியாலும் செய்யப்பட்ட பாதக் கிண்கிணியையும், வெள்ளி வேலையும், திருவிழா மண்டபத்தையும், பொன்னிலான ஆடையையும், மோகன மாலையையும், மகமையாகச் சுங்க வரியையும் மகிழ்வுடன் அளித்தார்.

★

காலிங்கராயன்

ஆலிங்க நாகமலை அர்த்தநா ரீசுரர்க்குக்
காலிங்க ராயன்எனும் காராளன் - மாலிங்கம்
என்றேமா மாந்தைநிலம் ஏழுமா வும்கொடுத்தான்
நன்றே புகழாகி னான். (62)

பாடற்பொருள்:

பசுப்போலவும், சிவலிங்கம் போலவும் தோன்றும் திருச்செங் கோட்டு மலை அர்த்தநாரீசுவரர்க்குக் காலிங்கராயன் என்னும் வேளாளர் பெரிய லிங்கத்தையும், மாந்தையில் ஏழுமா நிலமும் கொடையாக அளித்துப் புகழ் பெற்றார்.

பவானி காவிரியோடு கலக்கும் இடத்தில் பவானியாற்றில் தடுப்பணை கட்டி 56.5 மைல் நீளம் உள்ள வாய்க்காலை 1282ஆம் ஆண்டு தை 5ஆம் நாள் வெட்டி முடித்தவர் கனகபுரம் சாத்தந்தை குல நஞ்சையன் மகன் காலிங்கராயன். வீரபாண்டியனிடம் அமைச்சராகவும் தளபதியாகவும் இருந்தவர். காலிங்கராயன் மரபினர் பொள்ளாச்சி ஜமீன் ஊத்துக் குளியில் இன்றும் சிறப்புடன் வாழ்ந்து வருகின்றனர்.

★

மதுரை மன்னர்கள்

வெற்றிநர பதிராயர் அருளி னாலே
விருதுபல வரிசையுடன் சேனை சூழக்
கொற்றவர்கள் பணிந்திடஎண் திசையும் போற்றக்
கூடல்நகர் சௌந்தரபாண் டியன்ஓப் பாகக்
கற்றமனு முறைவழியாச் செங்கோல் ஓச்சும்
காவலன்தட் சிணபூமிக் கடவுள் ஆகி
நற்றவமே புரிவிசுவ நாத ராயன்
நடத்துவித்த தருமம்எலாம் நவிலு வாமே. (63)

பாடற்பொருள்:

விசய நகர மன்னர் கிருஷ்ணதேவராயர் (1509-1529) அருளினால் சேனைகளைக் கொண்டு வெற்றி பெற்றுப் பகைவர் பணியும்படியாக மதுரையில் முன்னாட் பாண்டியர் போல செங்கோல் ஆட்சி புரிந்த விசுவநாத நாயக்கர் (1529-1564) செய்த பணிகள் பற்றிச் சொல்லுகின்றோம்.

★

கனமிகு விசுவ நாதன் காதலன் வீர பூபன்
மனமிகு கிருஷ்ண பூபன் மருவிய வீர பூபன்
தனமிகு முத்துக் கிருஷ்ணன் தந்தருள் முத்து வீரன்
இனமிகு திரும லேந்திரன் ஈன்றருள் முத்து வீரன். (64)

பாடற்பொருள்:

விசுவநாத நாயக்கர் (1529-1564), கிருஷ்ணப்ப நாயக்கர் (1564-1572), கிருஷ்ணப்ப நாயக்கர் II (1595-1601), வீரப்பநாயக்கர் (1572-1595), முத்துக்கிருஷ்ணப்ப நாயக்கர் (1601-1609), முத்துவீரப்ப நாயக்கர் (1609-1623), திருமலை நாயக்கர் (1623-1659), முத்து வீரப்ப நாயக்கர் II (1659) ஆகியோர் மதுரை மன்னர்கள் ஆவர்.

★

சுந்தர விசுவ நாதச் சொக்கலிங் கேந்தி ரேசன்
மந்திரி மன்னர் ஏவ வந்துல காண்ட பேர்கள்
செந்திரு விளங்கும் கோதைத் தலத்திலே செய்யப் பெற்றோர்
தந்திருப் பணிகள் எல்லாம் தயவுடன் சாற்று வாமே. (65)

பாடற்பொருள்:

விசுவநாத நாயக்கர் (1529-1564), சொக்கலிங்க நாயக்கர் (1659-1682), போன்ற மதுரை நாயக்கர் மரபு மன்னர்களும், மந்திரி களும் ஏவ ஆட்சி புரிந்த தலைவர்கள், அவரவர்கள் திருச்செங் கோட்டிற்குச் செய்த பணிகளையெல்லாம் கூறுவோம்.

★

ஆனைவசவன் மகன் குருவமகிபன்

திறமிகு சகாப்தம்ஆ யிரம்ஐந்து நூற்றிரண்டு
சேரவரு விசுவற்சரம்
தேசதே சம்பரவு வீரபூ பதியுடைய
சித்தமது மகிழஉலகம்

முறைநெறி நடத்தவரும் ஆனைவச வன்தந்த
மூர்த்தனிய குருவமகிபன்
முடிமன்னர் பணிகட்டி கவலோடுஎழு கரைநாடு
முழுதுதோ ரணம்இட்டனன்

கறையணி களத்தர்பணி மலையீச ருக்கினிய
கனமான அபிடேகமும்
கவின்ஆடை திருமாலை அழகுபுனை தீபமும்
கட்டளைப் படிசெய்தனன்

நிறைகருணை வளர்கட்டி செய்தரதம் ஓட்டினன்
நேசமொடு பூசித்தனன்
நீடூழி காலம்அழ காகவெகு கீர்த்திதனை
நிலைபெற நிறுத்தினானே. (66)

பாடற்பொருள்:

மதுரை நாயக்க மன்னர் வீரப்பநாயக்கர் (1572-1595) ஆட்சிக் காலத்தில் சாலிவாகன சகம் 1502 (கி.பி.1580) விசு வருடம் ஆனைவசவன் மகன் குருவமகிபன் கட்டி முதலி ஆட்சிக்குட்பட்டிருந்த எழுகரை நாடு முழுவதும் நிருவாகம் செய்தார். மலையீசருக்கு அபிடேகம், ஆடை, திருமாலை, தீபம் இவைகளை முறைப்படி அளித்தார், கட்டி முதலி செய்த தேரை ஓட்டினார். அன்புடன் இறைவனுக்குப் பூசைகள் செய்தார்.

★

சீர்பெறு மதுரை வீரன் திருஉளம் மகிழச் செங்கோல்
ஏர்பெறு குருவ பூபன் இயல்பெறு விசுமுன் னாகப்
பேர்பெறு பார்த்தி பாந்தம் பெரும்புவி தன்னை ஆண்டு
பார்பெறு கோதை ஈசன் படித்தரம் நடத்தி னானே. (67)

பாடற்பொருள்:

மதுரை வீரப்பநாயக்கர் காலத்தில் (1572-1595) அரசர் மனம் மகிழ நிர்வாகம் செய்த குருவபூபன் விசு வருடம் முதல் பார்த்திப வருடம் வரை அரசுப் பணியில் இருந்தார் (1580-1585). திருச்செங் கோட்டில் பல படித்தரங்களை நடத்தினார்.

★

வீரராகவ முதலியார் மருமகன் பள்ளியப்பன்

வியவருடம் முதல்என விரோதிவரு டத்தளவும்
வீரரா கவமுதலியார்
மெச்சுமரு மகன்பள்ளி துருகம் புரந்தனன்
மேவுநா காச்செட்டிபால்

தயவினுட னேமீள வீரபூ பாலகன்
தந்தனுப் பிடவந்தனன்
தமிழ்மேவு பள்ளியப்பன் விக்குருதி ஆதியாத்
தான்விசய வரைஆண்டனன்

இயலினுட னேகொடிக் கம்பமது மேல்தகடும்
எழில்பஞ் சரதாவடம்
ஏற்றருத்தி ராட்சமேல் கட்டுபய சாரமும்
இனிதான பரிவட்டமும்

பயனுதவு குருபூசை பூமிதா னம்சம்
பளக்கொல்லை குளமானியம்
பணிமலைத் தானீக ருக்குதவி செய்தனன்
படிமீதில் மிகவாழ்கவே. (68)

பாடற்பொருள்:

விய வருடம் முதல் விரோதி வருடம் வரை (1586-1589) வீரராகவ முதலியார் மருமகன் பள்ளியப்பன் சங்ககிரி துர்க்கத்தில் ஆட்சி செய்தார். நாகாச்செட்டியார் தயவினால் வீரப்ப நாயக்கர் பள்ளியப்பனை மீண்டும் நிர்வாகம் செய்ய அனுப்பினார். விக்ருதி வருடம் முதல் விசைய வருடம் வரை (1590-1593) பள்ளியப்பன் மீண்டும் ஆட்சி செய்தார். அப்போது திருச்செங்கோடு கொடிக் கம்பத்திற்குப் பித்தளைத் தகடு போர்த்தினார். சிறந்த ருத்திராட்ச மாலைகள் உபயமாக அளித்தார் பரிவட்டங்கள் அளித்தார். திருச்செங்கோடு தானிகர்கட்குக் குருபூசை நடத்தப் பூமிதானம் அளித்தார். சம்பளம் நிலையாகப் பெற பூமி கொடை கொடுத்தார். குள நீர் பாயும் மானிய நிலம் அளித்தார்.

★

சித்தர்மகி ழும்சருவ தாரியில் கோதைத்
திருப்பணி நடந்துவரவே
தென்மதுரை வீரபூ பதியப்ப ணைப்படி
சிறக்கமணி யம்செய்யுமால்

மெத்தமுனி வொடுபள்ளி யப்பமகி பாலகன்
விதரிவரு கட்டிஇதயம்
மேவஉரை செய்தவனும் நல்லதம்பிக் காங்கயனும்
மிகமனது களிகூரவே

ஒத்தவர் உகந்தபின் ஏழுகரை நாடதனில்
உளளபா ளயகாரருககு
உண்மையுடன் உரைசெய்து பட்டயமும் எழுதியே
ஒப்பமது வரைவித்தனன்

நத்துலவும் ஏழுகரை நாட்டுபய மார்க்கமும்
நடக்கவகை யேசெய்தனன்
நாடனை வரைக்கொண்டு தாரைவார்ப் பித்தனன்
நன்மையுடன் ஈடேறவே. (69)

பாடற்பொருள்:

பள்ளியப்பன் நிருவாக காலத்தில் சருவதாரி வருடம் (கி.பி. 1588) திருச்செங்கோட்டுத் திருப்பணிகள் நடைபெற்றன. பள்ளியப்பன் பவானி கட்டி முதலி, மோளூர் நல்லதம்பிக் காங்கயன் இருவரிடமும் ஆலோசனை செய்து அவர்கள் ஒப்புதலுடன் எழுகரை நாட்டுப் பாளையக்காரர்கள் அனைவருக்கும் ஓலை அனுப்பினார். அவர்கள் அனைவரின் சம்மதம் பெறப்பட்டது. எழுகரை நாட்டு வணிகர்கட்கும் திருப்பணிக்காக வரி விதிக்கப்பட்டது. நாட்டினர் அனைவரும் கொடைகள் பல அளித்தனர்.

★

அடலுறு கோதைவை யாசி வீதியும்
தடரத மிசைஅரன் தையல் பாகமும்
வடிவுள பரிமள வல்லி சேவையும்
படிதொழ விதித்தனன் பள்ளி யப்பனே. (70)

பாடற்பொருள்:

பள்ளியப்பன் காலத்தில் வைகாசி விசாகத் தேர் வீதி அமைக்கப் பட்டது. தேரில் அர்த்தநாரீசுவரரை எழுந்தருளச் செய்தனர். பரிமளவல்லி அம்மனுக்கும் பல கொடைகள் அளிக்கப்பட்டன.

★

அருந்தவர் பூசையும் அகதி போசனம்
திருந்திநற் பணிமலை திருக்கு ராநிழல்
விருந்தென நுகர்ந்தனன் வேள்வி யாளர்பால்
பரிந்தினிது அளித்தனன் பள்ளி யப்பனே. (71)

பாடற்பொருள்:

அரிய தவம் செய்வோர்கள் பூசைக்கும், அகதிகட்கு உணவும் ஏற்பாடு செய்யப்பட்டது. திருக்குரா மர நிழல் வழிபாடும் புதியதாக உருவாக்கப்பட்டது. வேள்விகள் செய்வோருக்கு வேண்டிய உதவிகள் பள்ளியப்பனால் செய்யப்பட்டது.

★

ஆவின்நெய்த் தீபமும் அழகு மாலையும்
நாவினுக்கு இனியபோ சனமும் நல்கியே
தேவெனப் பணிமலைச் சேயை ஈசனைப்
பாவனை புரிந்தனன் பள்ளி யப்பனே. (72)

பாடற்பொருள்:

பசு நெய்யில் தீபம், அழகான மாலைகள், சுவையான இனிய தளிகை இவைகளையெல்லாம் அளித்து வேலவரையும், அர்த்தநாரீசு வரரையும் தெய்வம் எனப் பள்ளியப்பன் தொழுதார்.

★

சந்ததம் பணிமலைத் தானி கர்க்கெலாம்
சிந்தையின் நினைந்தன சிறந்து அளித்தனன்
புந்தியில் அன்னைதாய் போல்உ கந்தனன்
பைந்தமிழ் நதிகுலன் பள்ளி யப்பனே. (73)

பாடற்பொருள்:

திருச்செங்கோட்டுத் தானிகர்கட்கு எல்லாம் கங்கா குலப் பள்ளியப்பன் சிந்தனை செய்து சிறந்த பல உதவிகளைச் செய்து அவர்கட்குத் தாய் போல் அன்பு காட்டினார்.

★

பாட்டிமையாம் கோதைஉமை பாகருக்கே ஏழுகரை
நாட்டுபய மார்க்கம் நடத்தினான் - தாட்டிமையாம்
பள்ளியப்பன் புண்ணியவான் பாகீ ரதிகுலத்தோன்
வள்ளியப்பன் போலொருமால் வந்து. (74)

பாடற்பொருள்:

திருச்செங்கோடு அர்த்தநாரீசுவரருக்கு எழுகரை நாட்டு வணிகர்கள் வரியைக் கொடையாக அளிக்கப் பள்ளியப்பன் ஏற்பாடு செய்தார்.

★

அம்பொன்தேர் ஏறிவரும் அர்த்தநா ரீசுரர்க்குச்
செம்பொற் கிரீடம் திருக்குழையும் - கும்பத்
தனதளமும் பள்ளியப்பன் தானே கொடுத்தான்
மனதுளவன் காராள மால். (75)

பாடற்பொருள்:

திருத்தேரில் வரும் அர்த்தநாரீசுவரருக்குப் பொன்னால் ஆன கிரீடத்தையும், காது அணிகலன் ஆன குழையையும், நெற்றிச் சுட்டியையும் பள்ளியப்பன் தன் கொடையாக வழங்கினார்.

★

தென்னுயர் சதாசிவ தேசி கன்கையில்
கன்னிய தானமாக் கனகம் ஐம்பது
தன்னியல் தயவுடன் தந்த னன்தமிழ்ப்
பன்னிய கோதையில் பள்ளி யப்பனே. (76)

பாடற்பொருள்:

சதாசிவ தேசிகருக்குக் கொடையாக ஐம்பது பொற்காசுகளைப் பள்ளியப்பன் அளித்தார்.

★

காரணிகர் கோதைக் கைலாய நாதர்முன்னே
சீரணியும் மண்டபமும் செய்தானே - பாரணியும்
தொண்டைவள நாடன் துரைராயன் பள்ளியப்பன்
மண்டலிகன் சார்வபூ மன். (77)

பாடற்பொருள்:

திருச்செங்கோடு கைலாசநாதர் கோயிலில் முன்மண்டபத்தைப் பள்ளியப்பன் கட்டினார்.

★

செம்பியன் நாகாச் செட்டி

தாரணி பரவும் கோதை தையலோர் பாக னார்க்கே
சீரணி மகுடம் சூட்டச் செம்பியன் நாகாச் செட்டி
ஏரணி கனக மாடை ஈரிரு நூறும் தந்து
நாரணன் எனவே பூசை நடத்தினன் நன்மை பெற்றான். (78)

பாடற்பொருள்:

சோழ நாட்டினரான நாகாச் செட்டியார் அர்த்தநாரீசுவரருக்குப் பொன்னாலான கிரீடம் செய்து அணிவிக்க இருநூறு பொற்காசுகள் கொடையாக அளித்தார். பூசையையும் சிறப்பாகச் செய்தார்.

மாடை - அரை வராகன் எடையுள்ள பொன்.

★

மதுரைவாழ் முத்து வீரன் மகிழ்ந்திடச் செங்கோல் ஓச்சும்
சதுரனாம் நாகாச் செட்டி தமிழிசை பாடு கின்ற
விதுரனாம் அர்த்த நாரி பண்டிதர் மீதன் பாக
குதிரையும் குடையும் தந்து கொல்லைமா னியமும் ஈந்தான்.

பாடற்பொருள்: (79)

முத்துவீரப்ப நாயக்கர் காலத்தில் (1609-1623) நிர்வாகம் செய்த நாகாச் செட்டியார் கோயிலில் தமிழிசை பாடுகின்ற அர்த்தநாரி பண்டிதர் மீது மிக அன்பு கொண்டு அவர் பயணம் செய்யக் குதிரையும், குடையும் தந்தார். நிலமும் கொடையாக அளித்தார்.

★

நாயக்கரின் அமைச்சர் நயினா முதலியார் மகன் காளத்தியப்ப முதலியார்

செயமுதல் விகாரி அந்தம் தமிழ்தெரி கிருட்டிண பூபன்
இயல்புள காள கத்திக்கு ஈந்திட வந்த மன்னன்
பயனுறும் கொங்குநாடு படைத்தரசு ஆளும் நாளில்
வயல்நிறை கோதை யார்க்கு மகாபடித் தரங்கள் ஈந்தான். (80)

பாடற்பொருள்:

மதுரை நாயக்க மன்னன் இரண்டாம் கிருஷ்ணப்ப நாயக்கர் காலத்தில் (1595-1601) செய வருடம் முதல் விகாரி வருடம் வரை (1595-1600) கொங்கு நாட்டுக்குக் காளத்தியப்ப முதலியாரை அதிகாரியாக நியமித்தார். காளத்தியப்ப முதலியார் தம் அதிகார காலத்தில் திருச்செங்கோட்டுக் கோயிலுக்குப் படித்தரம் அதிக அளவில் கொடுத்தார்.

★

அந்தணர் பரவும் கோதை அர்த்தநா ரீசர் தம்மை
வந்தனை செய்து பட்டு வத்திரம் அனேகம் ஈந்து
கொந்தணி தூப நல்ல கோவினெய் தீபம் கந்தச்
சந்தனம் கதம்பம் எல்லாம் சாத்தினன் காள கத்தி. (81)

பாடற்பொருள்:

காளத்தியப்ப முதலியார் திருச்செங்கோடு அர்த்தநாரீசுவரரை வணங்கிப் பட்டு வஸ்திரங்கள் பலவற்றைக் கொடையாக அளித்தார். தூபப் பொருள்கள், பசுநெய்த் தீபம், மணமிக்க சந்தனம், கதம்பம் ஆகியவற்றைக் கொடையாக அளித்தார்.

★

அரவமா மலைக்கே காள கத்திபூ பதிஅன் பாகத்
திருவிழா அதிக பூசை திருப்பணி அநேக தானம்
பரிவுடன் நடத்தித் தானும் பரிசனத் தவர்க்கே இன்பம்
மருவினன் நூறு பொன்னும் வழங்கினன் தானி கர்க்கே. (82)

பாடற்பொருள்:

காளத்தியப்ப முதலியார் திருச்செங்கோட்டில் திருவிழாவைச் சிறப்பாக நடத்தினார். பூசைகள் தொடர்ந்து நடைபெறத் தக்க ஏற்பாடு செய்தார். வேண்டிய திருப்பணிகள் செய்தார். பல கொடைகளை அளித்தார். கோயில் பரிவாரத்தார் பலரும் அதனால் இன்பம் அடைந்தனர். கோயிலின் தானிகர்கட்கு நூறு பொன்னைத் தானமாக அளித்தார்.

★

ஆபத்துக் காத்தா பிள்ளை

பற்றுசார் வரியாம் ஆதி பராபவ வருடம் ஏழும்
வெற்றிசேர் கிருஷ்ண பூபன் மேவஆ பத்துக் காத்தான்
கொற்றவன் அருளி னாலே கொங்குநாடு ஆளும் நாளில்
உற்றவன் கோதை யாருக்கு உயர்படித் தரங்கள் ஈந்தான். (83)

பாடற்பொருள்:

மதுரை கிருஷ்ணப்ப நாயக்கர் ஆட்சிக் காலத்தில் (1601-1608) சார்வரி முதல் பராபவ வரை ஏழு ஆண்டுகள் ஆபத்துக் காத்தா பிள்ளை கொங்கு நாட்டில் நிருவாகம் செய்தார் (1601-1607). அப்போது திருச்செங்கோட்டுக் கோயில்கட்குப் படித்தரங்களை மிகச் சிறப்பாக அளித்தார்.

★

மன்னிய கிருஷ்ண பூபன் வாசல்ஆ பத்துக் காத்தான்
தென்னுயர் கோதை வாழும் திருக்கயி லாய நாதர்
சந்நதிக் காலை சந்தி தனக்கெனத் துத்தி நத்தம்
மன்னவன் கொடுத்தான் தங்கள் நாயகன் மகிழத் தானே. (84)

பாடற்பொருள்:

ஆபத்துக் காத்தா பிள்ளை கயிலாசநாதர் கோயிலில் காலை சந்திப் பூசைக்காகத் துத்திநத்தம் என்ற கிராமத்தைக் கொடையாகக் கொடுத்தார். அரசர் மகிழும்படி இக்கொடையை அளித்தார்.

★

ஆண்டியப்பன்

சீர்புனை பிலவங்க ஆதி திகழ்விரோதி கிருதி யந்தம்
பார்புனை முத்து வீரன் பரிந்தளித் திடச்செவ் வந்தி
ஏர்புனை கொங்கு நாடாண் டிடுகையில் ஆண்டி யப்பன்
தார்புனை கோதை யார்க்குத் தருமமே நடத்தி னானே. (85)

பாடற்பொருள்:

மதுரை முத்து வீரப்ப நாயக்கர் காலத்தில் (1609-1623) செவ்வந்தி என்பவர் பிலவங்க ஆண்டு முதல் விரோதிகிருது ஆண்டு வரை (1607-1612) கொங்கு நாட்டில் நிர்வாகம் செய்தார். அப்போது ஆண்டியப்பன் என்பவர் திருச்செங்கோட்டிற்குப் பல தருமங்களைச் செய்தார்.

★

அருள்திரு அட்ட யானை ஐங்கரன் கோயில் கண்டான்
திருவளர் கைலா யர்க்குச் சிறக்கமண் டபம்தொ டுத்தான்
பரிவுடன் கோதை ஈசர் படித்தரம் மிகவும் செய்தான்
தருவென ஆண்டி யப்பன் தனித்தினிது இருந்து வாழ்ந்தான்.

(86)

பாடற்பொருள்:

கயிலாசநாதர் கோயிலில் எட்டு யானைகளையும், விநாயகர் கோயிலையும், மண்டபத்தையும் நாயக்கர் அலுவலர் ஆண்டியப்பன் உருவாக்கினார். படித்தரமும் மிகுதியாக அளித்தார்.

★

காளத்தியப்ப முதலியார்

பெரும்பரி தாபி ஆதி பிங்கள வருடம் மட்டும்
திரம்பெறு முத்து வீரன் சிறந்தளித் திடவே செங்கோல்
அரும்பொருள் உணர்கா ளத்தி அகிலமெண் கொங்கு நாடு
புரந்தனன் கோதை ஈசர் பூசனை மிகவும் செய்தான். (87)

பாடற்பொருள்:

மதுரை நாயக்க மன்னர் முத்து வீரப்ப நாயக்கர் காலத்தில் (1609-1623) கொங்கு நாட்டு அலுவலராக பரிதாபி வருடம் முதல் பிங்கள வருடம் வரை (1612-1618) மீண்டும் நியமிக்கப்பட்ட காளத்தியப்ப முதலியார் திருச்செங்கோட்டிற்குப் பூசைகள் தொடர்ந்து நடைபெறப் பல ஏற்பாடுகளைச் செய்தார்.

★

வாசவன் முத்து வீரன் மந்திரி நயினான் பாலன்
தேசமெண் காளகத்தி தென்கயி லாய னார்க்குத்
தூசுடன் மாலை தீபம் தூபமோ டங்க ரங்கப்
பூசனை புரிந்து தெப்பம் பொருந்திய விழாவும் செய்தான்.(88)

பாடற்பொருள்:

முத்துவீரப்ப நாயக்கரின் அமைச்சனான நயினா முதலியார் மகன் காளத்தியப்ப முதலியார் கயிலாய ஈசுவரனுக்கு உயர் ஆடைகளும், மாலை, தீபம், தூபம், அங்கரங்க பூசை ஆகியவற்றைச் செய்து தெப்ப உற்சவத்தையும் நடத்தினார்.

★

திருக்குளம் நந்த வானம் திகழொரு தென்னந் தோப்பு
கருக்குள பனையும் உச்சிக் கட்டளை வேலன் பள்ளி
மருக்கொளு முடிசேர் கோதைவள்ளலுக்கு அளித்தான் ஒன்னார்
வெருக்கொளப் பொருகா ளத்தி விண்ணவர்க்கு இறையொப்பு
ஆனான். (89)

பாடற்பொருள்:

காளத்தியப்ப முதலியார் திருச்செங்கோட்டில் வேலவர்க்குத் திருக்குளம், நந்தவனம், தென்னந்தோப்பு, பனந்தோப்பு, உச்சிக் கட்டளை ஆகியவற்றை உண்டாக்கினார்.

★

கொடைச் செய்தி

தவமிகு சகாத்தமோ ராயிரத் தைஞ்ஞூறு
தன்னுடன்முப் பத்தொன்றினில்
சாதார ணத்தில்வரு சித்திரையில் ஏரகம்
தன்னில்வரு ணன்திசையினில்

சிவனுமை யிடத்தரனும் குகனும்மகிழ்வு எய்தியே
தெப்பரத மேறியிருபத்

திருநாள் நடக்கவும் தேவர்களி கூரவும்
சேவைமா னிடர்காணவும்

நவரசம் எனப்பலரும் நுகரமறை யவர்தினம்
நானபா னம்செய்யவும்
நாதர்கயி லாயருக்கு அழகுதிரு மஞ்சனம்
நடக்கநன் னாள்முழுகவும்

புவனமனு நீதிபுனை முத்துவீ ரன்தனது
புண்ணியம தாகியுதகப்
புனல்வாவி கண்டனன் கீர்த்திபுனை காளத்தி
பூபாலன் நன்மைபெறவே. (90)

பாடற்பொருள்:

காளத்தியப்ப முதலியார் 1610ஆம் ஆண்டு (சாலிவாகன சகாப்தம் 1531 சாதாரண வருடம் சித்திரை மாதம்) திருச்செங்கோட்டில் மேற்குப் பக்கம் சிவபெருமான், உமாதேவி, முருகன் ஆகியோர் தெப்ப ரதம் ஏறி 22நாட்கள் விழா நடைபெறச் செய்தார். தேவர்கள் மகிழ, மானிடர் காண, புதுமை எனப் பலரும் பாராட்ட, இறைவன் திருமஞ்சண நீராட, நன்னாளில் முழுக்காட்டவும் அரசன் பெயரில் அவர் புண்ணியமாக ஒரு திருக்குளத்தை உருவாக்கினார். அக்குளத்திலேதான் தெப்ப உற்சவம் நடைபெற்றது.

★

கண்டான் திருக்குளத்தைக் காளகத்தி கோதையிலே
வண்டாடு சோலை மதுரேசன் - கொண்டாடும்
கீர்த்திமுத்து வீரன்எனும் கேள்விபரன் நானிலமும்
காத்தகர்த்தன் புண்ணியமா க. (91)

பாடற்பொருள்:

காளத்தியப்ப முதலியார் அரசன் முத்துவீரப்ப நாயக்கர் அவர்களுடைய புண்ணியமாகத் திருச்செங்கோட்டில் திருக்குளம் ஒன்றை ஏற்படுத்தினார்.

★

வீரராகவ முதலியார்

விற்பன விகாரி ஆண்டில் வீரரா கவபூ பாலன்
பற்பலர் உபயம் பாதி பாதிதன் உபயம் ஆகச்
சற்பமா மலைமீது ஏறத் தான்படி கட்டி வைத்துச்
சிற்பரன் தனக்கு நாலாந் திருவிழா நடத்தி னானே. (92)

பாடற்பொருள்:

வீரராகவ முதலியார் விகாரி ஆண்டு (1599-1600) பலர் உபயமாகப் பாதியும், தம்முடைய உபயமாகப் பாதியும் ஆகத் திருச்செங்கோட்டு மலையில் படிகளை அமைத்தார். திருச்செங் கோட்டு விழாவில் நான்காம் திருநாள் விழாவைச் சிறப்பாக நடத்தினார்.

★

தண்டமிழ் முத்து வீரன் தனதுளைக் கோதை யார்க்கு
விண்டலத்து இறைஒப் பான வீரரா கவபூ பாலன்
புண்டரீ கம்சேர் மேலைப் பூந்துறை நாட்டு ரேகை
உண்டுஎன அளித்தான் பண்ணைக்கு ஒருபணம் பயலாள்
பாதி. (93)

பாடற்பொருள்:

வீரராகவ முதலியார் கீழ்க்கரைப் பூந்துறை நாட்டில் உள்ள திருச்செங்கோட்டிற்கு மேல்கரைப் பூந்துறை நாட்டிலும் வரி அளிக்கக் கட்டளையிட்டார். பண்ணை வைத்திருப்போர் ஒரு பணமும், பண்ணை இல்லாமல் உழைப்போர் அரைப் பணமும் அளிக்கக் கட்டளையிட்டார். (ரேகை - வரி)

★

தீர்த்தராயன் தம்பி கச்சியப்பன் மைத்துணன் பள்ளியப்பன்

சனமிகு தீர்த்த ராயன் தம்பிநன் கச்சி யப்பன்
மனமகிழ் இன்ப மான மைத்துணன் பள்ளி யப்பன்
இனமிகு சந்தைத் தோப்பும் இனியமண் டபம்உண் டாக்கி
கனமிகும் பிள்ளை யாரும் கண்டனன் திருச்செங் கோட்டில்.

(94)

பாடற்பொருள்:

தீத்தராயன் தம்பி கச்சியப்பனின் மைத்துணர் ஆகிய பள்ளியப்பன் சந்தையில் தோப்பு ஒன்றை உண்டாக்கினார். மண்டபமும் கட்டினார். திருச்செங்கோட்டில் பிள்ளையாரையும் எழுந்தருளச் செய்தார்.

இந்த மண்டபத்தைப் படையாட்சிகள் பிரித்துத் தங்கள் மண்டபத்தருகே வடக்கு வாசலாகக் கட்டியுள்ளார்கள் என்று கோனார் கூறியுள்ளார் (1912).

★

கரிபரி இடபம் சிங்கம் கனமயில் பூதம் சிம்புள்
பரிவொடு புட்ப மேரு பத்துடன் எட்டு மேளம்
விரிவுடன் அழகி அம்மை விக்கிர கமுமுண் டாக்கி
மருவளர் கோதை யாரை மகிழ்ந்தனன் பள்ளி யப்பன். (95)

பாடற்பொருள்:

பள்ளியப்பன் திருச்செங்கோட்டுக்கோயிலில் யானை, குதிரை, ரிஷபம், சிங்கம், மயில், பூதம், சரபம், புஷ்பமேரு வாகனம் இவைகளுடன் பதினெட்டு மேளமும் அளித்தார். அழகியம்மை விக்கிரகத்தையும் செய்தளித்தார்.

★

காஞ்சிபுரம் பெத்து நாயக்கர் மகன் எறமசெட்டி நாயக்கர்

முத்துவீ ரப்ப ராயன் மொழியும்அப் பணையி னாலே
எத்தலம் புகழும் கச்சி எறமசெட் டிப்பூ பாலன்
பத்திசேர் காள யுத்தி முதற்பிர பவமட் டாண்டான்
சித்தமே மகிழ்ந்து கோதைத் திருப்பணி நடத்தி னானே. (96)

பாடற்பொருள்:

முத்துவீரப்ப நாயக்கர் (1609-1623) ஆட்சிக் காலத்தில் அவர் கட்டளைப்படி காளயுக்தி வருடம் முதல் பிரபவ வருடம் வரை (1618-1627) கச்சி எறமசெட்டியார் அதிகாரம் செலுத்தினார். திருச்செங்கோட்டில் அவர் பல திருப்பணிகளைச் செய்தார்.

★

எறமசெட்டி நாயக்கர் மனைவி வங்காரம்மாள்

தென்னணி விசுவ நாதத் திருமலை ராயன் மேவ
இந்நிலம் புரக்கும் கோமான் எறமசெட் டியார்தன் தேவி
பொன்னணி வங்காரம்மன் புனைசரப் பணிமூக் குத்தி
மின்னணி கோதை யீசன் மேனியில் சாத்தி னாளே. (97)

பாடற்பொருள்:

திருமலை நாயக்கர் ஆட்சிக் காலத்தில் (1623-1659) ஆட்சியாளர் எறமசெட்டியார் மனைவி வங்காரம்மாள் திருச்செங்கோட்டு ஈசுவரர்க்குக் கழுத்துமாலையையும், மூக்குத்தியையும் கொடையாக அளித்தார்.

★

கருத்தனார் கோதை வாழும் கயிலாய நாதர் முன்னே
நிருத்தமண் டபம்முன் ஆண்டின் நிகழ்த்தின குறடும் தூணும்
உருத்திரோற் காரி தன்னில் உத்திரம் போதி பாக்கல்
திருத்தமாய் வங்கா ரம்மன் செய்தனள் இனிது பெற்றாள்.
(98)

பாடற்பொருள்:

திருச்செங்கோடு கயிலாசநாதர் கோயில் முன்பு துந்துபி வருடம் கட்டத் தொடங்கிய நிருத்த மண்டபக் குறடு, தூண இவைகளோடு உருத்ரோத்காரி வருடம் உத்திரம், போதிகை, பாக்கல் இவைகளையும் சிறப்புடன் வங்காரம்மாள் உருவாக்கினார்.

இத்திருப்பணி பற்றிய கல்வெட்டு அங்கு உள்ளது.

''ருத்திரோற்காரிவருஷம் மாசி மாதம் 19 தியதி சுவாமி கைலாய நாதர் சன்னதிமுன் நிருத்த மண்டபம் பெத்துநாயக்கர் குமாரன் எறமசெட்டி நாயக்கர் தேவி பங்காரம்மாள் கட்டிவிச்ச உபயம்''

என்பது கல்வெட்டு.

★

ஏத்துவளி வெங்கடாத்திரி

பார்மேவு கோதை உமைபாகர் சந்நதிப் பலகணியும்
வார்மேவும் இன்ப வடவாசல் கோபுரம் மஞ்சனமும்
பேர்மேவு வர்க்க வகைப்பணி யாரம் பெரும்சிறப்பும்
சீர்மேவும் ஏத்து வளிவெங்க டாத்திரி செய்தனனே. (99)

பாடற்பொருள்:

திருச்செங்கோடு அர்த்தநாரீசுவரர் சந்நதியில் சாளரத்தையும், வடவாசல் கோபுரத் திருமஞ்சனத்தையும், பணியாரம் முதலிய பலகாரங்கள் பலவற்றையும் ஏத்துவளி வெங்கடாத்திரி கொடையாக அளித்தார்.

★

நயினாத்தை தம்பி அடைக்கலங் காத்தான்

மாலான கோதை அரவா சலம்வளர் வைரவர்க்கு
மேலான கோவிலும் முன்மண் டபமும் விளங்கவேதன்
பாலாக வேநயி னாத்தைதன் தம்பி பகீரதிகோன்
சீலா அடைக்கலங் காத்தான்செய் தன்மம் செலுத்தினனே.
(100)

பாடற்பொருள்:

திருச்செங்கோட்டு மலைக்கோயிலில் பைரவர் கோயிலையும், முன் மண்டபத்தையும் தன்னுடைய கொடையாக நயினாத்தையின் தம்பி அடைக்கலங்காத்தான் தன் கொடையாகக் கட்டினார்.

★

சின்ன நாகாச் செட்டியார்

செஞ்சொல்சேர் முத்து வீரன் திருவுளம் பெற்றான் ஏற்கும்
தஞ்சமாம் சின்ன நாகாச் செட்டிபாண் டீச னார்க்கு
மிஞ்சவே கோயில் கட்டி விளங்கிய மாந்தைத் தோப்பும்
நஞ்சைமா நாலும் கோதை நாரிநா யகர்க்குத் தந்தான். (101)

பாடற்பொருள்:

முத்துவீரப்ப நாயக்கர் (1609-1623) உள்ளத்தில் இடம் பெற்ற சின்ன நாகாச் செட்டி என்பவர் பாண்டீசர்க்குக் கோயில் கட்டினார். மாந்தைத் தோப்பும் 4 மா நன்செய் நிலமும் கொடையாக அளித்தார்.

★

காஞ்சிபுரம் போத்தையன் மகன் முத்தியாலு நாயக்கர்

கீர்த்திசேர் முத்து வீரன் கிருபையே பெற்றோன் கச்சி
போத்தயன் முத்த லேந்திரன் பொன்பணி அரைஞாண் தன்னை
சாத்தினன் கோதை வாழும் தையலோர் பாக னார்பால்
வாய்த்திடும் மகனைப் பெற்றான் மண்டலம் படைத்து வாழ்ந்தான். (102)

பாடற்பொருள்:

முத்துவீரப்ப நாயக்கரின் அருள்பெற்ற கச்சிப் போத்தயன் முத்தலேந்திரன் பொன்னால் செய்யப்பட்ட அரைஞாணை அர்த்த நாரீசுவரருக்குச் சாத்தினார். இறைவன் அருளால் மகப்பேறு பெற்றார்.

★

பாப்பன் மகன் நாரணப்பன்

ஏரணி மதனன் சுச்சி எறமசெட்டி யார்தன் நாளில்
காரண மிகுதி ருத்திரோற் காரியில் கருணை யாளன்
நாரண மகிபன் கோதை நாரியோர் பாக னார்க்குச்
சீரணி இனிய மாசித் திருவிழா நடத்தி னானே. (103)

பாடற்பொருள்:

கச்சி எறமசெட்டியார் அதிகாரம் செய்யும் நாளில் ருத்திரோத்காரி வருடம் (1623) மைத்துணன் நாரணப்பன் என்பவர் திருச்செங்கோடு அர்த்தநாரீசுவரருக்கு மாசித் திருவிழாவைச் சிறப்புடன் நடத்தினார்.

★

வீறார் சகாத்தமா யிரமும்ஐஞ் ஞூற்றினொடு
மேவுநாற் பத்தைந்தினில்
வெற்றிருத் ரோத்காரி வருடத்து மாசியில்
விளங்கும்இரு பத்தைந்தினில்

கூறாரு மதுரைவரு முத்துவீ ரன்மனது
கொண்டாட வந்தசுமுகன்
குலமிகுந் திடும்எறம செட்டிமகிழ் மைத்துணன்
கொற்றநா ரணமகீபன்

பேறான கோதைநகர் மாசிரத வீதியும்
பெருவிழா வைபோகமும்
பின்னும்மடம் நந்தவனம் வாவிகூ பங்களும்
பெருகும்அம் புயஓடையும்

மாறாமல் அன்னமும் அநேகதரு மங்களும்
மகாபூசை யும்செய்தனன்
மங்கைஉமை பங்கர்வடி வேலர்அரு ளால்மதுரை
மன்னன் தழைத்தோறவே. (104)

பாடற்பொருள்:

சாலிவாகன சகம் 1545ஆம் ஆண்டு ருத்ரோத்காரி வருடம் மாசி மாதம் 25ஆம் தேதி (21-02-1624) மதுரை முத்து வீரப்ப நாயக்கர் காலத்தில் அதிகாரி எறமசெட்டி நாயக்கர் மைத்துணர் நாரணப்பன் என்பவர் அர்த்தநாரீசுவரருக்கு மாசித் திருவிழா ரத வீதி உண்டாக்கி விழாவையும் நடத்தினார். மடம், நந்தவனம், குளம், கிணறு, நீரோடை, அன்னதானம், அநேக தருமங்கள் செய்தார். மகாபூசையும் நடத்தினார்.

★

சலமேவு நாரண சமுத்திரமும் எறம
சமுத்திரமும் நாகதடமும்
தண்டலைக ளும்கதலி யும்கன்ன லொடுசெந்நெல்
சண்பகமும் நந்தவனமும்

குலமேவு பனசுமலை வாழைபா டலிபுன்னை
குராகோங்கு விளவுகுவளை
கூவிளை செழும்கமுகு வேய்சம்பு நாவலொடு
குலவுகொம் மடிமாதுளை

பலமேவு தென்னைமா மாதுளை கொளிஞ்சியும்
பனையுடன் அனேகங்களும்
பனனீர்முல் லைஇருவாட்சி சிறுசண்ப கம்மருப்
பரிமள சுகந்தாதியும்

நலமேவு தத்தியோ தனஉபய கட்டளையும்
நற்றீப மாலிகைகளும்
நாகாச லேசருக்கு இத்தனை நடத்தினன்
நாரண மகிபாலனே. (105)

பாடற்பொருள்:

எறம செட்டியார் மைத்துணர் நாரணப்பன் எறம சமுத்திரம், நாரண சமுத்திரம், நாக குளம் ஆகியவைகளை அமைத்தார். சோலை களையும், நந்தவனத்தையும் ஏற்படுத்தி பல்வேறு வகையான பூக்களையும், பயன்தரு மரங்களையும் பயிர் செய்து வளர்க்க ஏற்பாடு செய்தார். அபிடேகத்திற்குப் பல வாசனைப் பொருள்களையும் அளித்தார். 'தத்தியோதனம்' என்னும் தயிரமுது படைக்கும் கட்டளை யையும் ஏற்படுத்தினார். தீப வரிசைகளையும் அமைத்தார்.

★

வேலனுக்குத் தென்முளசை வேலன்இடும் அங்கிதனில்
சீலமுடன் சொன்னம் சிலகூட்டித் - தூலம்எனக்
கோப்புடனே தேர்ஏறும் கோதைபா கர்க்குஅமைத்தான்
பாப்பன்அருள் நாரணபூ பன். (106)

பாடற்பொருள்:

வேலவருக்கு முளசை வேலன் கொடையாக அளித்த அங்கியில் நாரணப்பன் தங்கப் பொருள்களைச் சேர்த்தார். அந்த அங்கி அர்த்தநாரீசர் தேரில் எழுந்தருளும்போது அணிவதாகும்.

★

நாயகத்தா முதலியார்

நன்னிலம் மதிக்கவரு திருமலை நரேந்திரன்
நல்லவிப வருடத்திலே
நாடுபுக ழேந்தியாப் பிள்ளைக்கு அளிக்கவே
நாயகத் தாமுதலியார்

தென்னுலவு துருகம் புரக்குநா ளில்கருணை
சேர்அரவ கிரிஈசரைச்
செங்கைவடி வேலரைக் கண்டுவிர தத்துடன்
தினமண்ட லம்தொழுதனன்

மன்னுகிரி மிசைதாண்ட வக்குறடு செய்தனன்
வாணருக்கு அன்பீந்தனன்
மாறாமல் உறுமுயல கன்பிணி தொலைத்தனன்
மலடிசிலை மீதுதினமும்

தன்னுபய மாகஒரு தீபமும் நடத்தினன்
சந்நதி தரிசித்தனன்
தன்னுடைய வர்க்குஅதிக பலனும்உண் டாக்கினன்
சந்ததி யுடன்வாழ்கவே. (107)

பாடற்பொருள்:

மதுரை நாயக்க மன்னர் திருமலை நாயக்கர் ஆட்சிக் காலத்தில் (1623-1659) விப வருடம் (1628-29) நாயகத்தா முதலியார் சங்ககிரிக் கோட்டையில் புகழேந்தியாப் பிள்ளை நிருவாகத்தில் அலுவலராக விளங்கினார். அதிகாரி நாயகத்தா முதலியார் திருச்செங்கோடு அர்த்தநாரீசரையும், வேலவரையும் கண்டு நாள்தோறும் வலம் வந்து வழிபட்டார். மலையில் 'தாண்டவக் குறடு' கட்டினார். தொழிலாளர்கட்கு அன்புடன் கொடை அளித்தார். முயலகன் பிணியை நீக்கினார். வரடி கல் மீது நாள்தோறும் ஒரு திருவிளக்குத் தன் கொடையாக வைக்க ஏற்பாடு செய்தார். சந்நதிகள் சிறக்கச் செய்தார். அரசருக்கு நற்பலன் விளையுமாறு இவைகளைச் செய்தார்.

★

திருவேங்கடய்யன் தம்பி வில்லவராயன்

மன்னுசுக் கிலவருடம் முதலாக வேதாது
மட்டும்ஏ ழரைவருடமும்
மதுரைவரு திருமலேந் திரன்அருள் மன்னவர்
மதித்ததிரு வேங்கடய்யன்

தன்னுதென வேகொங்கு துருகம் புரக்குநாள்
தம்பிவில் லவராயனும்
சர்ப்பகிரி ஈசரைக் கந்தரை வணங்கியே
சந்ததம் அமாவாசையில்

பன்னியர்ச் சித்தனன் குட்டமிடி மாற்றினன்
பார்ஆள வரும்மன்னர்கள்
பக்கலில் அனேகவெகு மானங்கள் பெற்றனன்
பணிமலையில் உறைகடவுளை

மின்னுலவும் மார்கழியில் ஆதிரை தொறும்கபிலை
மேவுநெய் யினில்ஆட்டியே
மெய்த்தரிச னம்செய்து கனபவிசு பெற்றனன்
மேதினியில் மிகவாழ்கவே. (108)

பாடற்பொருள்:

சுக்கில வருடம் முதல் தாது வருடம் வரை ஏழரை வருடங்கள் (1629-1636) திருமலை நாயக்கர் அருள் செய்ய திருவேங்கடய்யன், கொங்கு நாட்டைச் சங்ககிரியிலிருந்து நிர்வாகம் செய்தார். அவர் தம்பி வில்லவராயன் அமாவாசைதோறும் அர்த்தநாரீசுவரரையும், வேலவரையும் வணங்கி தன் குட்ட நோய் நீங்கப் பெற்றார். அரசர் களிடம் பாராட்டுப் பெற்றார். மார்கழி திருவாதிரையில் பசு நெய்யால் அபிடேகம் செய்து தரிசித்துப் பேறு பெற்றார்.

★

காஞ்சிபுரம் போத்தயன் மகன் சின்னஎறமசெட்டி நாயக்கர்

பொன்நூறும் தந்து புகழ்வீர பூபதி புண்ணியத்தால்
தென்ஏறு கச்சி வருபோத் தயன்தந்த செல்வன்எனும்
மன்னே றமசெட்டி பூபாலன் துன்மதி வச்சரத்தே
முன்னேறு பூசனை செய்தான் அறுபத்து மூவரையே. (109)

பாடற்பொருள்:

வீரப்பநாயக்கர் ஆட்சிக் காலத்தில் கச்சிப் போத்தயன் மகன் சின்ன எறமசெட்டி நாயக்கர் நூறு பொன் கொடுத்து துன்மதி வருடம் (1621) அறுத்து மூன்று நாயன்மார்களைப் பூசை செய்து வழிபட்டார்.

★

திருவேங்கடய்யன் தம்பி வில்லவராயன்

கங்கை சூடும் கயிலாய நாதனார்
கதித்த நிர்த்த மகாமண்ட பத்திலே
செங்கல் லாலே தளவிசை யோடுடன்
சிதம்ப ரேசர் சபையதும் கண்டனன்
துங்க மாம்அறு பத்தாம் படியின்மேல்
சுவர்ள முப்பிப் படிகட்டு வித்தனன்
சங்கம் மேவு தமிழ்க்கோதை தன்னிலே
தம்பி வில்லவ ராயன் தருமமே. (110)

பாடற்பொருள்:

திருவேங்கடய்யன் தம்பி வில்லவராயன் திருச்செங்கோடு கயிலாசநாதர் கோயிலில் நிருத்த மண்டபத்துக்கும், மகா மண்டபத்துக்கும் தளவரிசை அமைத்தார்.சிதம்பரேசுவரருக்குக் கனக சபை அமைத்தார். அறுபதாம் படியில் பக்கச் சுவர் எழுப்பிப் படியும் கட்டுவித்தார்.

★

மாது லாவு திருநாக மாமலை
மங்கை பாகர் இருதோளும் தொங்கலும்
தீதி லாத பெரியஒட்டி யாணமும்
செங்கை மேவு பலாக்காய் வளையலும்
சோதி யாக வருசந்திர சேகரர்
சுந்த ரேசர் அம்பொன் கிரீடமும்
சாதி யான திருவேங்கிட் டண்ணல்தன்
தம்பி வில்லவ ராயன் தருமமே. (111)

பாடற்பொருள்:

அர்த்தநாரீசுவரருக்கு இருதோள் மாலையும், பெரிய ஒட்டியாணமும், கைகட்குப் பலாக்காய் வளையலும், சந்திரசேகரர், சுந்தரேசுவரர்க்குக் கிரீடமும் திருவேங்கடய்யன் தம்பி வில்லவராயன் கொடையாக அளித்தார்.

★

தேமேவு கச்சி வருவிசுவ நாதத் திருமலையன்
தாமேவு மாந்திரு வேங்கிட அண்ணல்கள் தன்னுதென்றே
பூமேவு கோதை உமைபாகர் தாளிணைப் பொன்தகடு
கோமே ஒழுகரை வில்லவ ராயன் கொடுத்தனனே. (112)

பாடற்பொருள்:

திருமலை நாயக்கர் காலத்தில் திருவேங்கட அய்யன் அவர்கள் தர்மமாகத் திருச்செங்கோடு அர்த்தநாரீசுவரர் தாள்களுக்குத் தங்கத் தகடுகள் இரண்டை வில்லவராயன் கொடையாக அளித்தார்.

★

அரவாச லேசர் பெரியொட்டி யாணம் அழுதளிக்கும்
பரிவான கைக்குப் பலாக்காய் வளையலும் பண்ணிவைத்தான்
தருவான ஈகைத் திருவேங் கிடஅண்ணல் தன்மணியம்
மருவாரும் திண்புயன் வில்லவ ராய மகீபதியே. (113)

பாடற்பொருள்:

அர்த்தநாரீசுவரருக்கு ஒட்டியாணம், கைகளுக்குப் பலாக்காய் வளையல் ஆகியவற்றைத் திருவேங்கட அய்யன் காலத்தில் மணியமாகப் பணியாற்றிய தம்பி வில்லவராயன் அளித்தார்.

★

திருமலை நாயக்கர் தளவாய் இராமப்பையன்

திரமேவு விசுவநா தத்திரும லேந்திரன்
சித்தமகிழ் ராமப்பயன்
செங்கோட்டு வேலரையும் உமைபாக ரைத்தொழுது
திக்குவிச யம்செய்தனன்

உரமான தென்கடல் திருஅணை அடைத்தனன்
உலகுநாற் பதுலட்சமும்
ஒருகுடைக் கீழாக ஆக்கிணை புரிந்தனன்
உடையவன் மனதுவரவே

துரமான மலையாள மும்கொள்ளை கொண்டனன்
துட்டரைக் கழுவேற்றினன்
சோரரை அடக்கினன் குருவியழ கன்தலை
துணித்தனன் பாண்டியனையும்

பொருமாற விட்டுச்ச டைக்கனை அடக்கினன்
பூசுரர்கள் தேவர்பதியும்
பொலிவுற நடத்தினன் சந்திரசூ ரியர்அளவு
புகழ்நிலை நிறுத்தினானே. (114)

பாடற்பொருள்:

திருமலை நாயக்கரின் (1623-1659) தளபதி இராமப்பய்யன் செங்கோட்டு வேலரையும், அர்த்தநாரீசரையும் வணங்கித் திக்குவிசயம் செய்தார். சேதுபதியை வெல்ல இராமேசுவரத்திற்குப் பாலம் அமைத்தார். எல்லா நாடுகளையும் திருமலை நாயக்கர் ஆட்சியின்கீழ் கொண்டு வந்தார். மலையாளத்தைக் கொள்ளையிட்டார். துஷ்டர்களைக் கழுவேற்றினார். திருடர்களை அடக்கினார். குருவியழகன் தலையைத் துண்டித்தார். பாண்டியரை வென்று சடைக்கனை அடக்கினார். அந்தணர்களையும் கோயில்களையும் சிறப்பாக நடத்தினார். மிகுந்த புகழ் பெற்றார்.

★

இராமப்பய்யன் மருமகன் கொண்டடப்பய்யன்

தென்னுலவு மதுரைவரு திருமலை நரேந்திரன்
செங்கோன்மை ராமப்பயன்
செல்வமரு மகனான கொண்டபூ பதிதாது
சேர்அற்பி சைத்திங்களில்

மன்னவர்கள் எதிர்கொண்டு கப்பங்கள் கட்டவே
வடகொங்கு நாடாளுநாள்
மாதுலவு கோதைஉமை பாகர்தமை வேலரை
வணங்கிஅபி மானித்தனன்

சன்னிதி சிறக்கவே மூவாயி ரம்பொன்னும்
சர்வமா னியம்ஆகவே
தமிழ்மேவு ராக்கன்உரை யால்இவை அளித்தனன்
தன்னுடைய வன்தருமமாய்

முன்னமொரு சிங்கவன் மன்வளவ னொடுபள்ளி
முனைநார ணப்பன்எனவே
முளரிமா லிகைமார்ப கன்கொண்ட பூபதி
முழுப்படி நடத்தினானே. (115)

பாடற்பொருள்:

மதுரை திருமலை நாயக்கர் தளபதி இராமப்பய்யனின் மருமகன் கொண்டப்பய்யன் தாது வருடம் (1636) ஐப்பசி மாதம் வடகொங்குப் பாளையக்காரர்களைக் கப்பம் கட்டவைத்து அதிகாரம் செலுத்தும் போது திருச்செங்கோட்டு வேலவரையும், அர்த்தநாரீசுவரரையும் பக்தியுடன் வணங்கினார். இவ்விரண்டு சந்நதிகளும் சிறப்படைய ராக்கன் என்பார் வேண்டுபோள்படி மூவாயிரம் பொன் கொடையாக அளித்தார். முன்பு பெருங்கொடை அளித்த சிங்கவன்மன், சோழன், பள்ளியப்பன், நாரணப்பன் போல இவரும் கொடை அளித்தார்.

★

செம்மைபெறு கலியுக சகாத்தம்ஆ யிரமிசை
சிறக்கும்ஐஞ் ஞூற்றைம்பதில்
சேராற தானஈ சுரவருட மாசியில்
செங்கோட்டு வேலருடனே

அம்மையுமை பாகரும் மகிழ்ந்திட இரண்டுதேர்
அழகாக வேதந்தனன்
ஆனசப் பிரமஞ்ச மூன்றுபே ரிகையொன்று
அலங்கார மஞ்சமானை

கொம்மைமுலை நவபாத் திரங்களோர் ஏழிளங்
கோவிலிட பக்கூபமும்
கோபுரந் தனில்வரிசை பதினொன்று பரிமளக்
கோதைசிக ரமும்மஞ்சனம்

எம்மையுடை யோன்திரு மலேந்திரனு தென்னவே
இனியரா மப்பன்மருகன்
இயல்பான கொண்டபூ பதியதிக தருமங்கள்
இப்படி நடத்தினானே. (116)

பாடற்பொருள்:

திருமலை நாயக்கர் காலத்தில் அவருடைய தர்மமாக இராமப்பய்யனின் மருமகன் கொண்டப்பய்யன் ஈசுவர வருடம் மாசி மாதம்(1637)செங்கோட்டுவேலரும், அர்த்தநாரீசுவரரும் மகிழ இரண்டு தேர்கள் செய்தளித்தார். சப்பிரமஞ்சம் மூன்று, பேரிகை ஒன்று, நவபாத்திரங்கள் ஏழு, இளங்கோயில், ரிஷபக்கிணறு, பதினொரு கோபுர வரிசை, கோபுரம், மஞ்சனம் இவைகளைக் கொடையாக அளித்தார்.

★

கொங்கில்அர வாசலம் மகிழ்ந்தஉமை பாகரும்
கோதைவே லரும்மகிழவே
குலவுபய மார்க்க மும்துத்தி நத்தமும்
கூனவே லன்பள்ளியும்
பொங்குபுகழ் சிறுமுளசை பால்மடையும் மேல்கரைப்
பூந்துறைசை நாட்டுவரியும்
புகலும்அணை நன்செயும் போதரவு பண்ணினன்
பூசகரை ரட்சித்தனன்

அங்கவர் களுக்கர்ச்ச னாவிருத்தி யும்உதவி
அத்தலத் துறைவேதியர்க்கு

ஆகமாம் பூண்டி அகரம்செய் தளித்தனன்
அனேகதரு மம்செய்தனன்

திங்கள்முக விசுவநா தத்திரும லேந்திரன்
சித்தமகிழ் ராமப்பயன்
செல்வமரு மகன்ஆன கொண்டபூ பதிசரிதை
செப்பஅரி தானதிறமே. (117)

பாடற்பொருள்:

திருச்செங்கோட்டு அர்த்தநாரீசுரரும், வேலவரும் மகிழ வணிகர்கள் வரியும், துத்திநத்தம், கூனவேலன்பள்ளி, சிறுமுளசை, பால்மடை, மேல்கரைப் பூந்துறைநாட்டு வரி, அணை நன்செய் இவைகளைக் கொடையாக அளித்தார். பூசை செய்யும் சிவாச்சாரியர் களைப் பாதுகாத்தார். அர்ச்சனாவிருத்தி நிலம் அளித்தார். மாம்பூண்டியில் அக்கிரகாரம் உண்டாக்கிப் பலரைக் குடியேற்றினார். இவ்வாறு அனேக தர்மங்களைக் கொண்டபப்பய்யன் செய்தார்.

★

வேதம்மலி கோதைவடி வேலர்உமை பாகர்தெரு
வீதிவரு வெள்ளிவிடையும்
வெள்ளிமயில் பொற்சிவிகை மகரத்துவ சம்கவரி
மேவுபீ லிக்கவிகையும்

மாதுலவு சிகைதாடு பீதாம்ப ரக்கபாய்
வடிவான துகிலாடையும்
வரிசைபெறு தினசலவை ஆலவட் டங்கள்பல
வகைமாலை உருமால்களும்

கீதமிகு மேளவகை நாடக விதங்களும்
கேளிக்கை வைபோகமும்
கேள்விபெறு தம்பட்டம் மூவிரு தடாரியும்
கிரணவெண் கலதீபமும்

சோதிபெறு வாணவகை தேரலங் காரமும்
சுருதியோ சையுமிதுவெலாம்
துங்கனுயர் கொண்டபூ பதிதனது மன்னவன்
சொற்படி நடத்தினானே. (118)

பாடற்பொருள்:

இராமப்பய்யன் மருமகன் கொண்டப்பய்யன் திருச்செங் கோட்டு வேலவரும், அர்த்தநாரீசுவரரும் திருவீதி உலா வர வெள்ளி ரிஷப வாகனம், வெள்ளிமயில் வாகனம், பொற்பல்லக்கு, மகரக்கொடி, கவரி, மயில்குடை, சிகைதாடு என்னும் தலையணி, பொன்னால் செய்யப்பட்ட அங்கி, அழகான துகிலாடை, குடைகள், தினச்சலவை, நாடகங்கள், கேளிக்கை வைபோகம், தம்பட்டம், ஆறு தடாரி, வெண்கலத் தீபம், வாண வேடிக்கை வகை, தேரலங்காரம், வேதம் வாசித்தல் போன்றவற்றிற்குப் பல்வேறு கொடைகளை அளித்தார்.

★

தண்டமிழ் பெறும்கோதை உமைபாக ருக்கினிய
சம்பாவின் அழுதுபடியும்
தான்ஏழு கறியமுது பயறுபடி ஒன்றுநற்
சந்தனம் பலம்ஒன்றரை

மண்டலம் மதிக்கவே காவேரி மஞ்சனம்
மங்கிணிக் குடம்நாலுதான்
வரஎருது ரண்டுஅதற்கு ஆளும்ஒவ் வொன்றாக
வகைமாலை உருமால்களும்

புண்டரிக மலராதி ஆனபூம் பந்தலும்
புளகிலா மிச்சைவேரின்
பொற்கவரி விசிறியொடு காளாஞ்சி வெள்ளிமடல்
புனையாடி யோடிதுவெலாம்

கொண்டமகி பாலகன் தனதுபய மாகக்
கொடுத்தனன் தினமானமும்
கொற்றவன் திருமலேந் திரனுடைய தருமமும்
குறைவற நடத்தினானே. (119)

பாடற்பொருள்:

திருச்செங்கோட்டு அர்த்தநாரீசுவரருக்குச் சம்பா அரிசியால் அமுதுபடி, ஏழுவகைக் கறி, ஒருபடி பயறு, ஒன்றரைப் பலம் சந்தனம், காவேரித் தீர்த்தம் நான்கு குடம், அதைக் கொண்டு வர இரண்டு எருது, அதற்குரிய இரண்டு ஆள், மாலைகள், உருமால்கள், தாமரை போன்ற மலர்களால் பூப்பந்தல், எலுமிச்சை வேரால் செய்யப்பட்ட பொற்கவரி, விசிறி, காளாஞ்சி, வெள்ளி மடல், அழகிய கண்ணாடி போன்றவை களைக் கொண்டப்பய்யன் கொடையாக அளித்தார்.

★

நாரணப்பன் முன்னாள் நடத்தினமா சித்திருநாள்
சீரணஉத் தாரணமும் செய்தானே - தாரணியில்
கொங்கிருக்கும் கோதைக் குமரருக்கும் அம்பிகையோர்
பங்கருக்கும் கொண்டமகீ பன். (120)

பாடற்பொருள்:

நாரணப்பன் முன்பு தொடங்கி நடத்தின மாசித் திருவிழா இடையிலே நின்றுவிட்டது. மீண்டும் கொண்டப்பய்யன் அதை நடத்தினார். இவ்விழா வேலவருக்கும் அர்த்தநாரீசுவரருக்கும் நடந்த விழாவாகும்.

★

முன்னுள கிருட்ண ராயன் முறைதிரி யம்ப கேசன்
பின்னொரு பாக னாரை வேலரை யுடுப மேற்றி
மன்னிய திருநாள் செய்த வாறுகா ளத்தி செய்தான்
அன்னவை செய்தான் கொண்ட பூபதி கோதை யார்க்கே.(121)

பாடற்பொருள்:

முன்பு கிருஷ்ணராயன், திரியம்பகதேவன் ஆகியோர் அர்த்த நாரீசுவரரையும், வேலவரையும் தெப்பத்தில் ஏற்றித் தெப்போற்சவம் நடத்தினர். அவர்கள் செய்தவாறு காளத்தியப்ப முதலியாரும் செய்தார். அந்தத் தெப்ப உற்சவத்தைக் கொண்டப்பய்யனும் நடத்தினார்.

★

தாதுவற் சரம்முன் இன்பம் தரும்பிர மாதி அந்தம்
மாதுரை திரும லேசன் மந்திரி ராமப் பையன்
வேதியன் மருகன் கொண்ட வேந்தனே கொங்கு நாடு
நீதியே புரந்தான் கோதை நிமலனை வணக்கம் செய்தான்.
(122)

பாடற்பொருள்:

திருமலை நாயக்கர் தளபதி இராமப்பய்யன் மருமகன் கொண்டப்பய்யன் தாது வருடம் முதல் பிரமாதி வருடம் வரை (1636-1639) கொங்கு நாட்டில் அதிகாரம் செய்தார். அப்போது திருச்செங் கோட்டுக் கோயில்களில் முறைப்படி வழிபட்டு வணங்கினார்.

★

குருவப்பையன்

வெற்றிசேர் குருவப் பையன் விக்கிரம விசுவி ரண்டும்
நற்றவத் திரும லேசன் நல்கவே கொங்கு நாடு
பெற்றினி துடனே ஆண்டான் பேசரும் புகழ்சேர் கோதை
உற்றனன் பூசை செய்தான் உடையவன் தருமம் என்றே. (123)

பாடற்பொருள்:

திருமலைநாயக்கர் ஆட்சிக் காலத்தில் குருவப்பையன் என்பவர் விக்கிரம, விசு (1640-1641) ஆகிய ஆண்டுகளில் கொங்கு நாட்டில் அதிகாரம் செய்தார். அப்போது திருச்செங்கோட்டுக் கோயில்களில் ஏற்ற வகையில் அரசர் தர்மமாகப் பூசைகள் நடத்தினார்.

★

மாதுலவுந் தென்அனுப்பு மண்டபமும் வாசிகையும்
கோதையில்ஈ சர்க்குக் கொடுத்தானே - வேதியர்கோன்
எங்கள்குரு வப்பன் இயல்புடையோன் இத்தருமம்
தங்களுடை யோனுதென்றே தான். (124)

பாடற்பொருள்:

அனுப்பு மண்டபம், திருவாசி இவைகளைத் திருச்செங்கோட்டு ஈசருக்குக் குருவப்பன் கொடுத்தார். இக்கொடைகள் அரசனுக்காக அளிக்கப்பட்டன.

★

குருவன் சிதம்பரய்யன்

ஏலமுறும் கந்தம் இனியதுகில் ஆடைபல
சீலமுட னேகொடுத்தல் செய்தானே - ஞானமகிழ்
கோதையில்ஈ சர்க்குக் குருவன் சிதம்பரயன்
நீதியுள்ள மாமறையோ னே. (125)

பாடற்பொருள்:

ஏலம் முதலிய வாசனைப் பொருள்கள், துகில் ஆடைகள் இவைகளைக் குருவன் சிதம்பரய்யன் திருச்செங்கோட்டு ஈசருக்குக் கொடுத்தார் (இவன் குருவப்பய்யன் மகனாக இருக்கலாம்).

★

தம்பா முதலியார்

சகமேவு விசுவநாதத் திரும லேந்திரன்
தனதுமந் திரிகுருவயன்
தானருள் மாகாண வெங்கடாத்திரி வந்து
தாரணி புரக்குநாளில்

அகமேவு பொன்னம்பல அய்யன்எழு தினபடியின்
ஆனதம் பாமுதலியார்
அர்த்தநா ரீசுரர் படித்தர முயற்சியாய்
அங்கரங் கம்செய்தனன்

மிகமேவு வர்க்கவகை பணியார வகைகள்பல
வெஞ்சனம் அனேகங்களும்
வியனான அபிடேக நைவேத்தி யங்கள்கன
விமரிசுட னேசெய்தனன்

மகமேவு திருவிழா வைகாசி உற்சவமும்
மகிமையுட னேநடத்தி
மன்னுதா னம்பரி சனங்கள்அனை வோரையும்
மகிழ்வுற நடத்தினானே. (126)

பாடற்பொருள்:

திருமலை நாயக்கரின் அமைச்சர் குருவப்பய்யனின் மகன் மாகாணம் வெங்கடாத்திரி நிர்வாகம் செய்யும்போது பொன்னம்பலய்யன் எழுதிய குறிப்பின்படி தம்பா முதலியார் படித்தரம் நடத்தியதுடன் சகல வைபவங்களையும் நடத்தினார். பணியாரம் முதலிய பலவகை வெஞ்சனங்களையும் படைக்கச் செய்தார். விரிவாக அபிஷேகம் நைவேத்தியம் இவைகளைச் சிறப்பாகச் செய்தார். வைகாசி விசாகத் திருவிழாவை மிகச் சிறப்பாக நடத்தினார். தானத்தார், பரிசனங்கள் ஆகியவர்கள் மகிழும்வண்ணம் பல உதவிகளைச் செய்தார்.

★

வெங்கடராயன்

மாசித் திருநாளின் வைபோக முன்னோர்இத்
தேசத்தில் இல்லையென்று செப்பவே - பூசித்தல்
செந்திருவாழ் கோதையிலே செய்தான் செழுமறைதேர்
ஐந்தருவான் வெங்கடரா யன். (127)

பாடற்பொருள்:

திருச்செங்கோட்டுத் தலத்தில் மாசித் திருவிழா இல்லை என்று கூறினார்கள். வெங்கடராயன் என்பவர் அதைக் கேட்டு மாசித் திருவிழாவுக்கு ஏற்பாடு செய்தார்.

★

இராமப்பய்யன் மைத்துணர் வெங்கடாத்திரி

திறமிகு விசுவ நாதத் திருமலை ராயன் மேவு
மறையவன் ராமப் பையன் மைத்துணன் வெங்க டாத்திரி
முறைமிகு கொங்கு நாடு முழுதுமே சித்ர பானு
இறையென வாழும் நாளில் ஏரகம் சிறப்பித் தானே. (128)

பாடற்பொருள்:

திருமலை நாயக்கர் ஆட்சிக் காலத்தில் தளபதி இராமப் பையனின் மைத்துணர் வெங்கடாத்திரி கொங்கு நாடு முழுவதையும் நிர்வாகம் செய்யும்போது சித்திரபானு வருடம் (1642) ஏரகம் எனப்படும் திருச்செங்கோட்டிற்குப் பல சிறப்புக்கள் செய்தார்.

★

வெங்கடகிருஷ்ணய்யன்

பத்திசேர் வெங்க டாத்திரி பரிந்தவெங் கடகிருஷ் ணய்யன்
முத்தமிழ்க் கோதை யார்க்கு முழுப்படித் தரம்ந டத்தி
சித்திரம் எழுதி வைத்துச் சிறப்புடன் திருநாள் தன்னை
மெத்தவை போகம் செய்து வேண்டிய பலன்பெற் றானே. (129)

பாடற்பொருள்:

வெங்கடாத்திரி என்பவர் கொங்கு நாட்டு நிர்வாகம் செய்யும் போது வெங்கடகிருஷ்ணய்யன் என்பவர் திருச்செங்கோட்டுக் கோயில் களில் முழுப்படித்தரம் நடத்தினார். ஓவியம் எழுதி வைத்துச் சிறப்புடன் திருநாள்களை நடத்தினார். அதனால் வேண்டிய பலன்கள் பெற்றார்.

★

புலியூர் இராக்கியப்ப முதலியார்

நயவொடு இராக்க பூபன் தன்னிட அரசர்க்கு ஓதி
இயல்புடன் அர்த்த நாரி ஈசுரர்க்கு அதிக பூசை
பயனுற நடத்தி மேன்மேல் பாக்கியம் பெற்று வாழ்ந்தான்
மயல்புனை இரதி காந்தன் வடிவுள மன்னன் தானே. (130)

பாடற்பொருள்:

இராக்கியப்ப முதலியார் தன் அரசர் திருமலை நாயக்கரிடம் கூறி அவர் ஆதரவுடனே அர்த்தநாரீசுவரர் கோயிலில் பூசைகள் நடத்திடச் சிறந்த பல ஏற்பாடுகளைச் செய்தார்.

★

சீராரும் கோதை உமைபாகர் பூசைத் திருப்பணியும்
ஊரான தும்தலம் உண்டான தும்முற வோர்மடமும்
பேரார் பரமன் திருநாளும் மேலும் பெருமைகளும்
காராளன் தென்புலி யூர்ராக்க பூபதி காலத்திலே. (131)

பாடற்பொருள்:

புலியூர் இராக்கியப்ப முதலியார் அர்த்தநாரீசர் பூசை செய்து ஊரில் புண்ணியத் தலங்களில் மடம் ஆகியவைகளை ஏற்படுத்தினார். இறைவன் திருநாள் நடத்தினார்.

★

இராமப்பய்யன் மைத்துணர் கிருஷ்ணய்யன்

பன்னுதமி ழோர்புகழ் சுபானுவற் சரமாதி
பரவுவிய வருடம்வரையும்
படியாள வருதிரும லேந்திரன் அளிக்கவே
பங்கயத் தொடைமார்பகன்

மன்னவர் மதிக்கவரு கொப்பூரி ராமய்யன்
மைத்துணன் கிருஷ்ணபூபன்
வலியரா தாபுர முடன்கொங்கு துருகமும்
மனுநீதி முறைபுரியுநாள்

கன்னடிய நஞ்சயன் செங்கோடு தனில்வந்து
கனகநவ மணிகலசமும்
கனதாருணத் தற்பிசைத் திங்களில் கொள்ளை
கட்டியே கொண்டேகினன்

இன்னகுறை தீரவே பொன்னூறு நெல்சலகை
இருநூறு மேதந்தனன்
இன்பமொடு சம்புரோட் சணைநடப் பித்தனன்
எங்கள்கிருஷ் ணயமகிபனே. (132)

பாடற்பொருள்:

சுபானு வருடம் முதல் விய வருடம் வரை (1643-1646) கொப்பூரி ராமய்யன் மைத்துணர் கிருஷ்ணய்யன் திருமலை நாயக்கர் காலத்தில் தாராபுரத்திலும், சங்ககிரியிலுமிருந்து கொங்கு நாட்டை நிர்வாகம் செய்தார். அவர் நிர்வாக காலத்தில் கன்னடிய நஞ்சய்யன் என்பவன் தாருண வருடம் ஐப்பசி மாதம் (1644) பொன், நவமணி, கலசம் இவைகளைக் கொள்ளையடித்துக் கொண்டு போனான். இதனால் ஏற்பட்ட குறை தீர நூறு பொன்னும், இருநூறு சலகை நெல்லும் கொடுத்ததுடன் குடமுழுக்கு விழாவையும் சிறப்பாகச் செய்தார்.

★

கெம்பராக்கன்

நாகமா மலைக்கே வந்து நஞ்சயன் பரித்த போது
வாகிலி கெம்ப ராக்கன் மாதலம் என்று சொல்லி
ஈகென அமர்ம கேச இலிங்கமும் பரியம் தந்து
வேகமாய்க் கலசம் ஆட வேண்டிய பொருளும் தந்தான். (133)

பாடற்பொருள்:

கன்னடிய நஞ்சய்யன் திருச்செங்கோட்டிற்கு வந்து கொள்ளை யடித்த போது (1644) இத்தலத்திற்கு மகேசலிங்கம் தந்து விரைவில் குடமுழுக்கு விழா நடத்தத் தேவையான பொருள்களையும் கெம்பராக்கன் என்பவர் தந்தார்.

★

மணியம் கிருஷ்ணபூபன்

மன்னுபுகழ்க் கோதை வயிரவன்தீர்த் தத்தருகே
மின்னுமதி பூங்கதவம் மேவினான் - தென்னுலவு
வெங்களிற்றோன் ராமயன்பால் மெத்தமணி யம்புரக்கும்
பங்கயத்தோன் கிருஷ்ணபூ பன். (134)

பாடற்பொருள்:

திருமலை நாயக்கரின் தளபதி ராமப்பய்யனிடம் மணியம் வேலை பார்க்கும் கிருஷ்ணபூபன் என்பவர் திருச்செங்கோடு பைரவர் தீர்த்தத்தருகே கதவு ஒன்றை அமைத்தார்.

★

அழகாத்திரி நாயக்கன்

வெற்றிபுணை வியவருடம் ஆனிமா சம்தனில்
வீறார் துலுக்கர்படையால்
மேல்கரையில் ஏகும்உமை பாகரை வணங்கியே
மேவிஅர்ச் சனைசெய்தனன்

கொற்றமிகு திருமலேந் திரன்உபய மாகவே
கோபால கிருஷ்ணப்பனும்
கொப்பூரி ராமயன் மணியம்கிருஷ்ண பூபனும்
கூறஅழ காத்ரிதயவாய்

நித்தம்இரு நூறுபடி அரிசிகட் டளையிட்டு
நிறைபூசை யதுசெய்தனன்
நீங்காம லிருபத்து நாலுபடி தானிகர்
நிர்வாக அமுதீந்தனன்

உற்றவை கொடுத்தனன் பணிமலையில் அனைவர்க்கும்
உயர்தாரை யதுவார்த்தனன்
உயர்பஞ்ச காலையில் இரட்சித்த னன்புகழை
ஓங்குற நடத்தினானே. (135)

பாடற்பொருள்:

வியவருடம் ஆனி மாதம் (1646) துலுக்கர் படையெடுப்பின் போது பாதுகாப்பிற்காக அர்த்தநாரீசுவரரைக் காவிரிக்கு மேற்கே மேல்கரைப் பூந்துறை நாட்டில் எழுந்தருளச் செய்தனர். கோபால கிருஷ்ணப்பன், கொப்பூரி ராமய்யன் மணியம் கிருஷ்ணபூபன் ஆகியோர் சொல்ல அர்த்தநாரீசுவரரை வணங்கிய அழகாத்திரி நாயக்கர் நாள்தோறும் இருநூறு படி அரிசி தந்து பூசை செய்தார். தானிகர்கட்கு இருபத்து நான்கு படி அமுது செய்ய அளித்தார். எல்லோர்க்கும் தாரை வார்த்துக் கொடை கொடுத்தார். பஞ்ச காலத்தில் எல்லோரையும் ஆதரித்தார்.

★

கோபாலகிருஷ்ணன்

திரந்தரு சர்வ சித்து சேரவே சர்வ தாரி
உரம்தரு திரும லேந்திரன் உதவவே கொங்கு நாடு
புரந்தகோ பால கிருஷ்ண பூபதி கோதை யார்க்கு
தரம்தர மாகப் பூசை தன்னையே நடத்தி னானே. (136)

பாடற்பொருள்:

திருமலை நாயக்கர் ஆட்சிக் காலத்தில் சர்வசித்து, சர்வதாரி வருடங்களில் (1647-1648) கொங்கு நாட்டில் கோபால கிருஷ்ண பூபதி நிர்வாகம் செய்யும்போது திருச்செங்கோட்டுக் கோயில்கட்குச் சிறந்த பூசைகளைச் செய்தார்.

★

ஆரணி தெய்வராயன் மகன் சேஷாத்திரி பிள்ளை

கனமுறு விரோதி ஆதி காரவரு டத்து மட்டும்
மனமுறு திரும லேந்திரன் மகிழ்ந்தளித் திடவே செங்கோல்
இனந்தரு குன்றத் தூரோடு இருபத்து நான்கு நாடும்
தினமுறும் அதிபன் சேஷாத் திரிமகி பதியே ஆண்டான். (137)

பாடற்பொருள்:

திருமலை நாயக்கர் ஆட்சிக் காலத்தில் விரோதி வருடம் முதல் கர வருடம் வரை (1649-1651) சேஷாத்திரி மகிபதி சங்ககிரியிலிருந்து கொங்கு 24 நாடுகள் முழுவதையும் நிர்வாகம் செய்தார்.

★

தென்னுயர் அனங்கன் சேஷாத் திரியெனும் தரும ராயன்
தன்னுயர் கருத்தன் ஆனோன் தனதுபுண் ணியம தாக
மன்னிய கோதை யாரை வணங்கியே மகவும் பெற்றான்
பன்னியே மிகவும் பூசை படித்தரம் நடத்தி னானே. (138)

பாடற்பொருள்:

சேஷாத்திரி, திருமலைநாயக்கரின் புண்ணியமாக திருச்செங் கோட்டு இறைவரை வணங்கிப் பூசை செய்து படித்தரம் மிகுதியாக அளித்தார். இறைவனை வணங்கி மகப்பேறு பெற்றார்.

★

அம்புவி புரந்தகோ பாலகிருஷ் ணன்மணியம்
ஆண்டியப் பன்கலகமும்
அடலுறு துலுக்கர்படை யும்கண்டு செங்கோடை
அர்த்தநா ரீசர்தம்மையே

இன்பமொடு குன்றையில் அர்ச்சித்து மீளவும்
எழுந்தருள வேசெய்தனன்
எழிலான கைலாய நாதர்ஆ தாரசிலை
இளையநயி னார்தளவிசை

உம்பர்தொழ வருகோ புரத்துவரி ந்நான்குதுகில்
ஓங்குமேல் கட்டிதிருநாள்
உற்றநவ கலசங்கள் கொப்பரை கிடாரங்கள்
உருளைசரு வம்தபிலையும்

செம்புமய மானதிரு மஞ்சனக் குடங்களும்
தீபசர மாலிகைகளும்
தீபதண் டங்களும் புதுமைசெய் தனன்எங்கள்
சேஷாத்திரி மகிபாலனே. (139)

பாடற்பொருள்:

கோபாலகிருஷ்ணன் மணியம் ஆண்டியப்பன் கலகத்தாலும், துலுக்கர் படையாலும் அர்த்தநாரீசுவரரை குன்றத்தூர் ஆகிய சங்ககிரியில் எழுந்தருளச் செய்திருந்ததை அங்குச் சென்று அர்ச்சனை செய்து மீண்டும் திருச்செங்கோட்டில் எழுந்தருளச் செய்தார். கைலாசநாதர் கோயிலில் இலிங்கத்தைப் பிரதிட்டை செய்தார். முருகன் கோயிலில் தளவரிசை அமைத்தார். கோபுரத்தில் நான்கு வரிகள் திருப்பணி செய்தார். துகில் மேற்கட்டிகள் கட்டினார். நவகலசம், கொப்பரை, கடாரம், உருளை, சருவம், தபிலை, செம்பால் ஆன திருமஞ்சனக் குடங்கள், தீபசர மாலை, தீபத் தண்டு இவைகளைப் புதியதாகச் செய்தளித்தார்.

★

நரசய்யன் கோனப்பையன்

செந்தமிழ் மாலை மார்பன் திருமலை ராயன் மேவ
நந்தன விசய மட்டும் நரசயன் கோன பூபன்
வந்தனைக்கு இனியான் கொங்கு மநுமுறை செய்யும் நாளில்
பந்தணி விரலாள் பாகன் படித்தரம் நடத்தி னானே. (140)

பாடற்பொருள்:

திருமலை நாயக்கர் ஆட்சிக் காலத்தில் நந்தன வருடம் முதல் விசய வருடம் வரை (1652-1653) நரசய்யன் கோனப்பய்யன் கொங்கு நாட்டில் அதிகாரம் செய்யும்போது அர்த்தநாரீசுவரருக்குப் படித்தரம் சிறப்பாக நடத்தினார்.

★

கஸ்தூரி அய்யன்

விருப்புடன் கோதை யார்க்கு வெள்ளியில் புழுகுக் காப்பும்
பருப்புடன் கறிநெய் அப்பம் பாலமுது அடிசில் ஆக்கி
திருப்படி கமல மார்பன் சிறந்தகஸ் தூரி ராசன்
கருப்படி மதவேள் உச்சிக் கட்டளை நடத்தி னானே. (141)

பாடற்பொருள்:

திருச்செங்கோட்டு இறைவர்க்கு வெள்ளிக்கிழமை புழுகுக் காப்பு, பருப்புடன் கறி, நெய், அப்பம், பாலமுது அடிசில் இவைகளுடன் உச்சிக் காலக் கட்டளையைக் கஸ்தூரி அய்யன் சிறப்பாக நடத்தினார்.

★

ஆரணி தெய்வராயன் மகன் சேஷாத்திரி பிள்ளை

வாசமாம் செயமுன் னாக மன்மத வருடம் மட்டும்
தேசமெண் புகழ்சேர் சேஷாத் திரிமகி பதிஅன்பாக
நேசமாம் கொங்கு நீதி நிகழ்த்திடு போது கோதை
ஈசரைப் பணிந்து பூசை இயல்பொடு நடத்தி னானே. (142)

பாடற்பொருள்:

செய வருடம் முதல் மன்மத வருடம் வரை (1654-1655) கொங்கு நாட்டில் சேஷாத்திரி அதிகாரம் செய்யும்போது திருச்செங் கோட்டு இறைவரைப் பணிந்து பூசைகள் சிறப்புடன் செய்தார்.

★

நாரணய்யன்

திருந்தியதுன் முகிமுதலா ஏவிளம்பி வருடமட்டும்
திரும லேந்திரன்
பரிந்தருள நாரணய்யன் இருகரையும் அதிகாரம்
பண்ணும் போது

சுரந்தருளும் கருணைஅர்த்த நாரீசர் பணிமலையைத்
துதித்துப் போற்றித்
தரந்தரமாய் அங்கரங்க லைபோகம் எனப்பூசை
தனைச்செய் வித்தான். (143)

பாடற்பொருள்:

திருமலை நாயக்கர் காலத்தில் துன்மதி வருடம் முதல் ஏவிளம்பி வருடம் வரை (1656-1657) நாரணய்யன் கொங்கு இரு கரையும் நிர்வாகம் செய்யும்போது அர்த்தநாரீசரைத் துதித்துப் போற்றி எல்லா வைபவங்களையும் சிறப்பாகச் செய்தார்.

★

திம்மரசய்யன்

பார்புனை முத்து வீரன் பரிந்திட விளம்பி ஆண்டில்
ஏர்புனை மணியம் மேவும் இனியதிம் மரச பூபன்
தார்புனை கோதை வாழும் சங்கரி பாக னார்க்கு
சீர்புனை அதிக பூசை சிறப்புடன் நடத்தி னானே. (144)

பாடற்பொருள்:

முத்துவீரப்ப நாயக்கர் ஆட்சியில் விளம்பி வருடம் (1659) திம்மரசய்யன் மணியம் செய்யும்போது அர்த்தநாரீசுவரரை வணங்கி அதிகச் சிறப்புடன் பூசை செய்தார்.

இவர் இரண்டாம் முத்துவீரப்ப நாயக்கர் 1659 ஒரு வருடம் மட்டும் ஆட்சி செய்தார்.

★

ஆரணி தெய்வராயன் மகன் சேஷாத்திரி பிள்ளை

மண்டலம் மகிழ்வி காரி வற்சரம் தனிலே வந்து
திண்டிற லான சேஷாத் திரிஅரசு ஆளும் நாளில்
அண்டர்கள் பரவும் கோதை அர்த்தநா ரீச னார்க்குப்
பண்டையில் வளவன் போலப் படித்தரம் நடத்தி னானே.(145)

பாடற்பொருள்:

விகாரி வருடம் (1660) சேஷாத்திரி அதிகாரம் செய்யும்போது முன்னாட் சோழர் போலப் படித்தரம் அளித்துச் சிறப்பாகப் பூசைகள் செய்தார்.

★

நாரணய்யன்

வரமருவு சாறுவரி முதலாக வேபிலப
மட்டதாக
உரமருவு நாரணய்யன் மநுமுறைமை இனியசெங்கோல்
ஓச்சும்நாளில்
அரமருவு வடிவேலர் உமைபாகர் படித்தரங்கள்
அதிகமாக்கித்
திரமருவும் அரவகிரி தனில்எவர்க்கும் உபகாரம்
செய்வித்தானே. (146)

பாடற்பொருள்:

சார்வரி வருடம் முதல் பிலவ வருடம் வரை (1661-1662) நாரணய்யன் கொங்கில் நிர்வாகம் செய்யும்போது வடிவேலர் அர்த்த நாரீசர் படித்தரங்களை அதிகமாக்கி எல்லோருக்கும் பல உதவிகள் செய்தார்.

★

அப்பாக்குட்டி மகன் நல்ல பாட்டய்யன்

சீர்மேவு பிலவவருடம் மாசி மாதம்
தேதியைந்தி னில்மகத்தின் திருவி ழாவின்
பார்மேவு சொக்கலிங்க ராயன் மேவப்
பன்மறையோன் நாரணய்யன் ஆளும் நாளில்
ஏர்மேவு கோதைவடி வேலர் மேனிக்கு
ஏற்றதிரு மார்பின்அங்கி தங்கத் தாலே

தார்மேவு மார்பன்அப்பாக் குட்டி என்போன்
தந்தநல்ல பாட்டய்யன் சாத்தி னானே. (147)

பாடற்பொருள்:

பிலவ வருடம் (1662) மாசி மாதம் ஐந்தாம் தேதி மாசி மகம் விழாவின்போது சொக்கலிங்க நாயக்கர் ஆட்சிக் காலத்தில் நாரணய்யன் கொங்கு நாட்டு நிருவாகம் செய்யும் நாளில் வடிவேலர் திருமேனிக்கு மார்பு அணியில் அங்கியைத் தங்கத்தால் அப்பாக்குட்டி என்பவர் மகன் நல்ல பாட்டய்யன் என்பவர் செய்து சாத்தினார்.

★

நலமருவு கலியுக சகாப்தம்ஆ யிரமிசை
நடக்குமைஞ் ஞூற்றெண்பதின்
நாலான பிலவவருடம் மாசிஇரு பத்தைந்து
நாள்சுக்கிர வாரமகமும்
பலமருவும் இடபலக் கினம்சுகருமம் அங்கரசை
பௌர்ணமை யும்பெற்றநாள்
பன்னுதமிழ் விசுவநா தச்சொக்க லிங்கபூ
பதிமந்திரி வேதமறையோர்
குலமருவு நாரண மகீபதி சகோதரக்
கொற்றராக வன்மணியமென்
கோனாதி மூர்த்திஅதி காரம்அப் பாக்குட்டி
குணநல்ல பாட்டமகிபன்
தலமருவும் அரவகிரி வேலவர்க்கு எழிலான
தங்கத்தில் அங்கிதனையே
தனதுமன் னவனுடைய தருமம்என ரதமீது
சாத்தினன் கீர்த்திபெறவே. (148)

பாடற்பொருள்:

சாலிவாகன சகம் 1584 பிலவ வருடம் (22-02-1662) 25ஆம் தேதி வெள்ளிக்கிழமை பௌர்ணமி நாள் சொக்கலிங்க நாயக்கரின்

மந்திரி நாரணய்யன் சகோதரர் கொற்றராகவன் மணியம் செய்யும் போது அப்பாக்குட்டி மகன் நல்ல பாட்டய்யன் வடிவேலர்க்குத் தங்க அங்கி செய்து சாத்தினார்.

★

ஆரணி தெய்வராயன் மகன் சேஷாத்திரி பிள்ளை

திரமருவு கலியுக சகாத்தம்ஆ யிரமீது
சேரும்ஐஞ் ஞூற்றெண்பதில்
செல்லுநா லானபிலவ வருடமது சித்திரைத்
தேதிஇரு பத்தெட்டினில்

குருமருவு சத்தமிப் பூசநட் சத்திரம்
குலவுகௌ லவகரணமும்
கூடின விருத்தியோ கமும்இடப லக்கினம்
கொண்டதொரு மேனாளினில்

மருமருவு தின்புயன் ஆரணி படைத்தமால்
மன்னர்பணி தெய்வராயன்
மைந்தன்அரு ணாத்திரி சகோதரன் மநுநீதி
வாய்த்தசே ஷாத்திரிமகிபன்

தருமருவும் அரவகிரி மீதுவட பாரிசத்
தண்பிரம தீர்த்தம்அருகே
தவவிசுவ நாதப்பிர திட்டைசெய் தனன்அதிக
சந்ததி தழைத்தேறவே. (149)

பாடற்பொருள்:

சாலிவாகன சகம் 1584 பிலவ வருடம் சித்திரை மாதம் 28ஆம் நாள் (25-04-1661) வியாழக்கிழமை சப்தமி திதி பூச நட்சத்திரம் கௌலவ கரணம் விருத்தியோகம் இடப லக்கினம் கொண்ட நல்ல நாளில் ஆரணி தெய்வராயன் மகன் அருணாத்திரி சகோதரன் சேஷாத்திரி திருச்செங்கோட்டு மலை மீது வடபுறம் பிரமதீர்த்தம் அருகே விசுவநாதரைப் பிரதிட்டை செய்தார்.

★

அர்த்தநாரீசுர பண்டிதர் மகன் நல்லய்யன்

கலைமேவு தமிழ்மதுரை விசுவநா தச்சொக்
கலிங்கபூ பதிமகிழவே
காசினி புரக்கவரு சேஷாத்திரி பூபதி
கனத்தபுண் ணியமாகவே
நலமேவு புகழ்அர்த்த நாரீச பண்டிதன்
நல்கவரு கல்விமுகிலாம்
நம்பினவர் தம்பமென அன்புபுரி கும்பமுனி
நல்லய்ய மகீபாலகன்

குலமேவும் அரவகிரி ஆலயம் தன்னில்வட
கோபுரத் தென்மேலையின்
குமாரவிசு வேசுரர் விசாலாட்சி நந்தீசன்
குஞ்சர முகேசர்தமையும்

தலமேவு மண்டப முடித்ததில் இருத்தியே
தாபனம் செய்வித்தனன்
தாரணியின் நீடூழி எசமான னுக்கதிக
தருமம் தழைத்தேறவே. (150)

பாடற்பொருள்:

சொக்கலிங்க நாயக்கர் ஆட்சிக் காலத்தில் சேஷாத்திரியின் புண்ணியமாக அர்த்தநாரீச பண்டிதர் மகன் நல்லய்யன் திருச்செங்கோடு மலைக்கோயில் வடகோபுரத்தின் தென்மேற்குப் பக்கம் குமார விசுவேசுவரர், விசாலாட்சி, நந்தி, விநாயகர் ஆகியோர்களைத் தாபனம் செய்தார்.

★

தெய்வராயன் மகன் சேஷாத்திரி பிள்ளை

மன்னிவரு சுபகிருது முதல தாக
வளர்விசுவா வசுவருடம் வரையும் கூடல்
தென்னுலவு சொக்கலிங்கன் அருளால் சேஷாத்
திரிசுமுகன் கொங்குசெங்கோல் செலுத்து நாளில்
நன்னிலமெண் கோதையுமை பாக னார்க்கு
நல்லதிருப் பணிகள்படித் தரங்கள் ஈந்து
பன்னுமறை ஓதும்அர்த்த நாரி ஈசர்
பண்டிதருக்கு அபிஷேகம் பண்ணி னானே. (151)

பாடற்பொருள்:

சொக்கலிங்க நாயக்கர் ஆட்சிக் காலத்தில் சுபகிருது வருடம் முதல் விசுவாவசு வருடம் வரையில் (1662-1665) சேஷாத்திரி கொங்கு நாட்டில் நிருவாகம் செய்யும்பொழுது அர்த்தநாரீசுவரர் கோயிலில் பல திருப்பணிகள் செய்து படித்தரங்கள் பல ஈகை செய்தார். அர்த்தநாரீசுவர பண்டிதருக்குக் குருஅபிஷேகம் செய்தார்.

★

சீர்மேவு கலியுக சகாத்தமா யிரமீது
சேரும்ஐஞ் ஞூற்றெண்பதில்
செல்லும்ஏ ழாகிய குரோதிவை காசியின்
தேதிஒன் பதின்வெள்ளியில்
பார்மேவு சத்தமித் திருவோண மும்பெற்ற
பரிவுபெறு மேனாளினில்
பன்னுதமிழ் விசுவநா தச்சொக்க லிங்கபூ
பதிமனது வரும்மன்னவன்

தார்மேவு மணிமார்பன் ஆரணி படைத்தவன்
தயவுடைய தெய்வராயன்

தந்தருள வந்தசே ஷாத்திரி நராதிபதி
தனதுபுண் ணியமாகவே

ஆர்மேவு வேணியுமை பாகர்வே லவர்அருளின்
அர்த்தநா ரீசர்எனும்மால்
அர்த்தநா ரீசபண் டிதராய குருராயர்
அபிஷேகம் நிலையானதே. (152)

பாடற்பொருள்:

சாலிவாகன சகம் 1587 குரோதி வருடம் வைகாசி மாதம் 9ஆம் தேதி (06.05.1664) வெள்ளிக்கிழமை சப்தமி திதி திருவோண நட்சத்திரம் கூடிய நன்னாளில் சொக்கலிங்க நாயக்கர் ஆட்சிக் காலத்தில் ஆரணி தெய்வராயன் மகன் சேஷாத்திரி தன் புண்ணியமாக அர்த்தநாரீசுவரர் வேலவர் அருளால் அர்த்தநாரீச பண்டிதர் அவர்கட்கு 'அர்த்தநாரீசுவர பண்டிதராய குருராயர்' எனக் குரு அபிடேகம் செய்வித்தார்.

★

தேபுரத்தண் கமலமலர் வாவி சூழும்
தென்மதுரைச் சொக்கலிங்க ராயன் மேவத்
தாபரித்துப் புவிகாக்கும் தெய்வ ராயன்
தந்தருள்சே ஷாத்திரிமன்னன் தான சோமன்
மாபுரத்தாள் கைலாய நாதர் கோதை
மன்னியதே வாலயத்தின் வாய்தல் மேவு
கோபுரத்து வரியனைத்தும் பாவும் ஏற்றிக்
கொடுங்கையுடன் கபோதமட்டும் கட்டினானே.(153)

பாடற்பொருள்:

சொக்கலிங்க நாயக்கர் ஆட்சிக் காலத்தில் (1659-1682) தெய்வராயன் மகன் சேஷாத்திரி திருச்செங்கோடு கயிலாச நாதர் கோயிலில் முன்வாயில் கோபுரத்தில் வரிகள் அனைத்தையும் திருப்பணி

செய்து பாவு கற்கள் ஏற்றி கொடுங்கை முதல் கபோதம் வரை புதியதாகக் கட்டினார்.

மாபுரத்தாள் - பூரம் நட்சத்திரத்தில் அவதரித்த பார்வதி.

★

நணிய கயிலாச நாதருக்குப் பூசை
அணிகிளரும் கோபுரமுண் டாக்கிப் - பணிமலைமேல்
காசிவிசுவ நாதருக்குக் கற்கோ யிலும்பணித்தான்
தேசருள்நல் சேஷாத் திரி. (154)

கைலாயநாதர் கோவில் கோபுர வாயில் நிலையின்மேல்,

''ஸ்வஸ்திஸ்ரீ சகாப்தம் 1585 இதன்மேல் செல்லாநின்ற
சோபகிருது வருடம் ஆவணி மாதம் ஸ்ரீமது விசுவநாத
சொக்கலிங்க நாயக்கரவர்கள் ராஜ்ஜியபரி
பாலனம் பண்ணுகையில்''

என்றெழுதியபின் இவ்வெண்பா செதுக்கப்பட்டுள்ளது.

பாடற்பொருள்:

சேஷாத்திரி கயிலாயநாதர் கோயிலில் (1663) பூசை செய்து கோபுரமும் உண்டாக்கினார். திருச்செங்கோட்டு மலையில் காசிவிசுவ நாதருக்குக் கல்லால் கோயில் கட்டுவித்தார்.

★

வழியடிமை கொண்டான் மகன் சரவணப்பெருமாள்

அம்புவியெண் சோபகிருது கன்னி மாதம்
ஆரணிசே ஷாத்திரிகொங்கு ஆளும் நாளில்
நம்பர்கயி லாயருடன் கோதை வாழும்
நங்கைபரி மளவல்லி நாச்சி யார்க்குச்
செம்பின்மிசை தங்கமுலாம் மகுடம் காதும்
சீர்பாதம் முலைகழுத்து கரங்கள் நான்கும்
தம்பமெனும் வழியடிமை கொண்டான் அன்பாய்த்
தந்தசர வணப்பெருமாள் சாத்தி னானே. (155)

பாடற்பொருள்:

சோபகிருது வருடம் புரட்டாசி மாதம் (1663) சேஷாத்திரி அதிகாரம் செய்யும்போது சரவணப்பெருமாள் என்பவர் திருச்செங்கோடு கயிலாசநாதர் கோயிலில் பரிமளவல்லி நாச்சியாரின் காது, பாதம், முலை, கழுத்து, கைகள் ஆகியவற்றிற்குத் தங்கமுலாம் பூசிய செப்புத் தகடுகள் அளித்தார். மகுடமும் அவ்வாறே செய்தளித்தார்.

★

தாரணியெண் கோதைஅர்த்த நாரி யீசர்
தமக்கிருபத் தைந்தாண்டு தவிர்ந்து போன
ஏரணிசித் திரைவசந்தத் திருவி ழாவை
இயல்சோப கிருதுமுதல் எடுத்துக் கூட்டி
ஆரணிமன் னவன்கருணைத் தெய்வ ராயன்
அருளியசே ஷாத்திரிகொங்கு ஆளும் நாளில்
காரணிகன் வழியடிமை கொண்டான் பாலன்
கதித்தசர வணப்பெருமாள் நடத்தி னானே. (156)

பாடற்பொருள்:

திருச்செங்கோடு அர்த்தநாரியீசுவரருக்கு 25 ஆண்டுகள் சித்திரை வசந்தத் திருவிழா நடைபெறாமலிருந்தது. ஆரணி தெய்வராயன் மகன் சேஷாத்திரி நிருவாக காலத்தில் சோபகிருது வருடம் (1663) முதல் வழியடிமை கொண்டான் என்பவரின் மகன் சரவணப் பெருமாள் சித்திரை வசந்த விழாவை நடத்தத் தக்க ஏற்பாடுகள் செய்தார்.

★

பலமிகு விசுவா வசுவினில் கோதைப்
பதிவரு குருக்கள்நல் லயன்சொற்
படிகுடி யுடனே பரிசனத் தவரும்
பரிவுடன் சரவணப் பெருமாள்

தலமகிழ் மங்கைக்கு அணுகியே ராமச்
சந்திர பூபதிக்கு உரைக்கத்
தயவுடன் அவனும் மலைமிசை ஏறித்
தருவறு வாக்கியே இறக்கி

நலமுடன் அருள மரமெலாம் கொணர்ந்து
நாகமா மலையின்வே லவர்க்கும்
நாரிபா கர்க்குத் திருக்கொடிக் கம்பம்
நானிலம் புகழவே நிறுத்திக்

குலவிய கைலா யப்பரா லயத்துக்
கோபுரக் கதவுதேர் உருளை
கொடுத்தனன் திருத்தேர் நடத்தினன் மதுரைக்
கொற்றவன் வெற்றியே பெறவே. (157)

பாடற்பொருள்:

விசுவாவசு வருடம் (1665) திருச்செங்கோட்டுக் குருக்கள் நல்லய்யன் அவர்கள் வேண்டுகோள்படி திருச்செங்கோட்டுக் குடிகள் கோயில் பணியாளர்கள் இவர்களோடு சரவணப் பெருமாள் சேந்த மங்கலம் சென்று இராமச்சந்திர நாயக்கரைக் கண்டு கேட்டுக் கொள்ள அவரும் மலைகட்குச் சென்று மரங்களைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு வந்து மலைமேல் வேலவருக்கும் அர்த்தநாரீசுவரர்க்கும் கொடிக் கம்பம் செய்து நிறுத்தினார். கயிலாசநாதர் கோயிலுக்குக் கோபுரக் கதவு தேர்ச் சக்கரம் இவைகளைச் செய்து கொடுத்ததுடன் தேரோட்டமும் நடத்தினார்.

★

விசுவா வசுஇட பத்திங்கள் ஆறின் வியாழத்துனாள்
இசைவான ரோகிணி யோடமா வாசையும் ஏரகம்சேர்
புசவாசி யான வடிவே லவர்க்குமுன் புந்தியன்பு
கசிவாம் சரவணன் நாட்டிவைத் தான்கொடிக் கம்பத்தையே.
(158)

பாடற்பொருள்:

விசுவாவசு வருடம் வைகாசி மாதம் ஆறாம் தேதி வியாழக் கிழமை (04.05.1665) ரோகிணி நட்சத்திரம் கூடிய அமாவாசை நாளன்று திருச்செங்கோடு வடிவேலர்க்கு முன்பு அன்புடன் கொடிக் கம்பத்தைச் சரவணப்பெருமாள் நாட்டி வைத்தார்.

★

வேலவன் தேருக்கும் விநாயகன் தேருக்கும் மெல்லியுமை
பாலகன் தேருக்கும் கல்லால் தளவிசை பண்ணுவித்தான்
சீலவ ணான வழியான் சரவணச் செல்வநெடு
மாலவன் கீர்த்திபெற் றான்விசு வாவசு வற்சரத்தே. (159)

பாடற்பொருள்:

வேலவர், விநாயகர், அர்த்தநாரீசுவரர் ஆகியோர் தேர்களுக்கு அவை நிறுத்தும் இடத்தில் கல்லால் தளவரிசையை விசுவாவசு வருடம் (1665) சரவணப் பெருமாள் உண்டாக்கினார்.

★

ஆரணி தெய்வராயன் மகன் சேஷாத்திரி பிள்ளை

ஆலயத்து வாழை அழகியம்மை ஏரியின்கீழ்ச்
சோலையொத்த நந்தவனம் சோம்பாகி - மாலையொத்த
மானபரன் கீர்த்தி மருவியசே ஷாத்திரிமெய்ஞ்
ஞானபரன் உண்டாக்கி னான். (160)

பாடற்பொருள்:

அழகியம்மை ஏரியின்கீழ் அழகிய நந்தவனம் ஒன்றை சேஷாத்திரி உண்டாக்கினார்.

அழகியம்மன் ஏரி அமைத்தது பற்றிய கல்வெட்டு கைலாச நாதர் கோயிலில் உள்ளது. ''காலயுக்தி வருஷம் கார்த்திகை 6 தியதி வடகரை நாட்டில் அந்தியூரிலிருக்கும் நகரத்தாரில் வண்ணக்கர் கோத்திரத்தில் பாகம் பிரியா செட்டியார் மகன் குமாரவேல் செட்டி அளகை நாச்சியம்மன் கொளமும் குமாரர் கோயிலும் கட்டிவிச்சார். அவருடைய உபயம்'' என்பது கல்வெட்டாகும்.

★

செங்கைமுகில் ஆனகொடைச் சேஷாத் திரிராயன்
எங்கள்விசு வேசுரருக்கு ஏற்கவே - துங்க
படித்தர மும்நித்தம் பண்புறவே நன்றாய்
நடத்துவித்தான் இன்பமுண்டா னான். (161)

பாடற்பொருள்:

திருச்செங்கோடு விசுவநாதர் - விசாலாட்சி திருக்கோயிலில் நாள்தோறும் பூசை செய்யச் சேஷாத்திரி படித்தரம் அளித்தார்.

★

மீட்டான பணிமலைவாழ் உமைபாகர் நந்தவன
வேலையோர்க்கே
நீட்டாக வாழுமர்த்த நாரீச பண்டிதன்பால்
நிலைமையாகப்
பாட்டான தொடைமார்பன் ஆரணிசே ஷாத்திரிதன்
பத்தியாலே
நாட்டாமங் கலத்திலிரு பதினாலு பொன்னிலமும்
நடப்பித்தானே. (162)

பாடற்பொருள்:

அர்த்தநாரீசுவரர் திருக்கோயில் நந்தவனப் பணியாளர்கட்காக நாட்டாமங்கலம் என்னும் ஊரில் 24 பொன்னுக்கு நிலம் வாங்கி அர்த்தநாரீசுவர பண்டிதர் வசம் ஆரணி சேஷாத்திரி அளித்தார்.

★

வென்று மாலையிட்டான்

பராபவம் வென்று மாலைப் பங்கயன் ஆதி மூர்த்தி
நராதிபன் பிலவங்க ஆண்டு நல்லகா ளத்தி நாதன்
வரோதயன் கீலக ஆண்டு மநுநீதி புரியும் நாளில்
புராதனர் கோதை ஈசர் பூசனை நடத்தி னானே. (163)

பாடற்பொருள்:

பிலவங்க வருடம் முதல் கீலக வருடம் வரை (1667-1668) காளத்திநாதர் அதிகாரம் செய்யும் நாளில் வென்று மாலையிட்டான் என்பவர் திருச்செங்கோட்டு ஈசுவரர்க்குப் பூசைகளைச் சிறப்பாக நடத்தினார்.

★

சங்காலு நாயக்கர்

தவமிகும் சவுமி யாதி தழைத்தசா தார ணாந்தம்
புவிபுரந் திடுசங் காலு பூபதி புலியூர் தன்னில்
நவரச மான நஞ்சை நாலுமா நிலங்கள் போட்டுப்
பவமகல் கோதை யார்க்குப் படித்தரம் நடத்தி னானே. (164)

பாடற்பொருள்:

சவுமிய வருடம் முதல் சாதாரண வருடம் வரை (1669-1670) சங்காலு நாயக்கர் நிர்வாகம் செய்யும்போது புலியூரில் நான்கு மா நிலம் கொடையாக அளித்து திருச்செங்கோட்டில் படித்தரம் நடத்த ஏற்பாடு செய்தார்.

★

சாதா ரணச்சிங்கம் ஏழாந் தியதியில் சந்திரநாள்
ஆதார நாக மலைமேலை வாசல் அடுத்ததற்கே
வேதா கமத்தின் விசாலாட்சி யையிசு வேசுரரை
மாதானம் செய்தருச் சித்தான்சங் காலு மகிபதியே. (165)

பாடற்பொருள்:

சாதாரண வருடம் ஆவணி மாதம் ஏழாம் தேதி திங்கட்கிழமை (08.08.1670) சங்காலு நாயக்கர் மேலை வாயிலை அடுத்துள்ள விசாலாட்சி விசுவேசுவரரைப் பல கொடைகள் கொடுத்து அருச்சனை செய்தார்.

★

வெங்கிட கிருஷ்ணப்பன்

வெற்றிசேர் விரோதி கிருது வியன்பரி தாபி அந்தம்
சொற்றமிழ் மாலை மார்பன் சொக்கலிங் கய்யன் அன்பாய்
கொற்றவெங் கிடகிருஷ் ணப்பன் குவலயம் புரக்கும் நாளில்
நித்தமும் கோதை யார்க்கு நிறைபடித் தரங்கள் ஈந்தான்.(166)

பாடற்பொருள்:

விரோதிகிருது வருடம் முதல் பரிதாபி வருடம் வரை (1671-1672) சொக்கலிங்க நாயக்கர் காலத்தில் வெங்கிடகிருஷ்ணப்பன் நிருவாகம் செய்யும்போது திருச்செங்கோடு கயிலாசநாதருக்கு நாள்தோறும் படித்தரம் அளித்தார்.

★

கச்சி முத்தளகாத்திரி நாயக்கர்

வேதியர் மகிழ்ந்து போற்றும் வேலர்மண் டபத்தை வாங்கி
கோதையில் கைலா யப்பர் கோபுர வடகீழ் மூலை
மூதறி வுடையோன் கச்சி முத்தள காத்திரி மன்னன்
மாதய வுடன்ஆஸ் தான மண்டபம் கட்டி னானே. (167)

பாடற்பொருள்:

வேலவர் மண்டபத்தின் கற்களைக் கொண்டு வந்து திருச்செங்கோடு கயிலாசநாதர் கோயில் கோபுரத்தின் வடகீழ் மூலையில் கச்சி முத்தளகாத்திரி நாயக்கர் 'ஆஸ்தான மண்டபம்' என்னும் மண்டபத்தைக் கட்டினார்.

★

வீரராகவ முதலியார்

பைந்தமிழ்த் தொண்டை நாடன் பகீரதி குலத்து வேந்தன்
விந்தைசேர் பரசு ராமன் வீரரா கவபூ பாலன்
எந்தையார் கோதை வாழும் ஈசர்மா சந்த திக்கண்
சந்ததம் இரண்டு சாதம் சதாசிவ குரவற்கு ஈந்தான். (168)

பாடற்பொருள்:

வீரராகவ முதலியார் திருச்செங்கோடு கோயிலில் பூசையின் போது சதாசிவ பண்டிதர்க்கு இரண்டு பங்கு சாதம் அளிக்க ஏற்பாடு செய்தார்.

★

சொக்கநாதன் மகன் செவ்வந்தியப்பன்

வடிவுறு சரணர் கோதை வருகயி லாய நாதர்
நடனமண் டபத்துக்கு ஏற்க நல்லிரு சுருளோடு ஐந்து
படியடை வாகக் கட்டிப் பரவினன் இறையோன் வாழும்
தடபுயன் சொக்க நாதன் தந்தசெவ் வந்தி தானே. (169)

பாடற்பொருள்:

சொக்கநாதன் என்பவரின் மகன் செவ்வந்தியப்பன் திருச்செங் கோடு கயிலாசநாதர் கோயில் நடன மண்டபத்துக்கு ஏற்புடையதாக இரு சுருளோடு ஐந்து படிகளைக் கட்டி இறைவனை வணங்கினார்.

★

சேற்றூர் பிறைசூடி மகன் சொக்கநாதப் புலவர்

செஞ்சொல்வருக் கக்கோவை செங்கோட்டு வெண்பாவும்
பஞ்சவிதி லட்சணமாப் பாடினான் - தஞ்சமெனும்
காரணிகள் சேறை கதித்தபிறை சூடிமைந்தன்
தாரணிகன் சொக்கநா தன். (170)

பாடற்பொருள்:

சேற்றூர் பிறைசூடி என்பவரின் மகன் சொக்கநாதன் என்னும் புலவர் ''திருச்செங்கோட்டு வருக்கக் கோவை'', ''செங்கோட்டு வெண்பா'' என்னும் இலக்கியங்களை ஐந்திலக்கண முறை வழுவாமல் இயற்றினார் (இந்நூல்கள் இன்று கிடைக்கவில்லை).

★

வெள்ளியிலே நாரி விநாயர்க்கு நூறுடனே
தெள்ளி இருபதுநல் தேங்காயும் - அள்ளி
உடைப்பித்தான் நாகீசர்க்கு ஓங்குபிர தோசம்
நடப்பித்தான் சொக்கநா தன். (171)

பாடற்பொருள்:

சொக்கநாதன் வெள்ளிக்கிழமை நாரி கணபதியாருக்கு 120 தேங்காய்கள் உடைத்தார். நாகீசுவரர் கோயிலில் பிரதோஷ வழிபாட்டை நடத்தினார்.

★

அபிடேகச் சொக்கப்பன்

செஞ்சொல்சேர் அரவ கிரிவரு முருகர்
தேவியோர் பங்கர்மெய் குளிரத்
திறமிகு பஞ்ச கௌவியஜந் தமுதம்
திகழ்பல பலாசினோ தகமும்

கஞ்சமா மலரின் புட்பவோ தகமும்
கனகமா மணியினோ தகமும்
கங்ககா வேரி மஞ்சனம் தபன
கலசமும் பனியின்நீர் புநுகும்

விஞ்சிய சகல பரிமளம் கலந்த
மெல்லிய சந்தனக் குழம்பும்
விதியுடன் அபிடே கம்புரிந் தேனை
வெற்றியும் கொடுத்துமால் படைத்தான்

தஞ்சமென் றவர்க்குத் தாததாய் எனவே
தருமபி டேகசொக் கப்பன்
தாரணி தனில்ஆ யிரம்பிறை தொழுது
சந்ததி பெற்றுவாழ்ந் திடவே. (172)

பாடற்பொருள்:

சொக்கப்பன் என்பவர் வேலவருக்கும், அர்த்தநாரீசு வரருக்கும் பல அபிடேகங்களைச் செய்தார். பஞ்சகவ்ய அமுதம் படைத்தார். புண்ணிய நீர் அபிடேகம்; தாமரை மலர் இதழ்களால் மலர் அபிடேகம்; பொன்-மணி அபிடேகம்; கங்கை காவேரி நீர் அபிடேகம்; அபிடேகக் கலசங்கள், பன்னீர், புனுகு, சகல வாசனைப் பொருள்கள் கலந்த சந்தனக் குழம்பு அபிடேகம் ஆகியவைகளை அளித்தார். தஞ்சம் என்று வந்தவர்க்குத் தாய் போல் உதவி செய்யும் அவரை ''அபிடேகச் சொக்கப்பன்'' என்றே அழைத்தனர்.

★

நயினான் இரத்தினகிரி

அண்டர்தொழ வருகோதை உமைபாக ருக்கினிய
தானநா லாம்திருவிழா
அதிகமண் டபபூசை இடபவா கனசேவை
அழகுதிரு நந்தவனமும்

கண்டிரச மானமுக் கனிவகைக ளும்பஞ்ச
கௌவியமும் கந்தங்களும்
கார்த்திகையின் அபிடேக நைவேத்தி யங்களும்
கனகசபை திருமாலையும்

மண்டல மதிக்கவரு சீனிவா சன்சோம
வாரநா டகவரிசையும்
வதுவைபூ தானம் திருக்கையின் வழக்கமும்
மடதரும மும்பரிவுடன்

எண்டிசையெண் மதுரைவரு விசுவநா தத்திரும
லேந்திரன் தருமம்எனவே
இவற்றினை நடத்தினன் எல்லார்க்கும் நயினான்
இரத்நகிரி மகிபாலனே. (173)

பாடற்பொருள்:

திருமலை நாயக்கர் காலத்தில் (1623-1659) அவருடைய தர்மமாக நயினான் இரத்தினகிரி என்பவர் திருச்செங்கோட்டு உற்சவத்தில் நான்காம் திருவிழா மண்டப பூசை, ரிஷப வாகன சேவை, நந்தவனம், இனிமையான முக்கனி வகைகள், பஞ்ச கவ்யம், வாசனைப் பொருட்கள், கார்த்திகையில் அபிஷேக நைவேத்தியம், அழகிய பொன் மாலைகள், சீனிவாசன் என்பவரின் ''திங்கட்கிழமை நாடகம்'', திருமண விழா, பூமிதானம், திருக்கை வழக்கம், மடதருமம் இவையனைத்தையும் தன் கொடையாக நடத்தினார்.

★

சேனாபதி அர்த்தனாரி பண்டிதன்

வானோர் பணியும் உமைபாக னார்அர்த்த மண்டபமுன்
ஏனோர் பணியும் தலைவாசல் காவல் இருவரையும்
ஞானோ தயன்எங்கள் தேவார நம்பிதென் நாகவெற்பில்
சேனா பதிஅர்த்த நாரீச பண்டிதன் செய்தனனே. (174)

பாடற்பொருள்:

'தேவார நம்பி' எனப் புகழ்பெற்ற சேனாபதி அர்த்தனாரி பண்டிதர் திருச்செங்கோட்டு அர்த்தநாரீசுவரர் கோயிலில் அர்த்த மண்டப வாயிலில் துவாரபாலகர் இருவரையும் எழுந்தருளச் செய்தார்.

★

கஸ்தூரிரங்கன் மகன் முத்தியாலு நாயக்கன்

தேமேவு கலியுக சகாத்தம்ஆ யிரம்மீது
சேரும்ஐஞ் ஞூற்றெண்பதில்
செல்லும்ஒன் றாகிய விளம்பிவரு பங்குனித்
திங்களில் பரிவாகவே

மாமேவு பணிகிரித் தென்வாச லுக்கருகு
மன்னுவிசு வேசுரையும்

மாதுமை விசாலாட்சி நந்திகண பதியோடு
மண்டபமும் நிறைவேற்றியே

கோமேவு தென்கொழுங் கொண்டையும் அளித்தனன்
குலவுநான் காம்திருவிழாக்
கொண்டாடு மண்டபமும் மற்றுநந் தாவனக்
கூவலும் பெரிதாக்கினன்

பூமேவு விசுவநா தத்திரும லேந்திரன்
புண்ணியம தாமென்னவே
புகழான கஸ்தூரி ரங்கபூ பதியுடைய
புதல்வன்முத் தலபூபனே. (175)

பாடற்பொருள்:

சாலிவாகன சக வருடம் 1581 விளம்பி வருடம் பங்குனி மாதம் (1658) திருச்செங்கோட்டு மலைக்கோயில் தென்வாசல் அருகில் விசுவநாதர், விசாலாட்சி, நந்தி, கணபதி ஆகியவர்களை எழுந்தருளச் செய்து மண்டபமும் கட்டியவர் கஸ்தூரிரங்கன் மகன் முத்தியாலு என்பவர். கொழுங்கொண்டையை மானியமாக அளித்தார். நான்காம் திருவிழாக் கொண்டாட மண்டபம் கட்டினார். நந்தவனத்தில் உள்ள கிணற்றைப் பெரிதாக்கினார். இவையனைத்தையும் மன்னர் திருமலை நாயக்கரின் (1623-1659) புண்ணியமாகச் செய்தார்.

★

கேதார உடையார்

காரணிக மாகவரு நாகவரை மீதினில்
கனசர்வ தாரிவருஷம்
கல்லுவச வன்வீறு தெய்வீக மாகவே
கடலையுண வேகண்டனன்

தாரணி மதிக்கவரை அடிவார வடநீழல்
தன்னில்ராட் சதவற்சரம்

சண்முகப் பிரதிட்டை மண்டபங் களும்அழகு
தானாக நிறைவேற்றினன்
சீரணியும் எழுகரை நாட்டுபய மார்க்கமும்
சேரஅவர் அவர்மேவவே
செப்பியிவை தாரைவார்க் கும்படி நடத்தித்
திருப்பணி விசாரித்தனன்
ஏரணியும் எழுகரை நாட்டுமன் னவருடன்
இருபத்து நான்குநாடும்
இன்பமுடன் உபசரிக் கப்பெற் றிருந்தனன்
இனியகே தாருடையனே. (176)

பாடற்பொருள்:

எழுகரை நாட்டவர்களுடன் கொங்கு இருபத்து நான்கு நாட்டார் களாலும் உபசரிக்கப் பெற்ற கேதார உடையார் என்பவர் சர்வதாரி வருடம் திருச்செங்கோட்டு மலையில் கல் நந்தி தெய்வீகத் தன்மையால் கடலையை உண்ணக் கண்டார். அடிவாரம் வடபுறம் சண்முகரை எழுந்தருளச் செய்து அழகிய மண்டபமும் கட்டினார். எழுகரை நாட்டு வணிகர்கள் வரியை அளிக்கச் செய்து அதைத் திருப்பணிகட்குச் செலவிட்டார்.

கல்லிடபம் கடலை தின்ற அற்புதத்தைச் செய்து காட்டியவர் சிவப்பிரகாசர். ''கல்லிடபம் கடலை தின்ற சொல்லுயர்ந்த நாடு'' என்று இலக்கியம் இந்நிகழ்ச்சியைப் புகழ்கிறது. (திருச்செங்கோட்டுக் குறவஞ்சி)

திருவாவடுதுறை சிவப்பிரகாசர் திருச்செங்கோட்டில் தன்னை இகழ்ந்தவர்முன் அவர்கள் வேண்டுகோள்படி,

''வில்லார் பொதுச்சபையின் வித்தகா நீயுமுனம்
கல்லானைக்கு இக்குஅருத்திக் காட்டியஉன் - வல்லாண்மை
கட்டுரையே ஆயின்இந்தக் கல்ஏறு .எழீஇக்கடலை
இட்டஇவர் முன்தினச்செய் யே''

என்று பாடி கல்இடபம் கடலையுண்ணச் செய்தார். இதனைக் கார்மேகக் கவிஞர் தன் கொங்கு மண்டல சதகத்தில் குறிக்கின்றார் (49).

''பண்பார் சிவப்பிர காசனைத் துட்டர் பழிக்கஅவர்
கண்பார்க்க வில்லார் பொதுச்சபை யின்வித்த காளனூர்
வெண்பா சொலக்கல் இடபம் கடலையை மென்றுதின்னும்
வண்பா வலர்வரு செங்கோடை யும்கொங்கு மண்டலமே''

என்பது சதகப் பாடலாகும்.

★

கிள்ளிச் சோழன்

தாவும் பணியசலத் தாழ்வரையின் தோணியிலே
மேவும் படிக்கு விதமாகப் - பாவின்ப
வேதமிகு சாத்தனையும் வெள்ளானை யும்அமைத்தான்
சோதிமிகு கிள்ளிநற்சோ ழன். (177)

பாடற்பொருள்:

திருச்செங்கோட்டு மலையின் தாழ்வரையின் பக்கம் அய்யனாரையும், வெள்ளை யானை வாகனத்தையும் கிள்ளி என்ற சோழன் அமைத்தான்.

சங்க காலத்தில் நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி, கிள்ளிவளவன் என்ற பெயரைக் காணுகின்றோம். இடைக்காலத்தில் பெரு, நல் என்ற இரு அடைமொழி பெற்றுப் 'பெருநற்கிள்ளி' என்ற பெயரோடு ஒரு சோழ மன்னன் வாழ்ந்துள்ளான். திருப்பழனம், திருவெண்காடு ஆகிய ஊர்க் கல்வெட்டில் ''சோழப் பெருமானடிகள் பெருநற்கிள்ளிச் சோழன்'' என்ற பெயர் காணப்படுகிறது. புதுக்கோட்டை மாநிலக் கல்வெட்டுகளில் ''பெருநற்கிள்ளிச் சோழ நாடாழ்வான்'', ''பெருநற்கிள்ளிச் சோழ வேளான்'' என்ற பெயர்களைக் காணுகின்றோம்.

திருச்செங்கோடு வட்டம் பெரியமணலியில் பெருநற்கிள்ளிச் சோழனின் ஒன்பதாவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு உள்ளது. இப்போது இக்கல்வெட்டு ஈரோடு கலைமகள் அருங்காட்சியகத்தில் உள்ளது.

★

மைசூரார் துரைத்தனம் சிக்கதேவராச உடையார்

பத்திரைசா முண்டிதந்த பாரவரம் பெற்றிடுசெற்
புத்திரனாம் பூலோகம் போற்றுமால் - சித்திரந்தேர்
சிக்கதே வேந்திரயன் செங்கோடர் பூசனைக்குத்
தக்கதே தந்தான் தனம். (178)

பாடற்பொருள்:

மைசூர் சாமுண்டீசுவரி தேவியின் அருள் பெற்ற சிக்கதேவராச உடையார் (1673-1704) திருச்செங்கோட்டு இறைவரின் பூசைக்குப் பொருள் தந்தார்.

★

திண்டிரல் வீரன் சிக்க தேவரா சேந்தி ரேசன்
தண்டமிழ்க் கோதை யார்க்குச் சர்வமா னியமே தந்தான்
கண்டகர்கள் கண்டன் வெற்றிக் கத்திவாய் முனையி னாலே
மண்டல முழுதும் கட்டி மதுரையும் கட்டி னானே. (179)

பாடற்பொருள்:

சிக்கதேவராச உடையார் திருச்செங்கோட்டு இறைவர்க்குச் சர்வமானியம் தந்தார். தன் வலிமையால் பல பகுதிகளை வென்றவர் மதுரையையும் வென்று தன் ஆட்சிக்குட்படுத்தினார்.

★

தன்மண் டலமெனும் கொங்கே ரகத்தண்ணல் தாள்பணிந்து
தென்மண் டலமுத் தமிழ்நாடு சோழமும் செஞ்சிதஞ்சை
முன்மண் டலமுத் தரதேசம் கத்தி முனையிற்கட்டி
நன்மண் டலம்புரந் தான்சிக்க தேவ நரேந்திரனே. (180)

பாடற்பொருள்:

சிக்கதேவராச உடையார் தனது ஆட்சிப் பகுதியாகிய கொங்குத் திருச்செங்கோட்டில் இறைவனை வணங்கி பாண்டி நாடு, சோழ நாடு, செஞ்சி, தஞ்சைப் பகுதி, வடக்கில் உள்ள நாடுகள் இவைகளை வென்று நல்லாட்சி நடத்தினார்.

சிக்கதேவராச உடையார் மதுரை நாயக்க மன்னர் சொக்கநாத நாயக்கரைப் பல முனைகளில் வென்றார். குமார தளவாய் தலைமையில் மைசூர்ப் படை வெற்றி பெற்றது.

★

சிக்கதேவராச உடையார் தளபதி குமார தளவாய்

திண்டிறல் பெறுஞ்சிக்க தேவப்ப ராசுடையார்
சித்தமது களிகூரவே
திக்குவிச யம்புரி குமாரதள வாய்கொங்கு
தென்முகந் தளம்எய்தியே

மண்டல மதித்தபிர மாதீச வையாசி
மணலிமுட் டாஞ்செட்டியும்
மன்னுபர மத்தியும் அனந்தகிரி யும்கொல்லி
மலைமகா லெட்சுமிகெடியும்

கொண்டரவ கிரியீச ரைத்தெரி சனம்செய்து
கோவிலப் பணைவாங்கியே
கோதைத் தலச்சர்வ மானிய மெனத்தந்து
குணமுற்ற வசவய்யனை

அண்ணடையி லணைத்தர்த்த நாரீசர் சந்நதியை
அழகுடன் நடத்தென்னவே
அரசர்புண் ணியமாக வேஅந்த மன்னவனும்
அப்படி நடத்தினானே. (181)

பாடற்பொருள்:

சிக்கதேவராச உடையாரின் தளபதியாகிய குமார தளவாய் திக்குவிசயம் செய்கையில் பிரமாதீச ஆண்டு வைகாசியாகிய 1673ஆம் ஆண்டு மே மாதம் மணலி, முட்டாஞ்செட்டி, பரமத்தி, அனந்தகிரி, கொல்லிமலை, மகாலட்சுமிகெடி இவைகளை வென்று திருச்செங்கோட்டு மலை இறைவனை வணங்கிச் சர்வமானியம் தந்தார். திருச்செங்கோட்டு மணியம் என்ற அதிகாரியாகிய முத்துவசவய்யன் என்பவரை அழைத்து அர்த்தநாரீசுவரர் சந்நதியை அழகுபடுத்த வேண்டும் என்று சொல்ல அவரும் அப்படியே செய்தார்.

★

மணியம் முத்து வசவய்யன்

மனமேவு நாககிரி வடிவேலர் பலியருகு
வாங்குபடை முன்சரிமதில்
மறலிவா சற்கதவு நிலைகா லடிப்படை
மடப்பளித் தளவிசைகளும்

கனமேவு வையாசி நடைவீதி நடைவாவி
காளிகோ விற்பிரபலம்
கயிலாய நாதர்அறை திருமடப் பள்ளியொடு
கவுரிமண் டபச்சுவர்களும்

அனமேவும் உமைபாகர் அணிதிருக் குழையோலை
அத்தமும் தண்டுதாமும்
அங்கிமக பூசனை படித்தரம் திருநாளின்
அதிகவை போகங்களும்

தினமேவு தேவரா சேந்திர நராதிபதி
சீர்பெறு குமாரதளவாய்
சித்தமது மகிழ்மணிய முத்துவச வையன்
திருப்பணி புரிந்ததிதுவே. (182)

பாடற்பொருள்:

தேவராச உடையார் தளபதி குமார தளவாய் நிர்வாக காலத்தில் மணியமாக இருந்த முத்து வசவய்யன் வடிவேலர் பலிபீடத்தருகே சரிந்த மதிலைச் சரி செய்தார். அழிந்த கதவு, நிலைகால் இவைகளின் அடிப்படைகளைப் பலப்படுத்தினார். மடப்பள்ளிக்குத் தளவரிசை அமைத்தார். வையாசித் தேர் வீதியையும் படிகளையும் அமைத்தார். காளி கோயிலைப் பெருமையுறச் செய்தார். கயிலாயநாதர் கருவறை, மடப்பள்ளி, கவுரி மண்டபச் சுவர்களை அமைத்தார். அர்த்தநாரீசுவரர் அணியக் காதோலை, கைத்தண்டு, வயிறு, அங்கி, மக நட்சத்திரப் பூசை, படித்தரம், திருநாள் இவைகளைச் சிறப்புறச் செய்தார்.

★

இலிங்கையன்

சீர்மேவு கலியுக சகாத்தமா யிரமீது
சேரும்ஐஞ் ஞூற்றின்மிசையே
திகழ்கின்ற தொண்ணூற்றி யேழிலா நந்தம்
சிறந்தகன் னித்திங்களில்

பார்மேவும் இருபதுடன் ஒன்பதாம் தேதியில்
பன்னுசௌ மியவாரமும்
பத்திரை விருத்தியே காதசி சதயமும்
பரிதனுசு லக்கினமதனில்

தார்மேவு தேவரா சுடையர்புண் ணியமதாய்ச்
சௌரிய குமாரதளவாய்
தன்மணிய முத்துவச வயன்மனது சரிவந்த
சதுரதிவ் வியலிங்கயன்

ஏர்மேவு நாககிரி அர்த்தநா ரீசருக்கு
இருகுழை மகரகொந்தளம்
எழில்பெற அணிந்தனன் மைசூரில் வருமரசர்
இனிதூழி உலகாளவே. (183)

பாடற்பொருள்:

சாலிவாகன சகாப்தம் 1597 ஆனந்த வருடம் புரட்டாசி மாதம் 29ஆம் தேதி செவ்வாய்க் கிழமையாகிய 29.09.1674 அன்று மைசூர் அரசர் தேவராச உடையாரின் தளபதி குமார தளவாயின் மணியம் ஆகிய முத்துவசவய்யனிடம் பணிபுரிந்த இலிங்கையன் என்னும் அலுவலர் அர்த்தநாரீசுவரருக்கு இருகுழைகளும் மகர கொந்தளம் என்னும் தலையணியும் அணிவித்தார் (பாடல் 187 காண்க).

★

சரவணன்

செம்மையுமை பாகர் திருக்குழையும் தென்னழகி
அம்மைதிருக் கோயிலுமுண் டாக்கினான் - எம்மை
உடையான் வழியடிமை கொண்டாள வுற்றோன்
படியாள் சரவணபூ பன். (184)

பாடற்பொருள்:

சரவணன் என்னும் அலுவலர் அர்த்தநாரீசுவரருக்குத் திருக் குழைகளை அணிவித்து, அழகியம்மை கோயிலையும் கட்டினார்.

★

மண்டலந் தொழுதேவ ராசய நரேந்திரன்
மந்திரி குமாரதளவாய்
வைத்தமணி யம்புரியு முத்துவச வய்யன்
மனதுஉவந் திடுலிங்கயன்

எண்டிசை வழுத்துபணி மலைவேலர் உமைபாகர்
இதயமது களிகூரவே

இனியஅபி டேகனை வேத்திய படித்தரமும்
எழிலாடை ஆபரணமும்

தண்டுலவு தீபதூ பங்கல்வி பணிமாலை
சங்கீத மேளநடனம்
தானமுற வோர்பரி சனங்களந் தணர்அன்ன
தானமட பலதருமமும்

கொண்டலென உதவுமகி சூரரசர் தமதுடைய
குலவுபுண் ணியமாகவே
குற்றமற வேநடத்தி னன்இனிது நீடூழி
குவலயந் தனில்வாழ்கவே. (185)

பாடற்பொருள்:

மைசூர் அரசர் சிக்கதேவராச உடையாரின் தளபதியும் அமைச்சருமாகிய குமார தளவாய் அவர்களின் திருச்செங்கோட்டு மணியம் முத்துவசவய்யனிடம் பணிபுரிந்த அலுவலராகிய இலிங்கையன் வேலவருக்கும் அர்த்தநாரீசுவரருக்கும் அபிடேகம், நைவேத்தியம் செய்து படித்தரம் நடத்தி ஆடை ஆபரணங்களையும் அளித்தார். இன்னும் பூசைக்கு வேண்டிய எல்லாக் கொடைகளையும் அளித்து பாடல்கள் பாடவும் மேளம் வாசிக்கவும் நடனமாடவும் ஏற்பாடுகள் செய்தார். கோயில் ஊழியர்களும் அந்தணர்களும் உண்ணும் பொருட்டு அன்னதான மடங்களை ஏற்படுத்தினார். இவை அனைத்தும் மைசூர் அரசர் புண்ணியமாக நடைபெற்றன.

★

முத்துவசவய்யன்

தண்டா யுதமும் உதரமும் தோளும் தடஉரமும்
கண்டார் மகிழக் கனகாங்கி கோதைக் கடவுளுக்கு
உண்டாக்கி னன்சிக்க தேவப்ப ராசன் உபயமென்றே
வண்டாடு மாலை புனைமார்பன் முத்து வசனையனே. (186)

பாடற்பொருள்:

சிக்கதேவராச உடையார் (1673-1704) உபயமாக முத்து வசவய்யன் திருச்செங்கோட்டு இறைவர்க்குத் தண்டாயுதம், வயிற்றணி, தோள்அணி, மார்பு அணி, பொன்னால் செய்யப்பட்ட அங்கி இவைகளை அளித்தார்.

★

இலிங்கையன்

ஆனந்தக் கன்னியின் நாலேழு நாள்மிசை அம்புவியெண்
வானந்த நாக மலையீச ருக்கு மகரகுழை
தானந்த வாம குழைகொந்த ளம்இவை சாத்திவைத்தான்
போனந் தருதிவ்ய லிங்கய பூபன் புகழ்பெறவே. (187)

பாடற்பொருள்:

ஆனந்த ஆண்டு புரட்டாசி மாதம் 28ஆம் நாளாகிய 28.09.1674 அன்று திருச்செங்கோட்டு மலை இறைவருக்கு மகரக் குழை, வாம குழை, கொந்தளம் இவைகளை இலிங்கையன் என்னும் அலுவலர் அளித்தார்.

மகரக்குழை சிவன் காதணி; வாமகுழை என்பது இடப்பக்கம் அம்மன் காதணி; கொந்தளம் அம்மன் தலை ஆபரணம்.(பாடல் எண் 183 காண்க)

★

மாதுலவு கலியுக சகாத்தமா யிரமீது
வளரும்ஐஞ் ஞூற்றுமிசையே
மன்னுதொண் ணூற்றேழில் ஆநந்த தைத்திங்கள்
மருவுமூன் றாம்தியதியின்

போதுலவு சுக்கிரவா ரமும்மதிய மும்பெற்ற
புனர்பூச நட்சத்திரம்
புகலரிய உபகரண விஷ்கம்ப யோகமும்
பொலிகும்ப லக்கினமதனில்

நீதிபுரி தேவரா சயன்உபய மாகவே
நிலைபெறு குமாரதளவாய்
நித்தமகிழ் மதிமந்திரி முத்துவச வையன்குக
நேயதிவ் வியலிங்கயன்

கோதைவாழ் அழகம்மை சந்நிதா னந்தனைக்
குலவுநிறை கலையாக்கினன்
கொற்றவன் முதலாக வேயரசர் நீடூழி
குவலயந் தனில்வாழ்கவே. (188)

பாடற்பொருள்:

சாலிவாகன சகாப்தம் 1597 ஆனந்த ஆண்டு தை மாதம் மூன்றாம் தேதியாகிய 01.01.1675 அன்று மைசூர் சிக்கதேவராச உடையாரின் கொடையாக குமார தளவாயின் அலுவலர் முத்துவசவய்யனிடம் பணிபுரிந்த இலிங்கையன் திருச்செங்கோட்டு அழகம்மை சந்நதியை மிகவும் சிறப்பாக அழகுபடுத்தினார்.

★

எல்லோரும் அழகம்மையை வணங்குதல்

திருமேவும் அரவகிரி உமைபாகர் வேலவர்
திருப்பணி சிறப்பேறவே
தேவரந் தணர்சுரபி மழைநீதி ஓங்கவே
சிவசமயம் ஈடேறவே

தருமேவு தேவரா சய்யமகி பாலனும்
தளவாய் குமாரய்யனும்
சத்தியவா சகனான முத்துவச வையனும்
தயவிலகு லிங்கய்யனும்

குருமேவு தானவதி காரகர ணிக்கரும்
குலவுபரி சனர்அனைவரும்

கோதைவள நகருள்ள குடியான பேர்களும்
கொங்கில்எழு கரைநாடரும்

மருமேவும் அழகம்மை சந்நிதா னத்தையா
வாகித்த பலமெய்தியே
வரிசையுட னேயதிக செல்வமது பெற்றினிது
வையகந் தனில்வாழ்கவே. (189)

பாடற்பொருள்:

திருச்செங்கோட்டு அர்த்தநாரீசுவரர், வேலவர் கோயில் திருப்பணி சிறப்பாக நடைபெறவும், தேவர், அந்தணர், பசு, மழை, நீதி ஓங்கவும், சைவ சமயம் சிறப்படையவும் தேவராச உடையார், குமார தளவாய், முத்து வசவய்யன், இலிங்கய்யன், குருக்கள், தானத்தார், அதிகாரிகள், கணக்கர்கள், பரிசனர் அனைவரும், திருச்செங்கோட்டுக் குடிமக்களும், குடியானவர்களும், கொங்கு எழுகரை நாட்டவர் ஆகியோரும் கூடி அழகம்மை சந்நதியை வணங்கினர்.

★

இலிங்கய்யன்

காத்தலே புரிபணி கயிலை ஈசனார்
கோத்தலை யானிடப கூட கேசரி
பூத்தலைப் பட்டடை பொருந்து பாக்கலும்
ஏத்தலாய் முடித்தனன் இலிங்க ராசனே. (190)

பாடற்பொருள்:

கயிலாசநாதர் கோயிலில் இலிங்கையன் நந்தி மண்டபம், சிங்கம், பாக்கல் ஆகிய திருப்பணிகள் செய்தார்.

★

புவிபுகழ் அரவ மேருப் பொருப்பரன் தெற்கு வாசல்
தவமிகு காளி யூர்த்வ தாண்டவ விலாசம் தன்னை
கவிபுனை குமார சாமிக் காங்கேயன் தொடுத்த வேலை
நவமென லிங்க ராசன் நாயகப் பத்தி செய்தான். (191)

பாடற்பொருள்:

திருச்செங்கோட்டு மலை தெற்கு வாசல், காளி ஊர்த்துவத் தாண்டவ விலாசத்தில் மோரூர் குமாரசாமிக் காங்கேயன் தொடங்கிச் செய்த பணிகளை இலிங்கய்யன் புதியதாக நாயகப் பத்தியை முற்றுப் பெறச் செய்தான்.

★

முத்து வசனவையன்

திரம்பெறு சிக்க தேவ ராசயன் சித்தம் மேவப்
பரம்பரைத் தளவாய் இன்பம் பயில்குமா ரய்யன் பாலின்
உரம்பெறு கோதை யார்க்கே உயர்படித் தரம்நா லாண்டு
வரம்பெறு மகவான் முத்து வசனவையன் நடத்தி னானே. (192)

பாடற்பொருள்:

சிக்க தேவராச உடையாரின் (1673-1704) தளவாய் குமாரய்யன் காலத்தில் முத்துவசவய்யன் நான்காண்டுகள் வரை திருச்செங்கோட்டு இறைவர்க்கு படித்தரம் சிறப்பாக நடத்தினார்.

★

கெம்பராசன்

சீர்பெறு சிக்க தேவ ராசயன் சித்தம் மேவப்
பேர்பெறு கெம்ப ராசன் பிங்கள வருடம் தன்னில்
தார்பெறு கோதை ஈசன் சன்னதி சிறப்புண் டாக்கிப்
பார்பெறு கோதை ஈசன் படித்தரம் நடத்தி னானே. (193)

பாடற்பொருள்:

சிக்கதேவராச உடையார் காலத்தில் (1673-1704) கெம்பராசன் என்பவர் பிங்கள வருடம் (1672) திருச்செங்கோட்டு இறைவர் சந்நதி களைச் சிறப்பாக அமைத்துப் படித்தரம் வழங்கினார்.

★

தேசராசய்யன்

கொங்கரங்கம் ஆகியதென் கோதைஅரன் சந்நதியை
அங்கரங்க வைபோகம் ஆக்கினான் - துங்கனெங்கள்
போசரா சன்சமுகம் போலே கவிபொழியும்
தேசரா சய்யநரேந்த் ரன். (194)

பாடற்பொருள்:

கொங்கு அரங்கம் ஆகிய திருச்செங்கோட்டுச் சிவன் சந்நதியில் விக்கிரக அலங்காரம், படையல், பூசை முதலிய அனைத்து வைபவங்களையும் தேசராசய்யன் செய்தார். இவர் கவிஞராகவும் விளங்கினார் போலும்.

★

நங்கைபால் வாழுமர்த்த நாரீச லிங்கருக்கே
அங்கிபீ தாம்பரமுண் டாக்கினான் - துங்க
விடையாளன் பாதம் விளக்குமால் வெற்றிப்
படையாளன் தேசயபூ பன். (195)

பாடற்பொருள்:

திருச்செங்கோட்டு அர்த்தநாரீசுவரருக்கு அங்கியும், பொன்னா லான ஆடையும் தேசராசய்யனால் அளிக்கப்பட்டன.

★

நடிக்கும் பதத்தர்த்த நாரீச ருக்கு நலமுடனே
வடிக்கும் கனகாங்கி பீதாம்ப ரம்பண்ணி வைத்தனனால்
தடிக்கும் புகழ்சிக்க தேவப்ப ராசன் தருமமென்றே
படிகின்ப மன்னவன் தேசப்ப பூபன் பலன்பெறவே. (196)

பாடற்பொருள்:

சிக்கதேவராச உடையார் தர்மம் என்று தேசராசய்யன் அர்த்த நாரீசுவரருக்கு கனக அங்கியையும், பொன்னாடைகளையும் அளித்தார்.

★

காஞ்சிபுரம் ராசண்ணன் மகன் வீரசெட்டியார்

பருவதம் அனைய தேவரா சுடையார்
பால்மதி மந்திரித் தலைமை
படைத்ததே சப்ப ராசயன் தனது
பாரிச மாகவே துருகம்
நிருவகி யாகி லிங்கரா சய்யன்
நெறிமனு முறைநடத் திடுநாள்
நீதிசேர் கோதை அர்த்தநா ரீசர்
நித்தியகல் யாணசந் நதிக்கே

சருவமா னியமாய் முழுப்படித் தரமும்
சகலமும் அடைவொடு நடத்தித்
தானிகர் பெரியோர் பரிசனத் தவர்க்கும்
தந்தைதாய் அளவுற அணைத்து

உருவசி மதனன் கச்சியம் பதிவாழ்
உத்தம ராசனின் றெடுத்த
ஓங்கிய புகழ்சேர் தேங்கிய கருணை
உடையவன் வீரபூ பதியே. (197)

பாடற்பொருள்:

சிக்கதேவராச உடையாரின் அமைச்சர் தேசப்ப ராசய்யன் காலத்தில் சங்ககிரி துர்க்கத்தில் நிருவாகியாகிய இலிங்கராசய்யன்

விளங்கியபோது வீரசெட்டியார் என்பவர் திருச்செங்கோட்டு அர்த்த நாரீசுவரர் சந்நதியில் சருவமானியமாக முழுப்படித்தரம் நடத்தினார். தானிகர், பெரியவர், பரிசனம் ஆகியவர்கட்குத் தாய் தந்தை போலப் பல உதவிகள் செய்தார்.

★

தாரணி புரக்கவரு தேவப்ப ராசுடைய
தனதுபுண் ணியமாகவே
தருமதுரை தேசயன் தருலிங்க ராசயன்
தானுமப் பணைசெய்யவே

சீரணியும் அரவகிரி உமைபாகர் சந்நதித்
தெற்குவா சலின்மண்டபம்
தேசலிங் கம்திருக் காமீச லிங்கப்ர
திட்டைகோ புரமஞ்சனம்

ஏரணியு மிடபமா யூரரசி தாங்கியும்
இளையநயி னார்அங்கியும்
எழிலான பூதமூ ஷிகவா கனஞ்சிவிகை
ஏந்துமுத் துப்பந்தலும்

காரணிக வைகாசி வீதியினை பெரியகற்
கட்டிரண் டேரிவளமும்
கச்சிரா சன்வீர செட்டிபோ சன்செய்த
கனதிருப் பணிகள்இதுவே. (198)

பாடற்பொருள்:

மைசூர் அரசர் சிக்கதேவராச உடையாரின் புண்ணியமாக உயர் அலுவலர் தேசயனின் கீழ்ப் பணியாற்றும் அலுவலர் இலிங்கயராச னுடைய ஆணைப்படி காஞ்சிபுரம் ராசண்ணன் என்பவரின் மகனான வீரசெட்டி அர்த்தநாரீசர் சந்நதியின் தெற்கு வாசல் மண்டபத்தைக் கட்டினார். தேசலிங்கம், திருக்காமீச லிங்கம் ஆகியவைகளைப் பிரதிட்டை செய்தார். கோபுரம் கட்டினார். திருமஞ்சனம் ஆட ஏற்பாடு

செய்தார். ரிசபம், மயில் வாகனங்கள் செய்தார். முருகப் பெருமானுக்கு அங்கிகள் தந்தார். பூதம், மூஷிகம் ஆகிய வாகனங்கள் செய்தார். சிவிகையும் முத்துப்பந்தலும் அளித்தார். வைகாசி வீதியில் வடமேற்குப் பக்கம் கல் கட்டடம் கட்டினார். இரண்டு ஏரி பாயும் வளமான நிலங்களைக் கோயிலுக்கு அளித்தார்.

★

வெற்றிதரு கலியுக சகாத்தமா யிரமீது
விளங்குமறு நூற்றொன்றினில்
வீறான தொருகாள யுத்திமக ரத்திங்கள்
மேவுமிரு பத்தாறினில்

உற்றதிதி சத்தமி சுவாதிநட் சத்திரம்
உகந்தசுக் கிரவாரமும்
யோகமது விருத்தியும் பவகரண மும்பெற்ற
உயர்மீன லக்கினமதனில்

கொற்றமிகு தேவரா சேந்திர நராதிபதி
குலவுதே சயமன்னவன்
கொங்கிலுயர் சங்ககிரி துருகம் புரக்குநாள்
கோதைவரு கயிலாயர்தன்

நற்றரள மணியணி திருக்கோபு ரக்கதவு
நன்றாக நிறைவேற்றியே
நட்டனன் புகழ்வீர செட்டியும் புவிமீது
நாடோறு மிகவாழ்கவே. (199)

பாடற்பொருள்:

சாலிவாகன சகம் 1601 காளயுக்தி ஆண்டு (1679) தை மாதம் 16ஆம் தேதி வெள்ளிக்கிழமையாகிய 24.01.1679 அன்று மைசூர் சிக்கதேவராச உடையாருக்காக தேசய்யன் என்னும் அலுவலர் சங்ககிரியில் அதிகாரம் செய்யும்போது முத்துமாலையணிந்த திருக்கோபுரக் கதவினை வீரசெட்டி என்பவர் கயிலாயநாதருக்கு அளித்துப் புகழ் பெற்றார்.

★

தலையான தேசய னாட்காள யுத்தியில் தைத்திங்களின்
மலையான கோதை கயிலாயர் கோபுர வாயிலுக்கு
நிலையான கம்பைக் கதவையுண் டாக்கி நிறுத்திவைத்தான்
கலையான கச்சி வருவீர செட்டி கனம்பெறவே. (200)

பாடற்பொருள்:

சங்ககிரி துர்க்கத்தில் மைசூர் அலுவலராகிய தேசய்யன் அதிகாரம் செய்யும் நாளில் காளயுத்தி ஆண்டு தை மாதம் ஆகிய 1679 சனவரியில் திருச்செங்கோடு கயிலாய ஈசுவரமுடையார் கோயிலுக்குக் கச்சி வீர செட்டி நிலையான கதவுகளைச் செய்தளித்தார்.

★

சிக்கதே வரசு மேவத் தேசயன் துருகம் சீமை
ஒக்கவே புரக்கும் கால யுத்தியில் கோதை யார்க்கு
பக்கமாய் அங்கி பீதாம் பரம்நிறை வேற்றி ஈந்தான்
தக்கமால் வீர செட்டி தழைத்தினி தாயி னானே. (201)

பாடற்பொருள்:

மைசூர் சிக்கதேவராச உடையார் (1673-1704) காலத்தில் தேசய்யன் சங்ககிரியில் அதிகாரம் செய்யும்போது காளயுத்தியாகிய 1679 இல் திருச்செங்கோட்டு இறைவர்க்கு அங்கிகளையும், பீதாம்பரம் என்னும் உயர் பொன் ஆடைகளையும் வீரசெட்டி அளித்தார்.

★

சீரணியும் செங்கோட்டின் வைகாசித் தெருவீதி
தென்மேல்மூலை
ஏரணிதென் முகச்சபையை வடமுகமாய் வைத்ததென்றே
எவரும்காணத்
தாரணியெண் தேவரசு தயவுளதே சயன்மணியம்
தானேசெய்யும்
காரணிக அவதாரன் வீரசெட்டி மண்டபம்தான்
கட்டினானே. (202)

பாடற்பொருள்:

சிக்கதேவராச உடையார் காலத்தில் (1673-1704) வைகாசித் திருவீதியில் தென்மேற்கு மூலையில் தெற்குமுகமாக இருந்த மண்டபத்தை வீரசெட்டி வடக்கு முகமாகக் கட்டினார்.

★

சீலமுடன் சத்திரமும் வீரேசன் துவசதண்டும்
திருவிழாவும்
மாலுமடங் கடற்பரியும் தேமானத் திருத்தேரும்
வடிப்பமாகத்
தாலமடங் கப்புரக்கும் தேவரசன் மந்திரிதே
சயநட்பான
ஞாலமடங் கப்புகழும் வீரசெட்டி ரௌத்திரியில்
நடத்தினானே. (203)

பாடற்பொருள்:

வீரசெட்டி ரவுத்திரி வருடம் (1680) சத்திரம் கட்டினார். சிவாலயத்திற்குக் கொடிக் கம்பம் அமைத்தார். திருவிழா நடத்தினார். மடம் கட்டினார்.

★

தென்னுலவு குடையால வட்டமொடு பலவிசிறி
சேறாடி கொடியாடையும்
சேணுக் குடக்கயம் மகரதோ ரணம்பல
தேரலங் காரங்களும்
மின்னுலவு பந்தவகை வாணவகை பட்டுவகை
வெள்ளைசந் திரகாவியும்
வெண்சாம ரங்கள்பல சாலிசல் லரிகள்பல
விருதுபா வாடைவகையும்
பொன்னுலவு நவமணி ஆபரண வடங்களும்
பூமருவு வகைமாலையும்

பொலிவுதரு நாகுகிரி உமைபாகர் வேலவர்
புராணவேள் வியும்இதுவெலாம்

நன்னில மதிக்கவரு தேவப்ப ராசய
நராதிபதி தருமமெனவே
நளினமுக தேசயன் மகிழ்வீர செட்டிதிரு
நாள்நடத் தினமகிமையே. (204)

பாடற்பொருள்:

வீரசெட்டி அரசர் சிக்கதேவராச உடையார் தர்மமாக ஆலவட்டக் குடை, விசிறிகள், கண்ணாடி, கொடி, ஆடைகள், மகரதோரணம், தேர் அலங்காரம், தீப்பந்தங்கள், வாண வகைகள், பட்டு வகைகள், வெண்மையான சந்திரகாவிக் குடை, வெண்சாமரை, இசைக் கருவிகள், விருது பாவாடைகள், பொன், நவமணி ஆபரணங்கள், பொன் மாலைகள், பூமாலைகள், வேலவர், அர்த்தநாரீசுவரர் புராண வேள்வி ஆகியவற்றைத் தேசய்யன் மகிழக் கொடையாக அளித்தார்.

★

அரவகிரி ஈசர்வடி வேலவரும் மகிழவே
அங்கரங் கமுமாகவே
அபிடேக நைவேத்தி யங்கள்பணி யாரவகை
ஆயிர மணித்தீபமும்

பரிவுபெறு பதினாறு வகையினுப சாரமும்
பலமாச பூசைவகையும்
பத்திபெறு கார்த்திகையில் இருலட்ச தீபமும்
பன்மறை முழங்குசெபமும்

விரிவுபெறு ருத்ராபி டேகமட தருமமும்
மேவுசத் திரசாலையும்
மேளதா ளம்பரத கீதமும் நிருத்தமும்
மேம்பட நடத்திவருமால்

திருவளரு மார்பகன் தேவப்ப ராசயன்
சித்தமது மகிழ்தேசயன்
செங்கோல் நடத்திவரு கச்சிரா சன்வீர
செட்டிசெய் திடுசரிதையே. (205)

பாடற்பொருள்:

கச்சிராசன் வீரசெட்டி சகல வைபவம் என்று கூறப்படும் அங்கரங்கமான அலங்காரம், அபிடேகம், நைவேத்தியம், பணியார வகை, ஆயிரமணித் தீபம், சோடச உபசாரம் என்னும் பதினாறு வகை உபசாரம், மாத பூசைகள், இரண்டு லட்சம் கார்த்திகை தீபம், பல வேதங்கள் ஒலிக்கும் செபம், ருத்ராபிடேகம், மடங்கள், சத்திரம், சாலைகள், மேளதாளம், பரதநாட்டியம், இசை, நாட்டியம் இவை அனைத்தையும் சிறப்பாக நடத்தினார்.

★

குணமுள கெம்ப ராசன் கோதைவாழ் குருக்கள் மாரை
பணமென நெருக்க ஓடிப் பருத்திநா டணுகு வோரை
மணமுடன் அழைத்து வந்து வலக்கரங் கொடுத்து வீரன்
பணிமலைப் பரனைப் பூசை பண்ணுவீர் என்று வைத்தான்.
(206)

பாடற்பொருள்:

ஒருமுறை கெம்பராசன் என்பவர் திருச்செங்கோட்டுக் குருக்களிடம் பணம் வேண்டும் என்று கேட்கக் கொடுக்க இயலாமல் குருக்கள் பலர் பருத்திப்பள்ளி நாடு செல்ல முயன்றனர். வீரசெட்டி அவர்களை அழைத்து ஆதரித்து வேண்டிய பணம் உதவி திருச்செங் கோட்டில் தொடர்ந்து அவர்களைப் பூசை செய்யச் செய்தார்.

★

தேசய துரைதா பித்த தேசியீ சுரருக் கென்று
பூசனை புரியக் கோதைப் பூசுரர் மனது மேவ
ஆசையுள் ளளவும் தந்தே அமுதமும் அளித்தெந் நாளும்
நேசமாய் வீர செட்டி நிலைபெற நடத்தி னானே. (207)

பாடற்பொருள்:

தேசய்யன் பிரதிட்டை செய்த தேசியீசுபரருக்குப் பூசை செய்வதற்காகக் குருக்களுக்கு வேண்டிய பொருளும், அமுதுபடிக்கு வேண்டியனவும் தந்து தொடர்ந்து என்றென்றும் பூசை நடைபெற வீரசெட்டி ஏற்பாடு செய்தார்.

ஏழூர் தேசிநாராயணப்பெருமாள் கோயில் இத்தேசய்யன் திருப்பணி செய்ததால் தேசிநாராயணர் எனப்பட்டார். நானாதேசி வணிகர் திருப்பணி என்றும் கூறுவர்.

★

தேசய்யன்

வாங்குடனே சூரி மடலும் குடைவிசிறி
பாங்குடனே வெள்ளியிலே பாலித்தான் - தேங்குபுகழ்
சிக்கதே வப்பரசன் சீமான் தருமமென்றே
பக்குவமாய்த் தேசயபூ பன். (208)

பாடற்பொருள்:

சிக்கதேவராச உடையார் தருமமாகத் தேசய்யன் வெள்ளியினால் செய்யப்பட்ட வளைவான விபூதி மடல், குடை, விசிறி ஆகியவைகளை நன்றாகச் செய்து கொடுத்தார்.

★

வீரசெட்டி

சாதி நாயகன் எழுகரை நாடனைச் சதாசிவ குரவோரை
வேத நாயகக் குருகுலோத் துங்கனை விரிவொடு பொருளீந்து
கோதை நாயகர் பூசனை புரிந்திடக் குருவென அபிடேகம்
நீதி நாயகன் வீரபூ பதியிவை நிறைவுற முடித்தானே. (209)

பாடற்பொருள்:

எழுகரை நாட்டு நம்பி என்ற சதாசிவ பண்டிதர், வேதங்கள் கற்ற குலோத்துங்க பண்டிதர் ஆகியவர்கட்கு மிகுதியான பொருள் தந்து கோயிலில் பூசை செய்யக் குருவாக வீரசெட்டி அபிடேகம் செய்து நியமித்தார்.

★

தேவப்பராயர், தேசய்யனுக்கு வாழ்த்து

நிலமுள்ள மட்டும் புரக்கின்ற தேவப்ப நீதிமன்னன்
குலமுள்ள மட்டும் தழைத்தேறுந் தேசயன் கோத்திரமும்
பலமுள்ள மட்டும் பெருங்கோதை மேல்வைத்த பட்சத்தினால்
நலமுள்ள மட்டும் நினைப்போம் புகழும் தருமமுமே. (210)

பாடற்பொருள்:

திருச்செங்கோட்டின் மீது வைத்த பேரன்பு காரணமாக, நில உலகை ஆட்சி புரியும் சிக்கதேவராச உடையாரையும், தேசய்யன் சந்ததியாரையும் உலகம் உள்ளவரை வாழ்க என்று வாழ்த்துவோம்.

★

மராட்டிய சாம்போசி - கெங்கோசி

செஞ்சொல்பெறு கலியுக சகாத்தமா யிரமீது
சேருமறு நூற்றைந்தினில்
சீரான துந்துபிச் சித்திரைத் திங்களில்
சிறந்தசாம் போசிமகிபன்

தஞ்சமென வேஅருதி மன்னவனை வரவிடத்
தனதுபுண் ணியமாகவே
சர்ப்பகிரி அரனுக்கு முன்னூறு கிராமங்கள்
சருவமா னியமாகவே

கஞ்சனென மாலெனப் பூசனை புரிந்தனன்
கனசங்க கிரிதுருகமும்
கட்டிரா தாபுரம் கட்டிமது ரைக்கரசர்
கனபட்ட மும்கட்டினன்

விஞ்சுபுகழ் அரவகிரி யீசரிட திருவிழா
விட்டல பலோராயனும்
மேன்மையொடு சொன்னபடி கெங்கோசி பூபதி
விரிவுற நடத்தினானே. (211)

பாடற்பொருள்:

சாலிவாகன சகம் 1605 துந்துபி வருடம் (கி.பி.1683) சித்திரை மாதம் சாம்போசி மன்னன் அருதி மன்னவன் மூலம் தனது புண்ணியமாக திருச்செங்கோட்டு ஈசுவரனுக்கு முன்னூறு கிராமங்களை மானியமாக விட்டார். திருமாலைப் போல், பிரமனைப் போல் சிவபெருமானைப் பூசை செய்தார். சங்ககிரி, தாராபுரம், மதுரை முதலிய பகுதிகளை வென்று ஆட்சி நடத்தினார்.

திருச்செங்கோட்டு ஈசுவரன் திருவிழாவை விட்டலபலோ ராயர் கூறியபடி கெங்கோசி மிகவும் சிறப்பாக நடத்தினார்.

மராட்டிய சிவாஜியின் பேரன், ஷாஜியின் மகன் சாம்போசி (1680-1689) சிக்கதேவராச உடையாரை (1673-1704) வென்று கொங்கு நாட்டிலும் அதிகாரம் செலுத்தினார். அவர் காலத்தில் பல மராட்டிய அதிகாரிகள் சங்ககிரியில் அதிகாரம் செய்தனர்.

★

வீமோசி கோவிந்த பண்டிதர்

அம்புவி புரக்கவரு சாம்போசி தருமம்என
அருதிபூ பதிமகிழவே
அந்தணன் விட்டல பலோராயர் கெங்கோசி
அன்புடன் நடத்தும்எனவே

உம்பர்தொழும் அர்த்தநா ரீசரிட சந்நதியை
உண்டாக வகைசெய்தனன்
உயர்படி நடத்தினன் சர்வமா னியமாக
ஊரனைத் தும்தந்தனன்

தம்பமென வேகுரவர் தானிகர் பரிசனர்கள்
சதுர்மறை வலோர்யாவரும்
சந்தோட மாகவே தாய்தந்தை போல்வந்து
சகலவரிசை களுமுதவினன்

நம்பின சனங்கள்தனை நன்றாய் நடத்தினன்
நாலுமறை ஓதுநிபுணன்
நாகரீ கன்புகழ் வீமோசி கோவிந்தர்
நானிலந் தனில்வாழ்கவே. (212)

பாடற்பொருள்:

சாம்போசி மன்னவன் தருமம் என அருதிராசன் மகிழ அன்புடன் நடத்துக என்று விட்டலபலோராயர், கெங்கோசி ஆகியோர் கூற வேதங்கள் கற்ற வீமோசி கோவிந்தர் அர்த்தநாரீசுவரர் சந்நதியில் பலவகையான தர்மங்களைச் செய்தார். படித்தரங்கள் தந்தார். சர்வமானியமாகப் பல ஊர்களைத் தந்தார். குருக்கள், தானிகர், பரிசனங்கள், வேதம் வல்லோர் யாவரும் மகிழ்ந்து வாழத் தாய்-தந்தை போல் வந்து சகல வரிசைகளும் தந்தார். நம்பின அனைவரையும் நன்றாக நடத்தினார்.

★

பொங்கரவ கிரிஅர்த்த நாரீசர் சந்நதிப்
பூசனை திருப்பணிகளும்
புகலரிய ருத்திராபி டேககட் டளைகளும்
பொன்னிநதி உதகங்களும்

தெங்குலவு பலசோலை வாவிகூ வங்களும்
தெருவீதி முகபத்திரமும்
சிகரகோ புரம்மகா மடம்அன்ன சத்திரமும்
திருவிழா வைபோகமும்

மங்கள கரங்களொடு தினம்மாச உற்சவமும்
மகரதோ ரணவாசலும்
மன்னுதின பூசைபதி ணாறின்உப சாரமும்
மருவுபல பலதருமமும்

கொங்குலவு சாம்போசி தருமமென வேஅரிதி
கோமான் உரைத்தபடியே
குணமருவு கெங்கோசி மனம்மேவு வீமோசி
கொற்றவன் நடத்தினானே. (213)

பாடற்பொருள்:

சாம்போசி மன்னர் தர்மமாக அருதி மன்னவன் சொல்படி கெங்கோசி மனம் மகிழ வீமோசி பண்டிதர் அர்த்தநாரீசர் சந்நதிப் பூசை, திருப்பணி, ருத்திராபிடேகக் கட்டளை, அபிடேகத்திற்குக் காவிரி நீர், சோலை, குளம், கிணறு, தெருக்கள், தெருக்களின் முகப்பு, கோபுரம், மடம், அன்னசத்திரம், திருவிழா வைபவங்கள், நாட்பூசை, மாதப் பூசை, தோரணவாசல், சோடச உபசாரம், பல தருமங்கள் இவை யனைத்தையும் சிறப்பாகச் செய்தார்.

★

மன்னருக்காகப் பல அலுவலர் கொடை

தாரணி புரக்கவரு சாம்போசி மன்னவன்
தனதுபுண் ணியமாகவே
சர்ப்பகிரி ஈசருக் கேஅருதி பூபதி
சந்திரகா விச்சரிகையும்

ஏர்பெறு புயாசலன் விட்டல பலோராயன்
இயல்சந்திர காவிசரிகை
எண்டிசை மதித்தசந் தோசியொரு துகிலாடை
இன்பமுட னேதந்தனன்

காரணிக அவதார கோவிந்த வீமோசி
கட்டுவர் ணத்துகிலுடன்
கம்பியிரு சேலையும் கனகப் பதக்கமும்
கனகதுரா யும்தந்தனன்

வாரணியும் உமைபாகர் சோமசுக் கிரவார
மருவுபடி வில்வார்ச்சனை
மகிழ்வுற நடத்தினன் பிறையாயி ரந்தொழுது
மைந்தரொடு மிகவாழ்கவே. (214)

பாடற்பொருள்:

சாம்போசி மன்னரின் புண்ணியமாக இறைவனுக்கு அருதிபூ।தி சந்திரகாவிச் சரிகை கொடுத்தார். விட்டலபலோராயர் ஒரு சந்திரகாவிச் சரிகை கொடுத்தார். சந்தோசி ஒரு துகிலாடை கொடுத்தார். வீமோசி கோவிந்த பண்டிதர் கட்டுவர்ணத் துகிலும், இரு கம்பிச் சேலையும், பொற்பதக்கமும், பொன்னாடையும் தந்தார். அத்துடன் அர்த்தநாரீசுவரர் சந்நதியில் திங்கட்கிழமை, வெள்ளிக் கிழமையில் வில்வ அர்ச்சனையும் செய்தார்.

★

வீமோசி கோவிந்த பண்டிதர்

நந்தியா தூப தீபம் நடத்திவாத் தியங்கள் வேதம்
சந்தியில் மூன்று நூறு தீபமும் தயவாய் ஏற்றி
புந்தியே மகிழ்வீ மோசி பூசையீ ரெட்டும் கோதை
எந்தையார் தமக்கன் பாக இயல்பொடு நடத்தி னானே. (215)

பாடற்பொருள்:

வீமோசி திருச்செங்கோட்டுக் கோயிலில் நந்தா தீபம் வைத்து, வாத்தியங்கள் வாசிக்க ஏற்பாடுசெய்து, வேதம் ஓதச் செய்து, சந்திகளின்போது முன்னூறு விளக்கேற்றிப் பூசைகளைப் பதினாறு வகையாக நடத்தச் செய்தார்.

★

தருநாட னாகிய சாம்போசி ராசன் தருமம்என்றே
குருநாட னாம்எங்கள் வீமோசி பண்டிதர் கோதையிலே
ஒருநாளும் இல்லை எனஆ வணியில் உயர்பெரிய
திருநாள் நடத்திவைத் தான்மூன் றுலகமும் சிந்திக்கவே. (216)

பாடற்பொருள்:

சாம்போசி மன்னன் தருமம் என்று எங்கும் எப்பொழுதும் இல்லை என்று கூறும்படியாக ஆவணித் திருவிழாவைத் திருச்செங் கோட்டில் வீமோசி நடத்தினார்.

★

பரிமள வல்லி பாத பாடகம் சிலம்பு பட்டம்
புருவநேத் திரம்கி ரீடம் புகழஉண் டாக்கி ஈந்து
முருகவேள் கயிலா யப்பர் முகமுறு பட்டம் சாத்தி
மருவுவீ மோசி மன்னன் மைந்தர்க ளுடனே வாழ்ந்தான். (217)

பாடற்பொருள்:

கயிலாசநாதர் தேவியாகிய பரிமளவல்லிக்குப் பாத அணி, சிலம்பு, பட்டம், கிரீடம் இவைகளைக் கொடையாகத் தந்து முருகன், கயிலாயநாதர் ஆகியோருக்கும் வீமோசி பட்டம் சாத்தினார்.

★

சாமராசு கண்டோசி

கோதையர னுக்கிரண் டபிசேக கலசமும்
குலவுகண் டிகையொன்றுடன்
குழிவுறு படிக்கமொரு நாலுமுத் தட்டமும்
கொண்டுபரி வொடுதந்தனன்
மாதுலவு பரிவட்ட வகைதிரைச் சீலையும்
வரிசையுட னேதந்தனன்
மன்னிரத முட்டியும் கட்டியே தினபூசை
மாசபூ சையும்செய்தனன்

நீதியொடு குரவோர்கள் மறையோர்கள் தானிகர்
நிறைபரி சனர்அனைவரை
நேசமுட னேயினிது சம்பளம் சாதங்கள்
நிறைவேற அருள்செய்தனன்
வேதியர் குலோதயன் கெங்கோசி ராயணன்
மேவுமணி யம்செய்யுநாள்
வீறுபுனை சாமராசு கண்டோசி மன்னவன்
மேதினியில் மிகவாழ்கவே. (218)

பாடற்பொருள்:

கெங்கோசி ராயணன் மணியம் செய்யும்பொழுது சாமராசு கண்டோசி என்பவர் திருச்செங்கோட்டு இறைவர்க்கு இரண்டு அபிடேக கலசம், ஆபரணச் செப்பு ஒன்று, அபிடேக நீர்ப்பாத்திரம் நான்கு, மூன்று தட்டம், பரிவட்ட வகைகள், திரைச்சீலை இவைகளைக் கொடுத்தார். தேர் முட்டி கட்டி நாட்பூசை, மாதப்பூசை இவைகளைச் சிறப்புடன் செய்தார். குருக்கள், அந்தணர், தானிகர், பரிசனங்கள் ஆகியோரை அன்புடன் நடத்தி சம்பளம், சாதம் இவற்றை வழங்கச் செய்தார்.

★

வாசவனொப் பனையானோன் கெங்கோசி பாற்கரய்யன்
மனது மேவப்
பூசுரர்தன் குலதிலகன் சாமராசு கண்டோசி
புகழ்செங் கோட்டில்
ஈசருக்குத் திருப்பணியும் திருநாளும் படித்தரமும்
ஏற்ற மாக
நேசமுட னேநடத்தித் தருமமுடன் புகழைநிலை
நிறுத்தி னானே. (219)

பாடற்பொருள்:

கெங்கோசி பாற்கரய்யன் விரும்பிய வண்ணம் சாமராசு கண்டோசி திருச்செங்கோட்டில் கோயில் திருப்பணிகள், திருநாட்கள், படித்தரம் இவைகளை மிகவும் சிறப்பாகச் செய்தார்.

★

வீமோசி கோவிந்த பண்டிதர்

சீர்பொ ருந்திய செங்கோடை ஈசனார்
சித்தம் மேவு திருப்பணி மாலையைப்
பார்பொ ருந்து சதாசிவ பண்டிதன்
பாடி என்றும் படித்திடத் தக்கதாய்
ஏர்பொ ருந்திய சம்பளம் ஆறுபொன்
இரண்டு சாதம் உம்பள மாகவே
தார்பொ ருந்திய வீமோசி பண்டிதன்
தான்அ ளித்தனன் நீடூழி வாழ்கவே. (220)

பாடற்பொருள்:

திருச்செங்கோட்டு ஈசனார் விரும்பும் திருப்பணிமாலையைச் சதாசிவ பண்டிதர் பாடிப் பலரும் படிக்கத் தக்கதாகச் செய்யச் சம்பளமாக ஆறு பொன்னும், வெகுமானமாக இரண்டு சாதமும் வீமோசி பண்டிதர் அளிக்கச் செய்தார்.

★

கட்செவிக் கிரீசருக்குக் காலசந்திக் கட்டளையும்
பட்சமுடன் பாலூற்றும் பண்ணவே - தச்சகனாம்
பங்கயஞ்சேர் வீமோசி பண்டிதரா யன்பாிவாய்
தன்கையிலே தந்தான் தனம். (221)

பாடற்பொருள்:

திருச்செங்கோடு அர்த்தநாரீசுவரருக்குக் காலை நேரப் பூசைக் கட்டளை நடத்தவும், அப்பூசையில் பாலாபிடேகம் செய்யவும் மிக அன்புடன் வீமோசிபண்டிதர் மூலப்பொருளைக் கொடையாகத் தந்தார்.

★

சீர்மேவு கலியுக சகாத்தமா யிரமீது
சேருமறு நூற்றாறினில்
செல்லுருத் ரோற்காரி கார்த்திகைத் திங்களில்
தேதியொரு பதினெட்டிலே

ஏர்மேவும் ஆதிவா ரம்தசமி கூடிவரும்
எழிலுத்தி ரட்டாதிநாள்
ஏரகக் கயிலாயர் பலிபீட மும்குறடும்
இன்பமொடு தாபித்தனன்

தார்மேவு கெங்கோசி பாற்கரன் மனமேவு
தயவுவீ மோசிமகிபன்
தாரணி புரக்குநாள் அனைவோரும் மகிழவே
சைவகுரு குலசேகரன்

பார்மேவு புகழர்த்த நாரீச பண்டிதன்
பரிபுபெறு தெய்வநாயகம்
பாலனெனு நாயகம் தந்தபெரி ய்யயபூ
பதிதருமம் ஈடேறவே. (222)

பாடற்பொருள்:

சிறப்புகள் பொருந்திய சாலிவாகன சகாப்தம் ஆயிரத்து அறுநூற்று ஆறு ருத்துரோத்காரி வருடம் கார்த்திகை மாதம் பதினெட்டாம் தேதி ஞாயிற்றுக்கிழமை தசமி திதி கூடிய உத்திரட்டாதி நட்சத்திரத்தன்று (18.11.1683) ஏரகம் ஆகிய திருச்செங்கோடு கயிலாயநாதர் கோயிலில் பலிபீடம், குறடு இவைகளை வீமோசி பண்டிதர் நிறுவினார்.

கெங்கோசி பாஸ்கரனின் அன்புக்குப் பாத்திரமான வீமோசி ஆட்சியில் எல்லோரும் மகிழ குரு குலசேகர பண்டிதர், அர்த்தநாரீச பண்டிதர் மகன் பெரியய்ய பூபதி ஆகியோர் தர்மத்தை நடத்தி வைத்தனர்.

★

அர்த்தநாரீச பண்டிதர் மகன் பெரியய்யன்

சைவ சேகரன் செங்கோடை யாதிபன்
தானு வாமர்த்த நாரீச பண்டிதன்
தெய்வ நாயகம் அன்பான நாயகம்
செல்வ மகனான பெரியய்ய பூபதி
மெய்வி யாபகர் கயிலாயர் சந்நதி
மேவு பத்திர பீடக் குறடுதன்
கைவி யாபக தனங்கொண்டு கட்டினன்
காசி பன்குலம் நீடூழி வாழ்கவே. (223)

பாடற்பொருள்:

அர்த்தநாரீச பண்டிதர் மகன் பெரியய்யன் கயிலாசநாதர் சந்நதியில் தன் சொந்தப் பொருளைக் கொண்டு 'பத்திர பீடக் குறடு' கட்டினார். (பத்திரபீடக் குறடு என்பது, பூ, மாலைகள் வைக்கும் மேடையாகும்.)

★

சவுடையன் மகன் மரிராசன்

சீர்மருவு கலியுக சகாத்தமா யிரமீது
சேரும்அறு நூற்றினுடனே
செல்வருட முப்பதின் மேல்சர்வ தாரியில்
சிங்கமா தம்தன்னிலே
ஏர்மருவு முப்பத்தொ ராம்தேதி பூசமும்
இன்பமங் களவாரமும்
எழில்பெறு துவாதசி கவுலவஞ் சிவயோகம்
ஏற்றநாள் செங்கோட்டிலே

ஆர்மருவு செஞ்சடைக் கைலாச நாகீசர்
ஆதித்தர் ஆதியாக
ஆதிகே சவர்வரையில் அஷ்டபந் தனமிக்க
அன்புடன் செய்வித்தனன்
பார்மருவு கீர்த்திபுனை கண்டீரவ நரசய்ய
பார்த்திபன் தருமமெனவே
பஞ்சவர் சகாயனா கியசவுட ராசனருள்
பாலகன் மரியேந்திரனே. (224)

பாடற்பொருள்:

சாலிவாகன சகாப்தம் 1630 சர்வதாரி வருடம் ஆவணி மாதம் 31ஆம் தேதி பூச நட்சத்திரம் செவ்வாய்க்கிழமை துவாதசி திதி கவுலவ கரணம் சிவயோகம் கூடிய நாளில் திருச்செங்கோட்டில் கயிலாசநாதர், நாகீசர், ஆதித்தர் முதல் ஆதிகேசவப் பெருமாள் வரை அனைத்துக் திருமேனிகட்கும் அஷ்ட பந்தனம். மைசூர் மன்னர் கண்டீரவ நரச ராசாவின் (1704-1714) தர்மமாக சவுடராசன் மகன் மரிராசன் செய்தார். (அஷ்டபந்தனம் - எண்வகைப் பொருள் கூட்டிய சாந்தால் படிமங்களை நிறுவல்). (31-08-1708)

★

செப்பும் சகாத்தத்தில் ஆயிரத் தறுநூறு
சேருமுப் பத்தொன்றினில்
திகழும் விரோதியில் சித்திரைத் திங்களில்
தேதியொரு பதினெட்டிலே
வைப்புற்ற வெள்ளியும் திரிதையுடன் அனுசமும்
வரிசைபெறு மேனாளிலே
மன்னவன் கண்டீரவ நரசரா சேந்திர
மகிபாலன் அருள்செய்யவே

அப்பணையில் இருநூறு முந்நூறு பொன்னுடன்
ஐஞ்நூறு பொன்கூட்டியே
ஆயிரம் பொன்னுக்கு அர்த்தநா ரீசருக்கு
அதிகடூ சனைசெய்தனன்
இப்புவியு ளோர்பரவு சங்ககிரி தன்னிலே
இயல்அரசு புரியுநாளில்
இன்பமிகு சவுடையன் கெற்பபரி பாலகன்
இந்திரதரு மரிராசனே. (225)

பாடற்பொருள்:

சாலிவாகன சகாப்தம் 1631 (1709) விரோதி வருடம் சித்திரை மாதம் பதினெட்டாம் தேதி வெள்ளிக்கிழமை திரிதிகை திதி அனுச நட்சத்திரம் பெற்ற நல்ல நாளில் மைசூர் மன்னர் கண்டீரவ நரசராசாவின் அருளால் சவுடைய ராசன் மகன் மரிராசன் சங்ககிரியில் அதிகாரியாக இருந்தபோது ஆயிரம் பொன் செலவு செய்து அர்த்தநாரீசருக்குச் சிறப்பான பூசை செய்தார். (15-04-1709)

மன்னர் இரண்டாம் கண்டீரவ நரசராசா காலம் 1704-1714.

★

திருமருவு கலியுக சகாத்தமா யிரமீது
சேரும்அறு நூற்றினுடனே
செல்வருட முப்பதுடன் ஒன்பதேர் விளம்பியில்
சேட்டமா சந்தன்னிலே

குருமருவு தேதிபதி னைந்தினில்வெள் ளிக்கிழமை
குலவிய துவாதசியநாள்
கோதையம் பதியில்வாழ் கைலாய நாதரிட
கோபுரந் தனைமுடித்தனன்

தருமருவு நிதியங்கள் சதுருபா யத்திலும்
தானாக வேயீந்தனன்
தாம்பிரக்கல சத்தின்மேல் பொன்பூசி அதன்மீது
தாபனம் செய்வித்தனன்

மருமருவு மகிசூரில் வாழ்கிருஷ்ண ராசேந்திர
மகிபால யன்தருமமாய்
மன்னுபுகழ் சவுடையன் கற்பபரி பாலகன்
மரிராச மகிபாலனே. (226)

பாடற்பொருள்:

சாலிவாகன சகாப்தம் 1639 விளம்பி வருடம் ஆனி மாதம் வியாழக் கிழமை பதினைந்தாந்தேதி வெள்ளிக்கிழமை துவாதசி திதி மைசூர் கிருஷ்ண ராச உடையார் (கி.பி.1717) தருமமாக சவுடையன் மகன் மரிராசன் திருச்செங்கோடு கயிலாசநாதர் கோபுரப் பணியை முடித்தார். தேவையான நிதிகளைத் தானாகவே அளித்தார். செம்புக் கலசத்தின் மீது பொன் முலாம் பூசி நிறுவினார். (14-06-1718)

மன்னர் முதலாம் கிருஷ்ணராச உடையார் காலம் 1714-1732.

★

அருணாத்திரி மகன் அப்பய்யன்

மாகனம் பெற்ற மரிராச பூபன் மனதுமெச்சும்
நாகரி கம்பெறு மாஅரு ணாத்திரி நல்குமைந்தன் .
கோகந கப்புயன் அப்பய பூபன் குணமுடனே
மோகன மாலை தரித்தான்செங் கோட்டு முதல்வருக்கே. (227)

பாடற்பொருள்:

மரிராசன் மனம் மெச்சும் அருணாத்திரி என்பவர் மகன் அப்பய்யன் செங்கோட்டு இறைவருக்கு மோகன மாலையைக் கொடையாகக் கொடுத்தார்.

★

நல்லூர் தண்டி மகன் கனகசபை

யோகாதி பர்தொழு நாகீச னார்தம் உளமகிழ
நாகா பரணம் தனைத்தரித் தான்தொண்டை நாடன்மிக்கத்
தியாகா திபனெங்கள் நல்லூருத் தண்டி தெரிந்தளித்த
வாகான கீர்த்தி கனக சபையெனும் மன்னவனே. (228)

பாடற்பொருள்:

திருச்செங்கோட்டு நாகீசருக்கு நல்லூர் தண்டி என்பவர் மகன் கனகசபை நாகாபரணத்தைக் கொடையாக அளித்தார்.

★

உல்லள்ளி சென்னராச சிக்கரசன்

செப்பும் சகாத்தத்தில் ஆயிரத் தறுநூறு
சேருநாற் பத்தெட்டின்மேல்
செல்லாண்டு பிலவங்க வையாசி நடைபெறுந்
தேதியிரு பத்துமூன்றின்

மெய்ப்புற்ற சோமவா ரஞ்சதுர்த் தசியொடு
விசாகநட் சத்திரதினமும்

மேவுசிவ யோகமும் கௌலவ கரணமும்
மென்சிங்க லக்கினமதனில்

அப்பர்தென் கைலாய வரையென்னும் நாககிரி
அர்த்தநா ரீசுரர்க்கே
ஆனதொரு பெரியரத முண்டாக்கி உற்சவம்
அன்புடன் தான்செய்தனன்

ஒப்பமிகு மைசூரில் வாழ்கிருட்ண ராசேந்திர
உடையர்புண் ணியமாகவே
உல்லள்ளி வாழ்சென்ன ராசசிக் கேந்திரன்
உலகுதனில் மேன்மைபெறவே. (229)

பாடற்பொருள்:

சாலிவாகன சகாப்தம் 1648 பிலவங்க வருடம் (1726) வைகாசி மாதம் இருபத்து மூன்றாம் தேதி திங்கட்கிழமை சதுர்த்தசி திதி விசாக நட்சத்திரம் சிவயோகம் கௌலவ கரணம் சிம்மலக்கினத்தில் மைசூர் மன்னர் கிருஷ்ணராச உடையார் தர்மமாக உல்லள்ளியில் வாழ்கின்ற சென்னராச சிக்கரசன் அர்த்தநாரீசுவரருக்குத் தேர் உண்டாக்கித் தேரோட்ட உற்சவமும் நடத்தினார்.

★

அர்த்தநாரீச பண்டிதர் மகன் பெரியய்யன்

செஞ்சொல் சேர்அர்த்த நாரீச பண்டிதர்
தெய்வ நாயகம் அன்பான நாயகம்
தஞ்ச மான பெரியய்ய பூபதி
சர்ப்ப வெற்பின் திருப்பணி மாலையை

விஞ்சை மன்னர் சபைக்கரங் கேற்றியே
மேவு மும்பளம் சம்பளஞ் சாதமும்
அஞ்ச லாக வரிசையும் தந்தனன்
ஆயி ரம்பிறை கண்டே யிருக்கவே. (230)

பாடற்பொருள்:

அர்த்தநாரீச பண்டிதர் மகன் பெரியய்யன் திருச்செங்கோட்டுத் திருப்பணி மாலையை அரங்கேற்றிச் சதாசிவ பண்டிதருக்குச் சம்பளம், வெகுமானம், சாதம் இவைகளை அளித்தார்.

★

தெய்வசிகாமணி பண்டிதர் மகன் குருக்கள் சீனிவாசய்யன்

சைவசிகா மணிமறையோன் ஆலம் பாயன்
தழைக்கவந்தோன் கவிவிதுரன் தான சோமன்
தெய்வசிகா மணிக்குரவன் உதவு பாலன்
சீனிவா சயமகிபன் திருச்செங் கோட்டில்
அய்வர்சகா யனுக்குவட கடலாம் பாலூற்று
அதனைவிரிவு ஆக்கிவைத்துப் படியும் கட்டி
கைவசகாஞ் சனம்கொடுத்துப் பரற்கு மாகக்
கனவமுத தானபலன் கைக்கொண் டானே. (231)

பாடற்பொருள்:

ஆலம்பாய கோத்திரம் தெய்வசிகாமணி பண்டிதர் மகன் சீனிவாசய்யன் திருச்செங்கோட்டில் கிருஷ்ணன் பெயரில் வடகடல் போல் இருந்த பாலூற்றை விரிவு செய்து படிகள் அமைத்தார். தன் கைப்பொருளாகப் பொன் கொடுத்துச் சிவபெருமானுக்கு அமுதுபடி அளித்தார்.

★

மதுரை நாயக முதலியார்

முதிரு மாமறைக் கோதையம் பதிவரு
முக்கணீ சுரனார்க்கு
சதுர னாகிய சொக்கலிங் கேந்திரன்
தனதுபுண் ணியமாக

விதுர னாகிய சீனிவா சயன்தமிழ்
விந்தையன் பொடுநாடி
மதுரை நாயகன் மாந்தையில் ஒருபது
மாநிலம் தந்தானே. (232)

பாடற்பொருள்:

திருச்செங்கோட்டில் சிவபெருமானுக்குச் சொக்கலிங்கேந்திரன் புண்ணியமாகச் சீனிவாசன் மாந்தையில் பத்துமா நிலம் கொடையளித்தார்.

இவர் மதுரை சொக்கலிங்க நாயக்கர் காலத்தவர் (1659-1682).

★

வீமோசி கோவிந்த பண்டிதர்

பூமேவு கலியுக சகாத்தமா யிரமீது
போந்தஅறு நூற்றேழினில்
பொலிவுதரு ரத்தாட்சி மிதுனமா தம்தனில்
புண்ணிய முதல்தேதியில்

மாமேவு சுக்கிரவா ரந்துவா தசியோடு
மன்னும்அசு பதிசுகர்மம்
வளமான கவுலவம் தனுசுலக் கினமான
மங்கள முகூர்த்தத்திலே

கோமேவு சாம்போசி விட்டல பலோராயர்
குலவுகெங் கோசிமகிழும்
கோவிந்த வீமோசி தனதுஉபய மாகவே
கோதைமா நகரில்வாழும்

தேமேவு கயிலாய நாதர்ஒரு பாகம்உறை
தேவிபரி மளவல்லியார்
சிரமீது ரசிதக் கிரீடம் தரித்தனன்
செகமீது மிகவாழ்கவே. (233)

பாடற்பொருள்:

சாலிவாகன சகாப்தம் 1607 ரத்தாட்சிவருடம்(கி.பி.1685) ஆனி மாதம் முதல் தேதி வெள்ளிக்கிழமை துவாதசி திதி அசுபதி நட்சத்திரம் சுகர்மநாமயோகம் கவுலவகரணம் தனுசு லக்கினத்தில் நல்ல முகூர்த்தத்தில் சாம்போசி மன்னன் விட்டலபலோராயர், கெங்கோசி ஆகியோர் மகிழும்வண்ணம் வீமோசி பண்டிதர் தனது உபயமாகத் திருச்செங்கோட்டுக் கயிலாசநாதர் பாகம் உறைகின்ற தேவி பரிமள வல்லிக்கு வெள்ளிக்கீரிடம் செய்து தரிக்கச் செய்தார். (30-05-1685)

★

சேந்தமங்கலம் இராமச்சந்திர நாயக்கர்

அலைமேவு சடையர்உமை யொருபாகர் கோதைநகர்
அனதான மடதருமமும்
அபிடேக சந்தனமும் பொன்னிநதி மஞ்சனம்
அமுதுபடி ஐந்துகுறுணி

நலமேவு தயிர்கறி அமுதுஅத் தியானமொடு
நந்தவன மும்கூபமும்
நடனதாண் டவர்நூர புரம்கவரி துகிலாடை
நல்லகார்த் திகைதீபமும்

நிலமேவு சோழசிந் தாமணியி லேஐந்து
நெடியபுல் லூர்ஐந்துமா
நிகரில்நாட் டாமங்கை யோடுமுக வைந்துமா
நீதியரு வூர்ஐந்துமா

பலமான தூசியூர் தனில்ஐந்து மாநிலம்
பகர்உபைய மார்க்கவரியும்
பத்தியுட னேநடத்தி னன்இராமச் சந்திரபூ
பதிமனை தழைத்தேறவே. (234)

பாடற்பொருள்:

திருச்செங்கோட்டில் அன்னதான மடதர்மம், அபிடேக சந்தனம், காவிரி மஞ்சன நீர், ஐந்து குறுணி அமுதுபடி, தயிரமுது, கறியமுது, வேதம் ஓதுதல், நந்தவனம், கிணறு, நடராசர் பாதக்கிண்கிணி, கவரி, துகிலாடை, கார்த்திகை தீபம், சோழ சிந்தாமணி, புல்லூர், நாட்டா மங்கை, அருவூர், தூசியூர் ஆகிய ஊர் களில் ஐந்தைந்து மா நிலம், வணிகர் சுங்க வரி இவைகளைத் திருச்செங்கோடு அர்த்தநாரீசுவரருக்குச் சேந்தமங்கலம் இராமச்சந்திர நாயக்கர் கொடையாக அளித்தார்.

இம்மரபினர் விசுவநாத நாயக்கர் (1529-1564) காலத்தில் (1635) கோனூரில் ஆட்சியைத் தொடங்கிப் பின் தலைநகராக ஏழூர் நாட்டுச் சேந்தமங்கலத்தை அமைத்தனர். இவர்கள் கல்வெட்டுகள் கார்குடி, கடாரம், தூசூர், வரகூர், வாழவந்தி முதலிய ஊர்களில் கிடைக்கின்றன. மூத்த மகன் இராமச்சந்திரன் என்று பெயர் பெறுவார். 150 ஆண்டுகள் ஆட்சியில் 9 பாளையக்காரர் பெயர் தெரிகிறது. கோனூர், இம்மடி, தலைமலை, குளக்குடி, ராகவ, குறவஞ்சி, பங்காரு என்ற அடைமொழிகளோடு இராமச்சந்திர நாயக்கர் பெயர் வருகிறது.

★

சேந்தமங்கலம் கோனூர் இராமச்சந்திர நாயக்கர்

மாது சேர்புயன் இராமச் சந்திரன் பணிமலைவாழ்
நாத னார்மடம் பூசை நந்தா வனம்நடக்க
நீதி யாய்இலுப் பைக்குளம் பூதன் ஏரியையும்
ஈதல் செய்தனன் கோதையம் பதியூர் சிறப்பெய்துவே. (235)

பாடற்பொருள்:

கோனூர் இராமச்சந்திர நாயக்கர் திருச்செங்கோட்டில் மடம், நந்தவனம் ஆகியவை சிறப்பாக நடக்க இலுப்பைக் குளம், பூதன் ஏரி இவைகளைக் கொடையாக அளித்தார்.

★

தினசை சின்னம நாயக்கர்

திருமருவும் அரவகிரி ஈசருக்கு அமுதுபடி
தினமும்ஒரு பதுகறிகளும்
சிறுபயறு திருமாலை காவேரி மஞ்சனம்
திகழ்அடைக் காயும்இலையும்
தருமருவு தோணிமடம் அனதான மண்டபம்
தங்கும்அன் னத்துவசமும்
சைவமடம் நந்தவனம் தண்கூப மண்டபம்
தன்னில்ஆ வணிமூலமும்
மருமருவு மாசிவை யாசியில் விழாவினிய
மண்டபப் படிபூசையும்
மன்னுசங் கிரமபரி வேட்டைதீ பாவளியில்
வடிவான பரிவட்டமும்
குருமருவு வந்தியா பாடாண தீபமும்
கோவில்உள் பலதீபமும்
கோகனக வாவிசெறி தினசைவரு கிருஷ்ணயன்
குலவுசின் னமன்உபயமே. (236)

பாடற்பொருள்:

தினசை கிருஷ்ணய்யன் மகன் சின்னம நாயக்கர் திருச்செங் கோட்டு ஈசருக்கு அமுதுபடிக்காகத் தினம் 10 கறிகள், சிறுபயறு, திருமாலை, காவேரி மஞ்சனநீர், வெற்றிலை பாக்கு, தண்ணீர்ப் பந்தலோடு கூடிய மடம், அன்னதான மண்டபம், அன்னக்கொடி, சைவ மடம், நந்தவனம், கிணறு, ஆவணி மூல விழா, மாசி மக விழா, வைகாசி விசாக விழாக்கள், மண்டப பூசை, சங்கிரம பரிவேட்டை, தீபாவளியில் பரிவட்டம், மலடிகல்லில் கல்தீபம், கோயில்களில் தீபம் இவைகளைச் சிறப்பாகச் செய்தார்.

(தினசை- தேன்கனிக்கோட்டை)

★

தினசை செவிடு பெத்தய்ய நாயக்கர்

செப்பும் சகாத்தமா யிரமீது நானூறு
செல்லும்எழு பத்தைந்தினில்
திரமான பரிதாபி வருடமக ரத்திங்கள்
தேதிமுத லானசனியும்
வைப்புற்ற பஞ்சமியும் மீனலக் கினமான
வரிசைதரு மேனாளினில்
மணியம்ஓ வப்பனிடு வந்தியை அகற்றிஅதி
மன்னனுத் தாரமுடன்தான்

அப்பருயர் அர்த்தநா ரீசரிட பூசைஆ
லம்பாயர் காசிபரையும்
அழகான தளிகைதிரு மேனிகா வலர்இனிய
ரானசெங் குந்தருடனே
சர்ப்பகிரி கோதைநகர் தாபித்த னன்செவிடு
பெற்றயன் தினசைஅதிபன்
சந்திரா தித்தர்வரை திக்குவிச யம்செய்து
தாரணியில் மிகவாழ்கவே. (237)

பாடற்பொருள்:

தினசை அதிபரான செவிடு பெத்தய்ய நாயக்கர், சாலிவாகன சகம் 1475 பரிதாபி வருடம் (கி.பி.1553) தை மாதம் முதல் தேதி சனிக் கிழமை பஞ்சமி திதி மீன லக்கினம் பெற்ற நாளில் மணியம் ஓவப்பன் நியமித்த பூசை செய்பவர்களை நீக்கிச் சிறப்புடன் திருச்செங்கோட்டு அர்த்தநாரீசுவரருக்குப் பூசை செய்ய ஆலம்பாயரையும், காசிபரையும் நியமித்தார். தளிகையுடன் திருமேனி காவலராகிய செங்குந்தர் களையும் நியமித்தார்.

★

தினசை கொண்டடம ராசன்

ஒண்டொடிச்செந் திருத்தினசை கிருஷ்ணயன்சின் னமனுடை
உபயமாக
மண்டலமெண் புகழேறு குரோதிதுலாம் மாதம்நல்ல
வரிசையாகத்
தண்டமிழ்சேர் கோதையுமை பாகருக்குத் திருநாளில்
சாந்துசாத்தக்
கொண்டமரா சயன்இனிய வெள்ளியினால் கிண்ணிபண்ணிக்
கொடுப்பித்தானே. (238)

பாடற்பொருள்:

கொண்டடம ராசன் என்பவர் தினசை கிருஷ்ணய்யன், சின்னமன் இவர்கள் உபயமாகக் குரோதி வருடம் (1545) ஐப்பசி மாதம் திருச்செங்கோடு அர்த்தநாரீசுவரருக்குத் திருநாட்களில் சாந்து சாத்துதல் என்னும் நிகழ்ச்சிக்குப் பயன்பட வெள்ளியினால் கிண்ணம் ஒன்றைச் செய்து தன் உபயமாகக் கொடுத்தார்.

★

தினசை பெத்தய்ய நாயக்கர்

நாககிரிக்கு ஏழுகரை நாட்டுஉபய மார்க்கவரி
ஈகவகைக்கு ஒப்பம் எழுதினான் - பேகன்எனும்
துன்னுபுகழ்ப் பள்ளியப்பன் சொற்படிக்குத் தென்தினசைப்
பன்னுதமிழ்ப் பெற்றயபூ பன். (239)

பாடற்பொருள்:

திருச்செங்கோட்டுக்கு எழுகரை நாட்டு வணிகர்களின் சுங்க வரியை அளிக்கப் பள்ளியப்பன் சொற்படிக்குத் தினசை பெத்தய்யன் ஆணை வழங்கி ஒப்பமிட்டான்.

★

மாவை ஆட்கொண்டான் மகன் குமாரசாமி முதலியார்

நன்மைபெறு கலியுக சகாத்தம்ஆ யிரமிசை
நடக்கும்ஐஞ் ஞூற்றினுடனே
நலமான தொண்ணூற்றோடு ஒன்றுகீ லகம்மகர
நாள்இருப துடன்ஆறினில்

தென்மருவு திரவார மும்சதய மும்பெற்ற
திரிதிகைபரி யாயோகமும்
சீரான வாலமும் இடபலக் கினமுமாம்
சிறந்ததொரு மேனாளினில்

மன்முறைமை புரிவளவன் மாவைஆட் கொண்டவன்
மகிழ்குமா ரச்சுவாமி
வளர்அரவ கிரிமேலை வாய்தல்வட பாரிசம்
வருவிசுவ நாதர்தமையும்

இம்மையில் வரம்தரு விசாலாட்சி யும்பலியும்
இனியகண பதிநந்தியும்
இயைபினொடு பிரதிட்டை செய்தனன் பிறைஆ
யிரம்தொழுது மிகவாழ்கவே. (240)

பாடற்பொருள்:

சாலிவாகன சகாப்தம் 1591 கீலக ஆண்டு தை மாதம் 26ஆம் நாள் சனிக்கிழமையாகிய 23-01-1669 அன்று சோழநாட்டு மாவை ஆட்கொண்டான் மகன் குமாரசுவாமி முதலியார் என்பவர் திருச்செங்கோட்டு மலையில் மேற்கு வாயில் வடபுறம் அமைந்துள்ள விசுவநாதர், விசாலாட்சி, பலிபீடம், கணபதி, நந்தி ஆகியவற்றை எழுந்தருளச் செய்தார்.

★

கீலகம் தைஇரு பத்தாறின் மந்தன் கிழமைஅன்று
மேலக வாய்தல் வடஅரு கேவிசு வேசுரரை
மாலகம் செய்துஅருச் சித்தான் அரவ மலைமிசைபூ
பாலகன் மாவைக் குமாரச் சுவாமி பலன்பெறவே. (241)

பாடற்பொருள்:

மாவைக் குமாரசுவாமி கீலக ஆண்டு தை மாதம் 26ஆம் தேதி சனிக்கிழமை 23-01-1669 அன்று மேலை வாயில் அருகில் வடபுறம் விசுவநாதரை எழுந்தருளச் செய்து அருச்சனை செய்தார்.

★

பணிமலையில் வேலர்உமை பாகர்விசு வேசுரர்
படித்தரம் நடந்துவரவே
பரிவினொடு வெண்கலக் கிணறுநாற் பாங்கெல்லை
படியாதி பொத்தனூரும்
மணிகுலவு குண்டுக்கல் மகமையெழு கரைநாட்டு
மகமைமேல் கரைமகமையும்
வாங்கல்நிலம் ஆறுமா வும்பட்ட யந்தனை
வரைந்துகல் வெட்டும்எழுதி
அணிதவசு நித்தீச னுக்குதவி வதுவையுடன்
ஆச்சார்ய அபிடேகமும்
அரவகிரி தனிலோது வார்சம்ப ளக்கொல்லை
அனதான மடதருமமும்
கணிதிரம தானபர தேசிமுத் திரையின்அதி
காரமொடு தாபித்தனன்
காரணிக மாவைக் குமாரசுவா மித்துரைக்
காராள குலதீபமே. (242)

பாடற்பொருள்:

குலத்தின் தீபம் எனத் தோன்றிய மாவைக் குமாரசுவாமி திருச்செங்கோட்டில் செங்கோட்டு வேலர், அர்த்தநாரீசர், விசுவநாதர்

படித்தரம் நடத்த வெண்கலக் கிணறு நாற்பாங்கு எல்லையும் பொத்தனூர், குண்டுக்கல், எழுகரை நாடு, மேல்கரை மகமையும் வாங்கலில் நிலமும் அளித்து பட்டயம் எழுதிக் கல்வெட்டும் வெட்டினார்.

இவ்வறச் செயல்களை நித்தீசன் என்னும் கட்டளைப் பண்டாரம் நடத்துமாறு செய்து அவருக்குத் திருமணம் செய்வித்து, ஆச்சாரிய அபிடேகம் செய்து, ஓதுவார் சம்பளக் கொல்லை அளித்து அன்னதான மடம் ஏற்படுத்திப் 'பரதேசி முத்திரை' அதிகாரத்துடன் அவரை நிலை நிறுத்தினார்.

(இது முதல் திருச்செங்கோட்டில் 'ஓதுவார்' பணிக்கு ஒருவர் நியமிக்கப்படலானார். முன்பு 'தேவார நம்பி' எனப்பட்டம் பெற்ற அர்த்தநாரீசுவர பண்டிதரும், அவர் வழியினருமே அப்பணியைச் செய்தனர். இதற்குக் கல்வெட்டும் உண்டு என்று கோனார் கூறியுள்ளார்.)

★

அரவகிரி ஈசருக்கு அமுதுபடி அனுதினமும்
அய்யைந்தும் ஏழுதளிகை
ஆனகறி பயறுபடி ஆவின்நெய் பழம்வெல்லம்
அரும்அடைக் காயும்இலையும்

பரிவினோடு எண்ணெய்படி பழம்முப்பது இனியதயிர்
பாலும்எலு மிச்சம்பழம்
பசுவின்நெய் அரைப்படியும் மதுவரைப் படிமஞ்சள்
பலமொன்று சர்க்கரைபலம்

விரிவுபெறு காவேரி யுதகமொரு காவடியும்
மேவுசந் தனம்ஒருபலம்
வீறுகற் பூரசாம் பிராணிகள் வராகன்எடை
மிகுமஞ்ச ணத்திரவியம்

மருவமரு மாலைநற் கந்தமுட னேபுழுகு
மாறாமல் இவைதந்தனன்
மாவைஆட் கொண்டான் குமாரச் சுவாமிநதி
வங்கிச மகாமேருவே. (243)

பாடற்பொருள்:

மாவைக் குமாரசுவாமி முதலியார் திருச்செங்கோடு ஈசுவரனுக்கு ஒரு நாள் பூசைக்கு 25படி அமுதுபடிக்கும், ஏழு தளிகை, கறி, பயறு ஒரு படி, பசு நெய், பழம், வெல்லம், வெற்றிலை பாக்கு, எண்ணெய் ஒரு படி, முப்பது பழம், தயிர், பால், எலுமிச்சம்பழம், தேன் அரைப்படி, மஞ்சள் ஒரு பலம், சர்க்கரை ஒரு பலம், ஒரு காவடி காவிரி நீர், சந்தனம் ஒரு பலம், கற்பூரம், சாம்பிராணி ஒரு வராகன் எடை, மஞ்சணத் திரவியம் வாசனையுடைய பூக்களால் தொடுக்கப்பட்ட மாலை, வாசனையுடைய புழுகு இவைகளைத் தவறாமல் அளிக்கத் தக்க ஏற்பாடு செய்தார்.

★

ஆடரவ கிரிவேலர் சந்நதிமுன் ஒருமஞ்ஞை
அஞ்சடுக் குத்தீபமும்
ஆனதீ பங்கள்பல கிண்ணிபல தளிகைபல
அபிடேக கலசமணியும்

தேடரிய ஆலவட் டம்கவிகை கண்ணாடி
செப்புக் குடம்கண்டிகை
திருவாலி நீராசி தட்டுபல தூபமொடு
தீபதண் டுகள்கவரிகள்

நீடுதவ நித்தீச னுக்கும்இப் படிஈந்து
நியதிகள் மடமண்டபம்
நேயமட அடிமைபசு நந்தவன மும்தந்து
நிருவாக படிசம்பளம்

நாடரிய தானீகர் தன்வர்த்த னைக்கொல்லை
நன்றாக அருள்செய்தனன்
நன்மைபெறு மாவைக் குமாரசுவா மித்துரை
நதிகுல சிகாரத்நமே. (244)

பாடற்பொருள்:

மாவைக் குமாரசுவாமி முதலியார் திருச்செங்கோடு வேலவர் சந்நதி முன் ஒரு மயில் வாகனம், ஐந்தடுக்குத் தீபம், தீபங்கள், பல கிண்ணங்கள், பல தளிகை, பல அபிடேக கலசங்கள், மணி, பெரிய விசிறி, குடை, கண்ணாடி, செப்புக் குடம், உருத்திராக்கம், பல வழிபாட்டுப் பொருள்கள், தட்டுக்கள், தூபம், தீபத்தண்டு, கவரிகள் ஆகியவைகளை அளித்தார். தவயோகியாகிய நித்தீசனுக்கு இப்படிப் பல பொருள்களைத் தந்தார். மடம், மண்டபம், மடத்தின் பணியாளர்கள், பசு, நந்தவனம், சம்பளமும் அளிக்க ஏற்பாடு செய்தார். எல்லோரும் அறியும்படியாக திருச்செங்கோடு தானிகர்கட்கு நிலக்கொடைகள் அளித்தார்.

★

சீரணியு மேடமா தத்தில்வரு பரணியும்
சித்திரையில் வருமதியமும்
திருவிழா மண்டபச் சிறப்பானி மூலமும்
திருவாடி யின்பூரமும்

வேரணியும் ஆவணிநன் மூலமும் கேதார
விரதமும் மகாநவமியும்
விசுவினபி ஷேகமும் மகாகந்த சஷ்டியின்
விரதமும் தீபாவளி

ஏரணிக் கிருத்திகையும் மார்கழியும் ஆதிரையும்
இனியசங் கிரமபூசையும்
இரவுசிவ பூசைமக மண்டபமும் மீனமும்
இலகுமுத் திரைபூசையும்

தாரணி புரக்கவரு மாவைஆட் கொண்டவன்
தருகுமா ரச்சுவாமி
சர்ப்பகிரி ஈசருக் கிப்படி நடத்தினன்
சந்ததமும் மிகவாழ்கவே. (245)

பாடற்பொருள்:

மாவை ஆட்கொண்டான் மகன் குமாரசுவாமி முதலியார் சித்திரை மாதப் பரணி, சித்திரா பவுர்ணமி, ஆனி மூலம், ஆடிப்பூரம், ஆவணி மூலம், கேதார விரதம், மகாநவமி, விசு, கந்தசஷ்டி விரதம், தீபாவளி, கிருத்திகை, மார்கழித் திருவாதிரை, சங்கிரமம், இரவு சிவ பூசை, மீனம், முத்திரை பூசை முதலியவைகளைச் சிறப்புடன் செய்தார்.

★

மீனம்முதல் மிதுனம்அள வாகவும் அரவகிரி
வேலரையும் உமைபாகரை
மேனிகுளி ரும்படி சுகந்தகற் பூரமொடு
மிருகமதக் குழம்புசாத்தி

ஆனபரி வட்டமல் லிகைசாதி மல்லிகை
அணிந்தலங் காரித்தனன்
அமுதடைக் காயிலை வடைப்பருப் பாதிகள்
அமைத்துற நிவேதித்தனன்

பானுவொளி யானபிர தோடகட் டளையோடு
பலகார்த்தி கைப்படிகளும்
பரிவட்ட வகைநாலு நந்தியா தீபமும்
பலதீபம் மிகஏற்றினன்

மானபரன் மாவைஆட் கொண்டபூ பதிஅருள
வருகுமா ரச்சுவாமி
மாதருமம் மாகநித் தீசுரனும் இப்படி
வளம்பெற நடத்தினானே. (246)

பாடற்பொருள்:

மாவை ஆட்கொண்டான் மகன் குமாரசுவாமி முதலியார் மீன ராசி முதல் மிதுன ராசி வரை திருச்செங்கோட்டு வேலவர், அர்த்தநாரீசுரர் ஆகியோர் திருமேனிகள் குளிர்ச்சியடையும் வண்ணம் கற்பூரம் கலந்த கத்தூரிக் குழம்பால் அபிடேகம் செய்து, பரிவட்டம் சாத்தி, மல்லிகை வகைகளால் அலங்காரம் செய்தார். வெற்றிலை பாக்கையும், பருப்பு வடையையும் நிவேதனமாகப் படைத்தார். பிரதோஷ கட்டளை, கார்த்திகைப் படிகள் பலவும், நான்கு பரிவட்டமும், நந்தியா தீபம் முதலிய பல தீபங்களையும் ஏற்றினார். குமாரசாமி முதலியார் பொருட்டு மேலே கண்ட முறைப்படி செய்தவர் நித்தீசன் என்பவர் ஆவார்.

★

மண்டலம் தொழுதேவ ராசய நரேந்திரன்
மந்திரி குமாரதளவாய்
மன்னன்உல காளுநா ளில்முத்து வசவய்யன்
வாவென்று நித்தீசனை
கொண்டலென உதவுமா வைப்பதி விளங்கிய
குமாரச் சுவாமிமகிபன்
கோதையுமை பாகருக் குத்தரு கிராமமும்
குலவுமக மையுமருளியே
அண்டையில் அழைத்துமுன் எப்படி நடந்துவரும்
அப்படி நடத்தென்னவே
அப்பணை தரத்திவ்விய லிங்கயன் சொற்படியின்
அந்தமுனி வன்பரிவுடன்
பண்டையில் வளம்பெறு படித்தரம் நடத்தினன்
பணிமலை அரன்கருணையால்
பாராள வந்தமகி சூராளும் மன்னவர்கள்
பலகாலும் மிகவாழ்கவே. (247)

பாடற்பொருள்:

மைசூர் மன்னர் தேவராச உடையார் அரசாளும் நாளில் அமைச்சராக விளங்கியவர் குமார தளவாய் என்பவர். அப்போது அவருக்குட்பட்ட அலுவலராக இருந்தவர் முத்து வசவய்யன். மேகம் என உதவும் தன்மையுடைய மாவைக் குமாரசுவாமி முதலியார் நித்தீசன் அவர்களை அழைத்து திருச்செங்கோடு அர்த்தநாரீசுவரருக்கு விடப்பட்ட மானியக் கிராமங்களில் மகமையைப் பெறுமாறு செய்தார். முன்பு பூசை முறைமைகள் எப்படி நடைபெற்றதோ அப்படியே நடத்துக என்று லிங்கையன் மூலம் அறிவித்தார். நித்தீசனும் அப்படியே பழையபடி படித்தரத்தை மிகவும் சிறப்பாக நடத்தினார்.

★

தாரமங்கலம் கட்டி முதலி

அனவரதம் அரவகிரி ஈசருக்கு அமுதுபடி
அறுபதொரு குறுணிபயறும்
அதனில்ஒரு படிதோசை அப்பம்ஒரு படிபுண்ணி
யாகம்ஒரு படிபொங்கலும்
மனவரத மானஅடி சிற்றளிகை ஒருபது
மணத்தகறி நெய்கனிகளும்
மாலைசம் பாஅமுது காலைதத் யோதனம்
மருவுகற் பூரவிடயம்
தினவிரதம் ஆனஅபி டேகம்எள் எண்ணெய்படி
தேனும் ஒருபடிநெய்
தேங்காயி ரண்டுபழம் நூறொடிள நீர்ஐந்து
திருமஞ்ச னத்திரவிய

கனவிரத மானமுத் துகுகன்ன லின்பிழிவு
காவேரி கந்தஉதகம்
கற்பூர அபிடேக மும்புனுகு காப்பும்இவை
கட்டிபூ பதிஉபயமே. (248)

பாடற்பொருள்:

திருச்செங்கோட்டு ஈசருக்கு நாள்தோறும் அறுபத்தொரு குறுணி பயறு, அதில் ஒரு படி தோசை, அப்பம் ஒரு படி, புண்ணியாகம் ஒரு படி, பொங்கல் ஒரு படி, பத்து அடிசில் தளிகை, மணமுள்ள கறி, நெய், பழம், சர்க்கரை, மாலை, சம்பா அமுது, காலை தயிர் சாதம், கற்பூரம், அபிடேகத்திற்கு எள்ளெண்ணெய் ஒரு படி தேன், நெய் ஒரு படி, இரண்டு தேங்காய், பழம் நூறு, இளநீர் ஐந்து, திருமஞ்சனத் திரவியம், கரும்புச் சாறு, காவேரித் தீர்த்தம், கற்பூர அபிடேகம், புனுகுக் காப்பு ஆகியவைகளைக் கட்டி முதலி அளித்தார்.

★

சந்ததமும் அரவகிரி மீதில்அந் தணர்அன்ன
சத்திரம் வாரிகுரவோர்
சங்கமார்ச் சனைஅதிதி கட்கிருபது அமுதுநல்
சந்நியாசி கள்பிச்சையும்

சிந்தையுறை முருகீசர் மேவிய சிவாலயம்
தேவிகண பதிநந்தியும்
சிவபூசை மடமால யம்வாயு மூலையில்
திகழ்விநா யகர்கோவிலும்

புந்திதரும் ஆதிகே சவர்மேவு கோவிலும்
புகல்உபய நாச்சிமாரும்
பொலிவுதரு சத்தமா தர்கள்உறை கோயிலும்
புயல்உலவு மேல்கோபுரம்

கந்தருமை யொருபாகர் தன்திருவி ழாவினில்
கனசகத் திரபோசனம்
கவின்உதவு சந்திரசே கரர்கௌரி திருமேனி
கட்டிபூ பதிஉபயமே. (249)

பாடற்பொருள்:

நாள்தோறும் திருச்செங்கோட்டு மலையில் அந்தணர்கட்கு அன்னசத்திரம், தண்ணீர், குருக்கள்மார் அடியார் அர்ச்சனை, இருபது அதிதிகட்கு அமுது, சந்நியாசிகட்குப் பிச்சை, முருகீசர் கோயில், சிவாலயம், தேவி, கணபதி, நந்தி, சிவபூசை மடாலயம், வடமேற்கு மூலையில் விநாயகர் கோயில், ஆதிகேசவர் கோயில், சீதேவி-பூதேவியர், சத்தமாதர் கோயில், மேல் கோபுரம், வேலவர்-அர்த்தநாரீசுவரர் திருவிழா, அடியார்க்கு உணவு சந்திரசேகரர், உமை திருமேனி இவை அனைத்தும் கட்டி முதலி உபயம்.

★

அரவ கிரியீ சுரர்க்குருத்தி
ராட்ச புயகங் கணவலயம்
அணிதோள் தரள மாலிகையும்
அரசந் தழைப்பொன் மணிப்பதக்கம்

மருவின் முலையாள் உமைவயிர
மணிப்பொட் டொடுமஞ் சக்காறை
மணமங் கிலிய முலைத்தளமும்
மகிழ்கொப் பொடுகொந் தளஓலை

விரிவு பெறுதோள் நாகபடம்
விளங்கு புயதா யத்துமணி
மேவும் தகட்டுப் பச்சைவடம்
மேலாம் கனக உருமாலும்

கரிவண் மையுடன் நெடுக்கஅலங்
காரத் திருமஞ் சனக்குடங்கள்
கவளம் பாகன் முதலியன
கட்டி ராயன் புண்ணியமே. (250)

பாடற்பொருள்:

திருச்செங்கோட்டு ஈசுவரர்க்கு உருத்திராட்சம், புயகங்கண வலயம், தோள் அணி, முத்துமாலை, அரசிலை வடிவான பொன்மணிப் பதக்கம், உமைக்கு வயிரமணிப் பொட்டு, மஞ்சக் காறை, மங்கிலியம், முலைத் தளம், கொப்பு, கொந்தள ஓலை, தோள் நாகபடம், புயதாயத்து மணி, தகட்டுப் பச்சை வடம், பொன் உருமாலை, அலங்காரத் திருமஞ்சனக் குடம், யானைக்குக் கவளம், பாகன் இவையனைத்தும் கட்டி முதலி செய்த புண்ணியமாகும்.

★

செஞ்சொற் பணிவெற் பரர்பூசத்
திருநாள் சிறப்பு மண்டபமும்
திருக்கா வேரித் துறைமுழுக்கும்
திருக்கார்த் திகைநட் சத்திரமும்
மிஞ்சு புகழ்சேர் மாசிமுதல்
விழாவும் எட்டாம் திருநாளும்
விசாகத் திருநாள் முதல்திருநாள்
விளங்கும் ஏழாம் திருநாளும்
நஞ்சைப் புசித்த சிவநிசியும்
நற்கே தாரம் சவுத்திமகா
நவமி நரக சதுர்த்தசியும்
நற்கார்த் திகையும் சசிவாரம்
கஞ்சற் பகிரி மிசைகிருத்தி
காதீ பாரோ கணப்பொரிமார்
கழியா திரைச்சங் க்ரமச்சிறப்பும்
கட்டி ராயன் புண்ணியமே. (251)

பாடற்பொருள்:

திருச்செங்கோட்டு இறைவர்க்கு தைப்பூசத் திருநாள் சிறப்பு மண்டபக் கட்டளை, காவிரித்துறை முழுக்கு, திருக்கார்த்திகை

நட்சத்திரம், மாசி மகத் திருவிழாவில் முதல் நாள் விழாவும் எட்டாம் திருநாள் விழாவும், வைகாசி விசாகத் திருநாள் விழா முதல் திருநாள் விழா, ஏழாம் திருநாள் விழா, சிவராத்திரி, கேதார சதுர்த்தி, மகா நவமி, நரகசதுர்த்தசி (தீபாவளி), கார்த்திகை, திங்கட்கிழமை விரதம், கார்த்திகை தீபம் (கிரி மிசை), கிருத்திகா தீப ஆரோகணப் பொரி, மார்கழி ஆதிரை, சங்கிரமச் சிறப்பு இவையனைத்தும் கட்டி முதலி செய்த புண்ணியங்கள் ஆகும்.

★

விளங்கு புகழ்சேர் அரவகிரி
வேலன் சிகரம் இளங்கோயில்
வேலன் திருமுன் மாயூரம்
வில்வார்ச் சனையா யிரநாமம்

உளங்கொள் அமுதம் எனுமுதகம்
ஊறும் முதும்ப ரக்கிணறும்
ஓங்கு பசுநூ றெருமையுநூறு
உபய மார்க்கத் திருப்பணியும்

தளங்கொள் அரியா சனக்குறடு
தந்தச் சிவிகை மணித்தூபி
தங்கக் கலசம் சந்தனத்தின்
தருவால் சமைத்த சப்பரமும்

களங்கம் அகலும் பணியசல
காவ லருக்குப் படித்தரமும்
காருணி யஞ்சேர் தாரமங்கைக்
கட்டி ராயன் புண்ணியமே. (252)

பாடற்பொருள்:

அரவகிரி என்னும் திருச்செங்கோட்டில் முருகன் விமானம், இளங்கோயில், மயில் வாகனம், வில்வார்ச்சனை, ஆயிர நாம வழிபாடு,

அபிடேக நீர், தீர்த்தக் கிணறு, நூறு பசு, நூறு எருமை, வணிகர்கள் சுங்கத்தால் திருப்பணி, அரியாசனக் குறடு, தந்தச் சிவிகை, மணித் தூபி, தங்கக் கலசம், சந்தன மரத்தால் செய்த சப்பரம், மலை காவலருக்குப் படித்தரம் இவையனைத்தும் கட்டி முதலி திருப்பணிகள் ஆகும்.

தீர்த்தக்கிணறு - அத்திக்குட்டைக் கிணறு.

★

சீலம் பெரிய பணிமலைவாழ்
சிவன்பூ சனைசெய் தேசிகர்க்குச்
செவிக்கைகங் களஞ்சில் ஆறுகட்டி
திகழ்முக் களஞ்சில் பவுத்திரமும்

கோலம் பெரிய துகிலாடை
குலவு மனைவர்த் தனைநடத்திக்
குமாரர் களுக்கு வித்தைகற்றுக்
கொடுத்துப் பரிசோ தனைபார்த்து

ஞாலம் பெரிய கனகசபை
நல்ல விருத்தா சலத்திலுறை
நற்றே சிகர்க்கு நிகராக்கி
நன்றாய்ப் பெருமை நடத்துவதும்

காலம் பெறஅந் தணர்கருமம்
கடவா வகையின் முடிப்பதுவும்
காதல் பெருகு தாரமங்கைக்
கட்டி ராயன் புண்ணியமே. (253)

பாடற்பொருள்:

திருச்செங்கோட்டுச் சிவாலயத்தில் பூசை செய்யும் அர்ச்சகர்கட்கு ஐந்து கழஞ்சு பொன்னில் காதணி, மூன்று கழஞ்சு பொன்னில் மோதிரம், நல்ல ஆடைகள், வசிக்க வீடு, அந்தணச்

சிறுவர்கட்கு பூசை விதிகளைக் கற்றுக் கொடுத்து அவர்கட்குப் பயிற்சியில் சோதனையும் நடத்தி சிதம்பரம், விருத்தாசலம் போன்ற இடங்களில் பணி புரியும் அர்ச்சகர்கட்கு நிகராக அவர்களை உருவாக்குதல் போன்ற இவையனைத்தும் தாரமங்கலம் கட்டி முதலியின் கொடைகளாகும்.

★

பன்னும் தமிழ்சேர் கோதைஉமை
பாகன் தனக்கே உபசாரம்
பதினா றியற்றித் திருப்பணியா
பரணம் துகிலா னதும்கொடுத்து

மன்னும் தலத்து ஆதிசைவ
மறையோர் தம்மைத் தனதுதர
வாசம் எனவே உபசாரம்
மருவி மனவாஞ் சிதமளித்து

பொன்னும் புவியும் ரதகசமும்
புரவி சிவிகை காலாளும்
புதல்வர் பெருமை அழகாண்மை
புகழும் தவமும் சௌரியமும்

கன்னன் தனைப்போல் கொடைகருணை
கவிதை விசய மநுநீதி
காருண் ணியமும் நவநிதியும்
கட்டி ராயன் புண்ணியமே. (254)

பாடற்பொருள்:

திருச்செங்கோட்டு அர்த்தநாரீசுவரருக்குப் பதினாறு வகை வழிபாடு, திருப்பணி, அணிகலன்கள், ஆடைகள் ஆகியவை கொடுத்ததும், ஆதிசைவ மறையவர்களைத் தம் சகோதரர்களாக எண்ணி உபசரித்தும், பொன், நிலம், தேர், யானை, குதிரை, பல்லக்கு,

பணியாட்கள், சிறுவர்கட்கு வேண்டியன செய்தும் கன்னனைப் போல் கருணையுடன் கொடை கொடுத்தும், நீதியுடன் கருணை செலுத்தி நவநிதி அளித்தும் பெரும் புண்ணியம் செய்தவர் கட்டி முதலி ஆவார்.

★

தாரமங்கலம் சீயால கட்டி முதலி

பன்னுமறை தெரிகோதை உமைபாகர் சிகரம்உமை
பாகமுடை யார்பெட்டகம்
பைங்கனக கோளகச் சிறுபீட மும்ப்ரபை
படிக்கமபி டேகபீடம்

தென்னுலவு வடவாசல் முன்மண்ட பம்சத்திர
தீர்த்தக் கலிங்குமதிலும்
தென்திரு மடப்பள்ளி வடகோபு ரம்சகஸ்த்
திரலிங்க மும்கோயிலும்

மின்னுவேல் மணியொட்டி யாணம் கிரீடம்
விளங்குருத் திராட்சவடமும்
வீறார் சவுக்களி பதக்கமொடு திருவாசி
வெள்ளிஅபி டேககலசம்

கன்னல்செறி நந்தவண கூபமண் டபபூசை
கயிலாய வாகனமதில்
காட்சிசிங் காரமிகு தோப்புமிவை சீயால
கட்டிபூ பதிஉபயமே. (255)

பாடற்பொருள்:

திருச்செங்கோட்டுக் கோயிலில் அர்த்தநாரீசுவரர் சந்நதி விமானம், பெட்டி, பொன், அழகிய சிறுபீடம், பிரபை, அபிடேக நீர்ப் பாத்திரம், அபிடேக பீடம், வடவாசல் முன்மண்டபம், சத்திர தீர்த்தத்துக்குக் கலிங்கு, மதில், மடப்பள்ளி, வடகோபுரம், ஆயிரலிங்கம், கோயில், வேல், மணி, ஓட்டியாணம், கிரீடம்,

ருத்திராட்ச மாலை, காதணி, பதக்கம், திருவாசி, வெள்ளியில் அபிடேகக் கலசம், நந்தவனம், கிணறு, மண்டப பூசை, கயிலாச வாகனம், தோப்பு முதலியன சீயால கட்டியின் கொடைகளாகும்.

★

தலமருவு கோதைஉமை பாகர்பூ சைக்கினிய
தாம்பிர கிடாரசருவம்
தாபிக்க நவபாத் திரங்கள்கொப் பரைகிண்ணி
சங்குசே னைக்கால்களும்
குலமருவு தளிகைமணி அரிவாண மட்டணிகை
குடதீப மும்தூபமும்
குடையால வட்டமும் கண்ணாடி தட்டமும்
குளிர்சத்ர சாமரைகளும்
நலமருவு பட்டுவகை பீதாம்ப ரம்சலவை
நல்லசந் திரகாவியும்
நானா விதங்களழ கானபரி வட்டமும்
நயந்தமேற் கட்டுதிரையும்
கலைமருவு தேரலங் காரமணி மகுடமும்
கவினுதவு பெரியரதமும்
கனமான தாரமங் கையின்மேவு சீயால
கட்டிபூ பதிஉபயமே. (256)

பாடற்பொருள் :

திருச்செங்கோட்டு அர்த்தநாரீசுவரர் கோயில் பூசைக்குரிய செம்புக் கிடாரம், சருவம், நவபாத்திரங்கள், கொப்பரை, கிண்ணி, சங்கு, சேனைக்கால், தளிகை மணி, அரிவாள், குடதீபம், தூபக்கால், ஆலவட்டக் குடை, கண்ணாடி, தட்டம், சாமரை, பட்டுத்துணிகள், பொன்னாடை, சலவைக்கு ஏற்பாடு, சந்திரகாவிச் சீலை, பல பரிவட்டங்கள், மேற்கட்டுத்திரை, தேரலங்காரத் துணிகள், மணிமகுடம், பெரிய தேர் இவையனைத்தும் தாரமங்கலம் சீயால கட்டியின் உபயம் ஆகும்.

★

தினம்அரவ கிரியாரை அபிடேக மகபூசை
செயநாலு வேதமுழவம்
திகழ்மந்த்ர புட்பவில் வார்ச்சனை ப்ரதட்சண
செபநமஸ் காரநியமம்

மனமருவு பூசைமறை யோர்கணக் கறைகாவல்
வாத்தியார் சாஸ்திரிகளும்
மடமடிமை காவேரி மஞ்சனமும் மாளிகையும்
மலர்மேவு நந்தவனமும்

தனமருவும் இருடோலும் நாகசுரம் இருவரும்
தலபுரா ணத்தோதலும்
சந்நதியில் ஒருநாலு நந்தியா தீபமும்
சந்தியா தீபங்களும்

கனமருவு சாம்பிராணி குங்கிலிய தூபமும்
கற்பூர நிறைதீபமும்
காரணிக வடகோ புரத்திலிரு தீபமும்
கட்டிபூ பதிஉபயமே. (257)

பாடற்பொருள்:

தினமும் அரவகிரியாரை பூசை செய்ய நான்கு வேதம் ஓதுதல், முழவு வாத்தியம், மந்திர புட்பம், வில்வ அர்ச்சனை, பிரதட்சணை, செப நமஸ்கார நியமம், அர்ச்சகர் கணக்கறை, காவல், வாத்தியார், சாஸ்திரி, மடம், அடிமை, காவேரி மஞ்சண நீர், மாளிகை, நந்தவனம், டோல், நாகசுரவாத்தியகாரர் இருவர், தலபுராணம் ஓதல், சந்நதியில் நந்தா தீபம் நான்கு, சந்தியா தீபம், சாம்பிராணி - குங்கிலிய தூபம், கற்பூர நிறை தீபம், வடகோபுரத்தில் இரு தீபம் இவையெல்லாம் கட்டி முதலி உபயங்களாகும்.

★

சீருலவு கலியுக சகாத்தமா யிரமிசை
சிறக்குமைஞ் ஞூற்றெழுபதின்
திகழாற தானவிச யந்தனில் பங்குனித்
திங்களொரு பத்தொன்பதின்

பாருலவு பூர்வபட் சம்தசமி பூசமும்
பரவுசுக் கிரவாரமும்
பன்னிய சுகர்மமும் தைதுலையு மிதுனமும்
பலனுதவு மேனாளினில்

ஏருலவு செங்கோடை வருதிரு இளங்கோயில்
எழிலான வேலர்திருமுன்
இயல்பான மயில்வா கனந்தனைப் பிரதிட்டை
இனிதாக வேசெய்தனன்

தாருலவு மார்பினன் மங்கைஇம் முடிக்கட்டி
தந்தசீ யாலகட்டி
சற்புத் ராதிக ளுடன்முறை நடத்தியே
சந்ததமு மிகவாழ்கவே. (258)

பாடற்பொருள்:

சாலிவாகன சகம் 1576 (1654) விசய வருடம் பங்குனி மாதம் பத்தொன்பதாம் தேதி பூர்வ பட்சம் தசமி திதி பூச நட்சத்திரம், வெள்ளிக்கிழமை சுகர்ம நாமயோகம் தைதுலவாகரணம் மிதுன லக்கினம் ஆகிய நன்னாளில் திருச்செங்கோட்டு வேலவர் இளங்கோயில் முன் மயில் வாகனத்தை எழுந்தருளச் செய்தவர் இம்முடிக் கட்டி மகன் சீயால கட்டி ஆவார். (17-03-1654)

★

துங்கக் குரோதி தனிலாடித் திங்களில் சோபனமாய்ச்
செங்கைக் கழகு தரவே ரகத்தரன் தேவியர்க்குத்
தங்கக் கடகம் சரியும் பவளமும் தானளித்தான்
மங்கைப் பதிவரு சீயால கட்டி மகிபதியே. (259)

பாடற்பொருள்:

குரோதி வருடம் ஆடி மாதம் (1664) உமாதேவிக்குத் தங்கக் கடகம், வளையல், பவளம் இவைகளை தாரமங்கலம் சீயால கட்டி அளித்தார்.

★

பொங்கிய செல்வந் தருகோதை ஈசரைப் பூசிக்கவே
பங்கய மார்பனைத் தெய்வ சிகாமணி பண்டிதரைச்
செங்கையி னாலே கொடுத்தபி டேகமும் சூட்டிவைத்தான்
மங்கை வரோதயன் சீயால கட்டி மகிபதியே. (260)

பாடற்பொருள்:

திருச்செங்கோட்டுச் சிவபெருமான் பூசையை நிகழ்த்தத் தெய்வசிகாமணி பண்டிதரைச் சீயால கட்டி நியமித்தார்.

★

பங்கய னான சேனா பதிகுரு மணமும்செய்து
தங்கையின் மணவி ருத்திக்குச் சம்பளம் படியும் ஈந்து
பொங்கிய புகட்செங் கோட்டர் பூசனை புரிவதற்கே
மங்கைமா நகர்வாழ் கட்டி மணிமுடி சூட்டினானே. (261)

பாடற்பொருள்:

திருச்செங்கோட்டில் செங்கோடர் பூசைகளைச் செய்வதற்காகச் சேனாபதிக் குருக்களுக்கு மணம் செய்வித்து தங்கையின் மண விருத்திக்காகச் சம்பளமும் படியும் கட்டி முதலி அளித்தார்.

★

ஆறை குமார திருமலை நாயக்கர்

தேமருவும் அரவகிரி நாகீசர் சந்நதி
சிறந்தகற் பக்கிரகமும்
திகழர்த்த மண்டப மகாமண்ட பத்தினொடு
தென்கோ புரத்தடிகளும்
பூமேவு நந்தவன வாவிமண் டபபூசை
புகழுமஞ் சாந்திருவிழாப்
பூசைபடி பதினேழு பயறுகறி அமுதுதாம்
பூலமா ளிகைகந்தமும்
மாமேவு மாசிவை யாசிசிவ ராத்திரி
மகாநவமி தீபாவளி
மார்கழி யுடன்கார்த் திகைத்தீப பொரிசோம
வாரமும் பரிவட்டமும்
கோமேவு மாலைவடை காவேரி மஞ்சனம்
குலவுஅத் தியானஒலியும்
கொற்றமிகும் ஆறைஅல் லாளன்இளை யான்அருள்
குமாரதிரு மலைஉபயமே. (262)

பாடற்பொருள்:

திருச்செங்கோடு நாகீசர் சந்நதியில் கருவறை, அர்த்த மண்டபம், மகாமண்டபம், தென்கோபுரத்து அடிப்பகுதி, நந்தவனம், குளம், மண்டல பூசை, புழுகு, ஐந்தாம் திருவிழாப் பூசை, 17படியில் கறியமுது, தாம்பூலம், மாளிகை, வாசனைப் பொருட்கள், மாசிமக விழா, வைகாசி விசாக விழா, மகாநவமி, தீபாவளி, மார்கழிப் பூசை, கார்த்திகை தீபப் பொரி, சோமவார பூசை, பரிவட்டம், மாலை, வடை, காவேரி மஞ்சன நீர், வேத வாசிப்பு இவையெல்லாம் ஆறை அல்லாள இளையா நாயக்கர் (1622-1655) மகன் குமார திருமலை உபயமாகும். (ஆறை என்பது வடகரைஆற்றூர்.)

★

ஆறை திருமலை அல்லாள இளையா நாயக்கர்

சீர்மேவு கலியுக சகாத்தமா யிரமிசை
சிறக்கும்ஐஞ் ஞூற்றறுபதின்
செல்லுமைந் தானதா ரணவருடம் அற்பிசைத்
திங்களிரு பத்தைந்தினில்

கூர்மேவு வேலுடைய மகிசூரு நஞ்சையன்
கோதையந் தலமதனையே
கொள்ளைகொண் டேகினது கண்டுதய வாகியே
கொள்ளைபரி போனவகையில்

பார்மேவ வேதனது புண்ணியம் எனச்சிறிது
பாலித்து நன்மைஉதவிப்
பட்சமுட னேசம்பு ரோட்சணம் நடத்தினன்
படிமீது புகழ்பெற்றனன்

தார்மேவு வாகைபுனை கண்ணப்பர் சேகரன்
தருமமே கனிநெஞ்சினன்
திருமருவு திருமலைஅல் லாளன்இளை யான்மரபு
தருமம் தழைத்தேறவே. (263)

பாடற்பொருள்:

சாலிவாகன சகாப்தம் 1565 தாரண வருடம் ஐப்பசி மாதம் 25ஆம் தேதி (25-10-1644) மைசூர் நஞ்சையன் திருச்செங்கோட்டுக் கோயில்களில் கொள்ளையிட்டான். கொள்ளை போனதை அறிந்து அதில் ஒரு பகுதியையாவது தான் உதவவேண்டும் என்ற எண்ணத்துடன் பொருள் கொடுத்துக் கோயிலில் குடமுழுக்கு விழாவை நடத்தினார். கண்ணப்ப நாயனார் வழிவந்த திருமலை அல்லாள இளையா நாயக்கர்.

★

அத்தர்திருச் செங்கோட்டு அரனடிக்கே அன்புசெய்யும்
எத்தலமெண் ஆறை இளையான்கேள் - இத்தலத்தே
வந்துகொள்ளை கொண்டான் மகிசூரான் நீஅதனைத்
தந்துகொள்ளை கொண்டாய் தவம். (264)

பாடற்பொருள்:

மைசூர் நஞ்சையன் திருச்செங்கோட்டுக்கோயில்களுக்கு வந்து கொள்ளையிட்டான். ஆறை இளையா நாயக்கர் கொள்ளை போன பொருளுக்காகக் கொடை தந்து அடியார்கள் மனத்தைக் கொள்ளை கொண்டார்.

★

அண்டர்தொழும் காளத்தி அப்பருக்குக் கண்கொடுத்தாய்
அதிர்ந்து வீழும்
மண்டபமும் தாங்கியநல் சிவகோசன் தனக்குமுத்தி
வருவித் தாயே
கொண்டல்நிகர் ஆனகொடை அல்லாள திருமலையா
ஆற்றூர் வாழ்வே
தண்டமிழ்சேர் இளையானே துட்டர்கண்டா நறுவாகைத்
தாமத் தோனே. (265)

பாடற்பொருள்:

அல்லாளன் திருமலை இளையா நாயக்கர் மீது கண்ணப்ப நாயனார் அருஞ்செயல்கள் எல்லாம் ஏற்றிக் கூறப்படுகின்றன. சிவபெருமானுக்குக் கண் அப்பியதும், சிவகோசரியாருக்கு முத்தி கொடுத்ததும் கூறப்படுகிறது.

இவர் வள்ளுவர் குலம் பெருமாள் தம்பிரான் என்பவருக்குக் கபிலமலை, திருச்செங்கோடு, பழனியில் மடம் கட்டிக் கொடுத்தார். கபிலமலையில் பல திருப்பணிகள் செய்தார். திருமலை நாயக்கர் (1623-1655) தன் பெயரையே பட்டமாக அளித்தார்.

இப்பாடல் கொள்ளை போன பொருளுக்குப் பதிலாகக் கொடை கொடுத்தபோது புகழ்ந்து பாடியது என்று கோனார் கூறியுள்ளார்.

★

மூவருக்கும் அகத்தியமா முனிவருக்கும் அரசிருந்த
முன்னை யோர்க்கும்
தேவருக்கும் திரும்பாத காவிரியைக் கொங்கேற்றித்
திறைகொண் டாயே
பூவிருக்கும் உரமாயன் கடலனைடத்தான் அவன்வேடம்
புனைந்த வாறோ
யாவருக்கும் இளையானே அல்லாள திருமலையா
ஈகை யோனே. (266)

பாடற்பொருள்:

காவிரியில் சேடர்பாளையம் அணையும் வாய்க்காலும் அமைத்துப் பாசனம் செய்வித்த சிறப்புக் கூறப்படுகிறது.

இப்பணி பற்றிக் கொங்கு மண்டல சதகம் குறிக்கிறது (79).

''வடமுக நின்றும் வருகா விரியின் வளத்தைஎன்றும்
திடமுறு கொங்கிலும் பாசன மாகச் செலப்பிரித்த
அடல்கொள் அல்லாளன் இளையான் பெருக்கும் அமைந்துவளர்
வடகரை யாற்றூர் திகழ்வது வும்கொங்கு மண்டலமே''

என்பது கார்மேகக் கவிஞர் சதகப் பாடலாகும்.

★

ஏவிளம்பி வச்சரத்தே ஏரகநா கீசருக்கு
மாவிளம்பக் கோயிலுமா மண்டபமும் - பூவிளம்பக்
கண்டான் அல்லாளன் கருணைஇளை யான்ஆறைத்
தண்டாவு வாகையுறத் தான். (267)

பாடற்பொருள்:

ஏவிளம்பி வருடம் (1657) திருச்செங்கோட்டு நாகீசருக்குக் கோயிலும் மண்டபமும் ஆறை இளையா நாயக்கர் திருப்பணி செய்தார்.

★

சந்தியா தீபம் சதுரங்கம் தாம்பூலம்
நந்தியா தீபம் நடத்தினான் - புந்தியால்
எப்போதும் ஆறை இளையான் திருமலையான்
தப்பாமல் சீர்த்திகொளத் தான். (268)

பாடற்பொருள்:

சந்தியா தீபம், சதுரங்கம், தாம்பூலம், நந்தா தீபம் இவைகளைக் கொடையாக வேட்டுவர் சமூக திருமலை ஆறை இளையா நாயக்கர் கொடையாகக் கொடுத்தார்.

★

சிறுமுளசி முத்தணன் மகன் செங்கோடன்

திருமருவு கலியுக சகாத்தமா யிரமீது
சேரும்ஐ நூற்றினுடனே
செல்எழுபத் தேழான செயவருடம் வையாசி
தேதியொரு பதினெட்டிலே

குருமருவு திரவார சட்டிபுனர் பூசமும்
கொண்டதொரு மேனாளிலே
குவலய மதித்ததிரு நாககிரி நாகீசர்
கோவிலின் சிகரிசெய்தான்

மருமருவு திண்புயன் காளிமகி பாலகன்
மரபுள்ள காவலர்களும்
வண்ணமைசேர் காமாட்சி மகேச னுரைகேட்டு
மன்னுநிதி தரவாங்கியே

தருமருவு சிறுமுளசை முத்தணன் சந்ததி
தழைத்தசெங் கோடமகிபன்
தன்னுதென வேதாம்பி ரக்கலசம் வைத்தனன்
சகலரும் மிகவாழ்கவே. (269)

பாடற்பொருள்:

சாலிவாகன சகாப்தம் 1577 செய ஆண்டு (1655) வைகாசி மாதம் பதினெட்டாம் தேதி சனிக்கிழமை புனர்பூச நட்சத்திரம் கூடிய நன்னாளில் திருச்செங்கோட்டு நாகீசுவரர் கோயிலுக்குக் கோபுரம் காளி என்பவரால் கட்டப்பட்டது. அவர் மரபைச் சேர்ந்தவர்களும், காமாட்சி முருகேசன் என்பவரும் கூறியதைக் கேட்டு சிறுமுளசை முத்தணன் என்பவர் மகன் செங்கோடன் தன் கொடையாகக் கோபுரத்திற்குத் தாமிரக் கலசம் வைத்தார்.

★

திருமலை அத்தப்ப நல்லதம்பிக் காங்கேயன்

மங்கள சகாத்தமோ ராயிரத் தைஞ்நூறு
மருவும்எழு பத்தொன்றினில்
வருசர்வ தாரிதனில் இடபமா சந்தனில்
வாழ்வுதவு பணிமலையினான்

எங்களுமை பாகர்பல கணிவாசல் மண்டபம்
இலங்கும்அணி யொட்டியுடனே
இனியசித் திரகண்டம் உத்திரம் போதிகையும்
ஏற்றதள விசையறைகளும்

கொங்கிளகு சாந்துதட் டோடுபாக் கல்லோடு
குறைவற வழுத்திஏம
கூடம்என மண்டபம் செய்தனன் வேளாளர்
குலதீப மானகண்ணர்

தங்கள்அர சானதிரு மலைஅர்த்த நாரிநல்ல
தம்பிகாங் கயபூபதி
தருமம் தழைக்கவே சந்ததி சிறக்கவே
தாரணியில் மிகவாழ்கவே. (270)

பாடற்பொருள்:

வேளாளர் கண்ணனர் குல திருமலை அர்த்தநாரி நல்லதம்பிக் காங்கேயன் சாலிவாகன சகாப்தம் 1571 சர்வதாரி வருடம் (1649) வைகாசி மாதம் திருச்செங்கோடு அர்த்தநாரீசுவரர் கோயிலில் பலகணி, வாசல், மண்டபம், அணியொட்டிக்கால், சித்திர கண்டக்கால், உத்திரம், போதிகை, தளவரிசை, சாந்து, தட்டோடு, பாக்கல் இவைகளைச் செய்து முடித்தார். மண்டபம் ஏமகூடம் போல் விளங்கியது.

ஏமகூடம் - எட்டு மலைகளில் ஒன்று. பொன் மயமானது. இமயம், ஏமகூடம், கந்தமாதனம், கயிலை, நிடதம், நீலகிரி, மந்தரம், விந்தம் என்பன எட்டு மலைகள்.

★

மோரூர் நல்லதம்பிக் காங்கேயன்

குணமருவு பூசைமணி அபிடேக கலசநவ
கும்பமொன் பதுபாத்திரம்
கொப்பரை கிடாரங்கள் செப்புக் குடம்தபிலை
குழிவுருளை அரிவாணமும்

மணமருவு தூபார்த்தி ஏகார்த்தி பஞ்சார்த்தி
வசவார்த்தி புருடார்த்தியும்
வடிவுறும் அடுக்கார்த்தி அன்னார்த்தி திரிதளார்த்தி
மங்களா லத்திகுடமும்

பணமருவு நாகார்த்தி திருவார்த்தி கற்பூர
பரிமள மகாலாத்தியும்
பலமிகு விபூதிமடல் குடையால வட்டமொடு
பார்வைபெறு கண்ணாடியும்

இணைகவரி மெத்தைதலை யணைசிவிகை மஞ்சமும்
இனியமுத் துப்பந்தலும்
இன்பமிகு மோரூரில் நலதம்பிக் காங்கேயன்
எனும்ப்ரவுட மாலுபயமே. (271)

பாடற்பொருள்:

பூசைமணி, அபிடேக கலசம், நவகும்பம், ஒன்பது பாத்திரம், கொப்பரை, கிடாரம், செப்புக் குடம், தபிலை, உருளை, அரிவாணம், தூபார்த்தி, ஏகார்த்தி, பஞ்சார்த்தி, வசவார்த்தி, புருடார்த்தி, அன்னார்த்தி, திரிதளார்த்தி, மங்களாலத்தி, குடம் நாகார்த்தி, திருவார்த்தி, கற்பூரம், பரிமள மகாஆலத்தி, விபூதி மடல், ஆலவட்டக் குடை, கண்ணாடி, இணைகவரி, மெத்தை, தலையணை, சிவிகை, மஞ்சம், முத்துப் பந்தல் இவை மோரூர்க் கண்ண குல நல்லதம்பிக் காங்கேயன் கொடைகளாகும்.

★

மூவுலகும் ஓசைதரு சேகண்டி சின்னமும்
முழங்கும்எக் காளநகரி
முரசுசங் கொடுதிமிரி டக்கைமத் தளிபேரி
மொழிநாக சுரபூரிகை

மேவுதவு லொடுசகல பதினெட்டு மேளமும்
விருதுநா டகநிர்த்தமும்
வேதமொழி ஆகம புராணம்ஆ றங்கங்கள்
வித்தைஅதி விதவேள்வியும்

பூவினறு மாலைபல தேரலங் காரங்கள்
புனையிரத முடிகலசமும்
பொற்கவிகை சேறாடி கொடியாடை பலவிருது
புகலரிய தருமங்களும்

தாவுபணி மாமலைஉ மேசரருள் மேவவே
தனதுபுண் ணியமாகவே
தானடத் தினன்எங்கள் மோரூரில் வருநல்ல
தம்பிகாங் கயராயனே. (272)

பாடற்பொருள்:

சேகண்டி, சின்னம், எக்காளம், நகரி, முரசு, சங்கு, திமிரி, டக்கை, மத்தளி, பேரி, நாகசுரம், பூரிகை, தவுல், பதினெட்டு மேளம், விருது, நாடகம், நாட்டியம், வேதம், ஆகமம், புராணம், ஆறு அங்கம், வித்தை, வேள்வி, பூமாலை, தேரலங்காரம், இரதம், முடிகலசம், குடை, சேறாடி, கொடியாடை, பல விருது முதலியவைகளும் இன்னும் எண்ணற்ற தர்மங்களும் மோரூர் கண்ண குல நல்லதம்பிக் காங்கேயரால் செய்யப்பட்டன.

★

மோரூர் நல்லநாயகன் மகன் இம்முடி நல்லகாங்கேயன்

சோபன சகாத்தமோ ராயிரத் தைஞ்ஞூறு
தோன்றுநாற் பத்தொன்றினில்
சுகமான சித்தார்த்தி யிடபமா சந்தனில்
துங்கமிகு நாகவரைமேல்

தாபன தானமுரு கன்மகா மண்டபம்
தளமுத்தி ரம்போதிகை
தட்டோடு பாவுகல் சுவர்ப்பிடை வடபுறம்
தாவுமருகு அணியொட்டியும்

தீபநிரை தூபம் மணமாலை சாய்ங்கால
செல்லசம் பாஅடிசிலும்
தேவிபரி மளவல்லி சுக்கிரவா ரப்படி
திருந்துகார்த் திகைஉபயமும்

பூபதி மதிக்கவரு நல்லநா யகன்உதவு
புதல்வன்இம் முடிநல்லவன்
புண்ணியம தாகவே இத்தனை நடத்தினன்
புவிமீது மிகவாழ்கவே. (273)

பாடற்பொருள்:

சாலிவாகன சகாப்தம் 1541 சித்தார்த்தி வருடம் வைகாசி மாதம் (1619) திருச்செங்கோட்டு மலைமேல் முருகன் மகாமண்டபம், தளம், உத்திரம், போதிகை, தட்டோடு, பாவு கல், சுவர்ப்படை, வடபுறம் அணியொட்டிக்கால், தீபம், தூபம், மாலை, மாலையில் சம்பா அடிசில், கைலாசநாதர் கோயில் அம்மன் பரிமளவல்லிக்கு சுக்கிரவாரப்படி, கார்த்திகை விழா இவைகளை அரசர் மதிக்கும் நல்லநாயகன் மகன் கண்ணகுல இம்முடி நல்லவன் தன் உபயமாகச் செய்தார்.

★

மோரூர் நல்லநாயகன் மகன்
குமாரசுவாமிக் காங்கேயன்

வெற்றிபுனை கலியுக சகாத்தம்ஆ யிரமிசை
விளங்கும்ஐஞ் ஞூற்றைம்பதின்
மேவுசுக் கிலவருட வையாசி தன்னிலே
வியன்அரவ மலைமேலிடம்

பெற்றஉமை பாகர்பல கணிவாசல் தன்னிலே
பெரியமண் டபநடுவிலே
பிரியமுடன் ஏமகூ டத்தைநிகர் என்னவே
பேருலகு மகிழ்வெய்தவே

பொற்றிரு விமானமது கண்டனன் அனேகதவ
புண்ணியம் கைக்கொண்டனன்
பூசுரரை ஈசனைக் கவிஞ்ரோரை அரசரைப்
பூசித்து வரமெய்தினன்

கொற்றமிகு மோரூர் படைத்தகண் ணன்கங்கை
கோத்திரந் தன்னில்உதயன்
கோகனக முகனான நல்லநா யகன்அருள்
குமாரச் சுவாமிதானே. (274)

பாடற்பொருள்:

சாலிவாகன சகாப்தம் 1550 சுக்கில வருடம் (1629) வைகாசி மாதம் திருச்செங்கோட்டு மலைமேல் அர்த்தநாரீசுவரர் பலகணி வாசலில் பெரிய மண்டபம், நடுவில் பொன்மலையைப் போன்ற அழகிய விமானத்தைத் திருப்பணி செய்து அந்தணர்களை, இறைவனை, கவிஞர்களை, அரசர்களை மோரூர் நல்லநாயகன் மகன் குமாரசுவாமி வணங்கினார்.

★

மோரூர் நல்லய்ய காங்கேயன்

அரவகிரி அர்த்தநா ரீசர்பச் சிமவாசல்
அழகுசித் திரமண்டபம்
அரவிந்த சிலைமண் டபமும்இருப் புக்கதவும்
ஆனைமுக வன்மண்டபம்
பரிவுபெறு தெற்குவா சற்கதவு தாண்டவப்
பத்திரை விலாசமுடனே
பகரிந்திர விமானம் சந்தனக் குறடுடன்
பன்மாலை கட்டுகுறடு

திருவளரும் ஆலயத் தளவிசை குகன்கோவில்
தென்மேலை உயர்மண்டபம்
சிகரிநடு இடைமண்ட பம்சமன் கல்மிசை
சிறந்தசித் திரமண்டபம்

விரிவுள மகாநவமி மண்டப முடன்பாரி
வேட்டையா டியமண்டபம்
மேலமுத வாவியிரு பூவனமு மோரூர்
விளங்குநல் லயன்உபயமே. (275)

பாடற்பொருள்:

திருச்செங்கோடு அர்த்தநாரீசர் மேற்கு வாயில் சித்திர மண்டபம், அரவிந்த சிலை மண்டபம், இரும்புக் கதவு, விநாயகர்

மண்டபம், தெற்கு வாசல் கதவு, தாண்டவப் பத்திரை விலாசம், இந்திர விமானம், சந்தனக் குறடு, மாலை கட்டும் குறடு, ஆலயத் தள வரிசை, முருகன் கோயில், தென்மேற்கு மண்டபம், கோபுரம் நடுவே இடை மண்டபம், சமன்கல் மிசை சித்திர மண்டபம், மகாநவமி மண்டபம், பாரி வேட்டையாடிய மண்டபம், அமுதவாவி, இரு நந்தவனம் இவையெல்லாம் மோரூர் நல்லய்யன் உபயம்.

★

மோரூர் அத்தப்பன் மகன் நல்லய்ய காங்கேயன்

திரமேவு கோதைஉமை பாகரிட சந்நதி
திருப்பணி நடந்துவரவே
சீமையெழு கரைநாட்டில் உபயமார்க் கப்பகுதி
சேரவகை செய்தருமமும்

வரமேவு கயிலாய நாதரா லயமதிலும்
மாதுபரி மளவல்லியார்
மருவுகர்ப் பக்கிரகம் அர்த்தமண் டபமகா
மண்டபம் பள்ளியறையும்

உரமேவு நிர்த்தமண் டபமுநடை மாளிகையும்
ஓங்குசந் நதிவீதியில்
உற்றதென் சிறகுநடை மாளிகையும் நூறுபசு
உயருமறை யோர்அகரமும்

துரமேவு நந்தவன மும்கிணறு அனேகமும்
சோலைசெறி மோரூரில்வாழ்
துங்கன்எனும் அத்தப்ப பூபன்அரு ளால்வந்த
சுமுகன்நல் லயன்உபயமே. (276)

பாடற்பொருள்:

திருச்செங்கோடு அர்த்தநாரீசுவரர் சந்நதித் திருப்பணி நடந்து வரும்போது எழுகரை நாட்டுச் சீமையின் சுங்க வரியைத் திருப்பணிக்கு

அளிக்கச் செய்த தருமமும், கைலாசநாதர் ஆலய மதில், பரிமளவல்லி யம்மன் கருவறை, அர்த்த மண்டபம், மகாமண்டபம், பள்ளியறை, நிருத்த மண்டபம், நடை மாளிகை, சந்நதி வீதி, தென்பக்க நடை மாளிகை, பசுக்கள் நூறு, அந்தணர்கட்கு அக்கிரகாரம், நந்தவனம், பல கிணறுகள் ஆகியவை அத்தப்ப காங்கேயன் மகன் நல்லய்யன் என்பவரின் உபயமாகும்.

★

மோரூர் குமார நல்ல காங்கயன்

ஆதரவு பெறுசித்தி ராபவுர் ணைத்திதியில்
ஆயிரத் தைஞ்ஞூறுமேல்
ஆனஇள நீர்கதலி யின்கனிகள் ஆயிரம்
ஐம்பது பலச்சர்க்கரை

போதரவு ததிபசு நெய்யுமது வும்கழைப்
புனலுநற் கந்தஉதகம்
பொன்னிநதி மஞ்சனம் கங்கைஉத கம்கொடு
புயங்ககிரி யானைவேளை

மாதயவு டன்பரவி அபிடேக மேத்திநல்
வஸ்திரம் பலசாத்தியே
மாலைமிகு சந்தனம் கதம்பகஸ் தூரிமிருக
மதபூட ணங்கள்உதவி

ஏதமற நல்லசம் பாஅரிசி அசனங்கள்
இனியபல கறிசூபமும்
இப்படி நடத்தினன் குமாரநல நாயகன்
எங்கள்மோ ரூர்அதிபனே. (277)

பாடற்பொருள்:

சித்திரா பவுர்ணமியன்று ஆயிரத்து ஐநூறு இளநீர், ஆயிரத்து ஐநூறு வாழைப்பழம், ஆயிரத்து ஐம்பது பலம் சர்க்கரை, பசு நெய்,

கரும்புச் சாறு, அபிடேக வாசனைப் பொருள், காவிரி அபிடேக நீர், கங்கை அபிடேக நீர், நல்ல நேரத்தில் அபிடேகம் செய்து ஆடைகள் பல சாத்தி, மாலை, சந்தனம், கதம்பம், கஸ்தூரி, மான்மதம், ஆபரணங் களுடன் நல்ல சம்பா அரிசித் தளிகையளித்து பல கறிகளும் அமுது படிக்குத் தந்து இறைப்பணி செய்தவர் மோரூர் கண்ணகுலக் குமார நல்ல நாயகன் ஆவார்.

★

மோரூர் நல்லய்யன் மகன் குமாரசுவாமிக் காங்கேயன்

ஏகமாம் அரவ கிரிஉமை கரத்தில்
இலங்கிய சரியுடன் கடகம்
நாககங் கணமும் செவ்விய பவள
நன்மணி பதக்கமும் துகிலும்
மாகமா தருமோ ரூர்அதி பதியாம்
மன்னவன் நல்லநா யகன்சொல்
பேகனாம் குமாரச் சுவாமிகாங் கயன்நற்
பிரியமாய் இனிதளித் தனனே. (278)

பாடற்பொருள்:

திருச்செங்கோடு உமாதேவி கைகளில் வளையல், கடகம், நாக கங்கணம், பவளமணிப் பதக்கம், ஆடைகள் முதலியவற்றைத் தருமமாக அளித்தவர் மோரூர் நல்ல நாயகன் மகன் குமாரசுவாமிக் காங்கேயன் என்பவர்.

★

பவளம் செறிகடகம் பல்வைரப் பொட்டும்
கவளமணி கைக்கங் கணமும் - தவளநிறக்
கோதைஉமைக் கென்றே குமாரசுவா மிக்கவுண்டன்
மாதவமாய்த் தந்தான் மகிழ்ந்து. (279)

பாடற்பொருள்:

பவள வளையல், கடகம், வைரப் பொட்டு, கவளமணி, கைக் கங்கணம் ஆகியவைகளை உமாதேவிக்கு அளித்தவர் மோரூர் கண்ண குல குமாரசுவாமிக் கவுண்டர் என்பவர்.

★

மோரூர் திருமலை அத்தப்ப நல்லய்யன் மகன்
வேல காங்கேயன்

காரணிக மாகநிலைக் கண்ணாடி யட்டணிகை
ஏரணியும் கோதையார்க்கு ஈந்தானே - தாரணிஎண்
சீராளன் மோரூர்த் திருமலைஅத் தப்பநல்லான்
பாராளும் வேலமகீ பன். (280)

பாடற்பொருள்:

நிலைக் கண்ணாடி, அட்டணிகை இவைகளைத் திருச்செங் கோட்டு இறைவர்க்கு மோரூர் திருமலை அத்தப்ப நல்லய்யன் மகன் வேலன் அளித்தார்.

★

இம்முடி நல்லய்யன் மகன் வேலன் குமாரசுவாமிக்
காங்கேயன்

அரவகிரி ஈசருக்கு அமுதுபடி இரண்டும்
ஆனகறி சூபமுடனே
ஆவின்நெய் பழம்வெல்லம் அமுதமடைக் காயிலையும்
ஆலத்தி சாம்பிராணியும்
விரிவுபெறு காவேரி உதகமொரு காவடியும்
மேவுசந் தனமோர்பலம்
மேலான கர்ப்பூரம் கோரோ சனம்புழுகு
மேவுநந் தாதீபமும்

மருவிலுயர் சாதிமல் லிகைமுல்லை இருவாச்சி
மணமான செவ்வந்தியும்
மாலைமுடி பூவில்வம் ஆதிபல கட்டளைகள்
மனமேவி யேசெய்தனன்

திருவுலவு மோரூரில் நல்லநா யகன்உதவு
செல்வன்இம் முடிநல்லவன்
செஞ்சொல்பெறு வேலன் குமாரச் சுவாமியும்
செகமீது மிகவாழ்கவே. (281)

பாடற்பொருள்:

திருச்செங்கோட்டு இறைவர்க்கு இரண்டு அமுதுபடி, கறிவகைப் படையலும், பசு நெய், பழம், வெல்லம், வெற்றிலை பாக்கு, ஆலத்தி, சாம்பிராணி, காவிரி அபிடேக நீர் ஒரு காவடி, சந்தனம் ஒரு பலம், கற்பூரம், கோரோசனை, புனுகு, நந்தா தீபம், சாதி மல்லிகை, முல்லை, இருவாட்சி, செவ்வந்தி, பூமாலை, வில்வம் முதலிய பல கட்டளைகளை மோரூர் நல்ல நாயகன் பேரன் இம்முடி நல்லயன் மகன் வேலன் குமாரசுவாமி என்பவர் அளித்தார்.

★

குமாரசுவாமி நல்லான் சகோதரர்
வெற்றிக் குமாரசுவாமிக் காங்கேயன்

சீரார் சகாத்தத்தில் ஆயிரத் தைஞ்ஞூறு
சேர்ந்ததொண் ணூற்றொன்பதில்
திரமான நளவருடம் ஐப்பசித் திங்களில்
சேரும்எட் டாம்தேதியில்

பேரான சோமவா ரம்திரயோ தசியுடன்
பெரியஉத் ரட்டாதியும்
பெற்றநாள் செங்கோட்டில் அர்த்தநா ரீசர்முன்
பெருவிஷ்ணு தீர்த்தகுணபால்

ஏரான காசிவிசு வேசுரர் விசாலாட்சி
இயல்நந்தி பலிபீடமும்
இன்பமொடு பிரதிட்டை யாகவே செய்தனன்
எழில்பெற்ற மோரூரில்வாழ்
தாரார் தடப்புயன் வேலபூ பதியுதவு
சந்ததி குமாரநல்லான்
தனதுதுணை வெற்றிக் குமாரச் சுவாமியின்
சந்ததி தழைத்தேறவே. (282)

பாடற்பொருள்:

சாலிவாகன சகாப்தம் 1599 நள வருடம் ஐப்பசி மாதம் எட்டாம் தேதி திங்கட்கிழமை திரயோதசி திதி உத்திரட்டாதி நட்சத்திரம் கூடிய நாளில் (09-10-1677) அர்த்தநாரீசுவரர் கோயில் முன்பு விஷ்ணு தீர்த்தத்தின் கிழக்கில் காசி விசுவநாதர், விசாலாட்சி, நந்தி, பலிபீடம் ஆகியவற்றைப் பிரதிட்டை செய்தவர் மோரூர் வேலபூபதி மகன் குமாரசுவாமி நல்லான் சகோதரர் வெற்றிக் குமாரசுவாமி என்பவர்.

★

வேல காங்கேயன் மகன் அய்யன் ஆகவராம காங்கேயன்

நாககிரி நாகீச நாதருக்கு வாருணமே
யாகவிசு வேசரையுண் டாக்கினான் - மேகமெனும்
கையகவுண் டன்மோரூர்க் காங்கயர்கோன் வேலனருள்
ஐயன்எனும் ஆகவரா மன். (283)

பாடற்பொருள்:

திருச்செங்கோடு நாகீசுவரருக்கு மேல் திசையில் விசுவேசரை எழுந்தருளச் செய்தவர் வேல காங்கயன் மகன் அய்யன் ஆகவராமன்.

ஆகவராமன் என்பது மோரூர்க் கண்ண குலக் காங்கேயருக்கு உரிய ஒரு பட்டப் பெயராகவும் விளங்கியது. ''ஆகவராமன் பள்ளு'' என்ற இலக்கியம் ஒன்றுண்டு.

★

அய்ய காங்கேயன் மகன் குமார நல்லதம்பிக் காங்கேயன்

ஆகமம்சேர் மோரூர் அதிபன்அய்ய காங்கயன்சொல்
பேகன் குமாரநல்ல தம்பியன்பாய் - வாகனந்தான்
தந்தான் உமைபாகர் தன்பவனிக்கு ஓர்குதிரை
சந்தோட மாய்த்தழைத்தான் தான். (284)

பாடற்பொருள்:

மோரூர் அதிபன் கண்ணகுல அய்ய காங்கேயன் மகன் குமார நல்லதம்பி அர்த்தநாரீசுவரர் பவனிக்குக் குதிரை வாகனம் ஒன்றைத் தந்தார்.

★

மதுரை நல்லான்

நாகமுகன் கோவில் நடுநா யகக்குறடு
மாகமுறு மண்டப மமைத்தானே - மேகமெனும்
கையான் மதுரைநல்லான் கண்டான் நளவருடம்
மெய்யாம் அரவகிரி மேல். (285)

பணபதி கிரிமிசை பயில்ந ளந்தனில்
மணபதி வழுதியாம் மதுரை நல்லவன்
கணபதி சுனைமுனே கநக மண்டபம்
குணபதி யான்நட கூடம் எடுக்குமால்.

பாடற்பொருள்:

நாகீசுவரர் கோயிலில் நடு நாயகக் குறடு மண்டபம் நள வருடம் அமைத்தவர் மதுரை நல்லான் என்பவர்.

இரண்டாவது பாடல் வரிசை எண் இடப்பெறாமல் சுவடியில் எழுதப்பட்டுள்ளது. வேறொருவர் எழுதிச் சேர்த்திருக்கலாம்.

மண்டபம் - இளைப்பாற்று மண்டபம்

★

நாட்டு வேளாளர் வேலன்

கன்னல்செறி கோதைக் கயிலாயர் கூபமலைப்
பன்னுதமிழ் மூவர் படர்கோயில் - முன்னமருள்
நாட்டுவே லன்புரிந்தான் நன்மையுடன் கண்ணார்குலம்
மீட்டிமையாய்த் தான்வாழ்க வே. (286)

பாடற்பொருள்:

திருச்செங்கோடு கயிலாசநாதர் கோயிலில் கிணற்றை மூவர் கோயில் முன் அமைத்தவர் நாட்டு வேளாளர் வேலன் என்பவர்.

★

மோரூர் பொன்னம்பல கவுண்டன்

பூமகிழும் மோரூர் பொன்னம் பலராயன்
பாமகிழும் கோதைப் பதிவேலர் - தாம்மகிழக்
கார்த்திகையில் நெய்த்தீபம் கல்லோட்டி லேயிரண்டும்
ஏற்றியினி தாயிருந்தா னே. (287)

பாடற்பொருள்:

மோரூர் பொன்னம்பல ராயன் திருச்செங்கோட்டு வேலவருக்குக் கார்த்திகையில் நெய்த்தீபம் இரண்டு கல்லோட்டில் ஏற்றினார்.

★

மோரூர் கண்ண குலப் பெரிய வகையார்

பேருலகெண் மோரூர்ப் பெரியவகை யார்அரிசி
பாருலவு மாறு படிநாளும் - தேருலவு
மண்டபமும் நெய்விளக்கு மாலைமட மாறாமல்
கண்டுநடப் பித்துவந்தார் காண். (288)

பாடற்பொருள்:

மோரூர்க் கண்ண குலத்தில் பெரிய வகையார் நாள்தோறும் ஆறுபடி அரிசி, மண்டபம், நெய் விளக்கு, மாலை, மடதர்மம் இவைகளைக் கொடையாக அளித்தனர்.

மோரூர்க் கண்ண குலத்தில் பெரியவகை, சின்னவகை என இரு பிரிவுகள் உண்டு. பெரிய வகையார் இளைப்பாற்று மண்டபக் கட்டளையை நடத்துகிறார்கள்.

★

மோரூர்க் கண்ண குலச் சின்னவகையார்

தேங்குபுகழ் மோரூர்ச் சின்னவகை யார்அரிசி
பாங்குடனே ரண்டு படிமாலை - ஓங்குலகும்
எப்போதும் கோதை இறைவர்தமக் கேநியமம்
தப்பாம லேநடப்பித் தார். (289)

பாடற்பொருள்:

மோரூர்க் கண்ண குலத்தில் சிறிய வகையார் நாள்தோறும் இரண்டு படி அரிசி திருச்செங்கோட்டு இறைவனுக்குத் தந்தனர்.

கைக்கோளர் மண்டபத்திற்கும், அறுபதாம் படிக்கும் இடையில் உள்ள மண்டபம் சிங்க மண்டபம். இது மோரூர்க் கண்ண குலத்தில் சின்னவகையார் திருப்பணியாகும்.

★

முளசி வேல கவுண்டர்

புயல்மேவு நாககிரி வருவேலர் திருமேனி
போந்தசரு வாபரணமும்
பூடணப் பெட்டியும் அநேகபரி வட்டமும்
பொன்காப்பு வெண்கவரியும்

நயமான பட்டும்அபி டேகமக பூசையும்
நல்லசம் பாவடிசிலும்

நறைமேவு கறியமுதும் அதிகனை வேத்தியமும்
நல்லசந் தனமாலையும்

இயலான பசுவின்நெய் அலங்கார தீபமும்
எழில்நாரி நாயகர்தமக்கு
ஏற்றகா விரியாடு தைப்பூச தீர்த்தமும்
இலங்கிய வசந்தவிரிவும்

தயவாக வேதிருத் தேர்தொழுத பரிசனம்
தன்மதா னங்கள்மிகவும்
சந்ததம் நடத்தினன் முளசைவே லன்தனது
சந்ததி தழைத்தேறவே. (290)

பாடற்பொருள்:

திருச்செங்கோடு வேலவர் திருமேனிக்கு அனைத்து ஆபரணங் களும், ஆபரணப் பெட்டியும், பல பரிவட்டங்களும், பொன் காப்பும், வெண்கவரியும், பட்டும், அபிடேகமும், மக பூசையும், சம்பா அடிசில் தளிகையும், கறியமுதும், நைவேத்தியமும், சந்தன மாலையும், பசு நெய்யும், அலங்கார தீபமும், அர்த்தநாரீசுவரருக்குத் தைப்பூசம் காவிரியாடு தீர்த்தமும், வசந்தவிழாவும், தேருக்கு வரும் பரிசனங் கட்குத் தன்மதானமும் செய்தவர் முளசை கண்ண குல வேலன் என்பவர்.

★

தோகைஒரு பால்இலகு சோதிகன வில்தோன்றி
ஓகையுறக் கூறும் உரைப்படியே - நாககிரி
பண்டிதர் தீக்கை பரிந்துசெயப் பெற்றுயர்ந்தான்
பண்டைவினை தீர்வேலப் பன். (291)

பாடற்பொருள்:

திருச்செங்கோட்டு அர்த்தநாரீசுவரர் கனவில் தோன்றிக் கூறியபடி நாககிரி பண்டிதரிடம் தீட்சை பெற்று முளசி வேல கவுண்டர் உயர்வடைந்தார்.

★

ஊமைதனைப் பேசுவித்தான் உம்பர்இடு புட்பமழை
யாம்எனவே பெய்யவகை ஆக்கினான் - தேமருவு
வேலன் முளைசைவரு வேந்தன் பணிகிரிவாழ்
வேலன்மிசை அன்பாக வே. (292)

பாடற்பொருள்:

முளைசை வேலன் ஊமையைப் பேச வைத்தார். வேலவருக்குத் தேவர்கள் இடும் புட்ப மழை போல பூச்சொரிய ஒரு கருவி செய்து அன்பாகக் கொடுத்தார்.

இக்கருவி பற்றி தி.அ.முத்துசாமிக் கோனார் பின்வருமாறு எழுதியுள்ளார். ''ஒரு பெட்டியாக வில் எந்திரம் வைக்கப்பட்டுள்ளது. இதன் சிறு துவாரத்தின் உள்ளே பத்திர புஷ்பங்களைக்கொட்டி எந்திரத்தில் கட்டியுள்ள கயிற்றை அசைத்தால் உள்ளே அமைந்துள்ள அந்த எந்திரத்தின் சத்தியால் மேல் உள்ள துவாரத்தின் வழியாக ஒவ்வொரு பத்திர புஷ்பங்கள் விழும். அப்போது அர்ச்சகர் அர்ச்சனை சொல்வார். விமானத்தினின்றும் பத்திர புஷ்பங்கள் விழுதலை நோக்கி அன்பர்கள் சந்தோஷப்படுவார்கள்.''

''ஒவ்வொரு புட்பமாக விமானத்துள்ளிருந்து கீழே தள்ளும் ஓர் சூத்திரம்'' என்பார் கோனார்.

★

ஏமப்பள்ளி கந்தசாமிக் கவுண்டர் மகன்
நாகமலைக் கவுண்டர்

திருமருவு கலியுக சகாத்தநா லாயிரத்
தெண்ணூற்றின் மேலாகவே
செல்வருஷ பிரமாதி சித்திரைத் திங்களில்
தேதியொன் பதில்வெள்ளியில்

தருமருவு கைத்தலன் சிக்கரா சேந்திரன்
தானும்அப் பணைகள்செய்யச்
சந்தோஷ மாகவே ஏழூரில் வைகியே
தான்திருத் தேர்கொணர்ந்தே

குருமருவு செங்கோட்டில் அர்த்தநா ரீசரும்
குமரரும் மகிழ்வெய்தவே
கொற்றவர்கள் மெச்சவே வைகாசி உற்சவம்
கோலா கலம்செய்தனன்

மருமருவு குவளையணி மார்பன்ஏ வையின்மேவும்
மன்னன்அன் னத்தியாகி
மந்தர புயாசலன் கந்தபூ பதிகற்ப
வரசுதன் நாகமலையே. (293)

பாடற்பொருள்:

மைசூர் மன்னர் சிக்கதேவராச உடையார் இட்ட ஆணையின் வண்ணம் கலியுக சகாப்தம் 4800 (கி.பி.1699) பிரமாதி வருடம் சித்திரை மாதம் 9ஆம் தேதி வெள்ளிக்கிழமை முளசி அன்னத்தியாகி கந்தபூபதி மகன் நாகமலை ஏழூருக்குச் சென்று தேர் கொண்டு வந்து திருச்செங்கோட்டில் அர்த்தநாரீசுவரர்க்கும் வேலவர்க்கும் அனைவரும் மகிழ வைகாசி விசாகத் தேர்த்திருவிழாவைச் சிறப்புடன் நடத்தினார்.

★

படிக்கின்ப மன்னவன் மரிராச பூபதி பட்சஞ்செய்ய
குடிக்கின்ப மான சுபைசெயும் காலைசெங் கோட்டிலன்பாய்
நடிக்கும் பதத்தர்த்த நாரீசர் வேலர்க்கு நன்மணஞ்செய்
கொடிக்கம்பம் நாக மலைராயன் ரண்டும் கொடுத்தனனே.
(294)

பாடற்பொருள்:

அரிராச மன்னன்கீழ் சுபேதாராகப் பணிசெய்த நாகமலை ராயன் அர்த்தநாரீசருக்கும், வேலவருக்கும் கொடிக்கம்பம் செய்தளித்தார்.

இவர் 295, 298இல் குறிக்கப்பெறும் கந்தசாமியின் தந்தை முளசிக் கண்ண குல நாட்டு வேளாள கவுண்டர்.

★

ஏமப்பள்ளி நாகமலைக் கவுண்டர் மகன்
கந்தசாமிக் கவுண்டர்

விந்தைபெறும் செங்கோட்டில் கைலாயர் சந்நதியின்
மேலைவாய்தல்
அந்தமிகு கதவுதனைக் கம்பைமுதல் ஆணிகளும்
அன்பாய்ச் செய்தான்
செந்தமிழோர் கலிதீர்த்த நாகமலை பூபனருள்
செல்வனான
மந்தரமென் புயன்ஏவைக் கந்தமன்னன் உலகின்மிக
வாழ்கதானே. (295)

பாடற்பொருள்:

திருச்செங்கோட்டில் கைலாசநாதர் சந்நதியின் மேற்கு வாயிலில் கதவுக்குக் கம்பை முதல் ஆணி வரையிலும் கொடையாக நாகமலை மகன் கந்த மன்னன் தன் கொடையாகக் கொடுத்தார். இவர் சிறந்த சிற்பி. (பாடல் எண் 298 காண்க)

★

கோக்கிளாய் வேல கவுண்டர்

அரவகிரி ஆலயத்து வடக்கு வாசல்
அழகுபெறு கோபுரமுன் வலம தாகப்
பரிவுடனே ஏவைவரு வேலன் ஈன்ற
பாலகனாம் கோக்கிளாய் வேல பூபன்

மருவளரும் இருகுறுந்தாள் ஐந்து பாணி
வாரணத்தை மலையெனவுண் டாக்கி வைத்துத்
திருவளரும் ஆனைமுகன் அருளி னாலே
தியாகரிட குலத்தையெல்லாம் சிறப்பித் தானே. (296)

பாடற்பொருள்:

திருச்செங்கோட்டு மலைக் கோயிலில் வடக்கு வாசல் கோபுரத்தின் வலப்பக்கம் ஏமப்பள்ளி வேலன் மகன் கோக்கிளாய் வேலன் பெரிய விநாயகரைப் பிரதிட்டை செய்தார்.

★

கறைசைமறை யோர்கரத்தில் செங்கோட்டுத் தானிகர்தம்
கவ்வைக்காக
முறைதனில்நாள் நாலெழுதிப் பொன்வாங்கி ஒப்பமிடு
முன்பதாகக்
கிருபையுடன் ஏவைஅன்னத் தியாகிஅந்த முறிதனையே
கிழித்துப்போட்டு
நிறைவுறப்பொன் ஒருநூறும் தந்துதலத் தார்காணி
நிறுத்தினானே (297)

பாடற்பொருள்:

ஒருமுறை திருச்செங்கோட்டுத் தானிகர்கள் தங்கள் வறுமையின் காரணமாகத் திருச்செங்கோட்டுப் பூசை உரிமையில் நான்கு நாட்களைக் கொடுமுடிக் குருக்களுக்கு எழுதிப் பணம் பெற்றுக் கையொப்பமிடும்போது ஏமப்பள்ளி அன்னத்தியாகி நூறு பொன்னைக் கொடுமுடித் தானிகர்க்கு அளித்து ஓலையைக் கிழித்துப் போட்டுத் திருச்செங்கோட்டுத் தானிகர் உரிமையை நிலை நிறுத்தினார். (பாடல் எண் 302 காண்க.)

★

ஏமப்பள்ளி நாகமலைக் கவுண்டர் மகன்
கந்தசாமிக் கவுண்டர்

இன்சொல்சே ரும்திருச் செங்கோட்டில் அர்த்தநா
ரீசர்மேல் பத்தியுடனே
எழில்பரவு பெரியரதம் உண்டாக்க வேண்டியே
இன்பமாய் மனதிலெண்ணி

மஞ்சுலவு சங்ககிரி தனில்வாழு முல்லள்ளி
வருசிக்க ராசேந்திரன்
மனமேவ உரைசெய்து அப்பணைகள் வாங்கியே
மன்னுசுபை செயுநாள்தனில்

மிஞ்சுதரு மங்களிது எனஉரைத் தவரவர்கள்
மேவநிதி யம்வகைசெய்தே
மேன்மைபெறு பெரியரதம் உண்டாக்கி வைத்தனன்
மேதினியு ளோர்புகழவே

கஞ்சமலர் வாவிதிகழ் தென்ஏவை யாதிபன்
கருணைசேர் நாகமலைசொல்
கந்தமகி பாலகன் மைந்தரொடு சுற்றமும்
காசினியில் மிகவாழ்கவே. (298)

பாடற்பொருள்:

ஏமப்பள்ளி அதிபர் நாகமலை மகன் கந்தசாமி திருச்செங் கோட்டு அர்த்தநாரீசுவரர்மேல் பக்தி கொண்டு பெரிய தேர் செய்ய விரும்பினார். தன் கருத்தைச் சங்ககிரியில் அதிகாரம் செய்யும் உல்லள்ளி சிக்கராசனிடம் கூறி அனுமதியும் ஆணையும் பெற்றார். இச்செய்தியைப் பலருக்கும் அறிவித்து நிதியும் சேர்த்து எல்லோரும் மகிழும்வண்ணம் பெரிய தேர் உருவாக்கினார்.

இவர் முளசி கொங்கு நாட்டு வேளாளர் கண்ண குலத்தவர். இவர் தந்தை நாகமலையும் இவரும் சிற்ப வேலையில் சிறந்து விளங்கி'னர். (பாடல் எண் 293 காண்க)

★

ஏமப்பள்ளி நாகமலை மகன் நாட்டுவேலன்

நத்துப் பரவும் வயல்சூழ்தென் னேவை நகர்படைத்தோன்
சத்திய வாசகன் நாக மலைமன்னன் தந்தமைந்தன்
புத்திக்கப் பாச்சி எனும்நாட்டு வேலப்ப பூபன்அன்பாய்
முத்துச் சிவிகை கொடுத்தான்செங் கோட்டு முதல்வருக்கே.
(299)

பாடற்பொருள்:

திருச்செங்கோட்டு இறைவருக்கு ஏமப்பள்ளி நாகமலை மகன் புத்திக்கு அப்பாச்சி என்று புகழ் படைத்த நாட்டு வேலன் முத்துச் சிவிகை செய்து கொடுத்தான்.

★

ஏமப்பள்ளி அன்னத் தியாகி

மாசிவிழாப் பூசவிழா வைகாசித் திருநாள்மண்
டபங்கள் தாமும்
பூசைபடி தினம்ஆறு படிமாலை திருவிளக்கும்
புரிந்தெந் நாளும்
தேசமது புகழ்ந்திடவே ஏவைவளம் பதிஅன்னத்
தியாக ராசர்
நேசமுடன் பணிமலைவாழ் உமைபாகர் தமைவணங்கி
நிலைநின் றாரே. (300)

பாடற்பொருள்:

ஏமப்பள்ளி அன்னத்தியாகி மாசிமக விழா, தைப்பூச விழா, வைகாசி விசாக விழா மண்டபக் கட்டளையைப் பூசைப்

படித்தரத்துக்குத் தினம் ஆறுபடி, மாலை, திருவிளக்கு அளித்துச் சிறப்பாக நடத்தினார்.

பாண்டிய நாட்டில் பஞ்சம் ஏற்பட பாண்டியர் படைக்குப் பஞ்சம் நீங்கும் வரை உணவு அளித்த காரணத்தால் முளசி வேல கவுண்டருக்குப் பாண்டியன் ''அன்னத்தியாகி'' என்ற பட்டம் அளித்தாராம். பின்பு அவர் மரபில் வந்த பலரும் இப்பட்டப் பெயரைத் தாங்களும் தங்கள் பெயரோடு சேர்த்துக் கொண்டனர். (காண்க கார்மேகக் கவிஞர் கொங்கு மண்டல சதகம், பாடல் எண்:77)

★

முளசி கண்ண குலத்தார்

தென்முளசைக் கண்ணனார் தினம்அரிசி ஐந்துபடி
தொன்மடமா மண்டபமும் தோள்மாலைத் - தன்மம்
நடத்தினார் கோதைஅர்த்த நாரீசர் அன்பாம்
இடத்தின ராயிருந்தா ரே. (301)

பாடற்பொருள்:

முளசைக் கண்ணார்கள் அர்த்தநாரீசர் அமுதுபடிக்குத் தினமும் ஐந்துபடி அரிசி அளித்தனர். மடம், மண்டபம், தோள் மாலை இவைகளும் நடத்தினர்.

★

ஆடரவ கிரிஅர்த்த நாரீசர் பூசைசெய்
ஆலம்பர் காசிபர்களும்
அடைவான கொடுமுடித் தானீக ருக்குவிலை
யாகமுறை நாலுநாளும்
ஏடெழுதி ஒப்பமிட்டுப் பின்புதி யாகர்உறை
ஏவைவள நகர்எய்தவே
இதிலொருவர் வரலாகு மோஎன்று சொல்லாமல்
ஏன்எழுதி னீரென்றுதன்
வீடதனில் நூறுபொன் னும்கொடுத் தேகறைசை
வேதியரை விடைசெய்தனன்

மேல்முறி கிழித்தனன் சிறைதனை அகற்றினன்
மெய்காணி நிலையிட்டனன்

நாடறிய இந்நன்றி செய்தநும் மரபினரை
நண்ணுமெம் குலமக்களும்
நன்மையுற எண்ணுவர் எனக்குரவர் வாழிசொல
நல்லபுகழ் எய்தினானே. (302)

பாடற்பொருள்:

ஒருமுறை திருச்செங்கோட்டில் பூசை செய்யும் ஆலம்பாயர், காசிபர் கோத்திரத்தைச் சேர்ந்த குருக்கள் தங்கள் பூசை உரிமையில் நான்கு நாட்களைக் கொடுமுடிக் குருக்களுக்கு விற்று நூறு பொன் வாங்கி ஓலையும் எழுதி ஒப்பமிட்டனர். தியாகர் உறையும் ஏமப்பள்ளிக்கு வந்தனர். ஏமப்பள்ளிக் கண்ணகுலத் தலைவர் அன்னத்தியாகி நூறு பொன் கொடுத்து ஓலையை மீட்டுக் கிழித்துக் கொடுமுடிக் குருக்களையும் அனுப்பி வைத்தனர். (பாடல் எண் 297 காண்க)

இவர்கள் முளசிக் கண்ண குல நாட்டுவேளாள கவுண்டர்கள் ஆவர். ஏமப்பள்ளியை 'ஏவை' என்றும் அழைப்பர்.

★

இராசிபுர நாட்டார் விழிய குலத்தார்

மாலை மடமும் அலைவாய் மலைத்தேனும்
வேலனிட பள்ளியிவை மேவியே - சீலமுடன்
நந்துலவு ராசிபுர நாட்டார் பணிமலைக்குத்
தந்தபரிசு இத்தனையே தான். (303)

பாடற்பொருள்:

நாட்டு வேளாளரில் இராசிபுர நாட்டார் (விழிய குலத்தார்) மாலை, மடம், அலைவாய்மலைத் தேன், வேலவர் மடப்பள்ளி இவைகளைக் கொடையாகத் தந்தனர். இராசிபுர விழிய குலத்தார் மலைமேல் கோபுர வாசல் மண்டபக் கட்டளையை நடத்துகிறார்கள்.

★

தானிகர் மடத்துக் கைலாச பண்டாரம்

காரணிக நாகமலை கயிலாயர் வாகனமும்
வாரணியும் வெண்கலத்தீ வட்டிகையும் - சீரணியும்
தானீகர் தன்மடத்துச் சைவன் கயிலாசன்
தானீகை யர்க்களித்தான் தான். (304)

பாடற்பொருள்:

திருச்செங்கோட்டுத் தானிகர் மடத்தில் பணி செய்த கைலாச பண்டாரம் கயிலாய வாகனம், வெண்கலத் தீவட்டி இவைகளைக் கொடையாக அளித்தார்.

★

இராசிபுர நாடு விழிய குலத் துலுக்கண்ண கவுண்டர்

சீருலவு மடதருமம் நாலுபே ருக்கமுது
திருமாலை பொன்னியுதகம்
திருவிளக் கரிசிபடி ஏழரைப் படிபயறு
சிலகறிகள் நெய்வெல்லமும்

ஏருலவு தளிகைமர கதக்கபாய் துகிலாடை
எழில்புனை பதக்கமுடனே
இனியகுன் றீசரிட தூபிகோ விலுமகிமை
எய்துகை லாயர்திருமுன்

வாருலவு நிர்த்தமண் டபமழகு சேரவே
மருவிய துவாரபாலர்
வடகோபு ரக்கதவு தவமிகு துவாதெசி
மன்னுமறை யவர்போசனம்

பாருலவு நாககிரி யீசரருள் மேவவே
பத்தியுட னேசெய்தனன்
பன்னுதமிழ் ராசிபுர நாடுள துலுக்கணன்
பலகாலு மிகவாழ்கவே. (305)

பாடற்பொருள்:

மட தருமம், நான்கு பேருக்கு அமுது படைத்தல், மாலை, காவிரித் திருமஞ்சன நீர், திருவிளக்கு, ஒரு படி அரிசி, ஏழரைப் படி பயறு, கறிவகைகள், நெய், வெல்லம், தளிகை, மரகத அங்கி, ஆடை வகைகள், பதக்கம், குன்றீசர் தூபி, கயிலாசநாதர் கோயில் நிருத்த மண்டபம், அழகுபெறு துவாரபாலகர் நிறுவுதல், வடகோபுரக் கதவு, துவாதசியில் அந்தணர்கட்கு உணவு இவற்றை இராசிபுரம் நாட்டு வேளாளர் துலுக்கண்ண கவுண்டர் தர்மங்களாகும்.

இவர் கொங்கு நாட்டு வேளாள கவுண்டர்களில் விழிய குலத்தைச் சேர்ந்தவர். இவர்கள் நான்கு பிரிவினர்.

''பாச்சலூர ரான்செம்ப ராயண்ணன் துலுக்கண்ணன்
பார்த்திபன் ஆலத்தூ ராளுடனே
பேச்செல்லாம் ஒன்றாக நால்வரும் கூடியே
பேசி ராசிவன் நாட்டில் வந்தார்''

என்பது வெண்ணந்தூர் குருசாமிப் புலவர் இயற்றிய ''தாதுவருடப் பஞ்சக் கும்மி'' வரிகளாகும். துலுக்கண்ண கவுண்டர் கல்வெட்டு பல இடங்களில் உள்ளன.

இராசிபுரம் விழிய குல நாட்டுவேளாளர் இந்நான்கு பெயரிலும் நான்கு பிரிவாக அழைக்கப்படுகின்றனர்.

★

இராசிபுர நாட்டார் மூணுசாவடிச் சோமசுந்தரன் மகன்
சின்ன வேலகவுண்டர்

அரவகிரி அர்த்தநா ரீசரா லயமேலை
வாசலுக்கு அருகாகவே
அதிசயந் தருவிட்ணு தீர்த்தவட பால்மதில்கள்
ஆலசிய முற்றதோர்ந்து

வருணன்திசை முதல்வாயு மூலைபரி யந்தமும்
மதில்பிரித் தேகட்டினன்

வாசல்முன் திருநிலைகால் கோபுர முன்மண்டபம்
தட்டோடு வகைசெய்தனன்
தருணமுறு ருத்திரோற் காரிவையாசி யில்சிவ
தயங்கும்ஒளி விசுவேசரும்
தனதுமை விசாலாட்சி யுடன்அட்ட பந்தனம்
தருமமது நிறைவேற்றினன்
வரிசையுள வன்ராசை வளர்சோம சுந்தரன்
மகிழ்சின்ன வேலமகிபன்
மைந்தர்பதி னாறுடன் பிறையாயி ரந்தொழுது
மகிமையுடன் மிகவாழ்கவே. (306)

பாடற்பொருள்:

மூணுசாவடிச் சோமசுந்தரன் மகன் சின்ன வேலகவுண்டர் திருச்செங்கோடு அர்த்தநாரீசுவரர் கோயில் மேலை வாசல் அருகில் உள்ள விஷ்ணு தீர்த்தத்தின் வடக்கே மதில்கள் சிதைவுற்றிருந்ததைக் கண்டு மேற்கு முதல் வடமேற்கு வரையில் மதிலைப் பிரித்துப் புதியதாகக் கட்டினார். வாசல் முன் திருநிலைகால் கோபுர மண்டபத்திற்குத் தட்டோடு பொருத்தினார். ருத்திரோத்காரி வைகாசி மாதம் விசுவநாதருக்கும் உமை விசாலாட்சிக்கும் அட்டபந்தனம் செய்தார்.

★

பருத்திப்பள்ளி நாட்டார் செல்ல குலத்தார்

தென்பருத்திப் பள்ளிநிலம் பாலை மேட்டில்
சிலநிலமும் மல்லசமுத் திரத்தில் செய்யும்
மன்பரித்த வளம்திகழும் கொன்றை ஆற்றில்
மாவிடையும் துத்திநத்தம் வரிகள் தானும்
மின்பொருத்த மானகொழுங் கொண்டை தாளி
வெல்லமும்ஈ ழுவர்வரிவை கைப்பொன் தேனும்
அன்புடனே பருத்திநாட் டார்கள் கோதை
அர்த்தநா ரீசருக்கே அளித்த தாமே. (307)

பாடற்பொருள்:

பருத்திப்பள்ளி நாட்டார்கள் திருச்செங்கோட்டு அர்த்தநாரீசு வரருக்குக் கீழ்க்கண்ட கொடைகளை அளித்தனர்.

1) பருத்திப்பள்ளி நிலம், 2) பாலைமேட்டு நிலம், 3) மல்ல சமுத்திரத்தில் வயல், 4) கொன்னையாற்றில் மாவிடை, 5) துத்திநத்தம் வரி, 6) கொழுங்கொண்டையில் தாளி வெல்லம், 7) சான்றோர் (சாணார்) வரி, 8) வைகைப் பொன்மலைத் தேன்.

கொன்னையாற்றில் 'மாஐந்தும்' என்ற பாடபேதமும் உள்ளது.

★

பருத்திப்பள்ளி நாட்டவர் செல்ல குலத்தார்

தினமும்அமுது படியாறு கறிக ளோடு
திருமாலை திருவிளக்கும் சுகந்தக் காப்பும்
அனமருவு மடதருமம் திருவி ழாவின்
அழகியமண் டபச்சிறப்பும் அமஞ்சி வேலை
கனமருவு பலருபய மார்க்க ரேகை
காவிரிமஞ் சனம்புழுகு காப்பும் ஏற்றி
மனமருவு கோதைஅரன் அருளி னாலே
வாழ்பருத்தி நாட்டவர்கள் வரம்பெற் றாரே. (308)

பாடற்பொருள்:

பருத்திப்பள்ளி நாட்டவர் என்னும் நாட்டு வேளாளரில் செல்ல குலத்தினர் நாள்தோறும் ஆறு சுறிவகைகளோடு அமுதுபடி அளித்தனர். திருமாலை, திருவிளக்கு, மணப்பொருள் சாத்துதல், மட தருமம், திருவிழா மண்டப பூசை, ஆள் அமஞ்சி வேலை, வணிகர்கள் சுங்க வரியைக் கோயிலுக்கு அளித்தல், காவிரித் திருமஞ்சன நீர், புழுகுக் காப்பு ஆகிய திருப்பணிகளை இறையருளால் செய்தனர்.

எழுகரைச் செல்ல குலத்தாரில் பருத்திப்பள்ளிச் செல்ல குலத்தார் மட்டும் நாட்டு வேளாள கவுண்டர்.

★

அர்த்தபா கத்திருநாள் அம்மண்ட பச்சிறப்பும்
மெத்தவே தான்நடத்தி மேவினான் - பத்திபுனை
ஞாலம் புகழ்பருத்தி நாடுடையோன் காராளன்
வேலன் கனமாக வே. (309)

பாடற்பொருள்:

அர்த்தநாரீசுவரர் திருவிழா நாளில் மண்டபப் பூசையை மிகச் சிறப்பாக நடத்திப் புகழ் பெற்றார் பருத்திப்பள்ளி நாட்டு செல்ல குல வேலன் என்பவர்.

★

பழையகோட்டை கந்தன் சர்க்கரை உத்தமக்
காமிண்ட மன்றாடியார்

அனுதினமும் அபிடேக சந்தனம் பலமிரண்டு
ஆனகா விரிமஞ்சனம்
அளிசீத மானஇள நீரிரண் டொடுசுருதி
அத்தியா னத்தருமமும்

தினம்அமுது படியைந்து பயறுபடி கறியொடு
சேரநெய் வெல்லமுடனே
செங்கோ டருக்கிவை படித்தரம் நடத்தினன்
சித்திரத் தேர்மீதினில்

மனமகிழ மஞ்சனச் சங்கிலி கொடுத்தனன்
மலைமேலை வாய்க்கபாடம்
வைத்தனன் அநேகபரி வட்டமா லிகைதீபம்
மடதரும முஞ்செய்தனன்

கனமிகுதி ஈதல்சவு ரியமகிமை பெற்றனன்
காரையா னூருடையவன்
கந்தன்என வந்தசர்க் கரைபயிரன் உத்தமக்
காமிண்ட மன்றாடியே. (310)

பாடற்பொருள்:

பழையகோட்டைப் பட்டக்காரரில் ஒருவராகிய கந்தன் பயிரன் சர்க்கரை உத்தமக் காமிண்ட மன்றாடியார் நாள்தோறும் அபிடேகத்திற்கு இரண்டு பலம் சந்தனம் அளித்தார். காவிரித் திருமஞ்சன நீர் அளித்தார். இளநீர் இரண்டு, வேதம் ஓதக் கொடை, தினமும்அமுதுபடிக்கு ஐந்து படி பயறும் கறிகளும், நெய், வெல்லம் முதலியவைகளை செங்கோடருக்குப் படித்தரமாகக் கொடுத்தார். தேரோட்டம் நடைபெறும்போது மஞ்சனச் சங்கிலி கொடுத்தார். மலைமேல் மேற்கு வாசலுக்குக் கதவு செய்து கொடுத்தார். பல பரிவட்டங்கள், மாலை, தீபம், மடதர்மம் முதலியவற்றையும் அளித்தார்.

இவர்கள் கொங்கு வேளாளரில் பயிர குலத்தைச் சேர்ந்தவர்கள். கால்நடை வளர்ப்பிலும், விவசாயத்திலும் சிறந்து விளங்கினர். தமிழ்ப் புலவர்கள் பலரை ஆதரித்தனர். ஐம்பது புலவர்கட்கு மேல் இம்மரபினர் பற்றிய பாடல்களை இயற்றியுள்ளனர். எல்லோருக்கும் இனியவர் என்பதால் சர்க்கரை என்று பெயர் பெற்றார்களாம். இவர் இம்மரபில் 14ஆம் பட்டக்காரர்.

★

கவசை பாலவேளாளர் மசக்காளி மன்றாடியார்

வேலை சூழ்பணி மாமலை வேலரும்
விமலரும் மகிழ்வெய்தச்
சீல மாகியோ ரைம்படி அரிசியும்
சிலகறி பருப்போடே
மாலை காவிரி மஞ்சனம் தீபமும்
மனமிகு தயவாகிப்
பாலை சேர்மசக் காளிசெங் கோடரைப்
பணிந்திவை அளித்தானே. (311)

பாடற்பொருள்:

கவசை மசக்காளி மன்றாடியார் வேலவருக்கும், அர்த்தநாரீசுவரருக்கும் அமுதுபடிக்கு ஐந்துபடி அரிசியும் கறிகளும் கொடுத்தார்.

மாலை, காவிரி மஞ்சன நீர், விளக்குகள் ஆகியவற்றைக் கொடையாகக் கொடுத்தார்.

இவர் பாலவேளாளர் மரபினர். ஒற்றைச் சங்குப் பிரிவினர். கோவை மாவட்டம் கவசை எனப்படும் கோயில்பாளையத்தைத் தலைமை இடமாகக் கொண்டவர்கள். தமிழ்ச்சங்கம் நிறுவித் தமிழ் வளர்த்தவர்கள். நின்றுபோன திருமணப் புலவர் வரியை மீண்டும் நடைமுறைப்படுத்தியவர்கள். இவர்கள் தமிழ்ச் சங்கத்திடம் படிக்காசுப் புலவர் தோல்வியடைந்தார். இவர் கொங்கு மண்டல சதகத்தில் புகழப்படுகிறார். (கார்மேகக் கவிஞர் சதகம்:85)

★

காடையூர்க் காங்கேய மன்றாடியார்

பானு லாவிய பணிமலை வேலரும்
பரமரும் உளமேவத்
தேனு லாவிய காடைமன் றாடியார்
திருந்தவிழ் மரக்காலும்
கானு லாவிய கறிகளும் பருப்புடன்
கவினுறு திருமாலை
ஆனு லாவுநெய்த் தீபமும் தினம்தினம்
அளித்தனன் பிழைத்தானே. (312)

பாடற்பொருள்:

காடையூர் காங்கேய மன்றாடியார் அமுதுபடிக்குத் தினம்தினம் ஒரு மரக்கால் தானியமும் கறிகளும் பருப்புடன் கொடுத்தார். மாலை, நெய்த்தீபம் இவைகளையும் அளித்தார்.

இவர்கள் பொருளந்தை குலத்தில் முழுக்காது பிரிவைச் சேர்ந்தவர்கள். காடையூர் சேடகுல வெள்ளைப் பெண வெள்ளையம் மானைத் திருமணம் செய்துகொண்ட கருமாபுரம் காங்கேயன் வழியினரே முழுக்காது பிரிவினர் ஆனார்கள். வெள்ளையம்மானைக்

குல முதல்வியாக வணங்குகின்றனர். இவர்கள் தோன்றிய வரலாற்றை கண்ணாடிப் புலவர் என்பவர் கதைப் பாடலாகப் பாடியுள்ளார்.

நல்லூர் சோழீசுவரர் கோயில் கல்வெட்டு, நாரணாபுரம் செப்பேடு போன்ற ஆவணங்களில் ''முழுக்காது பொருளந்தை'' என இவர்கள் அழைக்கப் பெறுகின்றனர். இவர்கள் பொருளந்தை குலத்தின் ஒரு பிரிவினர். தனிக்குலம் அன்று.

காணி பெற்றுத் தந்த இஸ்லாமிய சர்தாருக்கு நன்றிக் கடனாக சில ஆண்டுகள் காது குத்தாமலிருந்து பின் சிறப்பாக விழா நடத்திக் காது குத்துவர். குத்தாத காது முழுக்காது அல்லவா?

★

காங்கயம் செங்கண்ணர் குலப் பல்லவராயர்

மன்னு காங்கயப் பல்லவ ராயமால்
வளர்பணி மலையார்க்குத்
தன்னு தாகநந் தாவனம் சரப்பணி
தயவுடன் துகிலாடை
செந்நெ லாமவிழ் குறுணிநெல் பருப்புடன்
தீபநல் திருமாலை
இன்ன தாகவே நடத்தினன் தரணியில்
இனிதுபெற் றிருந்தானே. (313)

பாடற்பொருள்:

கொங்குவேளாளரில் செங்கண்ண குலத்தவர் ஆகிய காங்கயம் பல்லவராயர் நந்தவனம், அணிகலன்கள், ஆடைகள், அமுதுபடிக்குக் குறுணி நெல், நெய், பருப்பு, தீபம், மாலை முதலியவைகளைத் தன் கொடையாகக் கொடுத்தார்.

இவர்கள் முன்னோர் சோழருக்காகப் பல்லவ மரபினரை வென்ற காரணத்தால் பல்லவராயர் என்று பெயர் பெற்றனர். சித்தளந்தூரைச் சேர்ந்த செங்கண்ண குல லிங்கண்ணன் காங்கயம் பெருங்குடி குலப் பெண்ணை மணம் செய்துகொண்டு காங்கயம் காணி பெற்றார். (காண்க:கார்மேகக் கவிஞர் கொங்கு மண்டல சதகம், பா.எ:72, 73.)

★

கொங்கு 24 நாட்டவர்

மால தானரா தாபுரத் துடன்எழில்
மருவிய இருபத்து
நாலு நாட்டவர் உபயமும் சிறப்புடன்
நல்விளக் கலர்மாலை
சால மாமட தருமமும் பரிவுடன்
தடபணி மலையார்க்கு
வேலை ஈதெனப் புரிந்தனர் அவரவர்
வேண்டியது அடைந்தாரே. (314)

பாடற்பொருள்:

தாராபுரம் சூழ்ந்த கொங்கு 24 நாட்டவர்கள் விளக்குகள், மலர் மலை, மட தருமம் இவைகளைத் திருச்செங்கோட்டுக்கு அளித்து அவரவர் வேண்டிய வரங்கள் பெற்றனர்.

கொங்கு மண்டலம் 42 நாடுகள் ஆனபோது தாராபுரம் சூழ்ந்து 24 நாடுகளும், சங்ககிரி என்னும் குன்றத்தூரைச் சார்ந்து 12 நாடுகளும், டணாயக்கன் கோட்டை சூழ்ந்து 6 நாடுகளுமாக அமைந்தன.

★

நகரத்தார் அர்த்தநாரி செட்டியார்

பலமேவு கலியுக சகாத்தமா யிரமிசை
பயின்றஅறு நூற்றறுபதில்
படர்காள யுத்திவரு டம்தனில் கோதையுமை
பாகருக்கு அற்புதம்எனத்

தலமேவு பரமேசர் கயிலாய நாதர்தம்
சந்நதி மகாமண்டபம்
தனதர்த்த மண்டபம் கற்பக்ர கம்தூபி
தங்குசோ பானகுறடு

நலமேவு சந்திரசே கரர்குறடு பலிபீடம்
நல்லகல் கம்பமுடனே
நன்றென அமைத்தனன் கற்பதரு வாம்அர்த்த
நாரிகா ரணவணிகமால்

குலமேவு சந்ததி தழைத்தேற வும்தனது
கோத்திர மிகுந்தேறவும்
கொற்றநவ கோடி நாராய னெனும்பெருமை
கொண்டுபுவி தனில்வாழ்கவே. (315)

பாடற்பொருள்:

சாலிவாகன சகாப்தம் 1660 (1738) காளயுத்தி வருடம் திருச்செங்கோடு கயிலாசநாதர் கோயில் மகாமண்டபம், அர்த்த மண்டபம், தூபி, சோபானக் குறடு, சந்திரசேகர் குறடு, பலிபீடம், கல் கம்பம் இவைகளை அமைத்தவர் நவகோடி நாராயணன் என்ற சிறப்புப் பெற்ற அர்த்தநாரி நகரத்து செட்டியார் ஆவார்

★

அமரகுந்தி ஆயிரவைசியர்

திருமடப் பள்ளிமலை மீதுமட மண்டபம்
செப்புக் கிடாரமணியும்
திருமுலைத் தளம்ஓலை ஓட்டியா ணம்காறை
செம்பொனின் வயிரமணியும்

ஒருமடம் இறக்கத்தில் ஆனைமுக வன்கோயில்
ஓங்குசங் கிரமபூசையும்
உற்றதிரு நாள்உபய அபிடேக கட்டளைக
ளொடுசாந்து சாத்துபயமும்

மருமுடி உமைக்கிடது பாகம் கொடுத்தபணி
மலையீசர் உளமகிழவே
மங்கைவரு சீயால கட்டிபுண் ணியமாக
வத்திரம் அநேகங்களும்

துரமுடைய அமரகுன் றியிலாயி ரத்தலைவர்
சோலைசெறி குன்றைநகரார்
துங்களழு கரைநாட்டின் மேவுவணி கேசுரர்கள்
சுபமுற இயற்றினாரே. (316)

பாடற்பொருள்:

அமரகுன்றியில் வாழும் ஆயிரவர் என்ற வணிகர் குலத்தார் திருச்செங்கோட்டில் மடைப்பள்ளி, மலைமீது மடம், மண்டபம், செப்புக் கிடாரம், மணி, முலைத்தளம், ஓலை, ஓட்டியாணம், பொன் வயிரமணி, மடம் இறக்கத்தில் விநாயகர் கோயில், மாதப் பிறப்புப் பூசை, திருநாள் உபயமாக அபிடேகக் கட்டளை, சந்தனம் சாத்தும் உபயம், தாரமங்கலம் சீயால கட்டி புண்ணியமாக பல ஆடைகளும் அபிடேகமும் தங்கள் உபயமாகச் செய்தனர்.

தாரமங்கலம் போல அருகில் உள்ள அமரகுந்தியும் கட்டி மரபினரின் முக்கிய ஊராக விளங்கியது.

★

குன்றத்தூர் நல்லணன் மகன் வேலாயுதன்

அத்திமுகன் கோயில் அழகான சோபனமும்
சித்திரமட புண்ணியமும் செய்தானே - புத்தியுடன்
நந்துலவும் குன்றைவரு நல்லணபூ பன்பரிவாய்த்
தந்தமகன் வேலாயு தன். (317)

பாடற்பொருள்:

குன்றத்தூர் நல்லணன் மகன் வேலாயுதன் என்பவர் விநாயகர் கோயில் படிக்கட்டுக்களையும், திருமடத்தையும் தன் புண்ணியமாகச் செய்தார்.

★

சிவசூரிய செட்டியார் மகன் திருவேங்கடநாதன்

கட்டிரதக் கீழ்பால் கணபதியும் மண்டபமும்
அட்டதிக்கெண் கோதையிலுண் டாக்கினான் - இட்டமுடன்
சிந்தைதய வாகிச் சிவசூ ரியவணிகன்
தந்ததிரு வேங்கடநா தன். (318)

பாடற்பொருள்:

கட்டி முதலிகள் திருச்செங்கோட்டுக்கு அளித்த தேருக்குக் கிழக்கே கணபதியை எழுந்தருளச் செய்து மண்டபமும் கட்டியவர் சிவசூரிய செட்டியார் மகன் திருவேங்கடநாதன் என்பவர்.

★

நல்லகட்டி; செங்கோடன்

தென்னி லங்கிய பணிமலை வேலர்தன்
சிறந்தசந் நதிவாசல்
முன்னி லங்கிய துவாரபா லகர்களை
முறையுடன் புரிந்தாரால்
கன்னி லம்சிலை வேள்நல்ல கட்டியும்
காரணி வணிகேசன்
இன்னி லம்புகழ் மேவுசெங் கோடனும்
இருவரும் மிகவாழ்க. (319)

பாடற்பொருள்:

திருச்செங்கோட்டு வேலவர் சந்நதி வாசல் முன் விளங்கும் துவாரபாலகர்களை எழுந்தருளச் செய்தவர்கள் நகரத்துச் செட்டியார்களில் நல்லகட்டி என்பவரும், செங்கோடன் என்பவரும் ஆவர்.

''இத்துவாரபாலகர்கள் நல்ல சிற்ப வேலை. மார்பில் உள்ள மணிவடங்களில் ஒவ்வொரு மணியின் இடையிலும் ஈர்க்கு விட்டால் நுழைந்து செல்லுமாறு நுட்பமான வேலை செய்யப்பட்டுள்ளது. லண்டன் சிறு ஊசிதான் செல்லும்'' என்று தி.அ.முத்துசாமிக் கோனார் புகழ்ந்து எழுதியுள்ளார். (கொங்கு நாடு, ப.85)

★

சங்ககிரி நோட்டம் சுக்குட்டி செட்டியார்

தென்மகிழ் கோதை மேவும் திருக்கயி லாய நாதர்
முன்மகிழ் நந்தி கேசர் முழுமணிக் குறடுண் டாக்கி
மன்மகிழ் குன்றை நோட்டம் வைசிய குலன்சுக் குட்டி
தன்மமாய் இடபதேவர் தாபனம் செய்வித் தானே. (320)

பாடற்பொருள்:

குன்றத்தூரில் நோட்டம் என்ற பணியில் இருந்த வைசியர் குலச் சுக்குட்டி என்பவர் கயிலாசநாதர் கோயில் முன் நந்திக்கு மணிமண்டபம் கட்டி அங்கு நந்தியையும் எழுந்தருளச் செய்தார்.

★

சிவந்த பாதம்

அணிமலைத் தருமம் மேவும் ஆயிரத் தவரு தாகப்
பணிமலை காவ லர்க்குப் பழையமண் டபத்து முன்னே
துணிமலைக் கருணை வாரி சுரந்திடு சிவந்த பாதம்
பணிமலைக் கனகம் ஈந்து மண்டபம் கட்டி னானே. (321)

பாடற்பொருள்:

ஆயிர வைசியர் தர்மமாகப் பணிமலைக் காவலர் கோயிலில் பழைய மண்டபத்து முன்னே புதிய மண்டபத்தைக் கட்டியவர் சிவந்த பாதம் என்பவர்.

★

சங்ககிரி நோட்டம் குமரவேலப்ப செட்டியார்

நன்றிசேர் கோதை அர்த்த நாரியீ சருக்கு முன்னே
வென்றியா யிரவர் அன்பு மேவிய மடத்தின் பாங்கே
குன்றைவாழ் வணிகம் நோட்டம் குமரவே லப்ப செட்டி
மன்றுபோல் வடக்கு வாய்தல் மண்டபம் கட்டி னானே. (322)

பாடற்பொருள்:

திருச்செங்கோட்டில் அர்த்தநாரீசுவரருக்கு முன்பு உள்ள ஆயிரவர் மடத்தில் குன்றத்தூர் வாழும் வணிகர் நோட்டம் குமர வேலப்ப செட்டி புதிய மண்டபம் ஒன்றைக் கட்டினார்.

★

சங்ககிரி நாராயணன் மகன்
நோட்டம் அர்த்தநாரி செட்டியார்

நந்துலா வாவி சூழும் நாகமா மலையின் மீது
கொந்திய வடக்கு வாய்தல் கோபுரத்து அங்கி மூலை
தந்திமா முகனும் கோவில் தானுமே குன்றை நோட்டம்
செந்தமிழ் அர்த்தநாரி செட்டியார் உபயம் தானே. (323)

பாடற்பொருள்:

திருச்செங்கோட்டு மலையில் வடக்கு வாசல் கோபுரத்தின் தென்கிழக்கு மூலையில் விநாயகருக்குக் கோயில் கட்டி அங்கு விநாயகரை எழுந்தருளச் செய்தவர் குன்றத்தூர் நோட்டம் அர்த்தநாரி செட்டியார் என்பவர்.

'நோட்டம்' என்பது உலோகம். நாணயம் இவைகளின் தரம், தரமின்மை இவைகளை ஆராயும் ஒரு பதவியாகும். அட்டதிக்குப் பாலகர்களில் தென்கிழக்கு மூலைக் காவலர் 'அங்கி' ஆவார்.

★

நாககிரி வீரன்மலை நந்தீ சுரர்தமக்கு
மாகமொரு மண்டபமும் வைத்தானே - மேகமெனும்
நாரா யணவசியன் நல்கும்அர்த்த நாரிமன்னன்
தாராள மாய்க்கொடுத்துத் தான். (324)

பாடற்பொருள்:

திருச்செங்கோட்டு மலை நந்திக்கு மண்டபத்தை வணிகரில் நாராயணன் மகன் அர்த்தநாரி என்பவர் கட்டினார்.

★

செங்கோட்டு நல்லதம்பி

தென்னுலவு காராளன் செங்கோட்டு நல்லதம்பி
திருச்செங் கோட்டில்
மன்னுபுகழ் நல்லீசர் தாபனையும் மண்டபமும்
வளமாச் செய்தே
பன்னுதமிழ் ஈரோட்டில் நஞ்சைஇரு மாவும்அவர்
படிக்கே ஈந்து
நன்னிலமெண் தெய்வசிகா மணிக்குருவுக்கு அபிடேகம்
நடத்தி னானே. (325)

பாடற்பொருள்:

வேளாளர் ஆகிய செங்கோட்டு நல்லதம்பி என்பவர் திருச்செங்கோட்டில் நல்லீசரை எழுந்தருளச் செய்து மண்டபமும் கட்டினார். ஈரோட்டில் நன்செய் இரண்டு மா நிலம் கொடையாகக் கொடுத்தார். தெய்வசிகாமணி பண்டிதருக்குக் குருஅபிடேகமும் செய்தார்.

★

துரைநயினான் முத்தியப்ப முதலியார்

காரணிகர் கோதைக் கணபதியார் சப்பரமும்
பாரணியு மூடிகமும் பண்ணினான் - ஏரணியும்
தொண்டைவள நாடன் துரைநயினான் முத்தியப்பன்
தண்டமிழ்சேர் கங்கைகுலத் தான். (326)

பாடற்பொருள்:

திருச்செங்கோட்டுக் கணபதிக்குச் சப்பரமும், பெருச்சாளி வாகனம் செய்து கொடுத்தவர் தொண்டை மண்டல வேளாளர் துரைநயினான் முத்தியப்பன் என்பவர்.

★

இருப்புலி செல்லகுல இளையாக் கவுண்டர்

தென்னுலவு நாககிரி சித்திர மண்டபத்தை
மன்னுவடி வேலர்முன் வைத்தானே - பன்னுதமிழ்ச்
சொல்லில் இளையான் சுமுகன் விகாரிதனில்
பல்லுலகும் போற்றும் படி. (327)

பாடற்பொருள்:

திருச்செங்கோட்டு வேலவர் முன் விகாரி வருடம் சித்திர மண்டபத்தைக் கட்டியவர் இருப்புலி இளையான் என்பவர். இவர் கொங்கு வேளாளரில் செல்ல குலத்தைச் சேர்ந்தவர். இவருடைய ஏழு மக்கள் ஏழு ஊர்களில் குடியேறி எழுகரைச் செல்லர் என அழைக்கப் படுகின்றனர். திருச்செங்கோட்டுக்கு அருகில் உள்ள இளையாம் பாளையம் இவருடைய பெயரால் வழங்கப்படுகிறது.

★

நாகமலைக் கோயிலுக்கு நாயகமென் றேமுருகர்க்கு
ஆகஒரு மண்டபமுண் டாக்கினான் - பேகன்
இளையான் நிழலில் இமையவரும் ஆரும்
களையாற வேபணிவார் கள். (328)

பாடற்பொருள்:

திருச்செங்கோட்டில் முருகனுக்காக ஒரு மண்டபத்தைக் கட்டியவர் இருப்புலி இளையான் என்பவர்.

இவர் கட்டிய இச்சித்திர மண்டபத்தில் தன் ஏழு மக்கள் உருவங் களையும் அமைத்துள்ளார்.

தி.அ.முத்துசாமிக் கோனார் இம்மண்டபத்தில் உள்ள இரண்டு முக்கிய சிற்பங்கள் பற்றி வியந்து பின்வருமாறு எழுதியுள்ளார்.

''ஸ்ரீகுமரர் கோயில் சபா மண்டபம் சுவாமி கோயில் மண்டபம் போலவே சிற்ப வேலைகள். மேலே கமலம், கிளி, கல் சங்கிலிகள் இருக்கின்றன. ஒரு தூணில் 10 கைகளுடன்

உயரமாக வீரபத்திரன் தக்கனை மல்லாற்றுப் போட்டு மேலே நின்று சூலாயுதத்தில் வலுக்கொண்டு குத்தும் கோப சொரூபமாக இருக்கிறது. அந்தச் சூலம் தலையில் ஊடுருவி அதன் நுனி சிறிது தெரிவதாகவும் தோன்றுகிறது வியப்பு. தலையில் இருக்கிற பாம்பு, தேள் வேலைப்பாடு மிகு நுட்பமும் வனப்புமாக விளங்குகிறது.

மற்றொரு தூணில் வேட்டையாடிய பட்சிகளைக் கோர்த்துத் தொங்கவிட்டிருப்பது, குறத்தி அழகாகப் பின்னிய மூங்கிற்கூடையை ஒரு முழங்கை உள்ளிட்டு இடுக்கி ஒயிலாக நிற்கிறது. இவைகள் எல்லாம் திரிபங்கமான அங்க இலட்சணத்துடன் அமைந்திருப்பது. சிற்ப நுட்பம் தெரிந்தவர்கள் மிக வியக்கத்தக்கனவாகும்.''

★

செல்லன்இளை யானிரும்பைச் செம்மலிரு பாணிகொண்டு
பல்லுலகெண் கோதைப் பதியார்க்கு - நல்ல
திருப்பணியும் பூசனையும் செய்துசெய்து சென்மக்
கருப்பிணியை மாற்றிவைத்தான் காண். (329)

பாடற்பொருள்:

இருப்புலிச்செல்லகுல இளையான் திருச்செங்கோட்டு இறைவர்க்குத் திருப்பணிகளைச் செய்து பூசையும் செய்தார்.

★

மங்கைவரு கட்டிரத வடகீழ் விடாயாற்றி
மண்டபம் மகாபூசையும்
மலைமீது காலசந் தியின்ஆறு படிஅரிசி
மடமாலை நந்தவனமும்

துங்கரவ கிரிவேலன் நிர்த்தமண் டபஅணிகள்
சூழ்சித்திர கண்டமுடனே
தூயகும ரீசர்சந் நதிமண்ட பம்கிரி
துலங்குமட அனதானமும்

திங்களணி அர்த்தநா ரீசபண் டிதருடைய
திருமாளி கைக்கூடமும்
செழுமறை சொலும்சதா சிவபண்டி தர்க்கினிய
தேசிகப் பிரதிட்டையும்

பொங்குபுகழ் சேர்குலோத் துங்கபட் டன்துணைவர்
பூணுநூ லொடுவதுவையும்
புண்ணிய குமாரன்இளை யானிரும் பையுடைய
பூமிபா லகன்உபயமே. (330)

பாடற்பொருள்:

திருச்செங்கோட்டில் தாரமங்கலம் கட்டி முதலியின் திருப் பணியான தேருக்கு வடகிழக்கே விடாயாற்றி மண்டபத்தில் மகாபூசை, மலைக்கோயிலில் காலை சந்தி பூசைக்காக அமுதுபடிக்கு ஆறுபடி அரிசி, மடம், மாலை, நந்தவனம், வேலவர் நிருத்தமண்டபத்தில் அழகு பொருந்திய சித்திரகண்டக் கால்கள், குமரீசர் சந்நதி மண்டபம், மலையில் மடம், மடத்தில் அன்னதானம், அர்த்தநாரீசுவர பண்டிதரின் திருமாளிகைக்கூடம், வேதம் ஓதுகின்ற சதாசிவ பண்டிதர்க்குத் தேசிகப் பிரதிட்டை, குலோத்துங்க பட்டர் சகோதரர்கட்கு உபநயனம், திருமணம் ஆகிய இவைகளையெல்லாம் செய்தவர் இருப்புலி செல்ல குல இளையான் ஆவார்.

★

குமரமங்கலம் குழந்தையப்பன் மகன் பொன்னய்யன்

சீரணியும் செங்கோட்டில் அர்த்தநா ரீசரிட
சித்தம் மேவ
காரணிக வயிரவனார் சிகரந்தன் புண்ணியமாய்க்
கட்டி வைத்தான்

தாரணியெண் குமரமங்கைக் கவுண்டனியன் குழந்தையப்பன்
தந்த மைந்தன்
வாரணிமுன் னூல்மார்பன் பொன்னய்யன் இப்புவியின்
வாழ்க மாதோ. (331)

பாடற்பொருள்:

திருச்செங்கோட்டு அர்த்தநாரீசுவரர் கோயிலில் பைரவர் சந்நதிக்கு விமானம் கட்டியவர் குமரமங்கலத்தைச் சேர்ந்த அந்தணரில் கவுண்டின்ய கோத்திரம் குழந்தையப்பன் மகன் பொன்னய்யன் என்பவர்.

★

அர்த்தநாரீசுர அய்யன் முத்தய்யன்

அரவகிரி அடிவாரத்து அறுமுகவர் தூபிசெய்தான்
ஆலம் பாயன்
குரிசில்எனும் சுப்பிரமணிய பண்டிதன்பால் சேர்க்கையுள்ளோன்
கோதை வாழ்வோன்
அருமறையோன் அர்த்தநா ரீசுரையன் முத்தய்யன்தான்
அன்பாய்த் தானே
துரிதமாய்த் தன்மமிதைச் செய்துமனத் துன்பம்அறச்
சுகம்பெற் றானே. (332)

பாடற்பொருள்:

ஆலம்பாயர் கோத்திரத்தைச் சேர்ந்த அர்த்தநாரீசுவரன் முத்தய்யன் திருச்செங்கோடு அடிவாரத்தில் உள்ள முருகன் கோயிலுக்குத் தீபத்தம்பம் நிறுவினார். சுப்பிரமணிய பண்டிதரிடம் நட்புக் கொண்டார். தன் துன்பங்களைப் போக்கிக் கொண்டார்.

★

பழசை திருவேங்கடன், தொழுவூர் அர்த்தநாரி

மாலோன் உமையை அரனாருக்கு ஈந்த வகையெனவே
பாலான மேனியர் நாகேச லிங்கர்க்குப் பாணிவட்டம்
சேலார் பழைசையில் வாழ்திரு வேங்கடன் தென்தொழுவூர்க்
கோலா கலன்அர்த்த நாரியும் கூடிக் கொடுத்தனரே. (333)

பாடற்பொருள்:

திருமால் உமாதேவியைச் சிவருமானுக்கு ஈந்த வகை போல நாகேசுவரர் கோயிலில் திருமணக் காட்சியைத் துணியில் வரைந்து பழசை திருவேங்கடனும், தொழுவூர் அர்த்தநாரியும் கொடுத்தனர்.

தொழுவூர் - தோழூராக இருக்கலாம்.

★

கந்தசாமி மகன் தானத்துக் கணக்கு இராமபத்திரன்

மங்களச காத்தத்தில் ஆயிரத் தைஞ்நூறு
மருவுமுப் பத்தெட்டினில்
மன்மத மெனும்வருட மேடமா தந்தன்னில்
மன்னுசூ ரப்பள்ளியில்

பொங்கமுடன் ஒருகுளம் தன்னையுண் டாக்கினன்
புகழ்அரவ கிரியார்க்கெனப்
போஜன்மரி ராசேந்த்ர னுடையபுண் ணியமதாய்ப்
புனிதன்முத் தய்யன்மகிழக்

கொங்கிலுயர் செங்கோடை அர்த்தநா ரீசரும்
குமரரும் வேதியர்களும்
கோவிலின் பரிசனர்கள் முதலான பேர்க்கமுது
குறையாத வகைசெய்தனன்

கங்கைகுல னானவேள் கோதைநக ராதிபன்
கந்தச் சுவாமிபாலன்
கருணைமிகு ராமபத் திரமகீ பாலகன்
காசினியில் மிகவாழ்கவே. (334)

பாடற்பொருள்:

சாலிவாகன சகாப்தம் 1538 மன்மத வருடம் (1616) சித்திரை மாதம் திருச்செங்கோடு கந்தசாமி மகன் இராமபத்திரன் சூரப்பள்ளியில் திருச்செங்கோடு அர்த்தநாரீசுவரர்க்கு என்று ஒரு குளம் உண்டாக்கினார். மரிராசேந்திரன் புண்ணியமாக முத்தய்யன் மகிழ்ச்சி அடையும் வண்ணம் அர்த்தநாரீசுவரருக்கும், வேலவருக்கும், அந்தணர்களுக்கும், கோயில் பரிசனங்களுக்கும் அமுது செய்வித்தார்.

இவர் எழுதிய ''இராமபத்திரன் பட்டயம்'' மிகச் சிறந்த கொங்கு நாட்டு வரலாற்று ஆவணமாகத் திகழ்கிறது. (காண்க: தமிழ்ப் பல்கலைக் கழக வெளியீடான ''கொங்குநாட்டுச் சமுதாய ஆவணங்கள்'' (1991), தொகுப்பாசிரியர் புலவர் செ.இராசு.)

★

முன்னம்ஒரு பகீரதன்தான் கங்கைதனைக் கொண்டுவந்த
முறைமை போல
மன்னர்மன்னன் மரியேந்திரன் மந்திரிமுத் தையனிட
மனது மேவ
அன்னதரு வளர்அகரம் தன்னில்அர்த்த நாரீசர்க்கு
ஆக வேண்டி
கன்னன்மதன் கந்தனருள் ராமபத்திரன் ஒருகுளத்தைக்
கட்டி னானே. (335)

பாடற்பொருள்:

தானத்துக் கணக்கு இராமபத்திரன் முன்னாளில் பகீரதன் ஆகாச கங்கையைப் பூமிக்குக் கொண்டு வந்தது போல மரியேந்திரன், மந்திரி முத்தய்யன் மகிழும்வண்ணம் அகரம் என்ற ஊரில் அர்த்தநாரீசு வரருக்காக ஒரு குளம் வெட்டி வைத்தார்.

அகரம் - இன்று சூரப்பள்ளி என வழங்கும் ஊராகும்.

★

இருகாலூர் அத்தப்ப கவுண்டன்

நானில மதித்தபணி மலைவேல ரும்கருணை
நாரியுமை யொருபாகரும்
நரராசர் அமரர்முனி வோர்கள்புடை சூழவே
நகரிவல மானபவனி

தானுலவி வந்தபின் கற்பூர தீபமும்
தட்டிபல பரிமாறவும்
சகலரை அனுப்பவும் தங்கமக மேருவிது
தான்என்ன ஒருமண்டபம்

பானுலவு கால்களிரு பத்துநா லுத்திரம்
பாவுதள விசைபோதிகை
பலவோடு அமைத்துநம் மலைமீது ரவிகோவில்
பண்ணிநற் றவமெய்தினன்
தேனுலவு மங்கைவரு கட்டிமன மகிழவே
தேசதேசம் புகழவே
செஞ்சொலிரு காலூரில் அத்தப்ப பூபதி
சிறந்தசுக் கிலவருடமே. (336)

பாடற்பொருள்:

தாரமங்கலம் சீயால கட்டி முதலி மகிழும் வண்ணம் இருகாலூர் அத்தப்ப கவுண்டர் திருவிழா நாளில் வேலவரும், அர்த்தநாரீசரும்

மக்கள், அமரர், முனிவர் புடைசூழ தேரில் பவனியாக நகர்வலம் வந்து கற்பூர தீபம் காட்டித் தாம்பூலம் பரிமாறவும் சகலரையும் விழா முடிவில் விடை கொடுத்து அனுப்பவும் தங்க மயமான மகாமேரு போல் 24 கால் மண்டபம் உத்திரம், பாவுகல், தளவரிசை, போதிகை ஆகிய பலவற்றோடு சுக்கில வருடம் (1629) அமைத்தார். (இம்மண்டபம் அனுப்பு மண்டபம் எனப்படும்). மலைமீது சூரியனுக்குக் கோயில் கட்டினார்.

இவர் தாரமங்கலம் சீயால கட்டியின் அதிகாரியாக இருந்திருக்கலாம்.

★

ஆர ணம்திகழ் செங்கோடர் சந்நதி
அனுப்பு மண்டப நாலாறு கால்நிறை
பார ணிந்த தளம்போதி உத்திரம்
பாவு கல்லுடன் தட்டோடு மேல்புறம்
சீர ணிந்தநல் சீயால கட்டிதன்
சித்த மேவிரு காலூர்ப் பெரியவன்
கார ணம்புகழ் அத்தப்ப பூபதி
கட்டி னன்பிர மாதூதம் தன்னிலே. (337)

பாடற்பொருள்:

இருகாலூர் அத்தப்ப பூபதி சீயால கட்டியின் மனம் மகிழும் வண்ணம் பிரமோதூத வருடம் (1630) செங்கோடர் சந்நதி அனுப்பு மண்டபத்தை 24 கால்கள், கல் தள வரிசை, போதிகை, உத்திரம், பாவு கல், தட்டோடு இவற்றோடு கட்டினார்.

★

குமரமங்கலம் தூரன்குல செட்டியாக் கவுண்டர்

ஆடரவ கிரியின்அடி வாரமுறை கயிலாயர்
ஆலய மகாமண்டபத்து
அழகுதாண் டவக்குறடு மலைவிநா யகர்குறடும்
அசலநட ராசர்குறடும்

சேடகிரி யேறுபடி சிவதீர்த்த தட்சிணத்
திசைநூறு பெரியபடியும்
செஞ்சொல்நூ றாம்படி தனைப்பெரிய தாகவே
செய்வித்த தொருதருமமும்

நீடுவயி ரவதீர்த்த நிருதிதிசை யாகவும்
நிலமைதரு நலநாயகன்
நிறைமண்ட பத்திடையும் ஆமிளைப் பாற்றியும்
நித்தியமன தானநிபுணன்

நாடுபுகழ் குமரமங் கலமேவு தூரனுயர்
நதிவமிச குலசேகரன்
நன்மைபெறு குமரபூ பதிசெட்டி அன்புடன்
நடத்தின திருப்பணிகளே. (338)

பாடற்பொருள்:

குமரமங்கலம் தூர குல வேளாளர் குமரபூபதி செட்டியாக் கவுண்டர் மலை அடிவாரக் கயிலாசர் கோயிலில் மகாமண்டபத்தில் தாண்டவக் குறடு, மலை விநாயகர் குறடு, மலை நடராசர் குறடு, மலைப்படி, சிவதீர்த்தம் தெற்குப் பகுதியில் நூறு படி, நூறாம் படியைப் பெரிதாக்கல், வயிரவ தீர்த்தத் தென்மேற்கிலும், நல நாயகன் நிறை மண்டபத்திடையிலும் இளைப்பாற்றி மண்டபம் ஆகியவைகளை உபயமாகச் செய்தார்.

இவர் தந்தை பெயர் குமர கவுண்டர், செட்டியாக் கவுண்டர் பெயர் பொறிக்கப்பட்ட தூண் குமரமங்கலம் பொன்காளியம்மன் கோயில் முன்மண்டபத்தில் உள்ளது. இவர் குமரமங்கலம் டாக்டர் ப.சுப்பராயன் அவர்களின் முன்னோர் ஆவார்.

★

கோதைக் கிரியில் சிவதீர்த்தக்
குணபால் சித்ர கூடம்என
மாதர்க் கரசி மசவேலன்
வள்ளி தொடுத்த மண்டபத்தில்
பாதிக் குறடு சுவர்ப்பிடைசெம்
பாதிக் குறடு மேல்வேலை
நீதிக் குமர புரித்தூரான்
நேயன் செட்டி புண்ணியமே. (339)

பாடற்பொருள்:

திருச்செங்கோட்டு மலையில் சிவதீர்த்தத்தின் கிழக்கில் சித்திரகூடம் என மசவேலன் வள்ளி கட்டத் தொடங்கிய மண்டபத்தில் பாதிக் குறடு, சுவர்ப்படை பாதிக் குறடு, மேல்வேலை இவைகளைக் குமரமங்கலம் தூர குல செட்டியாக் கவுண்டர் தன் புண்ணியமாகச் செய்தார்.

★

இடையர் குல கொல்ல எல்லன்

சீறும் பணிமலையைச் சேவிக்க வேஅடியார்
ஏறும் படிபதினாறு ஈரானை - சீருடனே
செய்தான் மடமும் சிறந்தகுன்றைக் கொல்லஎல்லன்
உய்ந்தான் இருந்தான் உகம். (340)

பாடற்பொருள்:

திருச்செங்கோட்டு இறைவனை வணங்கச் செல்லும் அடியார் கட்காகு மலைஏறும் படிகள் பதினாறையும், இரண்டு யானைகளையும் குன்றத்தூர்க் கொல்ல எல்லன் என்பவர் அமைத்தார்.

இவர் இடையர் மரபினர். கொல்ல என்பது தெலுங்கு பேசும் இடையரைக் குறிக்கும்.

★

தாரமங்கலம் இரணாபுரம் வேதியன் நல்லய்யன்

சைவ சேகரன் தார மங்கையில் வருதலத்தான்
தெய்வ வேதியன் நல்லயன் சிவத்துசர் திலகன்
மைவ ரும்பணி மலையடி வாரமே சிறக்க
மெய்வ ரும்பத மண்டபம் அன்புடன் விதித்தான். (341)

பாடற்பொருள்:

தாரமங்கலத்தில் வாழ்ந்த இரணாபுரம் வேதியர் நல்லய்யன் திருச்செங்கோட்டு மலை அடிவாரம் சிறக்க நுழைவு பாத மண்டபத்தைக் கட்டினார்.

இதுவே மலை ஏறும்போது முதல் மண்டபமாகும். 'குருக்கள் தில்லை சிற்றம்பல நாயனார் வகையினர் கட்டினது' என்று கல்வெட்டு உள்ளதாகக் கோனார் எழுதியுள்ளார் (கொங்குநாடு ப.79).

★

திருமுடித்தாசி சேனாபதி வேலாள்

பன்னுதமிழ்ச் சேனா பதிவேலாள் நாகவரை
மன்னுபடி வாசல் வழிமீது - மின்னுமணி
மண்டபத்தைக் கண்டாள் வணங்கினாள் மாயையெனும்
பண்டவத்தை தீரும் படி. (342)

பாடற்பொருள்:

திருமுடித்தாசி சேனாபதி வேலாள் திருச்செங்கோட்டு மலைப் படியில் மணிமண்டபம் கட்டினாள். இம்மரபினர் 'மாணிக்கி' என்றும் அழைக்கப்படுவர்.

★

தயிலி

வானந்தம் என்னும்ஒரு மண்டபத்தை யேதயிலி
தானந்தம் என்னச் சமைத்தாளே - ஆனந்த
வச்சரத்தே கோதை வருவீர பத்திரன்முன்
தச்சுரத்தின் நல்லழகாய்த் தான். (343)

பாடற்பொருள்:

தயிலி என்பவள் திருச்செங்கோட்டு வீரபத்திரன் முன்னர் உயரமான ஒரு மண்டபத்தைக் கட்டினாள்.

இது மலைப்படியில் மூன்றாவது மண்டபம். உற்சவம் முடிந்து சுவாமிகள் மலைக்கு எழுந்தருளும் காலத்தில் இந்த மண்டபம் வரையில் பக்தர்கள் வந்து சுவாமிகளை வழியனுப்பி வைப்பது வழக்கம். தயிலி மண்டபம் என்றே வழங்கப்படுகிறது.

★

மாந்தை அணை அர்த்தநாரிக் கவுண்டர்

சற்ப சயிலத் தடவரைத்தோ ணிக்கருகே
அற்புதவீ ரேசன் அமர்கோயில் - கற்பதரு
ஆனோன்நம் மாந்தையணை அர்த்தநா ரிக்கவுண்டன்
தானேயுண் டாக்கிவைத்தான் தான். (344)

பாடற்பொருள்:

திருச்செங்கோடு மலைச் சரிவில் மதிலுக்கு அருகே வீரபத்திரன் கோயிலை மாந்தையணை அர்த்தனாரிக் கவுண்டர் கட்டினார்.

★

இராசிபுரம் செங்குந்தச் சின்னான்

பாருலகெண் கோதைப் பதிப்பேழைக் கல்லருகே
சீருலவு மண்டபமும் செய்தானே - ஏருலவு
சின்னான் குகனடியான் செங்குந்தன் ராசைவரு
மன்னாம் புகழபிரா மன். (345)

பாடற்பொருள்:

இராசிபுரத்தைச் சேர்ந்த செங்குந்த குலச் சின்னான் என்பவர் திருச்செங்கோட்டில் பேழைக் கல்லருகே சிறப்பான மண்டபம் ஒன்றை அமைத்தார்.

★

குருவம்ம மாணிக்கி

அன்புநெடும் சேடகிரி ஆதிசிவ தீர்த்தமிசைத்
தென்புறம்ஓர் மண்டபமும் செய்தாளே - இன்பநெறி
ஆரும்எதி ராதகுரு வம்மமா ணிக்கிவட
மேருகிரி யைப்போல வே. (346)

பாடற்பொருள்:

குருவம்ம மாணிக்கி என்னும் அம்மையார் திருச்செங்கோடு ஆதிசிவ தீர்த்தத்தின் மேலே தென்புறமாக பெரிய மண்டபம் ஒன்றை அமைத்தாள்.

மாணிக்கையைத் தேவரடியார் என்பர்.

இம்மண்டபத்தைத் 'தேவடியாள் மண்டபம்' என்றே அழைக்கின்றனர்.

★

செவ்வந்தி செட்டியார்

அவ்வந்தி யம்போல் அயன்தீர்த்த உத்தரத்தே
செவ்வந்தி செட்டிதிருச் செங்கோட்டில் - பவ்வம்
தொலையஒரு மண்டபமும் சோபனமும் செய்தான்
நிலைமைபெற வாழ்ந்திருந்தா னே. (347)

பாடற்பொருள்:

பிரம தீர்த்தத்தின் வடபுறம் செவ்வந்தி செட்டியார் என்பவர் ஒரு மண்டபத்தைப் படிக்கட்டுடன் அமைத்தார். அதனால் சிறப்புற வாழ்ந்தார்.

இவர்களை வெள்ளாஞ் செட்டிகள் என்பார் கோனார்.

★

அகரத்துக் குசச் செட்டியார் வேலப்பன்

சேடகிரி ஆலயத்துத் தென்மேலை மண்டபத்தை
நீடுமுகில் என்ன நிறுத்தினான் - நாடுபுகழ்
ஆனகுசச் செட்டி அகரத்துச் செட்டிகளில்
பானுவெனும் வேலபூ பன். (348)

பாடற்பொருள்:

அகரம் குசச் செட்டியார்களில் வேலப்பன் திருச்செங்கோட்டில் கோயிலின் தென்மேற்கு மண்டபத்தை அமைத்தார்.

★

குசச் செட்டியார் ஆண்டி செட்டியார்

உத்தமர் பரவு கேதா ருடையார்க்கு மடமும் கட்டி
கொற்றவர்க்கு இனிய கோதைக் கடவுள்மண் டபமுண்டாக்கி
நற்றவம் படைத்து வாழும் நற்குசச் செட்டி மாருள்
கொற்றவன் ஆண்டி செட்டி குலந்தழைத் தோறத் தானே.(349)

பாடற்பொருள்:

குசச் செட்டிகளில் ஆண்டி செட்டியார் என்பவர் கேதா ருடையார்க்கு ஒரு மடமும், திருச்செங்கோட்டில் ஒரு மண்டபமும் அமைத்தார்.

★

அகரம் கறுப்ப செட்டியார் மகன் நல்லான் செட்டியார்

வில்வ விநாயகர்முன் மேவவொரு சாவடிசெங்
கல்விளங்கச் செய்து களித்தானே - பல்கும்
அகரம் கறுப்பன் அருந்தவத்தில் உற்ற
மகன்நல்லான் செட்டியெனும் மால். (350)

பாடற்பொருள்:

அகரம் செட்டிகளில் கறுப்ப செட்டியார் மகன் நல்லான் செட்டியார் வில்வ விநாயகர் முன்பாக செங்கல்லால் ஒரு சாவடியைக் கட்டினார்.

★

செங்குந்தர் குலப் பெரியாள்

உத்தம வீர வாகின் உயர்குலப் பெரியாள் ஆண்டாங்
கொத்தரின் நிருதி மூலைக் குளம்இளங் கோயில் வேலர்க்கு
அர்த்தமண் டபமும் கர்ப்ப அகமகா மண்ட பங்கள்
பத்தியின் புரிந்து தானம் பலபணி மலையில் செய்தாள். (351)

பாடற்பொருள்:

வீரவாகு குலம் என்னும் செங்குந்தர் குலத்தில் தோன்றிய பெரியாள் என்பவள் தென்மேற்குத் திசையில் வேலவரின் இளங்கோயிலுக்குக் கருவறை, அர்த்தமண்டபம், மகாமண்டபம் ஆகியவற்றைத் திருச்செங்கோட்டில் செய்தாள்.

நிருதி மூலைக் குளம் இப்போது ஓங்காளியம்மன் கோயில் குட்டை என்று கூறப்படுகிறது. இளங்கோயில்-அங்குள்ள சுப்பிரமணியர் கோயில்.

★

ஆசாரியார் விருமக் கொல்லன்

படிபுகழ் விசைய ஆண்டில் பரிவுள கோதை வீதி
அடைவுடை அக்க சாலை ஆதிபர் உபய மாகத்
தடமிகு குறடும் தூணும் சகலமும் முடித்து நன்றாய்
வடிவுற விருமக் கொல்லன் மண்டபம் கட்டி னானே. (352)

பாடற்பொருள்:

பஞ்ச கம்மாளரில் ஒருவரான விருமக் கொல்லன் விசைய ஆண்டு திருச்செங்கோட்டு வீதியில் ஆசாரியார் உபயமாகக் குறடு தூண் அமைத்து ஒரு மண்டபத்தைக் கட்டினார்.

★

மதுரை சீயால கட்டி மட சிதம்பரநாதன்

சத்தமா தாவும் தடவரைநூ றாம்படியும்
பத்தியுடன் கோதையிலே பண்ணினான் - புத்திதரு
தெய்வ மதுரைவரு சீயாலக் கட்டிமடம்
சைவன் சிதம்பரநா தன். (353)

பாடற்பொருள்:

மதுரை சீயால கட்டி மடத்தைச் சேர்ந்த சிதம்பரநாதன் என்பவர் சத்தமாதரைப் பிரதிட்டை செய்து நூறாம் படியையும் திருச்செங் கோட்டில் கட்டினார்.

★

இடையர் குலச் செல்லன்

கோதை அழகியம்மை குறடுபலி மண்டபமும்
மாதயவா கச்சமைத்து வைத்தானே - நீதிபுனை
கோபால கிருஷ்ண குலதீப மானசெல்லன்
பூபாலன் பெற்றான் புகழ். (354)

பாடற்பொருள்:

இடையர் குலத்தைச் சேர்ந்த செல்லன் என்பவர் அழகியம்மை கோயில் குறடு, பலி மண்டபம் இவற்றை அமைத்தார்.

★

இடையர் குலக் கோபாலன்

மாபத்தர் ஏத்திட வைகாசி வீதி வடசிறகில்
கூபத் தருகில் அழகாக வேஒரு கோவில்கட்டித்
தாபத்தை மாற்றிய மாயன்கோ பாலன் தருஅனையான்
ஆபத்துக் காத்தவி நாயக னாரையுண் டாக்கினனே. (355)

பாடற்பொருள்:

இடையர் குலம் சார்ந்த கோபாலகிருஷ்ணன் பக்தர்கள் வணங்குவதற்காக வைகாசி வீதியின் வடபுறம் கிணற்று அருகில் ஒரு கோயில் கட்டி ஆபத்துக் காத்த விநாயகரை எழுந்தருளச் செய்தார்.

★

மல்லசமுத்திரம் கணக்கர் திருக்கை வேலன் மகன் சுப்பிரமணியம்

ஆதிகா லத்திலே காமதே னுசிவனை
அன்புடன் போற்றிசெய்தே
அம்பொன்மா மேருதனில் ஐந்துநன் நாடியெற்கு
அருள்கென அவைதந்ததும்

சூதமுனி தலபுரா ணம்தனில் சொன்னதும்
தூலமாய் நாகமலையாய்த்
தோன்றவே அதனிட சொரூபமிஃ தென்னவே
தொல்லுலகம் அறியும்வகையாய்ச்

சோதிபெறு மல்லைத் திருக்கைவே லப்பன்அருள்
செல்வனாம் சுப்பிரமணியன்
செங்கோட ரைத்தொழுது கங்கைசுனை கீழ்புறம்
செய்தனன் சிற்பஉருவாய்ப்

பாதலந் தன்னில்வால் அண்டமுடி யிற்சிரசு
படமைந்து மாகவேதான்
பத்தியொடு செய்தனன் கோதையரன் அருளினால்
பதினாறு மைந்தர்பெறவே. (356)

பாடற்பொருள்:

பழங்காலத்தில் சிவபெருமானை வணங்கி அன்புடன் போற்றி மேருமலைதனில் ஐந்து சிகரங்கள் எனக்குத் தருக எனக் காமதேனு கேட்டது. சிவபெருமான் அவ்வாறே தந்தார். சூத முனிவர் இவ்வரலாற்றைப் புராணமாக எழுதினார். அதில் ஒரு சிகரம் திருச்செங்கோடு ஆனது. மல்லசமுத்திரம் திருக்கை வேலன் மகன் சுப்பிரமணியன் என்பவர் கங்கைச் சுனையின் கீழ்ப்புறம் இக்காட்சியைச் சிற்பமாகச் செய்வித்தார்.

★

நாகமுகன் தன்னைவலம் நாகலிங்கம் தன்னையிடம்
வாகுவடி வேலவர்முன் வைத்தானே - வாகுடனே
சேகரனாம் மல்லைத் திருக்கைவே லப்பன்மைந்தன்
ஆகமகிழ் சுப்பிரமணி யன். (357)

பாடற்பொருள்:

மல்லசமுத்திரம் திருக்கை வேலப்பன் மகன் சுப்பிரமணியன் வேலவர் முன்பாக நாகமுகனை வலப்புறத்திலும், நாகலிங்கத்தை இடப்புறத்திலும் எழுந்தருளச் செய்தார்.

அறுபது அடி நீளமுள்ள ஐந்து தலை நாகப் படத்தில் சிவலிங்கம் உள்ளது. பசுக்கள் நன்றாகப் பால் கொடுக்கும் என்று நாகத்தின்மேல் வெண்ணெணையப் பூசுவர். இரவில் காடுகளில் செல்லும் போது பாம்பினால் துன்பம் ஏற்படாமல் இருக்க கோழிச் சேவல்களைப் பலியிட்டுப் பொங்கல் வைத்து வழிபடுவர்.

★

நாகபடம் கைலாய நாதருக்குத் தானீந்தான்
நாகமென்றோர் வாகனமும் நல்கினான் - நாகரிகன்
சேகரமா மல்லைத் திருக்கைவே லப்பன்மைந்தன்
மாகதரு சுப்ரமண்ய மால். (358)

பாடற்பொருள்:

மல்லசமுத்திரம் திருக்கை வேலப்பன் மகன் சுப்பிரமணியன் கைலாசநாதர் கோயிலில் நாகபடத்தை எழுந்தருளச் செய்தார். நாக வாகனத்தையும் செய்து கொடுத்தார்.

★

திருச்செங்கோடு அர்த்தநாரி மகன் தண்டாயுத பிள்ளை

மங்கைபத்ர காளியம்மை மண்டபத்துக்கு ஏறிவர
சிங்கமிரண் டும்படியும் செய்தானே - பொங்குபுகழ்
ஞானபரன் கோதைஅர்த்த நாரி பரிவாகத்
தானபரன் தண்டாயு தன். (359)

பாடற்பொருள்:

திருச்செங்கோடு அர்த்தனாரி என்பவரின் மகன் தண்டாயுதன் பத்ரகாளியம்மன் மண்டபத்துக்கு ஏறிவர சிங்கம் இரண்டுடன் படிகளையும் அமைத்தார்.

★

தாரமங்கலம் காகமூப்பன் முனியப்பன்

நாககிரிக்கு உகந்தபடி அறுபதுமேல் ஐந்துதலை
நாகர் செய்தே
வாகுடனே மறையவர்க்கும் மகேசுரர்க்கும் அன்னசொன்னம்
வழங்கி அன்பாய்
ஆகமுடன் பூசித்தான் அர்த்தநா ரீசர்தமது
அருளே பெற்றுக்
காகமூப்பன் முனியன் மங்கையுள்ளோன் செல்வமதால்
கதிக்கின் றாரே. (360)

பாடற்பொருள்:

திருச்செங்கோட்டில் அறுபதாம் படிக்கு மேல் ஐந்து தலை நாகர் உருவத்தை அமைத்து அந்தணர்கட்கும் அடியார்கட்கும் அன்ன தானமும், சொர்ன தானமும் வழங்கி காக மூப்பன் முனியப்பன் அன்பாகப் பூசை செய்தார்.

★

நாகசுர கானன் மகன் நல்லதம்பி

நாகசுர கானனருள் நல்லதம்பி கட்டிஅன்பால்
மாகமுறு நாக மலையார்க்கு - மோகமுறு
வானுயரும் கைலாய வாகனமும் பண்ணுவித்துத்
தானுயரும் கீர்த்தியடைந் தான். (361)

பாடற்பொருள்:

நாகசுரம் வாசிக்கும் கானன் என்பார் மகன் நல்லதம்பி திருச்செங்கோட்டு இறைவர்க்கு உயர்ந்த கயிலாய வாகனத்தைச் செய்தளித்தார். நல்லதம்பியும் இதே பணியைச் செய்தார்.

★

கோயிலில் திருவகம்படிமை செய்யும்
திருமுடியார் மரபினர்

சீர்மருவு நாககிரி வடிவேலர் உமைபாகர்
திருமேனி காவலுடனே
திருமாலை கருவூல அறைஉக்கி ராணங்கள்
திருவகம் படிஊழியம்

பார்மருவு தளியிலாண் பெண்காணி கும்பாலத்தி
பரிவுபெறு வெண்சாமரம்
பாவாடை விசிறிநட னங்கள்திரு ஆலத்தி
பதுமபுட் பாஞ்சலிகளும்

ஏர்மருவு பலநாட கங்களொடு காவியம்
இராகநா லெட்டுவகையும்
ஏழுதா ளங்கள்இயல் இசைபரத விதமேவி
இத்தொழில் புரிந்துநிதமும்

பேர்மருவு பூதிபஞ் சாட்சரம் அணிந்துநெறி
பெற்றகுர வோரடிதனைப்

பேணிவரம் எய்தியே தானீகர் ஏவுபணி
பிரியா திருந்தனர்களே. (362)

பாடற்பொருள்:

திருச்செங்கோட்டு வேலவர், அர்த்தநாரீசுவரர் திருமேனி காவல், திருமாலைப் பணி, கருவூல அறை, உக்கிராணம் காவல், திருவகும்படிமை, ஊழியம், கோயில் ஆண், பெண் பணிகள், கும்ப ஆலத்தி, வெண்சாமரம் வீசுதல், நடைபாவாடை விரித்தல், விசிறி வீசுதல், நடனம், திருஆலத்தி, புட்பாஞ்சலி, பல நாடகங்கள், காவியம், முப்பத்துரண்டு இராகம், பாடல், ஏழு தாளம், இயல் இசை நாடகம், விபூதி அளித்தல், பஞ்சாட்சரம் அணிதல், குருக்களை வணங்கி அவர்கள் இடும் பணிகளைச் செய்தல் ஆகியவை திருமுடியார் என்று கூறப்படும் திருவகம்படிமையார் செயல்களாகும்.

மலைப்படியில் இரண்டாவது மண்டபம் 'திருமுடியர் மண்டபம்'. உற்சவ காலத்தில் மலையிலிருந்து சுவாமிகள் இறங்கி வரும் காலத்தில் ஊர்ப் பக்தர்கள் இம்மண்டபத்துக்கு வந்து தரிசித்து சுவாமியை அழைப்பது வழக்கம். கொடுமுடியிலும் இம்மரபினர் உள்ளனர். இவர்கள் கொங்கு வேளாளரில் ஒரு பிரிவினர். கொங்கு வேளாளரில் காடை முதலிய ஏழு குலம் சார்ந்தவர்கள். (காண்க: கம்பநாத சுவாமிகள் கொங்கு மண்டல சதகம் எண்:30)

★

செங்குந்தர் மரபினர்

அன்புநெறி பெறுவீர வாகுமர பினில்உதித்து
அழகான நாககிரிவாழ்
அர்த்தநா ரீசர்வடி வேலரை வணங்கியே
அவர்பணி விடைக்கினியராய்த்

தென்பயிலு நட்டுவம் மத்தளம் பேரிகை
சிறந்தபதி னெண்மேளமும்

சீர்பாத சுமையினொடு அன்புமிகும் ஆண்மக்கள்
செய்யடிமை பெண்காணியும்

மன்புகழும் நடனவித ராகவிசை தாளமும்
மதித்தமங் களநிர்த்தமும்
மாறுசத் திரகவுரி விருதுபல பாவாடை
மன்னும்அழகு ஆலாத்தியும்

இன்பமுடன் இன்னவைகள் சந்ததம் இயற்றியே
இளையவன் வரமெய்தியே
இயலான குரவோர்கள் ஏவுதொழி லாளரெனும்
இனியகைக் கோளர்இவரே. (363)

பாடற்பொருள்:

வீரவாகு மரபினில் தோன்றி திருச்செங்கோட்டில் அர்த்தநாரீசு வரையும் வணங்கிப் பணிவிடை செய்து வருபவர்கள் செங்குந்தர்கள். நட்டுவம், மத்தளம், பேரிகை, பதினெண்மேளம், சீர் பாத சேவை ஆகிய இறைபணியைச் செய்பவர்கள் அச்செங்குந்தர் குல ஆண்கள்.

நடனம், பல்வேறு இராகங்களில் இசை, தாளம், மங்கள நாட்டியம், விருதுகள், பாவாடை, ஆலாத்தி ஆகியவைகளைச் செங்குந்தர் குலப் பெண்கள் செய்வர்.

★

பலருடைய திருப்பணிகள்

அரவகிரி ஆலயம் தனில்நிருதி மூலைதனில்
ஆனைமுக வன்கோவிலுண்
டாக்கியது கைக்கோள நல்லநயி னான்உபயம்
அழகுகண பதிகோவிலும்

திருவலகு மடமடிமை ஆனதே வாள்பரிசு
சீர்பாத மண்டபமுடன்

சிகரமது விருமிஉப யம்பெரிய வசவனும்
செஞ்சொல்மல் லுடையர்உபயம்

பரவரிய நாகதீர்த் தத்தருகு சோபான
பதிமேலை வாய்தல்தனிலே
படியுநட மாளிகையும் இவைகுசச் செட்டிகள்
பணித்தது நெடுஞ்சுனையினில்

மருவிய கலிங்குகண பதிசுனை மதிற்கருணை
வாலரா சன்புண்ணியம்
மன்னுசண் பகவிநா யகர்செம்ப குலமதனில்
வாய்ந்தபொம் மணன்உபயமே. (364)

பாடற்பொருள்:

திருச்செங்கோட்டு மலையில் தென்மேற்கு மூலையில் விநாயகர் கோயில் கட்டியவர் கைக்கோளர்களில் நல்லநயினான் என்பவர். திருவலகு, மடஅடிமை, சீர்பாத மண்டபம், சிகரம் இவை விருமி உபயம். பெரிய நந்தி மல்லுடையர் உபயம், நாகதீர்த்தம் அருகில் படிக்கட்டுகள், மேற்கு வாசல் படி, நடை மாளிகை ஆகியவை குசச் செட்டிகள் உபயம். பெரிய சுனையில் கலிங்கு, கணபதி சுனை, மதில் இவை வாலராசன் உபயம். சண்பக விநாயகர் செம்ப குலப் பொம்மணன் உபயமாகும்.

விசயநகர கிருஷ்ணதேவராயர் (1509-1529) அச்சுததேவராயர் (1529-1542) காலத்தில் கொங்கு நாட்டு அதிகாரியாக இருந்தவர். வாலராசன், மல்லுடையார் - மல்லசமுத்திரத்தார், மல்லசமுத்திரம் கணக்கர் திருக்கைவேல் பிள்ளை மகன் சுப்பிரமணிய பிள்ளை என்பவர் நந்தியை அமைத்தார்.

★

படஅரவ கிரிமீதில் அட்டகொற் றவைபஞ்ச
பாண்டவர்கள் செய்ததருமம்
பன்னுவட கோபுரப் படிவிநா யகர்கோவில்
பரிவுரா மாஞ்சிஉபயம்

தடபிரம தீர்த்தத்தின் அருகரிச் சுனைஅருகு
தயவுடைய சோழன்உபயம்
தாவுவட கோபுரம் சூழெடுத் துக்கட்டி
தண்டமிழ்க் கட்டிஉபயம்

திடமுடைய வேலவன் சந்நதியில் ஐங்கரன்
செங்குந்தர் வெற்றிஉபயம்
திருநந்தி கேசுரர் குறடுமயி லன்பரிசு
சிகிவாக னக்குறடுடன்

அடைவுபெறு பலிகுறடு வாலரா சன்தருமம்
அழகுகோ புரவாசலில்
அருகணைகள் ஆறாறு படிவிசா லம்கருணை
ஆவிநன் குடிஉபயமே. (365)

பாடற்பொருள்:

திருச்செங்கோட்டு மலைமீது எட்டுக் கொற்றவை படிமங்கள் பஞ்சபாண்டவர் உபயம். வடகோபுரப் படி, விநாயகர் கோயில் ராமாஞ்சி உபயம். பிரம தீர்த்தம் அருகிலும் அரிச்சுனை அருகிலும் வழி சோழன் உபயம். வடகோபுரத்தில் எடுத்துக் கட்டி கட்டிமுதலி உபயம். வேலவர் சந்நதியில் விநாயகர் செங்குந்தர் உபயம். கோபுர வாசலில் 36 படிகள் ஆவிநன்குடியார் உபயம்.

★

மைசூர் மன்னர் கிருஷ்ண ராசேந்திர உடையார்

அரவா சலத்தெழு நாரீசர் பொன்னடி
அன்புகொடொவ்
வொருநாளும் பூசைசனை வேதனம் ஆதியும்
ஓங்குவிடைத்
திருநாளும் செய்தனன் கர்னாட கத்தடல்
சேர்ந்தமைசூர்
அரியா தனன்கிருஷ்ண ராசேந் திரவுடை
யார்மகிழ்ந்தே. (366)

பாடற்பொருள்:

மைசூர் சிருஷ்ணராச உடையார் ஒவ்வொரு நாளும் பூசை, நைவேத்யம், உத்திரத் திருநாள் பூசை ஆகியவற்றைச் செய்யக் கொடை கொடுத்தார்.

இவர் இரண்டாம் கிருஷ்ணராச உடையார் (1734-1766), தொட்ட கிருஷ்ணராச உடையார் என்றும் அழைக்கப்படுவார். 'விவேகாபரணம்' என்னும் கன்னட இலக்கியம் பாடியவர். இவர் அர்த்தனாரீசுவரருக்கு நிலக்கொடை அளித்தது பற்றிய இரண்டு செப்பேடுகள் அர்ச்சகர் சிவராம பண்டிதரிடம் இருப்பதாக ராபர்ட் சீவெல் தன் 'List of Antiquarian Remains' என்னும் நூலில் எழுதியுள்ளார் (1882). அச்செப்பேடு இக்கொடையைக் குறிப்பதாகும்.

''சேலம் சைக்ளோபீடியா'' நூலில் பஷ்நாகி ராஜண்ணனும் இத்தகவலைக் கூறியுள்ளார் (ப.138).

★

சேலம் ஜில்லா கலெக்டர் டேவிஸ் துரை
(W.D.Davis)

தாண்டவ பத்திரை விலாசத்தில் பாக்கல் சரியும்என
ஆண்டுறக் கண்டுகல் தூரணொன்று நாட்டினன் ஐரவர்கள்
வேண்டிடு சேலம் கலெக்டருத் யோகத்தின் மேவிவந்த
ஆண்டகை டேவிஸ் துரையிசை ஓங்க அவனியிலே. (367)

பாடற்பொருள்:

தாண்டவ பத்திரை விலாசத்தில் விநாயகர் மண்டபத்தில் பாக்கல் சரியும் என்பதைக் கண்டு சேலம் மாவட்ட ஆட்சியர் டேவிஸ் தூண ஒன்று நாட்டி பாக்கல் சரிவதைத் தடுத்தார்.

தொப்பியணிந்து கைப்பிரம்புடன் உள்ள நிலையில் அத்தூணில் டேவிஸ் உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. டேவிஸ் சேலம் மாவட்ட ஆட்சியராக இருந்த காலம் 1823-1826. அந்தத் தூண டேவிஸ் தூண என்று அழைக்கப்படுகிறது.

இவரது உறவினர் டேவிஸ் என்பவர் சேலம் மாவட்டக் கலெக்டராக இருந்தபோது திருச்செங்கோட்டு மலை உச்சிப் பிள்ளையார் கோயில் செல்ல ஏற முடியாத இடங்களில் படிகள் அமைப்பை ஏற்படுத்தச் செய்தார். ஒரு படியில் இவர் பெயர் கல்வெட்டாகப் பொறிக்கப்பட்டுள்ளது.

★

காசிப கோத்திரம் சேனாபதி குருக்கள்

வானோர் மகிழும் தமிழ்க்கோதை மாநகர் வாழ்வுபெற
மானோர் கரத்துக் கயிலாய நாதர் மகாலயத்தே
பானாறு சைவாக் கினியான் நவக்கோள் பதிட்டைசெய்தான்
சேனா பதிக்குரு காசிப கோத்திரஞ் செழித்திடவே. (368)

பாடற்பொருள்:

காசிப கோத்திரம் சேனாபதிக் குருக்கள் கயிலாசநாதர் கோயிலில் நவக்கிரகங்களை எழுந்தருளச் செய்தார். தன் தந்தையார் கட்டிய குறட்டைப் பிரித்துப் புதியதாக உருவாக்கி அங்கு நவக்கிரகப் பிரதிஷ்டை செய்தார்.

★

கொக்கராயன் பேட்டை மிட்டா ஜமீன்தார்
பெரிய ரங்கய்ய கவுண்டர்

மலைவல்லி பங்கர்க்கும் மாலுக்கும் ஆனை வதனனுக்கும்
கலைவல்ல வர்புகழ் தேர்களை உள்ளம் கசிந்தளித்தான்
அலைகின்ற தானிகர் ஆதிபர்க்கு அட்சய ஆண்டைப் பஞ்ச
மலைவறக் கூலம் உதவிய ரங்கய வண்கையனே. (369)

பாடற்பொருள்:

கொக்கராயன்பேட்டை மிட்டா ஜமீன்தார் பெரிய ரங்கய்ய கவுண்டர் அர்த்தநாரீசுவரருக்கும், திருமாலுக்கும், பிள்ளையாருக்கும் வேலைப்பாடுமிக்க தேர்களைக் கொடையாகக் கொடுத்தார். அட்சய ஆண்டுப் பஞ்சத்தில் திருச்செங்கோட்டுத் தானிகர்கள், குருக்கள், பண்டாரங்கள், பூசாரிகள், சீபாதம் தாங்கிகள், மேளத்தார் அலையும் போது அவர்களுக்குத் தானியம் உதவினார்.

இவர் கொங்கு நாட்டு வேளாள கவுண்டரில் முளசி கண்ண குலத்தைச் சேர்ந்தவர். இவரைப் பழனி மாம்பழக் கவிச்சிங்க நாவலர் புகழ்ந்து பாடியுள்ளார். திருச்செங்கோடு கோயில் நிர்வாகியாக இருந்தவர். இவர் செய்த சமய அறப் பணிகள் பலவாகும். தாது வருடப் பஞ்ச காலத்தில் பெரிய தெப்பக் குளம் வெட்டப் பொருள் உதவி செய்தார். மலைச் சுற்றுப் பாதை அமைத்தார். கோயில்கட்கு நன்செய், புன்செய் நிலம் அளித்ததுடன் ஈரோட்டில் கடைகளையும் கொடையாக அளித்தார். 17-07-1901 அன்று காலமானார்.

★

வேலவர் நின்ற விமானம் சுதைப்பணித் தகராற்
கோலி நகுகன கம்தோய் கலசமும் கூட்டியம்ந்தும்
மாலவ னுக்கட்ட பந்தன மும்செய்து மாட்சியுற்றான்
சீலன் பெரிய இரங்கயன் ஏவைச் சிரோன்மணியே. (370)

பாடற்பொருள்:

பெரிய ரங்கய்ய கவுண்டர் வேலவர் விமானம் சிதைவுற் றிருந்ததைச் சுதை மூலம் திருப்பணி செய்து தங்கமுலாம் பூசிய கலசத்தையும் வைத்து, பெருமாளுக்கும் அட்டபந்தனம் சாத்தினார்.

இவர் தக்காரிடம் சமய நூல்கள் பல கற்றுத் தேர்ந்தார்.

★

பெருமான் அடிதொழ மலையேறும் அன்பரைப் பேணஅன்னம்
குருமார் தரக்கட் டளையிசைத் தான்முனம் கோரைக்குட்டைப்
பெருமாள் உருவமும் தேர்விழா பூசை பிறவும்எல்லா
வருமான மும்செய் இரங்கய வித்வ மணிவிளக்கே. (371)

பாடற்பொருள்:

இறைவனை வணங்கப் படியேறி மலைக்கு வரும் அடியவர்கட்கு அன்னமிடக் குருக்களுக்குக் கட்டளையிட்டார். கோரைக் குட்டைப் பெருமாள் கோயிலுக்குப் பெருமாள் படிமம் செய்து கொடுத்தார். அங்கு பூசையும் தேர்த் திருவிழாவும் நடத்த ஏற்பாடு செய்தார்.

வைகாசி மாதம் உற்சவத்தில் ஐந்தாம் திருவிழா மண்டபக் கட்டளை, கடைசி நாள் நந்தவனச் சாவடி மண்டபக் கட்டளை நடத்த ஏற்பாடு செய்தார்.

★

சித்திர வேலர் சிவாம்பிகை யாருள் திருக்கதவம்
பித்தளை மேல்தகட் டாலமைத் தான்அப் பிரமலிங்கர்
கொத்தள ஏவை யரன்உமை நாரணன் கோயில்முற்றும்
சுத்தி கரம்புரி ரங்கய னான சுபாகரனே. (372)

பாடற்பொருள்:

பெரிய ரங்கய்ய கவுண்டர் வேலவர், அர்த்தநாரீசுவரர் கோயில் கதவுகட்குப் பித்தளைத் தகடு போர்த்தினார். கொக்கராயன்பேட்டை

பிரமலிங்கர் கோயில் மதில், ஏமப்பள்ளி சிவாலயம், பெருமாள் ஆலயங்களைத் திருப்பணி செய்தார்.

முளசி முக்கண்ணீசுவரர் கோயிலையும் திருப்பணி செய்தார்.

★

இன்ன சகம்பதி னெண்ணூ றுடன்பதி னேழுசய
மன்னுகை லாயர் இடமார் பரிமள வல்லிஅம்மை
துன்னு சிகரியில் தங்கக் கலசம் துலங்கவைத்தான்
நன்னயன் தண்டிகை வேலவன் மைந்தன் இரங்கயனே.(373)

பாடற்பொருள்:

தண்டிகை வேல கவுண்டர் மகன் பெரிய ரங்கய்ய கவுண்டர் சாலிவாகன சகம் 1817 சய வருடம் (1894) கைலாசநாதர் கோயில்ல் பரிமளவல்லியம்மன் விமானத்தில் தங்கக் கலசம் வைத்தார்.

★

சேகர வேதநன் னாயகர்க்கு இல்லமும் தீட்சைபுரி
நாக கிரிபண் டிதருக்கு முன்மனை நல்கினனால்
நாக மலையின் வடகோ புரத்தடி நாட்டுசிவ
யோகசித் தாந்தி இரங்கய னாம்மதி யூகியன்றே. (374)

பாடற்பொருள்:

''சிவயோக சித்தாந்தி'' என்று புகழ்பெற்ற பெரியரங்கய்ய கவுண்டர் வேதநாயகப் பண்டிதருக்கு வீடு கட்டிக் கொடுத்தார். தீட்சை அளித்த நாககிரி பண்டிதருக்கு முதல் வீட்டை அளித்தார். வடகோபுரத்து அடிப் பகுதியைத் திருப்பணி செய்தார்.

★

கொஞ்சிட வீதி வருகுகன் கோயிலும் கூபநந்தி
மிஞ்சு சுதைப்பணி சாயமும் தீட்டி விளங்கவைத்தான்
செஞ்சொல்தில் லைப்பொன்னு சாமிநல் தீட்சிதர் செய்பணிக்கு
நஞ்சை நிலமொன்று புக்கோம்பை யில்தரு ரங்கயனே.(375)

பாடற்பொருள்:

பெரிய ரங்கய்ய கவுண்டர் வேலவர் கோயில், நந்திக் கிணறு ஆகியவற்றிற்குத் தேவையான சுதைப்பணி செய்து வண்ணமும் பூசினார். தில்லைப் பொன்னுசாமி தீட்சிதருக்குப் புக்கோம்பையில் நன்செய் நிலம் கொடையாகக் கொடுத்தார்.

★

சின்னக்கவுண்டம்பாளையம் நல்லய்ய முதலியார் மகன் கருப்பண முதலியார்

பணிகிரி மேவிடு பாண்டீசர் கோவிலைப் பாங்குறக்கற்
பணியும் சுதைப்பணிச் சிகரமும் ஆக்கிப் பதிட்டைசெய்தான்
அணிமே விடுமுஞ் சின்னக்கவுண் டன்பா ளயத்தில்வரு
கணிசநற் செங்குந்த நல்லயன் ஈன்ற கருப்பணனே. (376)

பாடற்பொருள்:

சின்னக்கவுண்டன்பாளையம் செங்குந்தரில் நல்லய்ய முதலியார் மகன் கருப்பண முதலியார் திருச்செங்கோடு மலை உச்சி பாண்டீசுவரர் கோயிலில் கற்பணியும் கோபுரத்தில் சுதைப்பணியும் உண்டாக்கி இறைவனை எழுந்தருளச் செய்தார்.

★

திருச்செங்கோடு தம்பாசெட்டியார்

வீட்டினை விற்றொழில் வெள்ளி மயில்செய்து வேலவருக்கு
ஈட்டினன் ஆறு முகப்பெரு மானுக்கு இரதவிழா
நாட்டிலெப் போது நடக்கவென் றுள்ளவோர் நற்கடையைத்
தீட்டினன் சாசனம் கோதை நகர்தம்பா செட்டியன்றே. (377)

பாடற்பொருள்:

திருச்செங்கோடு தம்பா செட்டியார் முருகனுக்கு வெள்ளி மயில் செய்து எப்பொழுதும் ஆறுமுகப்பெருமானுக்குத் தேர்த் திருவிழா நடைபெற கடைகளைக் கொடையாக அளித்துக் கல்வெட்டும் பொறித்தார்.

★

தெலுங்கு வீரசைவ சங்கமர்கள்

மடமும் மலையடி மண்டபம் கோதை மகேசனுக்கு
இடபந் தனில்வரு கல்யாண மும்செய்து இறைஞ்சினரால்
இடவங் கையிலிங்கம் ஏந்தியா ராதனம் ஏத்தவல
சடலம் பொருந்தி யவராம் தெலுங்கிசை சங்கமரே. (378)

பாடற்பொருள்:

வீரசைவர்களான தெலுங்குச் சங்கமர்கள் மடமும் மலை அடிவார மண்டபமும் ஏற்படுத்திச் சிவபெருமானுக்குத் திருக் கலியாணத் திருவிழா நடத்தி வணங்கினர்.

இவர்களில் ''ஜமுக்காளப் பண்டாரம்'' என்பவர்களால்தான் பவானியில் ஜமுக்காள உற்பத்தி தோற்றுவிக்கப்பட்டது. தொடக்கத்தில் 'நீலம்', 'காக்கி' வண்ணத்தில் மட்டுமே ஜமுக்காளம் உற்பத்தி செய்யப்பட்டது. பவானி பண்டார அப்பிச்சி கோயில் பகுதியில் 'நீலக்கிடங்கு' இருந்தது.

★

முத்துசாமிக் கோனார்

தபதிய ரைக்கொடு கண்டசண் டேசன்நல் தாபனையும்
உபநிட தப்பொருள் ஆம்உமை பாகரோடு உற்சவமும்
சுபமிகு சைவ சமாஜம்இக் கோதையில் தோற்றுவித்த
வபலன்எழில்முத்து சாமிசெய் தான்உளம் விருப்பமுற்றே.(379)

பாடற்பொருள்:

தி.அ.முத்துசாமிக் கோனார் அவர்கள் சண்டிகேசுவரரைப் பிரதிட்டை செய்தார். அர்த்தநாரீசுவரருக்குத் திருவிழா நடத்தினார். திருச்செங்கோட்டில் சைவ சமாஜம் தொடங்கினார்.

சண்டிகேசுவரர் பீடத்தில் ''திருச்செங்கோடு விவேக திவாகரன் பத்திராதிபர் தி.அ.முத்துசாமிக் கோனார் சதா சேவை'' என்ற கல்வெட்டு உள்ளது.

★

சாற்றிய வேதப் பொருளாம் உமைபங்கர் சந்நதியில்
நாற்றிய லஸ்தர் குளோப்புடன் லாந்தர்கள் நாட்டிவைத்தான்
ஆற்றிய லாம்திருச் செங்கோட்டு மான்மியம் ஆக்கிஅன்பில்
போற்றிய கோன்முத்து சாமி யுயர்இசை பூண்டவனே. (380)

பாடற்பொருள்:

தி.அ.முத்துசாமிக் கோனார் அர்த்தநாரீசுவரர் சந்நதியில் 'லஸ்தர் குளோப்புடன் லாந்தர்கள்' நாட்டினார். ''திருச்செங்கோடு மான்மியம்'' என்னும் நூலை எழுதினார். இது கவிராஜ பண்டிதர் இயற்றிய திருச்செங்கோட்டுப் புராணத்தின் உரைநடை வடிவமாகும்.

இவர் அர்த்தனாரிக் கோனார் - காத்தாய் அம்மாள் தம்பதி யினர்க்கு 1858ஆம் ஆண்டு பிறந்தவர். பொன்னையா உபாத்தி யாயரிடம் தமிழும், பிஜ்ஜைய உபாத்தியாரிடம் தெலுங்கு, வடமொழி கற்றார். மலைப்படி கொத்தும் பணியில் சேர்ந்து ''படி மேஸ்திரி'' ஆனார். 23ஆம் வயதிலேயே திருச்செங்கோடு பற்றிய சிறு நூல்களைப் பெயர்த்தெழுதி (கருணாகர மாலை, சந்திரசேகர மாலை) சென்னை சென்று ''மட்டுவார் குழலாம்பாள்'' அச்சுக்கூடத்தில் அச்சிட்டார்.

திருச்செங்கோட்டில் ''சுப்பராயக் கவுண்டர் அச்சுக்கூடம்'' (டாக்டர் சுப்பராயன் அவர்கள் தாத்தா பெயரால்) ''விவேகதிவாகரன் அச்சுக்கூடம்'' நிறுவி கொங்கு நாட்டு இலக்கியங்கள் பலவற்றைப் பதிப்பித்தார். 1923இல் கொங்கு மண்டல சதகம் பதிப்பித்தார். ''சிவஞான புத்தகோசம்'' என்ற பெயரில் திருச்செங்கோட்டில் நூலகம் தொடங்கினார். 40க்கு மேற்பட்ட நூல்கள் பதிப்பித்தார். திருச்செங் கோடு பற்றி 6 இலக்கியம் இயற்றினார். 19 நூல்கள் பதிப்பித்தார். 'கொங்கு வேள்', 'விவேக திவாகரன்' ஆகிய இதழ்களை நடத்தினார். 02.11.1944 அன்று காலமானார்.

★

கொக்கராயன்பேட்டை, மிட்டா ஜமீன்தார்
தண்டிகை வேல கவுண்டர்

பொன்னித் துறைமுள சைத்தண்டி கைவேல் புரவலன்கோல்
அன்னத் திடத்தர் திருத்தேர் விழாவினில் ஐயிருநாள்
பன்னித் துதிவே தியர்களுக்கு அன்னம் பரிந்தளித்தான்
அன்னத் தியாகி எனத்தண் டிகைவேல் அகமகிழ்ந்தே. (381)

பாடற்பொருள்:

முளசை கொக்கராயன்பேட்டை ஜமீன்தார் தண்டிகை வேல கவுண்டர் திருச்செங்கோட்டுத் தேர்த் திருவிழாவின்போது 10 நாட்களும் அந்தணர்கட்கு அன்னம் அளித்து 'அன்னத்தியாகி' என்னும் பரம்பரைப் பெயரை நிறுவினார்.

இவர் கொங்கு நாட்டு வேளாள கவுண்டர்களில் முளசி கண்ண குலத்தைச் சேர்ந்தவர். ஏமப்பள்ளியில் வாழ்ந்தார். தண்டிகையில் (பல்லக்கு) பயணம் செய்து நிருவாகம் செய்ததால் தண்டிகை வேல கவுண்டர் எனப்பட்டார். இவர் 'நாட்டு வேல கவுண்டர்' என்றும் அழைக்கப்பட்டார்.

★

சகலா கமப்பொருள் உண்மைய தான சதீசனிவர்ந்து
இகலா மதிவரு தேர்பொல் லரைக்கொண்டு எவரும்மெச்சச்
சகலாத்தி னால்சித் தரித்தணிந் தான்கண்ணர் தங்கள்குலம்
சகலாபம் எய்துறத் தண்டிகை வேல்அன்பு தூண்டிடவே.(382)

பாடற்பொருள்:

தண்டிகை வேல கவுண்டர் அர்த்தநாரீசுவரர் உலா வரும் தேருக்குத் தையல்காரரைக் கொண்டு அழகிய திரைச்சீலை முதலியன செய்து அலங்காரம் செய்தார்.

சென்னையிலிருந்து தேர்ந்த வேலைக்காரர்களை அழைத்து வந்து 2500 ரூபாய் செலவில் தேர்த்திரைச் சீலைகள் செய்யப்பட்டன. இவர் நாட்டார் - குடியானவர்; பார்ப்பனர் - பார்ப்பனர் அல்லாதார்; சைவர் - வைணவர் முதலிய பேதம் ஏற்பட்டபோது ஒன்றுபடுத்தினார்.

★

கண்டிகை நான்முனி வோர்அறி உண்மைக் கருத்துவிரித்
தண்டிகை நோயடு சைவ சமாஜம் அனவரதம்
சண்டிகை போற்றிடு செங்கோட்டில் மேவித் தழைக்களங்கள்
தண்டிகை வேல மகிபன்ஜஞ் ஞூறுபொன் தந்தனனே. (383)

பாடற்பொருள்:

திருச்செங்கோட்டில் அ.முத்துசாமிக் கோனார் அவர்கள் தொடங்கிய சைவ சமாஜத்திற்குத் தண்டிகைவேல் கவுண்டர் 500 ரூபாய் நன்கொடை அளித்தார்.

திருச்செங்கோட்டில் தண்டிகை வேல கவுண்டர் கார்னேஷன் சத்திரம் கட்டிச் சிறப்பாகத் திறப்பு விழாச் செய்தார்.

★

துறவி குமாரசாமிப் பரதேசி

ஆறு முகப்பெரு மாள்சந் நதியினில் அப்புகுன்றாது
ஊறும் கிணறொன்று தோண்டி இருநான்கு உருளையிட்டு
நாறும் பனிமலர் ஈட்டுநந் தாவனம் நன்கமைத்தான்
கூறும் துறவி குமாரச் சுவாமி குணமடைந்தே. (384)

பாடற்பொருள்:

குமாரசுவாமி என்னும் துறவியார் ஆறுமுகப் பெருமாள் சந்நதியில் கிணறு ஒன்றை அமைத்துத் தண்ணீர் இறைக்க 8 உருளைகள் இட்டார். நந்தவனம் ஒன்றையும் ஏற்படுத்தினார். அவர் அமைத்த கிணற்றில் தண்ணீர் குறையாமல் இருந்தது.

வட்டூர் செங்குண்ணி குல 'குப்பண்ணப் பரதேசி' என்பவரும் திருச்செங்கோட்டில் வாழ்ந்து புகழ் பெற்றார்.

★

ஸ்டேஷனரி சப்மாஜஸ்திரேட் ஆறுமுக முதலியார்

தவநா கமலை வலமுறப் பாதை தருகவெனச்
சிவஞானம் பிள்ளை சொலப்பொருள் தேடிச் சிறக்கஅமைத்து
அவனா றுமுக முதலிபெட் வர்ட்ரோட் தான்எனமன்
னவனாம மிட்டவன் பெட்போர்ட் மேலாம் நயமுறவே. (385)

பாடற்பொருள்:

சங்ககிரி டிப்டி கலெக்டர் டி.என்.சிவஞானம்பிள்ளை அவர்கள் திருச்செங்கோடு மலையை வலம் வரப் பாதை அமைக்க வேண்டும் என்ற கருத்தைத் தெரிவித்தார். பொருள் தேடி அம்மலைப் பாதையை அமைத்து அதற்கு சேலம் மாவட்டக் கலெக்டர் ஜே.பி.பெட்ஃபோர்டு அவர்கள் நினைவால் அப்பாதைக்கு 'பெட்ஃபோர்டு ரோடு' எனப் பெயரிட்டார் ஸ்டேசனரி சப் மாஜிஸ்திரேட்டு ஆறுமுக முதலியார் என்பவர்.

ஜே.பி.பெட்ஃபோர்டு 1911 முதல் 1914 வரை சேலம் கலெக்டராக இருந்தவர். திருச்செங்கோடு மலைப்பாதைக்கு மட்டும் அல்ல, சேலம்-ஏர்க்காடு சாலைக்கும் இவர் பெயரே வைக்கப்பட்டது. இப்பாதைகள் அமைப்பதற்கு மாவட்ட நிர்வாகம் உதவியிருக்க வேண்டும்.

★

சித்தளந்தூர் மிட்டாதார் சுப்பராய கவுண்டர்

மருவூரும் கோதைக் கயிலாய நாதர் மகாலயத்தின்
கருவூலத் துக்கு உயர்பூட் டிசைத்துநற் காப்பமைத்தான்
தருவூரும் சித்தளந் தூர்க்குச் சமீன்முத்து சாமிசுதன்
திருவூரும் தூரன் புகழ்சுப்ப ராய சுபாகரனே. (386)

பாடற்பொருள்:

சித்தளந்தூர் சமீன்தார் தூரன் குலத்து முத்துசாமிக் கவுண்டர் மகன் சுப்பராய கவுண்டர் திருச்செங்கோடு கயிலாசநாதர் கோயில் கருவூல அறைக்குப் பூட்டுக்கள் அமைத்துப் பாதுகாப்புச் செய்தார்.

இவர் எஸ்.எம்.சுப்பராயக் கவுண்டர் எனப்படுவார். இவர் சங்ககிரி மிட்டாவை விலைக்கு வாங்கி அங்கு சென்னகேசவப் பெருமாள் கோயில் திருப்பணி செய்தார். சித்தளந்தூர்-புளியம்பட்டி எனச் சித்தளந்தூர் மிட்டா இரு பிரிவாகப் பிரிக்கப்பட்டது. சுப்பராயக் கவுண்டர் தி.அ.முத்துசாமிக் கோனாருக்கு 'விவேகதிவாகரன்' அச்சகம் அமைத்துக் கொடுத்தார்.

★

மோழைக் கவுண்டம்பாளையம் வேட்டுவர்கள்

பேறுறு கோதைதநன் னாகேசர் தூபி பெருமையொடன்று
ஆறை இளையான் அமைத்தனன் அம்மர பாளர்களில்
தேறிடு மோழை நகரார் அரும்பொருள் தேடிச்சுதைக்
கூறு பணியும் பதிட்டையும் செய்து தொழுதனரே. (387)

பாடற்பொருள்:

திருச்செங்கோடு நாகேசுவரர் சந்நதித் தூபியை வேட்டுவர் குலப் பெரியவர் ஆறை இளையான் என்பவர் அமைத்தார். மோழைக் கவுண்டம்பாளையத்தைச் சேர்ந்த அவ்வேட்டுவர் குல மரபுப் பெருமக்கள் அதைச் சுதையால் பூசித் திருப்பணி செய்து பிரதிட்டை செய்தனர்.

சத்தியப்படியான அறுபதாம் படியில் உள்ள சுப்பிரமணியர் மோளக் கவுண்டம்பாளையம் வேட்டுவர் திருப்பணி. அருணகிரிநாதர் இதற்குத் தனித்திருப்புகழ் பாடியுள்ளார். இவர்கள் காட்டு வேட்டுவர் பிரிவைச் சேர்ந்தவர்கள்.

★

தெலுங்குச் செட்டிகள்

கிளரொளிக் கோதையில் வைகாசி வீதிதென் கீழ்முனையில்
வளமுறக் கல்மண்ட பம்அமரர்க் காக்கி மகிழ்ச்சியுற்றார்
வளரிசைக் காஞ்சிபொற் காமாட்சி யம்மை வரத்திலுறு
தெளிவுறத் தேசா திபர்எனச் சொல்லும் தெலுங்கர்களே. (388)

பாடற்பொருள்:

காஞ்சிபுரம் காமாட்சியம்மை வரம் பெற்றுத் தேசாதிபர் எனப் புகழ் பெற்ற தெலுங்குச் செட்டியார்கள் திருச்செங்கோட்டில் வைகாசி வீதி தென்கீழ் மூலையில் கல்மண்டபம் ஒன்றை அமைத்தனர்.

★

ஆலம்பாயர் கோத்திரம் நாககிரி பண்டிதர்

முன்னால் அமர்கட வுட்கரு கேமுத்த மூரலுமை
மின்னாலம் உண்ட சிவக்குறி சேர விதியின்வைத்தான்
சன்னாலம் பாயன் நாக கிரிபண்டி தப்பெரியோன்
பொன்னாலம் ஏந்திய மங்கையோர் பங்கன் பொருப்பிடத்தே.

(389)

பாடற்பொருள்:

சிவபெருமானுக்கு அருகில் உமாதேவியை எழுந்தருளச் செய்தவர் திருச்செங்கோடு ஆலம்பாயர் கோத்திரத்தைச் சேர்ந்த நாககிரிப் பண்டிதர் என்பவர்.

இவர் தி.அ.முத்துசாமிக் கோனாரின் சிறந்த நண்பர். கோனார் 'என் கண்மணி போன்ற ஸ்ரீலஸ்ரீ சா.நாககிரி பண்டிதர்' என்பார்.

★

நாககிரி பண்டிதர் மனைவி வள்ளியம்மை

நல்லா ளிடத்தர் கிரிவலத் தேயிடை நன்குறச்செங்
கல்லால் ஒருமண் டபமிசைத் தாள்இக் கவினுலகில்
பல்லா கமத்துறை தேர்நாக கிரிமா பண்டிதன்தன்
இல்லாள் எனும்வள்ளி யம்மையுள் ளன்பின் எழில்மிகுந்தே.

(390)

பாடற்பொருள்:

நாககிரிப் பண்டிதர் மனைவியார் வள்ளியம்மை கிரிவலப் பாதையில் ஒரு செங்கல் மண்டபம் கட்டினார்.

ஆறாம் திருவிழா அன்று சுவாமி கிரிவலம் வரும்போது இம்மண்டபத்தில் மண்டபக் கட்டளையை நாககிரி பண்டிதர் முன்னோரைப் போலவே நடத்தினார். மண்டபத்தில் விநாயகர் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளார்.

★

குமரமங்கலம் மிட்டா ஜமீன்தார் கைலாசக் கவுண்டர்

வேயாருந் தோளி உமைபாகர் மேவி விளங்கமங்கைச்
சீயால கட்டி முதலிமுன் செய்த சிகரமதில்
காயா டகத்தகடு ஏற்றிய நல்ல கலசம்வைத்தான்
சேயார் குமர புரிவாழ் கைலாச சிகாமணியே. (391)

பாடற்பொருள்:

குமரமங்கலம் மிட்டா ஜமீன்தார் கைலாசக் கவுண்டர் தாரமங்கலம் சீயால கட்டி கட்டிய விமானத்தில் தங்கத்தகடு போர்த்தப் பட்ட கலசம் வைத்தார்.

★

செல்லய்யன் அர்த்தநாரி அய்யன்

தவக்குறை முற்று தலமாம் செங்கோட்டுத் தடவரைமேல்
நவக்கிர கந்தனைப் பதிட்டை நயந்துசெய்தான்
சிவத்துசச் செல்லய னாம்அர்த்த நாரி செழிப்பணிப்பூண்
செவிக்கணி நாக கிரிபண் டிதன்தனைச் சேர்ந்தவனே. (392)

பாடற்பொருள்:

நாககிரி பண்டிதர் வகையைச் சேர்ந்த அர்த்தனாரி அய்யன் மலைக் கோயிலில் நவக்கிரகங்களைப் பிரதிட்டை செய்தார்.

★

அல்லாளிபாளையம் வெங்கடேசன் செட்டியார்

இல்லாள் உழைத்துண்பள் இவ்வள வுள்ளது இதனைமலை
நல்லாள் இடத்திற்கு உதவுக என்ன இரங்கயன்பால்
சொல்லாட வெள்ளி விடையிசைத்து ஈசன்மேல் தோன்றநலம்
அல்லாளி பாளையத் தார்வெங்க டேசன் அடைந்தனனே.(393)

பாடற்பொருள்:

அல்லாளிபாளையம் வெங்கடேசன் செட்டியார் ரங்கையன் என்பார் சொல்ல வெள்ளியில் காளை வாகனம் செய்து கொடுத்தார்.

★

வடகோபுரம் சுதைப்பணி, கலசம், பொன்முலாம் பூசியவர்கள்

திருவுலவு குமரபுரி வாழ்சுப்ப ராயன்
சபாபதியும் ராசப்பனாம்
சமீன்தார்கள் தருநிதியும் நாகமலை மாப்பிள்ளை
தங்குசுப்ப ராயனுடனே

திருவுலவு நாககிரி பண்டிதன் மீனாட்சி
செங்கோட்டை யன்நாரணன்
சேர்அர்த்த நாரிநெய்க் காரப்பட் டியின்வந்த
சிரத்தைகாட் டும்சடையனும்

பரிவுபெறு பலரிடத் தும்தேடி யோடிப்
பணங்கொண்டு கற்பணிசுதைப்
பணிமுடித் தனர்முத்துக் கிருஷ்ணவேங் கடவணிகர்
பகர்தாம்பிரக் கலசம்வைத்தும்

அரிதின்உத வினர்ஜமீன் சுப்பராயன் தங்கமது
பூசியலை தந்தனன்
ஆகஇவ் வாறுபணி மலையின்வட கோபுரம்
அமைத்தவிதம் எனும்உலகமே. (394)

பாடற்பொருள்:

குமரமங்கலம் ஜமீனைச் சேர்ந்த சுப்பராயன், சபாபதி, ராசப்பன், நாகமலை மாப்பிள்ளை, சுப்பராயன், நாககிரி பண்டிதர், மீனாட்சி, செங்கோட்டையன், நாரணன், அர்த்தனாரி, நெய்க்காரப்பட்டி சிரத்தை காட்டும் சடையன், மற்றும் பலரிடம் பொருள் பெற்று வடகோபுரம் சுதைப்பணியை முடித்தனர். முத்துக் கிருஷ்ண வேங்கட வணிகர் கலசம் செய்தளித்தார். அக்கலசத்திற்குத் தங்கப் பூச்சு குமரமங்கலம் சுப்பராயன் என்பவரால் செய்யப்பட்டது.

★

பின்வரும் பாடல்கள் ஓலைச்சுவடியில் கிடைத்த புதிய பாடல்கள்

குமரமங்கலம் சடையப்ப கவுண்டர் மகன் சின்னய்ய கவுண்டர்

அனுதினமும அரவகிரி உமைபாகர் நெய்வேத்தியம்
அமுதுபருப் பொடுபொங்கலும்
ஆவின்நெய் பழம்வெல்லம் ஆலாத்தி சாம்பிராணி
அடைக்காய்தன் னோடுதவியே

மனவிரத மாகவே மாதந்தொறும் பிரதோஷ
பூசையும் வனிதமாக
மாலைநெய் தீபமொடு காலைநெய் வேத்தியம்
வழுவாம லேநடக்க

தனமுதவி அறுபத்து மூவர்தமை யும்சந்திர
சேகரர்தன் னம்மன்தனையும்
தன்னுதாய் சத்ததில் குடைரண்டு முருகருமை
பகர்பிரபை மேல்தரித்தான்

கனமிகுந் திடுகுமர மங்கைசடை யப்பனருள்
காராளர் மேழித்துவசன்
கன்னனெனும் சின்னய வசீரனருள் தருமங்கள்
கதித்தவன்தன் குலம்வாழ்கவே. (395)

பாடற்பொருள்:

குமரமங்கலம் வேளாளர் சடையப்பன் மகனாகிய சின்னய்யன் திருச்செங்கோடு அர்த்தநாரீசுவரருக்கு அபிடேகப் பொருள்கள் அளித்தார். பருப்பு, பொங்கல், பசுவின் நெய், பழம், வெல்லம், ஆலாத்தி, சாம்பிராணி, வெற்றிலை பாக்கு இவைகள் அனைத்தையும் கொடுத்தார். மாதம்தோறும் பிரதோஷ நாள் பூசைகளைச் சிறப்பாகச் செய்தார். மாலை நேர விளக்கிடவும், காலை நேர நெய்வேத்தியத் திற்கும் பொருள் உதவி செய்தார். அறுபத்து மூவர், சந்திரசேகரர், அவர் தேவி வழிபாடு செய்தார். குடைகள் அளித்ததுடன் முருகர், உமாதேவிக்குப் பிரபை செய்தளித்தார்.

★

அவனிமிசை மருவிய சகாத்தமா யிரமும்அறு
நூற்றெழு பத்துநான்கில்
ஆங்கிரசவச் சரம்மாசம் தேதியறு நான்கு
இரண்டு தினமும்

சிவனிரவோ டமாவாசை ஆதிவா ரம்சதயம்
சிவக்குனி இடபலக்னம்
செங்கோ டருக்குரிய அங்கிரச சத்தினால்
சேருமய் யேழுதனிலே

கவசமேல் தங்கமுலாம் சேருமைங் கால்தனில்
கனகமயம் செய்தளித்தான்
கடவுள்முன் பித்தளைத் தூண்தர விளக்குமேல்
கட்டுக்கா லாத்திவைத்தான்

பவமகல வேமங்கைச் சடையனருள் சின்னயன்
பாகருக்கன் போடுசெய்தே
பக்தியுடன் தெரிசனம்செய்து அட்டபோ கமும்இந்தப்
பாரில்தான் அனுபவிக்கவே. (396)

பாடற்பொருள்:

குமரமங்கலம் சடையப்பன் மகன் சின்னய்யன் சாலிவாகன சகம் 1674ஆம் ஆண்டு (கி.பி.1752) சிவராத்திரி, அமாவாசை, ஆதிவார பூசை (ஞாயிறு), சதய பூசை இவைகளைச் சிறப்பாக நடத்தினார். இறைவனுக்கு அணிவிக்கும் கவசங்களுக்கெல்லாம் தங்க முலாம் பூசினார். இறைவன் முன்பு பித்தளைத் தூண்மீது விளக்கேற்ற ஏற்பாடு செய்தார்.

★

சந்ததமும் உமைபாகர்க்கு அபிடேக சலம்விடிரு
கொப்பரையும் இரண்டு குடமும்
தாம்பிரக் கலசம்நாலு காவேரி மஞ்சனம்
தரஇரு காவடியதும்

கந்தருமை பாகர்தம் பூடண மலர்ரசதங்
கனகமயம் தங்கமுலாம்
கதிர்இரைத் திடஇரு சூரியபாண் சுவேதசத்திரம்
சாமரை நிசானிரண்டு

அந்தமாய்த் தேரலங் காரமுஸ்த் திதிசிவிகைக்
கைந்துசெறு தினரதமுன்
அய்யாயி ரம்பழம் கொள்கொப் பரைரண்டு
அழகான குத்துவிளக்கும்

செந்தமிழ்சேர் மங்கைவரு சடையன்மதி மந்திரிசொல்
செல்வன் சின்னயமகீபன்
செய்வித்த னன்ரண்டு பெரியதிரை இதுவெலாம்
செங்கோடர் தனைக்காக்கவே. (397)

பாடற்பொருள்:

குமரமங்கலம் சடையன் மகன் சின்னய்யன் நாள்தோறும் உமைபாகர்க்கு அபிடேகம் செய்ய இரண்டு கொப்பரைகளும், இரண்டு குடமும் அளித்தார். தாம்பிரக் கலசம் நான்கும், காவேரித் திருமஞ்சனம் கொண்டு வரக் காவடியும் கொடுத்தார். செங்கோடர், உமைபாகர் ஆபரணங்களையெல்லாம் பொன்முலாம் பூசச் செய்தார். சூரியபாண், சுவேதச் சத்திரம், கவரி, நிசான் இவைகளையும் அளித்தார். தேர் அலங்காரம், பல்லக்குக்கு நிலம் அளித்தார். அய்யாயிரம் பழம் கொள்ளும் கொப்பரை இரண்டு, குத்து விளக்கு இவற்றையும் அளித்தார்.

★

குமரமங்கலம் தூர குலக் கைலாசக்கவுண்டர்

அண்டர்புகழ்ந் தோங்குதெட் சிணகயிலை நாககிரி
அர்த்தநா ரீசுரர்க்கு
அதிகவிப வருஷம் மேஷநல் திங்களில்
அதிகவித முழுக்காப்புடன்

கண்டுசர்க் கரைதேனு சந்தனம் பாலுமே
கதலியொடு அபிடேகமும்
கனிவான சோடசம் நித்தியம் செய்துமே
கர்த்தர்தன் மேனிகுளிர்

பண்டுலவும் அறுபத்து மூவர்க்கு மேஅஷ்ட்ட
பந்தனம் செய்துமிகவே
பரன்பெறு பூசுரர்க்கு அன்னமும் சொன்னமும்
பட்சமுட னேகொடுத்தான்

மண்டலம் புகழ்கின்ற மாலையணி வோன்குமர
மங்கைவளர் தூரகுலனாம்
வருஷவயன் ஆனதிரு கைலாச பூபன்மிக
வண்ணமையுடன் வாழ்கநன்றே. (398)

பாடற்பொருள்:

குமரமங்கலம் தூரன் குலத்தைச் சேர்ந்த கைலாசக் கவுண்டர் என்பவர் தட்சிண கைலாசம் என்று போற்றப்படும் திருச்செங் கோட்டுக்கு விப வருடம் (1808) சித்திரை மாதம் சிறப்பு வழிபாடு செய்தார். கற்கண்டு, சர்க்கரை, தேன், சந்தனம், பால், வாழைப்பழம் இவற்றுடன் அபிஷேகம் செய்தார். நாள்தோறும் சோடச உபசாரம் செய்வித்தார். அறுபத்து மூவரைப் பிரதிட்டை செய்யும்போது அட்டபந்தனம் செய்தார். அர்ச்சிக்கும் அந்தணர்கட்கு அன்புடன் உணவளித்துப் பொன் வழங்கினார்.

★

மோரூர் பிள்ளியப்பன் மகன் தாண்டவன்

அரவ வெற்பின்மேல் கோபுரத் தடியில்வாழ்
கரிமு கன்இரு பாலில் காவிடை
தரும மோரூர் பிள்ளியருள் தாண்டவன்
பரிவுடன் செய்து பாக்கியம் பெற்றான். (399)

பாடற்பொருள்:

மோரூர் பிள்ளியப்பன் என்பவர் மகன் தாண்டவன் மலைக் கோபுரத்தின் அடியில் எழுந்தருளியுள்ள விநாயகருக்கு இருபுறமும் சிற்ப வேலைப்பாடாக அலங்காரம் செய்தார்.

★

ஏமப்பள்ளி கண்ண குல அன்னத்தியாகி

நளவருஷம் இளசைப் பெரியய்ய னும்ஏற்ற
ராட்சசச் சொரூபமாக
ராசாவி னுடசாடி சொல்லியெங் களைத்தெண்டம்
நடுங்கவே வாங்குநாளில்

எழுதெனத் தெய்வ சிகாமணிக் குருக்கள்
பங்கெனக் கெனவேமுறி
எழுதிவைத் தீராறு வருடமாய் உள்ளபயன்
எடுத்துக்கொண் டனுபவித்தான்

பழமைமுன் னேஅன்னத் தியாகியெங்கள் காணிபறி
போகாமல் செய்யவேதான்
பரிவுடன் நிதிதந்து நிலைசெய் தனன்அதிக
பட்சம்வைத் திவனும்இந்நாள்

வழுவாம லேகந்தன் செங்கோட்டு வேல்விப
வச்சரம் அவன்கையினில்
வாங்கியீந் தனன்முறி ஓங்குபுக ழாலும்இவ்
வையகம் தனைவாழ்த்தவே. (400)

பாடற்பொருள்:

விப வருடம் இளசைப் பெரியய்யன் என்னும் அர்ச்சகர் இராட்சதர் போல அரசர் பெயரைச் சொல்லி மக்களை நடுங்கவைத்து அபராதம் வாங்கினார். தெய்வசிகாமணிக் குருக்கள் பங்கைத் தனக்கு என்று முறி

எழுதச் செய்து நள வருடம் முதல் பன்னிரண்டு வருடம் அனுபவித்தார். இதைக் கேள்விப்பட்ட முளசிக் காணியாளர் அன்னத் தியாகி காணி பறிபோகாமல் காப்பாற்றும் பொருட்டு எழுதிய முறிக்குரிய நிதியைத் தந்து காணியுரிமையைக் காப்பாற்றினார்.

★

துர்க்கை கோயில் வேலய்யன் மகன்
ஏமப்பள்ளி பெரியய்யன்

தாலிபொட்டுங் காறைதனுள் அத்திரப்பன் வைரமணி
ஆலித்தா னிடம்வாழ் அம்மையுமை - பாலில்
அணிந்தான் உமைதமக்கும் அற்புதமாய்ச் செய்தான்
பணிந்தான் பெரியயன்அன் பாய். (401)

பாடற்பொருள்:

சிவனிடம் வாழும் அம்மைக்கு ஏமப்பள்ளிப் பெரியய்யன் தாலி, பொட்டு, காறை, வைரமணி முதலிய பல ஆபரணங்களைச் செய்து அளித்தார்.

★

மைசூர் இலிங்க ராசய்யன்

சிந்ததய வாகியே குமாரதள வாய்துகில்
செங்கனக பீதாம்பரம்
தேசயன் தருலிங்க ராசயன் தருகின்ற
செம்பொன் துராய்குடமணி

விந்தைபெறு தாலிப் பதக்கமொரு ரண்டதின்
மேவுபட் டாடைபலவும்
வீறான சூரிசமு தாடுசம் புக்கத்தி
விதமான கவரிபலவும்

புந்திமகிழ் வாங்கிரண் டும்பெரிய கத்தியும்
பூடணப் பெட்டியுடனே
பூசைபுரி திரிசங்கு மூன்றுபஞ் சாட்சர
பூசைமணி கெடியாரமும்

சந்ததமும் பொன்னிநீர் மங்கிணிச் சேமூன்று
சம்பளம் இரண்டுன்வரி
திருமுருகர் சிகரம்பிர திட்டைதின விசறியின்
சம்பளமும் அரசுபயமே. (402)

பாடற்பொருள்:

குமார தளவாய் நிர்வாக காலத்தில் தேசய்யன் அலுவலர் இலிங்க ராசய்யன் பொன்னாடை, பொன் அணிகலன்கள், தாலி, பதக்கம், பட்டாடை, பல்வேறு ஆயுதங்கள், கவரி, ஆபரணப் பெட்டி, சங்கு, பூசைமணி, கெடியாரம், காவிரித் திருமஞ்சன நீர் கொண்டு வர மூன்று எருதுகள், ஆட்களுக்குச் சம்பளம் இவை அளித்ததுடன் முருகன் கோயில் சிகரம் கட்டிப் பிரதிஷ்டையும் செய்தார்.

★

துர்க்கை கோயில் வேலய்யன் மகன்
ஏமப்பள்ளி பெரியய்யன்

வருடமதில் துன்மதியாம் மாசமும்தான் ஆடி
மங்கள சஷ்டிதன்னில்
கருத்தரத்த நாரீசர் காவுடன்கண் டாபரணம்
காறை பொட்டும்
தரித்தனன்மூ வைந்துதங்கக் காசினில்செய் தளித்தனன்
வினைகள் தன்னைத்
துரத்தினன்பூ சுரன்ஏவை வேலயன்சொல் பெரியயனும்
சுகம்பெற் றானே. (403)

பாடற்பொருள்:

வேலய்யன் மகன் ஏமப்பள்ளி பெரியய்யன் துன்மதி வருடம் ஆடி மாதம் சஷ்டி நாளில் அர்த்தநாரீசர்க்கு மாலை, கழுத்தாபரணம், காறை, பொட்டு இவைகளைப் பதினைந்து பொற்காசுகளால் செய்தளித்தார்.

★

அர்த்தநா ரீசர்க்கு அபிஷேகம் செய்திடவும்
பித்தளையி னால்கலசம் பிஞ்ஞுகற்கு - சத்தியாய்
தந்தான் பெரியயனும் தன்மமதி லேநமக்கு
வந்ததென்றும் ஏற்றம் மகிழ்ந்து. (404)

பாடற்பொருள்:

பெரியய்யன் அர்த்தநாரீசரக்கு அபிடேகம் செய்யக் கலசத்தைப் பித்தளையால் செய்து கொடுத்தார்.

★

அத்தநா ரீசர் தம்முன் ஆலயக் கீழை வாய்தல்
சத்தியாய்க் கதவு தன்னைத் தானுமே செய்த மைத்தான்
பத்திர மாகத் துர்க்கை கோவில்வே லயன்அன் பான
புத்திரன் பெரியய் யன்இப் புகழுடன் புவியில் வாழ்ந்தான்.
(405)

பாடற்பொருள்:

துர்க்கை கோயில் பணிபுரியும் வேலய்யன் மகன் பெரியய்யன் அர்த்தநாரீசர் கோயில் கிழக்கு வாசல் கதவைச் செய்து கொடுத்தார்.

இவ்வேலய்யன் பூந்துறை நாட்டுக் கணக்கு வேலையும் பார்த்துள்ளார். அர்த்தநாரீசுவரர் உற்சவமூர்த்தியின் பிரபையில் ''அர்த்தநாரீசுவர சுவாமியாருக்கு பூந்துறை நாட்டுக் கணக்கு அர்த்த நாரியன் வேலய்யன் குமாரன் பெரியய்யன் தற்மம் சதா சேவை. அட்சய வருஷம் தை மாதம் 13 தேதி'' என்ற எழுத்துப் பொறிப்பு உள்ளது.

★

ஆகமிகர் செங்கோட்டில் ஆறுசிவ தேசிகர்க்கும்
யோகமுறு சிவபூசைக்கு உகந்ததுவாய் - நாகா
பரண முடன்லிங்கம் பார்வதியும் ஈந்தே
சரணமதைச் செய்துகொண்டான் தான். (406)

பாடற்பொருள்:

திருச்செங்கோட்டில் உள்ள ஆறு குருமார்களாகிய தேசிகர்க்கும் சிவபூசைக்காக நாகாபரணமுடன் சிவலிங்கம் செய்து கொடுத்தார். பார்வதிதேவி உருவத்தையும் பெரியய்யன் அளித்தார்.

★

நாககிரித் தேரதனில் நாகமும்செய் தைந்துதலைப்
பேகன்னைத் தான்இவனும் பேறுபெற்றான் - வாகுடனே
நாகபர ணம்ஈந்தான் நாதர்கயி லாயருக்கு
வாகனமாய்ச் சேடனைவைத் தான். (407)

பாடற்பொருள்:

ஏமப்பள்ளிப் பெரியய்யன் திருச்செங்கோட்டுத் தேரில் ஐந்து தலை நாகரை அமைத்தார். கயிலாயநாதர் கோயிலுக்கு நாகாபரணமும் தந்தார். ஆதிசேடன் வாகனமும் செய்து கொடுத்தார்.

★

திருச்செங்கோடு உத்தண்டி தாண்டவன் மகன்
பெரியதம்பி அர்த்தநாரி

மதிபொருந்தும் செஞ்சடை அர்த்தனா ரீசலிங்கர்
மனது மேவத்
ததிபொருந்தும் அத்தர்அர வாசலர்சந்தி கட்டளைதான்
தருமம் செய்தான்
நிதிபொருந்தும் கோதையில்வாழ் உத்தண்டி தாண்டவன்சொல்
நிசமாய்க் கேட்டு
நதிபொருந்தும் குலன்பெரிய தம்பிஅத்த னாரிமன்னன்
நடத்தி னானே. (408)

பாடற்பொருள்:

திருச்செங்கோடு உத்தண்டி தாண்டவன் என்பவர் மகன் வேளாளராகிய பெரியதம்பி அர்த்தநாரி என்பவர் சந்திபூசைக் கட்டளை நடத்த நிதி அளித்தார்.

★

சோமசுந்தரன் தனயன்

வந்தியர் பாத சரணத்தில் வைத்தனன் ரண்டு தீபம்
சந்த மலைக்க ரர்பொன் தந்திட கோவில் கூபம்
நந்தவா னமும்தான் செய்ய நழுவிப்போய் சிவன்செய் பாவம்
தந்திரி சோம சுந்தரன் தனயன்செய் புண்ணியம் லாபம்.(409)

பாடற்பொருள்:

சிவபெருமான் கொடுத்த பொன்னால் கோயில், கிணறு, நந்தவனம் அமைக்க முடியவில்லையே என்று சருதி சோமசுந்தரன் தனயன் வந்தியர் பாதத்தில் இரண்டு விளக்குகள் வைத்தார்.

★

இராசிபுரம் சின்னவேலன்

மலைதனைக் காக்கு கின்ற வர்த்தகர் தமது வாசல்
துலுக்கருக்கு அன்ப தாகத் துந்துபி வருடம் தன்னில்
தலைக்கொரு பாகும் வெள்ளித் தனதுவா சலுக்கே கந்தை
செலுத்தினன் ராசை சின்ன வேலபூ பாலன் அன்பாய். (410)

பாடற்பொருள்:

இராசிபுரம் சின்னவேலன் மலை காவலர் கோயிலில் உள்ள வாசல் காவல் துலுக்கர் உருவங்கட்குத் தன் உபயமாக வெள்ளியினால் ஆன தலைப்பாகையைச் செய்தளித்தார்.

சின்னவேலன் சமயப் பொறை பாராட்டுதலுக்கு உரியது. பங்கடு சுல்தான் என்று இந்த உருவங்களைக் கூறுவர்.

★

கொப்பரை ஒன்றி ரண்டு குடமும்பித் தளையால் தட்டம்
துப்புர வாகச் செய்தே துந்துபி வருடம் தன்னில்
விற்பனன் ராசை சின்ன வேலபூ பாலன் அன்பாய்
தற்பரர் செங்கோ டர்க்குத் தனதெனக் கொடுத்து வாழ்ந்தான்.
(411)

பாடற்பொருள்:

இராசிபுரம் சின்னவேலன் என்பவர் திருச்செங்கோட்டுச் செங்கோட்டு வேலர்க்கு ஒரு கொப்பரை, இரண்டு குடம், பித்தளைத் தட்டம் இவைகளைத் துந்துபி வருடம் அளித்தார்.

★

கணக்கர் திருக்கை வேலன் மகன் சுப்பிரமணியன்:

அற்கனுடன் சந்திரனும் உள்ள காலம்
அரவவெற்பில் அழியாததந் தலைநா கம்செய்
திக்குவல யம்பருத்தி நாட்டில் வாழும்
திட்டிருக்கும் மன்னர்தமக் குரைத்திடி லாகும்
ஒக்குமுங்கட்கு இசைந்ததனம் உமையோர் பாகர்க்கு
உகந்ததுவாம் என்றுரைத்திட்டு உண்மை யாலே
மிக்கபுகழ் சீர்கருணன் திருக்கை வேலன்
மேதினியில் சுப்பிரமணியன் விளங்கித் தானே. (412)

பாடற்பொருள்:

பருத்திப்பள்ளி நாட்டைச் சேர்ந்த கொழுங்கொண்டைக் கணக்கரில் திருக்கைவேலன் என்பார் மகன் சுப்பிரமணியன் சந்திர சூரியர் உள்ள வரை நிலைத்து நிற்க ஐந்தலை நாகத்தைச் செய்து வைத்தார். அவர் எல்லோரிடமும் உங்கட்கு உரித்தான செல்வம் அனைத்தும் உமைபாகர்க்கு உரியது என்று கூறும் இயல்புடையவர்.

★

அரவகிரி அறுமுகவர் சந்நதியில் குறடுஇரும்பால்
அன்பாய்ச் செய்தே
கரிமுகவன் செடிசாத னைசெய்தே தாபித்தான்
கடவுட்கு ஏரகத்தில்
திருமருவும் கொழுங்கொண்டைச் சீர்கருணன்
திருக்கை வேலன்
தருபவன்காண் சுப்பிரமணியன் தன்மமிதைச் செய்துகுலம்
தழைக்கின் றானே. (413)

பாடற்பொருள்:

பருத்திப்பள்ளி நாட்டைச் சேர்ந்த கொழுங்கொண்டையில் கருணீகர் வழிவந்த திருக்கைவேலன் மகன் சுப்பிரமணியன் திருச்செங்கோட்டு முருகர் சந்நதியில் இரும்பினால் குறடு செய்தார். விநாயகர் உருவத்தைப் பிரதிட்டை செய்தார்.

★

வேதியர் மகாசனம் செயல்கள்

நதியருகு வேணியணி யர்நாயகி அர்த்த
நாரீசர் உளம்மகிழவே
நல்லதம்பிக் காங்கேயன் தாபிக்க வேஅர்த்த
நாரீசர் புரம்என்னவே

சதுமறை கலைஞானம் ஆறுசூத் திரகிரிகை
சட்கரும பலகாவியம்
சங்கீத நாடகம் புரோகிதத் திசாபலம்
சாத்திர புராணமுடனே

பதமிலகும் அந்திப்புட் பங்கள்உப கவீரங்கள்
பன்னுசீர் ஆராதனம்
பரிவும்ஆ சீர்வாதம் அத்தியா னங்களொடு
பரவுகா விரிமஞ்சனம்

மதியுதவு கரணிக்கர் மணியமொடு கட்டிய
மகாகயிங் கரியங்களும்
மருவுகர வேதியர்கள் அனைவரும் நீடூழி
மகிமையொடு மிகவாழ்கவே! (414)

பாடற்பொருள்:

மோரூர் நல்லதம்பிக் காங்கேயன் 'அர்த்தநாரீசர்புரம்' என்ற ஊர் ஏற்படுத்தினார். அங்கு குடியிருந்த அந்தணர்கள் நான்கு வேதம், கலை ஞானம், ஆறு சூத்திரம், கிரிகை, சட்கருமம், பல காவியம், சங்கீதம், நாடகம், புரோகிதம், திசாபலன், சாத்திரம், புராணம் இவைகளில் சிறந்து விளங்கினர்.

அந்திப் புட்பம், உபகவீரம், ஆராதனம், ஆசீர்வாதம், அத்தியானங்கள், இவற்றோடு காவிரித் திருமஞ்சனம் வரவும் ஏற்பாடு செய்தனர். கணக்கு - மணியம் பணியும் செய்தனர்.

★

முத்துக்குமாரன் மகன் சண்முகம் பிள்ளை

மாபத்தர் போற்றிய செங்கோடர் சந்நதி வாயுவினில்
ஆபத்தை நீக்கிட என்றோர் சிவலிங்கம் அன்புடனே
தீபத்தை ஏற்றி அமுதூட்டி அர்ச்சனை செய்யத்தந்து
தாபித்து வைத்தனன் முத்துக் குமாரன்சொல் சண்முகனே.
(415)

பாடற்பொருள்:

அடியார்கள் போற்றி வழிபடும் செங்கோட்டுவேலர் சந்நதியில் வடமேற்கு மூலையில் ஆபத்தை நீக்கும்பொருட்டு ஒரு சிவலிங் கத்தைப் பிரதிட்டை செய்தார். தீபம் ஏற்றி அமுதுபடி அளித்து அர்ச்சனை செய்து வழிபட முத்துக்குமாரன் என்பவர் மகன் சண்முகம் ஏற்பாடுகள் செய்தார்.

★

மனமேவு நாக மலைக்கே வரும்அமா வாசிதொறும்
கனமேவு பன்னிரண் டாண்டிகட் கேகறி நெய்தயிரோடு
அனமேவ ஊட்டி மகபூசை செய்து அடிபணிந்தான்
சனமேவு முத்துக் குமாரன்அன் பாகிய சண்முகனே. (416)

பாடற்பொருள்:

முத்துக்குமாரன் மகன் சண்முகம் என்பவர் அமாவாசை தோறும் பனிரண்டு அடியார்கட்கு கறி, நெய், தயிரோடு அன்னமிடத் தக்க கொடை அளித்தார்.

★

சரவணன்

பேட்டையிற் காணி ஒருநூறு வச்சரம் பின்னிடவே
கேட்டதற் கான விபகாரம் செய்துமுன் கீர்த்திநிற்கத்
தாட்டிமை யான வழியான் சரவணன் தான்தயவாய்ப்
பாட்டிமை யாகக் கொடுத்தான் சதாசிவ பண்டிதற்கே. (417)

பாடற்பொருள்:

திருச்செங்கோடு பேட்டையில் சதாசிவ பண்டிதர் குடும்பத் திற்கு நூறாண்டுகள் முன்பு உரிமையுடன் அனுபவிக்க நிலம் கொடுக்கப்பட்டிருந்தது. இடையில் சில விவகாரத்தால் நிலம் அனுபவிக்க இயலாமல் இருந்தது. சரவணன் என்பவர் மீண்டும் அவர்கள் பேட்டை நிலத்தை அனுபவிக்கச் செய்தார்.

★

சண்முகன்

முன்னாளில் பேட்டை முறைசோழன் ஈந்தனன் மோசமுற்ற
அன்னாள் சரவண பூபாலன் தந்தனன் ஆகையினால்
இன்னாளும் சண்முகன் தானாக வாங்கி எனக்களித்தான்
பொன்னாட்டில் இந்திரன் போல்வாழ்ந் திருப்பன் புகழுடனே.
(418)

பாடற்பொருள்:

சோழன் கொடுத்த மேற்படி நிலத்தைச் சரவணன் மீண்டும் தந்தான். அதற்குரிய தொகையைச் சண்முகம் என்பவர் அளித்து அந்நிலத்தைச் சதாசிவ பண்டிதர்க்கு உரிமையாக்கினார்.

★

காஞ்சிபுரம் இராசண்ணன் மகன் வீரசெட்டியார்

உம்பர்பதி அரசனைய தேவப்ப ராசுடையர்
உகந்தபுண் ணியமாகவே
உலகுமுறை புரிதேச யன்லிங்க ராசயன்
உத்தார மதுசெய்யவே

அம்புவி மதித்தசெங் கோடரை அருச்சிக்கும்
அந்தணர்கள் ஆனகுரவோர்
அவரவர்கள் மைந்தர்க்கு உபநயனம் விவாகங்கள்
ஆச்சார்ய அபிடேகமும்

தம்பமென வேதமது தந்தைதாய் ஆகியே
சகலவரி சைகளுதவினன்
தணியர தானபா தகம்தனை அகற்றினன்
தயவாக ரட்சித்தனன்

கும்பமுனி கச்சிநகர் அன்புதரு ராசண்ணன்
குலதிலக மானபுதல்வன்
கொற்றமிகு புயவீர செட்டிசிவி கையின்மீது
குவலயம் தனில்வாழ்கவே! (419)

பாடற்பொருள்:

மைசூர் மன்னர் தேவராச உடையார் அவர்கள் புண்ணியம் என தேசயன், இலிங்கராசய்யன் ஆகியோர் கூறியதைக் கேட்டு காஞ்சிபுரம் ராசண்ணன் மகன் வீரசெட்டி திருச்செங்கோட்டில் இறைவனைப் பூசை

செய்யும் அந்தணர்களின் மக்களுக்கு உபநயனம், திருமணம், ஆச்சார்ய அபிடேகம் ஆகியவற்றை அவர்களின் தந்தை தாய் எனுமாறு அன்புடன் செய்தார். அவர்கட்கு வரும் குறைகளை நீக்கினான்.

★

நாகாச் செட்டியார்

வெற்றிசேர் விசுவ நாத வீரபூ பாலன் மேவும்
கொற்றவன் நாகாச் செட்டி கோதைவாழ் ஈச னார்க்கே
உற்றவன் கனகத் தாலே உயர்சடா மகுடம் சாத்தி
மற்றவன் பெற்ற பேறு மனிதரால் உரைக்கோ ணாதே. (420)

பாடற்பொருள்:

வீரப்ப நாயக்கர் ஆட்சிக் காலத்தில் நாகாச் செட்டி என்பவர் திருச்செங்கோடு அர்த்தநாரீசுவராருக்கு பொன் சடா மகுடம் செய்து கொடுத்துப் புகழ் பெற்றார்.

★

கறுப்பன் செட்டியார் மகன்
சர்க்கார் நல்லாஞ் செட்டியார்

பூமருவு கலியுக சகாத்தமா யிரமும்அறு
நூறும்எழு பத்தொன்றினில்
புகல்சுக்கில பட்சமும் திங்கள்பங் குனிதனில்
புகழொடுசெய் தருமம்வினவீர்
தேமருவும் அரவகிரி கீழ்த்திசைச் சாரலில்
திகழ்வில்வ வினாயகரிடம்
தென்முகம தாகஒரு மண்டபம் செங்கல்லால்
திறமையொடு செய்வித்தனன்

தாமருவு சீரக மாலையணி புயனான
சாந்தழைத்த சிங்கக்கொடியான்

சந்திரவத னன்கறுப்பன் தவத்தினில் வந்த
சர்க்கார்நல் லாஞ்செட்டியார்

ஆமிது எனத்தருமம் அகிலமெங் கும்புகழ்
அரவகிரி ஈசர்மகிழ
அவர்தமது கிருபையில் இவன்சந்ததி குலம்கோத்திரம்
அதிகபவி சுடன்வாழ்கவே! (421)

பாடற்பொருள்:

சீரக மாலையும், சிங்கக் கொடியும் படைத்த கறுப்பன் செட்டியார் மகன் சர்க்கார் நல்லாஞ் செட்டியார் சாலிவாகன சகாப்தம் 1671ஆம் ஆண்டு (கி.பி.1749) திருச்செங்கோட்டு மலையின் கீழ்த் திசைச் சாரலில் உள்ள வில்வவிநாயகர் கோயில் அருகில் தெற்கில் ஒரு செங்கல் மண்டபத்தைச் சிறப்புடன் அமைத்தார்.

★

சிக்காராசேந்திரன் மகன் பெட்டத்து ராசா மரிராசா

திருமருவு கலியுக சகாத்தமா யிரமீது
சேரும்அறுநூற் றைம்பத்தாறினில்
செல்வருஷம் ராட்சதம் வைய்யாசி யென்திங்கள்
சேரும்அறுநூற் றைம்பத்தாறில்

குருமருவு சோமவா ரம்திருதி கைமூலநாட்
கொண்டரிய தைதுலையுடன்
கூறுதற் கரிதான கும்பலக் கினமதும்
கூடிவரு மேனாளிலே

அருள்மருவு செங்கோடை அர்த்நா ரீசருக்கு
அம்பொன்முடி தான்தரித்தான்
ஆதிபெறு மைசூரில் வாழ்கிருஷ்ண ராசயன்
அதிகபுண் ணியமாகவே

மருமருவு திண்புயன் சிக்கரா சேந்திரன்
மைந்தனா கியகுபேரன்
வாசவன் தனக்குநிகர் ஆனபெட் டத்தரசன்
மாநிலம் தனில்வாழ்கவே. (422)

பாடற்பொருள்:

சாலிவாகன சகாப்தம் 1656 இராட்சத வருடம் வைகாசி மாதம் 26ஆம் தேதி சோமவாரம் கிருத்திகை மூல நாள் அன்று மைசூர் அரசர் கிருஷ்ணராச உடையார்க்குப் புண்ணியமாகச் சிக்காராசேந்திரன் மகன் பெட்டத்து ராசா மரிராசா அர்த்தனாரீசர்க்குப் பொற்கிரீடம் கொடையாக அளித்தார். (24-05-1735)

★

பாண்டியன் சேனாபதி மணவாளன்

செம்பொன் பணியசலத் தேவியுட வாகுவுக்கே
அம்பொன் வலயம் அளித்தானே - தம்பமென
வேண்டியதெல் லாம்கொடுத்தான் மிகவும் மணவாளன்
பாண்டியனாம் சேனா பதி. (423)

பாடற்பொருள்:

பாண்டிய சேனாபதி மணவாளன் திருச்செங்கோட்டு இறைவியாகிய தேவியின் தோளில் அணிய 'வாகுவலயம்' என்ற அணிகலனைச் செய்தளித்தார்.

★

திருச்செங்கோடு அர்த்தநாரிப் புலவர் மகன் தண்டாயுதன்

புண்டரிகம் செறிகோதை அத்தநா ரிப்புலவன்
புதல்வன் ஆனோன்
கொண்டலென உதவுதண்டா யுதத்தினிட தருமமெல்லாம்
கூறக் கேளீர்

விண்டலமென் அழகியம்மை மண்டபமுன் படிதூபி
விழாவுண் டாக்க
கண்டசொன்னம் பாதிதந்து சரிபாதி புண்ணியமும்
கைக்கொண் டானே. (424)

பாடற்பொருள்:

திருச்செங்கோடு அர்த்தநாரிப் புலவர் மகன் தண்டாயுதன் என்பவர் அழகியம்மை கோயில் மண்டபம், படிகள், தூபி இவற்றை அமைத்து விழாக்களுக்கும் ஏற்பாடு செய்யப் பாதிச் செலவை அளித்தார்.

★

கோதைவளம் பதிவாழும் அத்தநா ரிப்புலவன்
குமாரன் ஆனோன்
தாதுலவு மணிமார்பன் தண்டாயு தத்தின்நல்
தருமம்கேளிர்
மாதமொரு நாளிலமா வாசைதொறும் பன்னிரண்டு
மகேசர் பூசை
நீதியுடன் நடத்தியுமை யோர்பாகர்க்கு அற்புதமாய்
நேமித் தானே. (425)

பாடற்பொருள்:

அர்த்தநாரிப் புலவர் மகன் தண்டாயுதன் ஒவ்வொரு மாதமும் அமாவாசை தோறும் பன்னிரண்டு அடியார்கட்கு உணவளிக்கத் தக்க ஏற்பாடுகளைச் சிறப்பாகச் செய்தார்.

★

பிற்சேர்க்கை

திருச்செங்கோடு வீமணக் கவிராயர் இயற்றிய

திருமுக விலாசம்

திருச்செங்கோடு மலை உச்சி வந்திக்கல் (வரடிகல்) தொடங்கி திருச்செங்கோடு நகரின் பெரிய குளம் விநாயகர் வரை உள்ள எல்லாத் தெய்வங்கள், கோயில்கள், சமயம் தொடர்பான இடங்கள் ஆகியவற்றை வரிசையாகக் கூறும் மிகவும் அரிய நூல் திருமுக விலாசம்.

சேமூர் கூறைகுலக் கொங்கு வேளாளர் இராசாக்கவுண்டர் மகன் நல்லய்ய கவுண்டர் மீது வீமணக் கவிராயரால் பாடப்பட்டது. இவர்கள் செண்பகமாதேவி இராசா சுவாமியை வணங்குபவர்கள்.

கொங்குப் புலவர் வழிவந்த சுப்பிரமணியம் பூசாரியார் வீட்டில் கிடைத்த ஓலைச்சுவடியைக் கொண்டு தி.அ.முத்துசாமிக் கோனார் 1903ஆம் ஆண்டு பதிப்பித்தார் (சோபகிருது ஆவணி, 24).

இந்நூல் அச்சிட்ட காலத்திலேயே (1903) நூலில் கூறப்பட்ட சில இடங்கள் பற்றி அர்ச்சகர்களுக்குத் தெரியவில்லை என்று கோனார் எழுதியுள்ளார். இதன் முக்கியத்துவம் கருதியும் அழியாமல் பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கம் கருதியும் திருப்பணிமாலையுடன் அச்சிடப் படுகிறது.

‘திருமுக விலாசம்’

காப்பு

மருவுலவு சேமூர் வருநல் லயன்மேல்
திருமுக விலாசம்ஒன்று செப்ப - அருளின்
நலமிகுந்த கோகநகன் நாஅகலாது உற்ற
கலைமகளே நீயிதற்குக் காப்பு.

நூல்

1) சீர்பெற்ற நாகச் சிகரிவந்திக் கல்மீதில்
ஏர்பெற் றிடும்பாண்டி ஈசுரரும் - பேர்பெற்ற

2) நந்தீ சுரரும் நலந்தருபாண் டிச்சுனையும்
சுந்தரஞ்சே ரும்குமர சுவாமிஉறை - சந்ததமும்

3) சொற்குமர தீர்த்தம்அன்பர் தோத்திரம்செய் ஐவர்குகை
பொற்பிலகு காஞ்சி புரவழியாம் - நற்பிலத்து

4) வாரம் களிறு மகத்துவம்சேர் கல்தவளை
சேரும் சுனைஅதிக தீர்த்தமுமாம் - ஆரும்

5) துதிபுரியா றாம்சுனையும் சொல்வளஞ்சேர் கூனர்
கெதியெனவே வாழ்ந்த கிடையும் - நதிசேர்

6) வரும்முரு கேசர் வளர்பார்ப் பதியும்
திருநந்தி மாநாக தீர்த்தம் - கருதரிய

7) தாதுசெறி நாகதீர்த் தம்கிழக்கு வாயில்மதில்
கோதுஅகற்றும் கந்தர் கொடிக்கம்பம் - ஆதி

8) குமரீசர் குன்றீசர் கோகநகன் போற்ற
அமரும்அதி தேசீசர் ஆனோர் - அமரர்தொழும்

9) தாண்டவரும் பத்திரையும் சாரும்விலா சத்தருகில்
ஆண்டவிசு வேசர்விசா லாட்சியம்மன் - வேண்டும்

10) திருவாசி ஐங்கரனும் தேவிசத்த மாதர்
முருகார் அறுபத்து மூவர் - அரிய

11) இசையோதும் மூவர் இறைவர் நாகேசர்
திசைசேர் கலியுகமால் சேர - உசிதநறு

12) வாசமலர் மாது மகிமாது சூழ்ஆதி
கேசவமால் அன்பர்வினைக் கேடகற்றித் - தேசுதரு

13) நல்லீ சுரர்நந்தி நல்திருக்கூட் டத்திரளின்
சொல்இளையான் தும்பிமுகத் தோன்றந்தை - இல்அருளும்

14) பஞ்சலிங்க நாதர் பகர்பச் சிமவாசல்
மிஞ்சும்அருள் நாகம் விசுவேசர் - மஞ்சுகுழல்

15) சேரும்விசா லாட்சி தேவர்மகிழ் சம்பிலிங்கர்
ஓரிருவர் ஆன உபயலிங்கம் - நேரில்

16) அதிமதுர வாக்கால் அருந்தமிழ்ப்பா அன்பர்
நிதம்புனை யும்சகஸ்ர லிங்கம் - மதனமுறு

17) பாற்கடலுற் றுத்துப்ர பன்தனைவேட் டுங்கலங்கி
நோற்றதெளவை என்று நுவல்வாரும் - மேற்கங்கைத்

18) தண்முடிக்கும் புட்பம்அருள் சண்பகம் அநேகநாள்
எண்ணும் ருசிசேர் இலுப்பைமரம் - பண்ணிசைந்த

19) சத்ததா ளத்துடனே தாள்தூக்கி யேநடனம்
சித்தம் பரத்தில்அன்று செய்தசிவம் - குற்றமெலாம்

20) தீர்க்கும் புகழ்பிரம தீர்த்தம்எனும் உட்சுனையும்
பார்க்கும் அடியார் பவம்அகல - நீற்றைஅள்ளி

21) வில்லார் பொழில்சபையின் வித்தகா எனச்சூரம்
எல்லாம் அருந்தும்இட பேசுரனும் - சொல்லார

22) ஒங்கு துசக்கம்பம் உற்ற பலிபீடம்
பாங்கான அஷ்டதிக்குப் பாலகரும் - தூங்கல்இரு

23) நான்குமா நாகம்எட்டு நாள்தரும் ஓர்கமடம்
தாங்குவிமா னம்கவிழும் தாமரையும் - பாங்கு

24) செறியும் பலகணியும் சேர்துவார பாலர்
அறிவுதரு வேழமுகம் ஆனோன் - பொறிபரவு

25) கம்மைந்து சேரரவு கன்னிவிசு வேசுரனார்
அம்மைவிசா லாட்சியுயர் ஆதித்தன் - மென்மைதரும்

26) உள்ளம் களிக்க உயர்சிறுத்தொண் டன்மனையில்
பிள்ளைக் கறியுண்ட பெம்மானும் - தெள்ளுதமிழ்

27) சந்திரமல்லி கார்ச்சுனலிங் கேசர்பொரு சூர்பிளவாய்
வந்தமயில் வாகனனும் வாகான - சிந்தை

28) பிரியம் இருந்ததனால் பிஞ்ஞுகன்தாள் சேர்ந்த
பரிவுபெறும் துவார பாலர் - கருவகற்றும்

29) சித்தி விநாயகன்என் சென்ம வினையகற்றும்
வெற்றிபெறும் முத்தி விநாயகனும் - இத்தலத்தில்

30) கங்கைசுதன் ஆறும் கடம்பணிபு யன்மகவான்
மங்கைதெய்வ யானைகுற மாதிருவர் - பங்கில்

31) உறைகுமர சாமிஅருள் உற்றிடுலிங் கோற்பவமும்
இறைதட்சி ணாமூர்த்தி என்னும் - நிறையருள்சேர்

32) நாரி கணபதியும் நற்கமல மண்டபமும்
ஏரணியும் நிர்த்தநந்தி ஈசுரனும் - பேர்காஞ்சி

33) நன்னதியில் பூசைபுரி நாரிக்கு ஒருபாகம்
தென்நாக வெற்பில்அருள் தேசிகனும் - அந்நாளில்

34) தெண்டிரையில் நஞ்சையுண்டு தேர்மேல் பவனிவரும்
அண்டர் தொழஎழுந்த ஆண்டவனும் - கண்டுதொழுது

35) ஏற்றுசண் டேசன் எழில்பெற்ற கோபுரத்தில்
வீற்றிருக்கும் தொந்தி விநாயகனும் - மேற்றிசையில்

36) சுந்தரம்சேர் பால சுப்ரமண்ணி யக்கடவுள்
இந்திரதீர்த் தம்கருணை எய்துமே - வந்தனைசெய்

37) நம்ம கணபதிதீர்த் தம்பாவ நாசம்உல
கம்மதிக்கும் ஆதிசுர கண்டீசர் - இம்முடிகொள்

38) நல்லதம்பிக் காங்கேயன் நண்ணும்இளைப் பாறவிசை
புல்லுமண்ட பத்தைங்கைப் புத்தேளும் - நல்லசிவ

39) தீர்த்தநொச்சி ஐங்கரனும் செட்டிக்கவுண் டன்தூரன்
ஏத்தும் புழைக்கை இறையோனும் - கீர்த்திபெறு

40) கோட்டைவா சல்படியும் குகையும் கணபதியும்
வாட்டவா துற்ற வயிரவனும் - ஈட்டமிகு

41) தீர்த்தம் அபிஷேகம் செய்யும் சிவலிங்கம்
கார்த்திகே யன்சுனையெக் காலமுமே - சீர்த்திமிகு

42) மூங்கிலடித் தந்தி முகன்அறுப தாம்படிவேல்
தாங்கி நெளியைந் தலைநாகம் - காங்கயனாம்

43) சத்தியவான் மாராட் சதக்கவுண்டன் மண்டபத்தில்
அத்திமுகன் மஞ்ஞையுற்ற ஆறுமுகன் - சித்திபெறு

44) மாதேச லிங்கம் வருபிணியெ லாம்தீர்க்கும்
மாதர்மகிழ் காங்கேயர் மண்டபமும் - கோதிலாச்

45) செங்குந்தர் மண்டபத்தில் செயவீரர் ஒன்பதின்மர்
அங்குசபா சம்கொண்ட ஐங்கரனும் - இங்கிதம்சேர்

46) பேழைக்கல் ஐங்கரன்பேர் பெற்றதொண்ணூ றாம்படிக்கீழ்த்
தாழும் நெளியைந் தலைநாகம் - ஊழகற்றும்

47) கங்கை யமுனை கதித்த சரசுவதியாம்
துங்கமுறு மூன்றிச் சுயதீர்த்தம் - கங்கையருள்

48) நற்குமர வேள்பாதம் நாதர்அரிக்கு ஓர்சுதனாய்
உற்பவித்த வீரமுறு சாத்தன் - அற்புதமாய்ச்

49) சொன்னமருள் வீரே சுரன்மலையில் தென்முகமாய்
எந்நாளும் வாழ்பெருநந் தீசுரனும் - பொன்னான

50) வீர விநாயகனும் வேர்வைஅழற் கண்பிறந்த
பாரோர் புகழ்வீர பத்திரனும் - பேரான

51) மாதவத்தோர் நாளும் மகிழ்உபய மண்டபமும்
தீதகற்றும் ஆதிசைவ தேசிகர்செய் - சோதிமுதல்

52) மண்டபத்தின் தன்னருகில் வாழும் பசுபதியார்
பண்டான மூலப் பழம்பொருளும் - கண்டுதொழும்

53) சத்தகன்னி மார்கள்கீழ்த் தந்தி முகப்படியும்
குற்றம்அற்ற ஆலின் குறுமுனியும் - இத்தலத்தில்

54) வாணியர்கள் உண்டுசெய்த மண்டபத்தில் ஐங்கரனும்
சேணாடர் வந்துதுதி செய்யும்எழில் - வேணி

55) அழகியவி நாயகனும் ஆறுமுக வேலர்
மழைவிழித்தெய் வானைகுற மாதும் - அழகுமதி

56) சூடும் பிரான்உதவும் தொந்திவயிற் றுக்கரியும்
ஆடல்புரி வேம்படியில் ஐங்கரனும் - தோடுசெறி

57) சிந்துரத்தின் தன்னருகில் தேவேந்திர ஐங்கரனும்
தந்திநிரை கண்ட தனவசியர் - சுந்தரம்சேர்

58) மண்டபத்துக் குஞ்சரமும் மால்சீர் கருணீகர்
கண்ட எழில்அங் குசக்கையனும் - தண்டமிழ்க்கு

59) மாணிக்கம் தந்ததொண்டை மண்டலத்தோர் ஆம்பல்முகன்
ஆணிப்பொன் னார்முளசை யானைமுகன் - வேணிப்

60) பிரானை நிகர்சுப் பிரமணிய ஐங்கரனும்
அராவணி சதாசிவ ஐங்கரனும் - புராரியெனும்

61) நாககிரி ஐங்கரனும் நால்வேத ஐங்கரனும்
ஆகமர்த்த நாரீச ஐங்கரனும் - ஓகையுடன்

62) ஞானானு பூதியிசை நன்மார்க்கம் நான்கும்அருள்
சேனாப திக்கணப தித்தேவும் - யோக

63) கவரைக் கணபதியும் கற்றவர்கள் நெஞ்சத்து
அவம்அகற்றும் செங்குந்த ஆம்பல்முகன் - புவனிபுகழ்

64) நிர்த்த கணபதியும் நீள்தில்லை ஐங்கரனும்
அத்திமுகன் காரைக்காட்டு ஐங்கரனும் - சித்தம் அன்பாய்

65) ஆபத்துக் காத்தவரும் அன்பாய் நடுக்கூவ
மேவி வளர்கின்ற விநாயகனும் - பூவில்

66) வருவைத்திய ஐங்கரனும் மாதவத்தோர் போற்றும்
அரசடி விநாயகனும் அன்பாய் - குருவுலவு

67) பாங்கான ஐங்கரனும் பானல் மலர்செறியும்
கோங்காரும் அம்மன் குளத்தருகில் - ஓங்கார

68) மேமிகுந்த டாகினியும் ஏற்றரிய சாகினியும்
தாமிருவ ரும்ஏவல் தான்புரிவோர் - நேமியணி

69) நாரணியாம் அன்றுசிவ னாருடனே வாதுபுரி
ஆரணிந்த கோதை அழகியம்மன் - வீரம்

70) மிகுகாளி கூளி விலகாமல் நாளும்
சுகம்பெறவே போற்றித் துதிப்பார் - உகம்பலவே

71) தந்தசந்தைப் பேட்டை தனில்உறைந்த ஐங்கரனும்
அந்தமிகு புண்ணியதரு ஐங்கரனும் - நந்தா

72) வனத்தத்திக் குட்டையின்கீழ் வாழும் கரியும்
சினத்தெப்பத் தின்குளமும் சீராய்த் - தனம்உதவும்

73) செங்குந்தர் மண்டபத்தில் சேர்ந்த சுரிமுகனும்
தங்கும் எகினத் தருஅடியில் - இங்கிதம்சேர்

74) செல்ல விநாயகனும் செய்யவன்மீ கத்தில்உறை
நல்லகம்ஐந் துற்றுவளர் நாகமுமே - சொல்லரிய

75) கண்ணனூர் மாரி கதித்த கணபதியும்
தண்ணார் வயிரவன் சாவடியில் - எண்ணவளர்

76) வேழ முகன்மதுரை வீரன்பட் டத்தலைச்சி
மாழை இளையான் மதகசமும் - வாழ்பெரிய

77) தேரடிவி நாயகனும் தென்கைலை என்றுசொன்ன
பேர்கள்மிடி துன்பம் பிறவினை - தீர

78) அனுப்பும்அருள் மண்டபமும் ஆறுமுகன் நாளில்
கனத்தசுடர்த் தீபக்கற் கம்பம் - நினைத்த

79) படிமுடிக்கும் ஐங்கரனும் பாருலகை ஆளும்
வடிவார் தளகர்த்தர் மண்டபமும் - மடியவிடு

80) மூகை மதலை மொழிபுகலச் செய்அன்னத்
தியாகர்குல மண்டபத்துச் சிந்துரமும் - நாகமுயர்

81) பொற்கோ புரமும் புனிதஅன்பர் போற்றிசெய்யும்
வெற்றிமுக் குட்டு விநாயகனும் - கற்புமிகு

82) சத்தகன்னி ஞானம் தருதட்சி ணாமூர்த்தி
முத்தி பெறும்அறுபான் மூவர்களும் - இத்தலத்தில்

83) கங்கையருள் முக்கணனும் காரைக்கா லம்மையுடன்
மங்களம்சேர் நாயகனார் மண்டபமும் - துங்க

84) மிகுவெதிரி ஐங்கரனும் மிக்கபஞ்ச லிங்கம்
பகரரிய லிங்கோத் பவரும் - சகமதனைச்

85) சிட்டிக்கும் நான்முகனைத் தேவர்கள்எல் லாம்அறியக்
குட்டிச் சிறைசெய் குருபரனும் - சட்டமிடு

86) துற்கை நிர்த்த மண்டபமும் சுகந்த விநாயகனும்
வெற்பரயன் தந்தருளும் மெல்லியலாம் - கற்புமிகு

87) மாது சுகந்தமிகு வல்லிசொக்கர் பள்ளியறை
ஆதிமீ னாட்சியெனும் அம்பிகையும் - தாதுசெறி

88) வான நயினீசர் வரமுதவு காசிலிங்கம்
தோனணுமா தித்தன் சிகரியடி - ஆனைமுகன்

89) நந்திகூ பத்தின் நடுவிலுறை வேழமுகன்
நந்திபலி பீடமுயர் நன்மதிலும் - சுந்தரம்சேர்

90) நாரி கணபதியும் நாதரடி யர்ச்சிக்கப்
பாரில்வரு துவார பாலகரும் - மேருச்

91) சிலைவளைத்து முப்புரம்தீ சேர நகைசெய்து
கொலைபுரிந்த வேடனையாட் கொண்டு - கலையரவு

92) பாணிமுடி சூட்டும் பரமர்கயி லாயலிங்கர்
சேணுலகோர் போற்றுசந்திர சேகரரும் - நாணவட

93) பத்திரைமுன் நிர்த்தமிடு பதசபா பதியார்
சத்திசிவ காமியெனும் தற்பரையும் - சுத்தமனச்

94) சண்டே சுரனும் தழைத்த வயிரவனும்
வண்டமிழ்சேர் நான்குதூண மண்டபமும் - பண்டுநாள்

95) வந்தகே தாருடையர் மண்டபத்தில் ஐங்கரனும்
இந்திரதரு மாந்தைக்கு இறைவர்உறை - சுந்தரம்சேர்

96) மண்டபத்தில் ஐங்கரனும் வல்லமைபா கக்கடவுள்
அண்டர் திருவட்ட ஐங்கரனும் - பண்டொருநாள்

97) எத்திசையும் போர்விளங்க வேஅக் கினிமூழ்கிச்
சத்தியென வந்தநல்ல தங்கும்மன் - சுத்தமயி

98) லாண்டிகுகை ஐங்கரனும் அண்ணல்வில்வ ஐங்கரனும்
பாண்டவர்கள் உற்றபச்சைப் பாழியுமே - நீண்டபொருள்

99) ஓம்பாழி தன்னுடனே உரக கிரியடியார்
தேம்பாயும் தாமரைகள் சேர்தடமும் - பூம்பொழில்கள்

100) சூழ்அரவக் குன்றுதனைச் சுற்றுமுள துர்க்கைமின்னார்
வாழுங் கடலாத்தி மாதருவின் - நீழலுயர்

101) வாலறையில் நாளும் வளர்ந்த சடாமுனியும்
தாலமகிழ் தானத்தார் தன்குளமும் - சேலுலவும்

102) நற்பெரியக் காள்குளமும் நாவலர்கள் போற்றிசெய்யும்
பற்குணன்வாழ் சித்தாடு பாழியுமே - சற்புகழாய்ச்

103) சந்ததம்வாழ் கந்தப்பன் தந்திமுக ஐங்கரனும்
கந்தரம்சேர் நாகமலை காவலராய் - வந்தவர்கள்

104) சிந்துரமு கன்வெற்றி சேரசுப தித்துரையும்
செந்தமிழோ துங்கசப தித்துரையும் - இந்திரனுக்கு

105) ஒப்பான வீமணனும் உயர்ஒப ணன்கீர்த்தி
எப்போதும் நாட்டும் இரங்கணனும் - தப்பாத

106) கற்புமிகு முத்தம்மன் காசினியெ லாம்போற்று
பற்பினிமா தான பவளம்மன் - பொற்பினிய

107) வாலைக் குயில்எனவே வந்தஒ பம்மனுடன்
தாலக் கறுப்பணனும் தான்தயவாய் - கோலமால்

108) மெச்சுமரு கன்பாரி வேட்டைமண்ட பத்தில்உறை
அச்சமிலா நற்பிரசன்ன ஐங்கரனும் - உச்சிதம்சேர்

109) வேட்டைப்பா றைக்கூ விளத்தருக்கீழ் வாழ்ந்தஒற்றைக்
கோட்டைப் படைத்தவெள்ளைக் குஞ்சரமும் - ஈட்டமிகு

110) முத்துநாய்க் கன்கூவ முன்னம்உறை மண்டபத்தில்
வத்துவென நின்றமத வாரணமும் - சித்துபெறு

111) மிஞ்சு தபோதனர்கள் மெய்க்குளிகை யுற்றிருக்கும்
பஞ்சவர்ன மான பழங்கூவம் - கஞ்சமலர்

112) சீராய் உறைபெரிய தெப்பக் குளத்தருகில்
காரானை மாமுகனைக் கைதொழுது - தார்சோலை

113) உற்றபுகழ் ராசைபுரத்து ஓங்குமுத்துக் குஞ்சரமும்
சொற்றிகழ் நல்லம்மன் துரைராசர் - நற்பதமும்

114) கண்ணனூர் மாரி கமலபத மும்போற்றும்
புண்ணியனே ராசன்அருள் புத்திரனே - பண்ணிசைந்த

115) நாவலருக்கு அன்றுஉரக நன்மணியை யேகொடுத்த
தேவதரு வாய்வந்த சீமானே - பூவுலகில்

116) சேமூர் தலசைவரு தீரா கனயோகா
பூமாது வாழும்நசை யாபுரிவாழ் - கோவேமுன்

117) அந்நாளில் கம்பர்க்கு அடிமைமுறி யேகொடுத்த
மன்னா நல்லய்ய மகிபாலா - பொன்னான

118) நீலி பழிதவிர்த்து நித்தருண அன்னம்அருள்
மாலே; நல்லய்ய மதியூகா - சூலி

119) முதுகில் சுடுசோறு முன்னாளில் தந்த
நதிகுலத்தில் வந்துதித்த நல்லயனே - மதிசேர்

120) புகழ்விளங்கு ராசை புரத்தில்ஒரு கூபம்
மகிமைபெறு நந்தா வனமும் - சுகமளிக்கும்

121) தண்டலைக ளும்வில்லைச் சாவடியும் முன்செய்த
மண்டலிகா நல்லய்ய மன்னவனே - கொண்டல்என

122) அந்தணர்க்கும் சங்கமர்க்கும் ஆதுலர்யா வர்க்குமனம்
தந்தருள் நல்லய்ய தயாபரனே - சந்ததமும்

123) இந்தத்தெய் வங்கள்எல்லாம் இன்புறவே அன்புசெய்து
வந்துற்று உனைக்காக்க வையகத்தில் - முந்து

124) பிறையா யிரம்தொழுது பேருலகில் செல்வம்
நிறையாய்த் திருவருளும் நீங்காது - இறையாக

125) ஊழி நெடுங்காலம் உற்றுலகெ லாம்துதிக்க
வாழியென வாழ்வாய் மகிழ்ந்து.

குறிப்பு:

(1) பெரிய ஓங்காளியம்மனின் ஆக்ரோஷத்தைக் குறைப்பதற்காக 'சினம் தீர்த்த விநாயகர்' எழுந்தருள்விக்கப்பட்டுள்ளார்.

(2) பெரியதேர் அருகில் உள்ள யோகியர் மடவளாகத்தில் சுரகண்டேசுரர், விநாயகர், முருகன் எழுந்தருள்விக்கப் பட்டுள்ளனர்.

★

பாடல் முதற்குறிப்பு அகராதி [எண் – பாடல் எண்]

அடலுறு கோதை 70
அண்டர்தொழ வரு 173
அண்டர் தொழும் காளத்தி 265
அண்டர் தொழும் பணிமலை 11
அண்டர் புகழ்ந்தோங்கு 398
அணிமலைத் தருமம் 321
அத்தர் திருச்செங்கோடு 264
அத்திமுகன் கோயில் 317
அந்தணர் பரவும் 81
அம்புவி புரக்கவரு 212
அம்புவி புரந்த கோ 139
அம்புவியெண சோபகிருது 155
அம்பொன் தேர்ஏறி 75
அர்த்தபாகத் திருநாள் 309
அர்த்தநாரீசர்க்கு 404
அர்த்தநாரீசர் தம்முன் 405
அரவகிரி அடிவாரத்து 332
அரவகிரி அர்த்தநாரீசர் 275
அரவகிரி அர்த்தநாரீசராலய 306
அரவகிரி அறுமுகவர் 413
அரவகிரி ஆலயத்து 296
அரவகிரி ஆலயம் 364
அரவகிரி ஈசருக்கு 250
அரவகிரியீசர் வடிவேலவர் 205
அரவகிரி ஈசருக்கு அழுது 243
அரவகிரி ஈசருக்கு அழுதுபடி 281
அரவகிரிக்கு ஏழுகரை 239

அரவமாமலைக்கே 82
அரவ வெற்பின் மேல் 399
அரவாசலத்தெழு 366
அரவாசலேசர் 113
அருட்பணி ஆன 7
அருந்தவர் பூசை 71
அருள்திரு அட்டயானை 86
அலைமேவு சடையர் 234
அவ்வந்தியம் போல் 347
அவனிமிசை மருவிய 396
அற்கனுடன் சந்திரனும் 412
அன்புநெடும் சேடகிரி 346
அன்புநெறி பெறுவீர 363
அனவரதம் அரவகிரி 248
அனுதினமும் அபிடேக 310
அனுதினமும் அரவகிரி 395
ஆகமம்சேர் மோரூர் 284
ஆகமிகர் செங்கோட்டில் 406
ஆடரவகிரி அர்த்தநாரீசர் 302
ஆடரவகிரியின் அடிவாரம் 338
ஆடரவகிரி வேலர் 244
ஆதரவு பெறுசித்திரா 277
ஆதி காலத்திலே 356
ஆரணம் திகழ் 337
ஆலயத்து வாழை 160
ஆலிங்க நாகமலை 62
ஆவின்நெய்த் தீபமும் 72
ஆழிவெற்பும் அகிலமும் 2
ஆறுமுகப் பெருமாள் 384

ஆன்பொருந்துநன்	32
ஆனந்தக் கண்ணியின்	187
இந்தயுகம் நாலு	38
இயல்வாகுவே ரத்ந	56
இல்லாள் உழைத்துண்பர்	393
இன்சொல் சேரும் திரு	298
இன்னசகம் பதி	373
உத்தமர் பரவு	349
உத்தம வீரவாகின்	351
உம்பர்பதி அரசனைய	419
ஊமைதனைப் பேசுவித்தான்	292
ஏகமாம் அரவகிரி	278
ஏடளக்கும் தொடை	30
ஏரணி மதனன் கச்சி	103
ஏரணியுஞ் சேரகிரி	19
ஏலமுறும் கந்தம்	125
ஏவிளம்பி வச்சரத்தே	267
ஒண்டொடிச் செந்திரு	238
ஒத்துவரு கண்ட கரை	34
கங்கை சூடும் கயிலாய	110
கட்செவிக் கிரீசருக்கு	221
கட்டிரதக் கீழ்பால்	318
கண்டான் திருக்குளத்தை	91
கண்டிகை நான்முனி	383
கம்பபுரம் என்றொரு	58
கரிபரி இடபம்	95
கருத்தனார் கோதை	98
கலைமேவு தமிழ்	150
கறைசை மறையோர்	297

கன்னல் செறிகோதை	286
கனமிகு விசுவநாதன்	64
கனமுறு விரோதி	137
காத்தலே புரிபணி	190
காரணிக நாகமலை	304
காரணிகமாக நிலை	280
காரணிகமாக வரு	176
காரணிகமான வளவன்	43
காரணிகர் கோதைக் கணபதி	326
காரணிகர் கோதைக் கயிலாய	77
கிளரொளிக் கோதை	388
கீர்த்திசேர் முத்துவீரன்	102
கீலகம் தை இருபத்தாறு	241
குஞ்சிமுடிச் சிகைமகர	13
குணமுள கெம்பராசன்	206
குருக்கோடு நவமணியும்	22
குளமருவு பூசையணி	271
கொங்கரங்கம் ஆகிய	194
கொங்கில் அரவாசல	117
கொஞ்சிட வீதி வருகுகன்	315
கொப்பரை ஒன்றுரண்டு	411
கோதை அழகியம்மை	354
கோதைக் கிரியில்	339
கோதை யரனுக்கு	218
கோதை வளம்பதி வாழும்	425
சகமேவு விசுவநாத	126
சகலாகமப் பொருள்	382
சத்த மதாவும்	353
சந்ததம் பணிமலை	73

சந்ததமும் அரவகிரி 249
சந்ததமும் உமைபாகர் 397
சந்தியா தீபம் சதுரங்கம் 268
சலமேவு நாரண 105
சற்பசயிலத் தடவரை 344
சனமிகு தீர்த்தராயன் 94
சாதாரணத் திங்கள் 165
சாதிநாயகன் எழுகரை 209
சாளுவராயன் கீர்த்தி 52
சாற்றிய வேதப் பொருளார் 380
சிக்கதேவரசு மேவ 201
சித்தர் மகிழும் சருவதாரி 69
சித்திரவேலர் சிவாம்பிகை 372
சிந்தை தயவாகியே 402
சிலைவாழும் கரத்து அரனார் 33
சினமிகு துலுக்கர் 48
சீர்பயிலும் அரவகிரி 5
சீர்புனை பிலவங்க 85
சீர்பெறு சிக்கதேவ 193
சீர்பெறு மதுரை வீரன் 67
சீர்பொருந்திய செங்கோடை 220
சீர்மருவு கலியுக 224
சீர்மருவு நாககிரி 362
சீர்மேவு கலியுக 152
சீர்மேவு கலியுக 183
சீர்மேவு கலியுக 222
சீர்மேவு கலியுக 263
சீர்மேவு பிலவ 147
சீர் வாழ்க முனி வாழ்க 17

சீரணியும் செங்கோட்டில் 231
சீரணியும் செங்கோட்டின் 202
சீரணியும் நாரி கணபதி 14
சீரணியும் மேடமாத 245
சீரார் சகாத்தத்தில் 282
சீரார் சகாப்தத்தில் ஆயிரம் 59
சீராரும் கோதை 131
சீருலவு கலியுக 258
சீருலவு கலியுகம் உதித்து 41
சீருலவு மடதர்மம் 305
சீலம்பெரிய பணிமலை 253
சீலமுடன் சத்திரமும் 203
சீறும் பணிமலையை 340
சுந்தர விசுவநாதன் 65
செங்கமலத் தடங்கண் 28
செங்கைமுகில் ஆன கொடை 161
செஞ்சொல்சேர் அர்த்தநாரீச 230
செஞ்சொல்சேர் அரவகிரி 172
செஞ்சொல்சேர் முத்துவீரன் 101
செஞ்சொல்புனை செம்பியன் 44
செஞ்சொல் வருக்கக்கோவை 170
செஞ்சொற் பணிவெற்பார் 251
செந்தமிழ்சேர் குமரமங்கை 54
செந்தமிழ்மாலை மார்பன் 140
செந்திரு வீரராயன் 50
செந்திருவும் கலைமாது 20
செப்பும் சகாத்தமாயிரம் 237
செப்பும் சகாத்தத்தில் 229
செப்பும் சகாத்தத்தில் 225

செம்பொள் பணியசல	423
செம்மைபெறு கலியுக	116
செம்மையுமை பாகர்	184
செயமுதல் விகாரியந்தம்	80
செல்லன் இளையான்	329
சேகர வேதநன்னாயகர்	374
சேடகிரியாலயத்து	348
சைவசிகாமணி மறை	231
சைவசேகரன் செங்கோடை	223
சைவசேகரன் தாரமங்கை	341
சோதிபுனை சேடகிரி	47
சோபன சகாத்தமோ	273
தண்டமிழ் பெறும் கோதை	119
தண்டமிழ் முத்துவீரன்	93
தண்டாயுதமும் உதரமும்	186
தபதியரைக் கொடு	379
தயவொடு ராக்கபூபன்	130
தருநாடனாகிய சம்போசி	216
தருவுலவு குமரபுரி	394
தலமருவு கோதையுமை	256
தலையான தேசய நாள்	200
தவக்குறை முற்று	392
தவநாகமலை வலமுற	385
தவமிகு சகாத்தம்	80
தவமிகும் சவுமியாதி	164
தன்மண் டலம்எனும்	180
தாண்டவ பத்திரை	367
தாதுவற்சரம் முன் இன்பம்	122
தாரணி பரவும் கோதை	78

தாரணி புரக்கவரு	198
தாரணி புரக்கவரு சம்போசி	214
தாரணியெண் கோதை	156
தாலிபொட்டுங் காறை	401
தாவும் பணியசலத் தாழ்வரை	177
திண்டிறல்பெறும் சிக்கதேவ	181
திண்டிறல் வீரன் சிக்கதேவ	179
திரந்தரு சர்வசித்து	136
திரம்பெறு சிக்கதேவ	192
திரமருவு கலியுக	149
திரமேவு கோதைஉமை	276
திருக்குளம் நந்தவானம்	89
திருந்திய துன்முகி	143
திருப்பணி மாலை தன்னை	9
திருமடப்பள்ளி மலைமீது	316
திருமருவு அரவகிரி	236
திருமருவு கலியுக	422
திருமருவு கலியுக	226
திருமருவு கலியுக	269
திருமருவு கலியுக	293
திருமேவும் அரவகிரி	189
திருவாழ்க கலை வாழ்க	16
திறமிகு சகாப்தம்	66
திறமிகு விசுவநாத	128
திறமேவு விசுவநாத	114
தினம் அரவகிரியாரை	257
தினமும் அமுதுபடியாறு	308
தீதறு தமிழ்சேர் கோதை	10
துங்கக் குரோதிதனில்	259

துங்கமிகு சேடகிரி 60
தென்பருத்திப்பள்ளி 307
தென்மகிழ் கோதை மேவும் 320
தென்மழையே பொழி 21
தென்முளைசைக் கண்ணார் 301
தென்னணி விசுவநாத 97
தென்னவன் எனும் 42
தென்னிலங்கிய பணிமலை 319
தென்னுயர் அனங்கன் 138
தென்னுயர் சதாசிவ 76
தென்னுலவு காராளன் 325
தென்னுலவு குடையால 204
தென்னுலவு நாககிரி 327
தென்னுலவு மதுரை 115
தேங்குபுகழ் மோரூர் 289
தேசயதுரை தாபித்த 209
தேபுரத்தண் கமலமலர் 153
தேமேவு கச்சிவரு 112
தேமேவு கலியுக 175
தேமேவு அரவகிரி 262
தோகைஒருபால் இலகு 291
நங்கைபால் வாழும் 195
நடிக்கும் பதத்தர்த்த 196
நனிய கயிலாயநாதர் 154
நத்துப் பரவும் வயல் 299
நதியருகு வேணியணி 414
நந்தியா தூப தீபம் 215
நந்துலா வாவி சூழும் 323
நல்லாளிடத்தர் 390

நலமருவு கலியுக 148
நளவருஷம் இளசை 400
நன்றிசேர் கோதை 322
நன்மைபெறு கலியுக 240
நன்னிலம் மதிக்கவரு 107
நாககிரிக்கு உகந்தபடி 360
நாககிரிக்கு ஏழுகரை 239
நாககிரித் தேரதனில் 407
நாககிரி நாகீச நாதர் 283
நாககிரி வீரன்மலை 324
நாகசுர கானனருள் 361
நாகபடம் கைலாய 358
நாகமலைக் கோயிலுக்கு 328
நாகமலைக்கே வந்து 133
நாகமுகன் கோயில் 285
நாகமுகன் தன்னைவலம் 357
நாரணப்பன் முன்னாள் 120
நானில மதித்த பணிமலை 336
நிலமுள்ள மட்டும் புரக்கின்ற 210
பங்கயனான சேனாபதி 261
படஅரவ கிரிமீதில் 365
படிக்கின்ப மன்னவன் மரி 294
படிபுகழ் விசய ஆண்டில் 352
பணிகிரி மேவிடு பாண்டீசர் 376
பணிமலையில் வேலர் 242
பத்திசேர் வெங்கடாத்ரி 129
பத்திரை சாமுண்டி 178
பராபவம் வென்றிமாலை 163
பரிமளவல்லி பாதபாடகம் 217

பருவதம் அனையதேவ	197
பலமிகு விசுவாவசு	157
பலமேவு கலியுகம்	315
பவளம்செறி சுடகம்	279
பற்று சார்வரியாம் ஆதி	83
பன்னகம் இரண்டும்	15
பன்னிரண்டு ஊரும்	55
பன்னுதமிழ்ச் சேனாபதி	342
பன்னு தமிழோர் புகழ்	132
பன்னும் தமிழ்சேர்	254
பன்னுமறை தெரிகோதை	255
பாட்டிமையாம் கோதை	74
பார்புனை முத்துவீரன்	144
பார்மேவு கோதை	99
பாருலகெண் கோதை	345
பானுலாவிய பணிமலை	312
புண்டரிகம் செறிகோதை	424
புண்டரிகன் திருமாலும்	4
புயல்மேவு நாககிரி	290
புவிபுகழ் அரவமேரு	191
பூகமலைத்திடு சோலை	24
புமகிழும் மோரூர்	287
பூமருவு கலியுக	421
பூமருவு வடகயிலை	36
பூமேவு கலியுக	233
பூமேவு கோதை	35
பூமேவும் ஒருகோடு	1
பூமேவு வேதியன்	46
பூரகமும் கும்பகமும்	25

பூவுலகில் மன்னவர் 49
பெரும்பரிதாபி ஆதி 87
பெருமாள் அடிதொழ 371
பெற்ற தாய் தந்தை 6
பேட்டையிற் காணி 417
பேருலகெண் மோரூர் 288
பேறுபெறு முதல்யுகம் 37
பேறுறு கோதை நன் 387
பைந்தமிழ்த் தொண்டைநாடன் 168
பொங்கரவகிரி மீது தேவ 12
பொங்கரவ கிரயர்த்த 213
பொங்கிய செல்வம்தரு 260
பொன்கோடு மணிக்கோடு 23
பொன்நாடு புகழ்நாடு 18
பொன்நூறும் தந்துபுகழ் 109
பொன்னித்துறை முளசை 381
மங்கள சகாத்தத்தில் 334
மங்கள சகாத்தமோராயிர 270
மங்கைபத்ர காளியம்மை 359
மங்கைவரு கட்டிரத 330
மடமும் மலையடி மண்டபம் 378
மண்டலம் தொழு தேவராசய 185
மண்டலம் தொழும் தேவராசயன் 247
மண்டலம் மகிழ் விகாரி 145
மதிபொருந்தும் செஞ்சடை 408
மதுரைவாழ் முத்துவீரன் 79
மருவூரும் கோதை 386
மலைதனைக் காக்குகின்ற 410
மலையினில் பிலவழி 39

மலைவல்லி பங்கர்க்கும் 369
மன்னிய கிருஷ்ணபூபன் 84
மன்னிய மானங்காத்தான் 51
மன்னிவரு சுபகிருது 151
மன்னு காங்கயப் பல்லவராய 313
மன்னு சுக்கில வருடம் 108
மன்னுபுகழ்க் கோதை 134
மன்னுபுகழ்சேர் சுப்ரமண்ய 45
மனமேவு நாககிரி 182
மனமேவு நாகமலை 416
மரகபதி இந்திரனும் 40
மாகனம் பெற்ற மரிராச 227
மாசித் திருநாளின் 127
மாசி விழாப் பூச விழா 300
மாதுசேர் புயன் 235
மாதுலவு கலியுக 188
மாழலவும் தென்னனுப்பு 124
மாதுலாவு திருநாக 111
மாபத்தர் ஏத்திட வைகாசி 355
மாபத்தர் போற்றிய 415
மாலதான ராதாபுரத்துடன் 314
மாலான கோதை 100
மாலைமடமும் மலைவாய் 303
மாலோன் உமையை 333
மின்னு பொன்பணி வேலர் 61
மீட்டான பணிமலை 162
மீனம் முதல் மிதுனம் 246
முத்திருக்கும் நகைநகையே 29
முத்துவீரப்ப ராயன் மொழியும் 96

முதிரு மாமறைக் கோதை	232
முன்னம் ஒரு பகீரதன்	335
முன்னால் அமர்கடவுள்	389
முன்னாளில் பேட்டை	418
முன்னுள கிருஷ்ணராயன்	121
மூவருக்கும் அகத்திய மாமுனி	266
மூவுலகும் ஓசைதரு சேகண்டி	272
மெய்வியாப சமயம்	3
யோகாதிபர் தொழுநாகீசர்	228
வடம்பயிலும் உரம் உரமே	31
வடிவுறு சரணர் கோதை	169
வடிவுறும் ஆனைகொந்தி	53
வண்டாடும் காவின்மலை	27
வண்மைபெறும் கலியுக	57
வந்தியர் பாத சரணத்தில்	409
வரமருவு சாறுவரி	146
வருடமதில் துன்மதி	403
வாங்குடனே சூரிமடலும்	208
வாசமாம் செயமுன்னாக	142
வாசமும் நீறும் ஏறும்	8
வாசவன் ஒப்பனையானோன்	219
வாசவன் முத்துவீரன் மந்திரி	88
வானந்தம் என்னும் ஒரு	343
வானளக்கும் கோபுரம்	26
வானோர் பணியும் உமைபாகன்	174
வானோர் மகிழும் தமிழ்	368
விசுவாவசு இடபத் திங்கள்	158
விந்தை பெறும் செங்கோட்டில்	295
விய வருடம் முதலென விகாரி	68

விருப்புடன் கோதையார் 141
வில்வ விநாயகர் முன் 350
விளங்கு புகழ்சேர் அரவகிரி 252
விற்பன விகாரியாண்டில் 92
வீட்டினைவிற் றெழில்வெள்ளி 377
வீறார் சகாத்தம் ஆயிரம் 104
வெள்ளியிலே நாரி விநாயகர்க்கு 171
வெற்றிசேர் குருவப்பையன் 123
வெற்றிசேர் விசுவநாத 420
வெற்றிசேர் விரோதிகிருது 166
வெற்றிதரு கலியுக 199
வெற்றி நரபதிராயர் 63
வெற்றிபுனை கலியுக 274
வெற்றிபுனை விய 135
வேதம்மலி கோதை 118
வேதியர் மகிழ்ந்து போற்றும் 167
வேயாரும் தோளி 391
வேலவர் நின்ற விமானம் 370
வேலவன் தேர்க்கும் விநாயகன் 159
வேலனுக்குத் தென்முளசை 106
வேலைசூழ் பணிமாமலை 311

★ ★ ★

திருச்செங்கோட்டு இலக்கியங்கள்

வ.எ.	நூல் பெயர்	ஆசிரியர் பெயர்
1.	திருச்செங்கோட்டுத் தெய்வப் பாமாலை	தண்டபாணி சுவாமிகள்
2.	அர்த்தநாரீசுவரர் குறவஞ்சி	சென்றாயன்
3.	செங்கோட்டுவேலர் ஈரிசைக் காதல்	பொன்னுச் செல்லைய பாரதி
4.	திருச்செங்கோட்டுக் குறவஞ்சி	படிக்காசுப் புலவர்
5.	அர்த்தநாரீசுவரர் மாலை	குழந்தையானந்த தேசிகர்
6.	அர்த்தநாரீசுவரர் சந்திர சேகரமாலை	பிள்ளைப்பெருமாள் கவிராயர்
7.	திருச்செங்கோட்டுக் குமாரர் கருணாகர மாலை	
8.	திருச்செங்கோட்டு அகவல்	
9.	அர்த்தநாரீசுவரர் முளைக் கொட்டுப் பாட்டு	கு.விசாகப் பெருமாள் முதலியார்
10.	அர்த்தநாரீசுவரர் கும்மி	கு.விசாகப் பெருமாள் முதலியார்
11.	திருச்செங்கோட்டுக் கலம்பகம்	சேலம் சுந்தர முதலியார்
12.	திருச்செங்கோட்டு மான்மியம்	தி.அ.முத்துசாமிக் கோனார்
13.	பணிமலைக் காவலர் அபிஷேகமாலை	வீமண்ண கவிராயர்
14.	திருமுக விலாசம்	வீமண்ண கவிராயர்
15.	திருச்செங்கோட்டுத் திருப்பணி மாலை	சதாசிவ பண்டிதர்
16.	கேதாரவிரதம்	பிருங்கி மகரிஷி
17.	அர்த்தநாரீசுவரர் மும்மணிக் கோவை	தி.அ.முத்துசாமிக் கோனார்
18.	நாரி கணபதி ஒருபா ஒருபஃது	தி.அ.முத்துசாமிக் கோனார்
19.	செங்கோட்டுக் குமரர் இரட்டைமணி மாலை	
20.	பாகம்பிரியா அம்மன் ஊஞ்சல்	சிற்றம்பலக் கவிராயர்

21. திருச்செங்கோட்டுப் புராணம்	வீரகவிராச பண்டிதர்
22. திருச்செங்கோட்டு மாலை	சிற்றம்பலக் கவிராயர்
23. அர்த்தநாரீசுவரர் பதிகம்	சரவணப்பெருமாள் கவிராயர்
24. திருச்செங்கோட்டு முருகன் அருள் வேட்டல்	
25. திருச்செங்குன்றூர் மாலை	
26. திருச்செங்கோட்டுச் சதகம்	
27. திருச்செங்கோட்டு ஊசல்	
28. செங்கோட்டு வேலவர் பஞ்சாமிர்தம்	தி.அ.முத்துசாமிக் கோனார்
29. அர்த்த சிவாம்பிகை நவகம்	தி.அ.முத்துசாமிக் கோனார்
30. திருக்கொடிமாடச் செங்குன்றூர் திருப்பதிகங்கள்	ஆர்.வேலாயுத ஓதுவார்
31. திருச்செங்கோட்டுப் பிள்ளைத்தமிழ்	
32. திருச்செங்கோட்டுக் கதம்பம்	
33. வருகைப் பதிகமும் உமைபாகப் பதிகமும்	படிக்காசுப் புலவர்
34. அர்த்தநாரீசுவரர் சுப்ரபாதம்	கா.அ.ராமசாமி சாஸ்திரி
35. திருச்செங்கோட்டுத் தோத்திர மஞ்சரி	வ.சு.செங்கல்வராய பிள்ளை
36. திருச்செங்கோட்டு வேலவர் திருப்பள்ளி எழுச்சி	வே.அரங்கசாமி
37. செங்கோட்டு வேலர் தேவ பாணித் தாலாட்டு	செங்கோட்டுச் சித்தன் தி.மு.அருத்தநாரி
38. செங்கோட்டுத் தேன்	தி.மு.அருத்தநாரி
39. அர்த்தநாரீசுவரர் சகஸ்ர நாமாவளி	
40. திருச்செங்கோடு - திருவேரகம் கட்டுரை	வே.ரா.தெய்வசிகாமணி கவுண்டர்
41. திருச்செங்கோட்டு வரலாற்றுச் சுருக்கம்	ஏ.சீரங்கமுதலியார்
42. ஆடும் பரிவேல் அணிசேவல் விருத்தங்கள்	எஸ்.வி.சுப்பிரமணியம்

43. விசாகப் பெருவிழா மலர்	வி.சோமசுந்தரம்
44. அர்த்தநாரீசுவரர் மருத்துவக் கும்மி	டி.எம்.திருமலைசாமிதாஸ்
45. செங்கோட்டுப் பள்ளு	பொன்னுச் செல்லைய
46. திருச்செங்கோட்டுத் திருக்கோயில் வரலாறு	பா.வேங்கடராமன் பாரதி
47. திருச்செங்கோட்டு ஆய்வுக் களஞ்சியம்	கொடுமுடி சண்முகன்
48. திருச்செங்கோட்டுத் தல வரலாறு	புலவர் நாராயணசாமி நாயுடு
49. மாதொரு பாகனார் பதிற்றுப்பத்தந்தாதி	புலவர் மா.கணபதி
50. திருச்செங்கோட்டுப் பெருமானார் புகழ்த் திரட்டு	புலவர் மா.கணபதி
51. திருச்செங்கோட்டுப் பக்தி இலக்கியங்கள் - ஆய்வு	மைதிலி
52. கைலாசநாதர்-சுகுந்த குந்தளாம்பிகை திருவருளிசை	நிமிடகவி நாஞ்சில் தேசி
53. திருச்செங்கோடு அர்த்தநாரீசர் திருப்பதிகம்	பெ.கு.வரதராசன்
54. திருச்செங்கோடு இலக்கிய வரலாறு பண்பாட்டுப் பார்வை	பெ.அர்த்தநாரீசுவரன்
55. அர்த்தநாரீசுவரர் அஸ்டகம்	உபமன்யு முனிவர்
56. திருச்செங்கோட்டுக் குறவஞ்சி	பூங்கோதை

திருமுருகாற்றுப்படை, சிலப்பதிகாரம், திருஞானசம்பந்தர் தேவாரம், திருப்புகழ், கந்தரலங்காரம், கந்தர் அனுபூதி, 11ஆம் திருமுறை (கபிலதேவ நாயனார்),பெரியபுராணம், கொங்கு மண்டல சதகம் (கார்மேகக் கவிஞர்), கொங்கு நாடு (தி.அ.முத்துசாமிக் கோனார் 1933) போன்ற பல்வேறு வரலாறு, சமய இலக்கியங்களிலும் திருச்செங்கோடு சிறப்பிக்கப்படுகிறது. பல தனிப்பாடல்களும் உள்ளன.

திருச்செங்கோட்டுக் கல்வெட்டுகள் 1905, 1915, 1960, 1961 ஆம் ஆண்டுகளில் 42 படி எடுக்கப்பட்டன. தஞ்சை, தமிழ்ப் பல்கலைக் கழகக் கல்வெட்டு, தொல்லியல் துறை சார்பில் வெளியிடப்பட்ட ''நாமக்கல், சேலம் மாவட்டக் கல்வெட்டுகள்'' என்னும் நூலில் 38 கல்வெட்டுகள் பதிப்பிக்கப்பட்டுள்ளன.

★★★

43. விசாகப் பெருவிழா மலர்	வி.சோமசுந்தரம்
44. அர்த்தநாரீசுவரர் மருத்துவக் கும்மி	டி.எம்.திருமலைசாமிதாஸ்
45. செங்கோட்டுப் பள்ளு	பொன்னுச் செல்லைய
46. திருச்செங்கோட்டுத் திருக்கோயில் வரலாறு	பா.வேங்கடராமன் பாரதி
47. திருச்செங்கோட்டு ஆய்வுக் களஞ்சியம்	கொடுமுடி சண்முகன்
48. திருச்செங்கோட்டுத் தல வரலாறு	புலவர் நாராயணசாமி நாயுடு
49. மாதொரு பாகனார் பதிற்றுப்பத்தந்தாதி	புலவர் மா.கணபதி
50. திருச்செங்கோட்டுப் பெருமானார் புகழ்த் திரட்டு	புலவர் மா.கணபதி
51. திருச்செங்கோட்டுப் பக்தி இலக்கியங்கள் - ஆய்வு	மைதிலி
52. கைலாசநாதர்-சுகுந்த குந்தளாம்பிகை திருவருளிசை	நிமிடகவி நாஞ்சில் தேசி
53. திருச்செங்கோடு அர்த்தநாரீசர் திருப்பதிகம்	பெ.கு.வரதராசன்
54. திருச்செங்கோடு இலக்கிய வரலாறு பண்பாட்டுப் பார்வை	பெ.அர்த்தநாரீசுவரன்
55. அர்த்தநாரீசுவரர் அஸ்டகம்	உபமன்யு முனிவர்
56. திருச்செங்கோட்டுக் குறவஞ்சி	பூங்கோதை

திருமுருகாற்றுப்படை, சிலப்பதிகாரம், திருஞானசம்பந்தர் தேவாரம், திருப்புகழ், கந்தரலங்காரம், கந்தர் அனுபூதி, 11ஆம் திருமுறை (கபிலதேவ நாயனார்),பெரியபுராணம், கொங்கு மண்டல சதகம் (கார்மேகக் கவிஞர்), கொங்கு நாடு (தி.அ.முத்துசாமிக் கோனார் 1933) போன்ற பல்வேறு வரலாறு, சமய இலக்கியங்களிலும் திருச்செங்கோடு சிறப்பிக்கப்படுகிறது. பல தனிப்பாடல்களும் உள்ளன.

திருச்செங்கோட்டுக் கல்வெட்டுகள் 1905, 1915, 1960, 1961 ஆம் ஆண்டுகளில் 42 படி எடுக்கப்பட்டன. தஞ்சை, தமிழ்ப் பல்கலைக் கழகக் கல்வெட்டு, தொல்லியல் துறை சார்பில் வெளியிடப்பட்ட ''நாமக்கல், சேலம் மாவட்டக் கல்வெட்டுகள்'' என்னும் நூலில் 38 கல்வெட்டுகள் பதிப்பிக்கப்பட்டுள்ளன.

★★★



திருச்செங்கோட்டுமலை மரச்சிற்பம்

திருச்செங்கோட்டுக் குருக்கள் :

அண்ணாதுரை சதாசிவ குருக்கள் முத்தையன் வேதநாயக குருக்கள் நாகேஸ்வர நாககிரி பண்டிதர்
ராம நாத சேனாதிபதிக் குருக்கள் அர்த்தநாரி கஜான்ஜி குருக்கள் முத்தையா சுப்பிரமணிய குருக்கள்



திருச்செங்கோட்டுத் தேர்



தேரோட்டம்

நாகர்

நன்றி : பிரெஞ்சு நிறுவனம், பாண்டிச்சேரி.



குமார தீர்த்தம்

மோரூர்க் காங்கேயர்

நன்றி : பிரெஞ்சு நிறுவனம்,
பாண்டிச்சேரி.

மோரூர்க் காங்கேயர்

நன்றி : பிரெஞ்சு நிறுவனம்,
பாண்டிச்சேரி.

யாழ் வாசிக்கும் பெண்

நன்றி : பிரெஞ்சு நிறுவனம்,
பாண்டிச்சேரி.



கைலாசநாதர் கோயில் நாலுகால் மண்டபம்

கைலாசநாதர் கோயில் நுழைவாயில்



கைலாசநாதர் கோயில் உள்தோற்றம்

கைலாசநாதர் கோயில்
கைலாச வாகனம்



நாககிரி பண்டிதர் - வள்ளியம்மை

பணிமலைக் காவலர் கோயில்

திருச்செங்கோட்டு நடுகல்



மலைக்கோயில் கல் சங்கிலிகள்

மலைக்கோயில் தூண் சிற்பங்கள்